புதுமைப்பித்தன்
கதைகள்

ஸ்டார் பிரசுரம்
திருவல்லிக்கேணி மேலக்கோபுரத் தெரு
சென்னை-5 மதுரை

முதற் பதிப்பு —1940
இரண்டாம் பதிப்பு —1947
மூன்றாம் பதிப்பு —1953
நான்காம் பதிப்பு —1955

விலை ரூ: 3—0—0

STAR PUBLICATIONS
TRIPLICANE, MADRAS-5 ★ WEST TOWER STREET, MADURAI

Printed at the National Art Press, Teynampet, Madras-18

பதிப்புரை

நமது நாட்டின்—நமது தாய் மொழியின்—நமது தலை முறையின் தலை சிறந்த எழுத்தாளர் **புதுமைப்பித்தன்.**

கம்பனுக்குப்பின் பாரதி. பாரதிக்குப்பின்....? என்ற கேள்விக்கு விடையாக நம்முன் காட்சி தருகிறவர் புதுமைப்பித்தன்.

வசன நடையிலே உயிர்ப்பைப் பெய்து தந்தவர்; சிறு கதைகள் மூலம் தமிழ் நாட்டின் வாழ்க்கையை, தத்துவத்தை, பண்பாட்டை நமக்கும் ஏனையோருக்கும் படம் படமாகத் தீட்டிக் காட்டியவர் புதுமைப்பித்தன்.

அவரது கதைகளின் முதல் தொகுதி இது. இத் தொகுதியின் முந்திய பதிப்புக்களில் சேர்ந்திருந்த **ஆண்சிங்கம், பறிமுதல், கடிதம்** முதலிய கதைகள் **'ஆண்மை'** என்ற மற்றொரு நூலில் இடம் பெற்றிருக்கிற படியால் அவை தவிர ஏனைய கதைகள் இதில் உள்ளன.

ஸ்டார் பிரசுரம்

பொருளடக்கம்

1. துன்பக் கேணி 5
2. சிற்பியின் நரகம் 42
3. கலியாணி 51
4. ஒரு நாள் கழிந்தது 71
5. விநாயக சதுர்த்தி 85
6. வேதாளம் சொன்ன கதை 96
7. பிரம்ம ராக்ஷஸ் 105
8. வாழ்க்கை 122
9. தெரு விளக்கு 130
10. கவந்தனும் காமனும் 133
11. ஞானக் குகை 137
12. திறந்த ஜன்னல் 145
13. மனித யந்திரம் 148
14. கட்டில் பேசுகிறது 160
15. கனவுப் பெண் 163
16. இது மிஷின் யுகம் ! 170
17. அகல்யை 173
18. சங்குத் தேவனின் தர்மம் 179
19. காலனும் கிழவியும் 186
20. கோபாலபுரம் 194
21. கொன்ற சிரிப்பு 199
22. பொன்னகரம் 205
23. சாயங்கால மயக்கம் 209
24. நினைவுப் பாதை 212
25. மனக் குகை ஓவியங்கள் 218
26. — ? — 224

துன்பக் கேணி

வாசவன்பட்டி என்றால் திருநெல்வேலி ஜில்லா வாசிகளுக்குக்கூடத் தெரியாது. ஜில்லாப் படத்தைத் துருவித் துருவிப் பார்த்தாலும் அந்தப் பெயர் காணப்படாது; அது ஜில்லாப் படத்தின் மதிப்பிற்குக்கூடக் குறைந்த ஒரு சிறு கிராமம். ஊரைச் சுற்றிலும் பனை. பெட்ரோல் நாகரிகத்தின் ஏகாதிபத்தியம் செல்லும் ஜில்லா போர்ட் ரஸ்தா கூட, அது தன் மதிப்பிற்குக் குறைந்தது என்று நினைத்துக் கொண்டு, ஊரை விட்டு விலகி 1½ மைலுக்கு அப்பாலேயே செல்லுகிறது. ரஸ்தாவை விட்டு இறங்கிக் கிழக்குப் பக்கமாக ஒரு மைல் சுமாருக்கு உடை முள்ளும் சோற்றுக் கத்தாழையும் இரண்டு பக்கத்திலும் வளர்ந்திருக்கும் வண்டித் தடத்தில் சென்றால் ஒரு பனங்காட்டில் கொண்டு விடும். அந்தக் காட்டில் தான்தோன்றியாகச் சென்று கொண்டிருக்கும் எந்த ஒற்றையடிப் பாதை வழியாகச் சென்றாலும் வாசவன்பட்டி எல்லைக்கு வந்து விடலாம்.

ஊர் ஆரம்பித்துவிட்டது என்ற குறிப்பு என்னவெனில், பனங்காடு முடிந்து மறுபடியும் அந்த வண்டித் தடம் இரண்டு குட்டிச்சுவர்களுக்கிடையில் அற்புதமாகத் தோன்றுவதுதான். அவ்விரண்டு குட்டிச்சுவர்களும், எதிர் எதிராக இரண்டு 'நந்தவனத்தை'ச் சுற்றி வருகின்றன. தங்க அரளியும், செவ்வரளியும், முல்லையும் தறிகெட்டு வளர்ந்திருக்கும் ஒரு பிரையிடம். 'நந்தவனம்' ஒவ்வொன்றிலும் ஒரு கிணறு உண்டு.

இதைக் கடந்துவிட்டால் கிழக்கே பார்த்த கோவில், மிகவும் பாழடைந்து, மதில்கள் இடிந்து, மொட்டைக் கோபுர அலங்காரத்துடன், காணப்படும். அந்தக் கோவி

லின் அர்ச்சகர் வீடு ஒன்றையும், இரண்டு மூன்று இடிந்து கூரை விழுந்த வீடுகளையுமுடைய தெருத்தான் அக்ரகாரம். அது இருபது அடிக்கப்புறம் மறுபடியும் திரும்பி, கத்தாழைச்செடி பூவரச மரங்களுக்கிடையில் சென்று, பிள்ளைமார் வீதியாக மாறுகிறது. தட்டோடு போட்டு, நாழி ஓடுகளால் சாய்ப்பு இறக்கிய பெரிய வீடுதான் பண்ணையார் நல்லகுற்றாலம் பிள்ளையின் வீடு. அதைத் தொடர்ந்த இரண்டு மூன்று வளைவுகளில், கணக்கு முதலியார், கி. மு. சங்கரலிங்கம் பிள்ளை, பலசரக்குக் கடை ஓட்டப்பிடாரம் பிள்ளை—ஓட்டப்பிடாரம் என்ற ஊர் அவரது பூர்வீகம்—வாத்தியார் சுப்புப் பிள்ளை, பிள்ளையார் கோயில் பூசாரி வேணுவலிங்கப் பண்டாரம்—இவர்கள் எல்லாரும் வசிக்கும் குடிசைகள். குடிசைகளைப் பார்த்தாலே, அவர்கள் பண்ணைப் பிள்ளையைப்போல் வாழ்க்கையின் சௌகரியங்களைப் பெற்றவர்கள் அல்லர் என்று தெரிந்துவிடும். எல்லாரும், பண்ணைப் பிள்ளையவர்களின் வயல்களை, வாரமாகவோ குத்தகையாகவோ எடுத்துப் பயிர் செய்து ஜீவிப்பவர்கள். வேளாளர் எல்லோரும் ஒன்றுக்குள் ஒன்றுதான். கமறும் தேங்காயெண்ணெய் வாசனை பரிமளிக்கும் இந்தத் தெருவைத் தாண்டினால் ஊர்ப் பொட்டல். அதில் தனிக் காட்டு ராஜாவாக, தேஜோமயானந்தமாக, ஊர்க் காவல் தெய்வமாகிய சுடலைமாடப் பெருமானின் பீடம், நெடுமரம்போல், காரைக்கட்டியினால், உறுதியாகக் கட்டப்பட்டு நிற்கும். இடிந்து விழுந்த கோவிலில் மூர்த்திகரமாக எழுந்தருளியிருக்கும் மகாவிஷ்ணுவைவிட இவருக்கு ஊர் மக்களிடையில் அதிக மதிப்பு உண்டு. அது அந்தச் சுடலை மாடனுக்குத் தெரியுமோ என்னவோ! அதைச் சுற்றி ஐந்தாறு மறவர் குடிசைகள். இவற்றில் ஊர்த் தலையாரி முதலியோர் வசிப்பார்கள். குடிசைகளைத் தாண்டிச் சென்றால், மானுமாரிக் குளம்—அதாவது, தண்ணீருக்கு வானம் பார்க்கும் ஏரி. அதன் இக் கரையின் வலப்புறத்தில் பறைச்சேரி; அங்கு ஒரு முப்பது குடிசைகள்.

வேளாளர் தெருவில், ஊர்ப் பொட்டலை அணுகினாற்போல், பண்ணைப் பிள்ளையவர்கள் கட்டிய சவுக்கை, ஓலைக்கூரை வேய்ந்த திண்ணை, ஓட்டப்பிடாரம் பிள்ளையின்

பலசரக்குக் கடைக்கு எதிர்த்தாற்போல் இருக்கும். ஊர்ப் பேச்சு, ஊர்வம்பு, கி. மு. வின் அரசாங்க நிர்வாகம், சீட்டாட்டம் எல்லாம் அங்குதான். சவுக்கையில், வேனிற் காலங்களில் இரவில் ஆட்கள் படுப்பதற்கும், பகலில் 'பெரிய மனிதர்' சாய்ந்திருந்து போவதற்கும், கோரைப் பாய், அழுக்குத் தலையணை, திண்டு முதலியவை மூலைக்கு ஒன்றாகக் கிடக்கும். ஓட்டப்பிடாரம் பிள்ளையின் கடையில், ரூலர் சிகரெட் முதல் பின்னை எண்ணெய் வரை வாங்கிக் கொள்ளலாம். மகா சிவராத்திரி, சுடலைமாடனுக்குக் கொடை முதலிய காலங்களில் அவர் சீட்டுக் கட்டுக்களும் விற்பார். ஓட்டப்பிடாரம் பிள்ளை பலசரக்குகளில் மட்டும் வியாபாரம் செய்பவர் அல்லர். குழிப் பெருக்கம், அரிவரி முதலிய ஆரம்பக்கல்வி விஷயங்களிலும் பண்டமாற்று வியாபாரம் நடத்துபவர். உற்சாகம் வந்து விட்டால் கடை முன்பு கூடியிருக்கும் தேவமார்களுக்கு 'மருதை வீரன்' கதை, அல்லியரசாணி மாலை முதலியவற்றை வாசித்துக் காலட்சேபம் செய்வார். சவுக்கையில் சுவாரஸ்யமான பேச்சுக்கள் அடிபட்டால், அவர் கடையிலிருந்துகொண்டே கூட்டத்தில் தம்முடைய பங்கையும் சேர்த்து விடுவார்.

கோடை காலம் ஆரம்பமாகி அறுப்பும் தொடங்கிவிட்டது. அறுப்புத் தொடங்கிவிட்டது என்றால் ஓட்டப்பிடாரம் பிள்ளைக்கும், அதைவிட, சேரியின் பக்கத்தில் கள்ளுக்கடை வைத்திருக்கும் இசக்கி நாடாருக்கும் கொள்ளை. சாயங்காலம் ஐந்து மணியிலிருந்து இரவு பத்துப் பதினொரு மணிவரை, பிள்ளையவர்களின் கடை முன்பு சந்தை இரைச்சலாக இருக்கும்.

வாசவன்பட்டியில் அறுப்பு ஆரம்பித்து விட்டது. சாயங்காலம் பொழுது சாய்கிற சமயம். கணக்குப் பிள்ளையும், கி. மு. வும் சவுக்கையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். கி. மு. வரி வசூலிப்பதில் மும்முரம். அவர் முன்பு அரசாங்கப் பழுப்புக்காகித நோட்டுப் புத்தகங்கள், நீளமான பை—இத்யாதி கிடக்கின்றன. பக்கத்தில் சவுக்கையின் ஓரத்தில் தலையாரி கட்டையத் தேவன் நின்று கொண்டிருக்கிறான்.

"கட்டையா, கொஞ்சம் சுண்ணும்பு எடுத்தா! ஆமாம், பாக்கும் இல்லே போலிருக்கு; எல்லாமா ஒரு துட்டுக்கு வாங்கியா!" என்றுர் கணக்குத் தீத்தாரப்ப முதலியார்.

"ஆமாம், அவுக கேக்கதை வாங்கியாந்திட்டு, வெள்ளை யனைப் பாத்து இளுத்தா! அவன் எப்பப் பார்த்தாலும் இப்படித்தான். நாளெ விடியன்னைக்கிக் கச்சேரிக்குப் போகணும், யாவுகம் இருக்கா?" என்று சொல்லிக் கொண்டே குறிப்பிலிருந்தவற்றைத் தாக்கல் பண்ணிக் கொண்டிருந்தார் கி. மு. பிள்ளை.

அப்பொழுது, மேலெல்லாம் பயிரின் புழுதி படிந்து, கக்கத்தில் ஒரு குடையை இடுக்கியவண்ணம், பின்புறம் இரண்டு, மூன்று மறவர்கள் கைகட்டி அவருடைய பேச்சைக் கேட்டுவர, வியர்த்து விறுவிறுத்துக்கொண்டு, பண்ணைப் பிள்ளை வந்து, "அப்பாடா!" என்ற வண்ணம் சவுக்கையில் உட்கார்ந்தார்.

"வாருங்க அண்ணுச்சி! மேனி எப்படிக் கண்டது?" என்றுர் கி. மு.

"மேனியாவது, எளவாவது! சவத்தைத் தள்ளுங்க. ஏலே ஆண்டி, வீட்டுக்கு என்ன வேணுமென்று பார்த்துக் கிட்டு வா!" என்று ஒருவனை அனுப்பினுர்.

"என்ன அண்ணுச்சி ஆலடியிலே அறுப்பெத் தொடங் கிட்டிய போல' இருக்கெ—இரு சவமெ, அண்ணுச்சிகிட்ட பேசுதது தெரியல்ல—வர வர பறக்களுதைகளுக்கும் திமிறு ஏறுது!" என்று எதிரில் இருந்த பறைச் சிறுமியை அதட்டிக்கொண்டு, பண்ணையாரிடம் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தார் ஓட்டப்பிடாரம் பிள்ளை.

"ஆமாம், ஒண்ணுக்கும் குறைவில்லை, எல்லாம் ஒரு தொல்லைதான். போன திங்கக்கிழமை கோடு (கோர்ட்டு)க் குப் போயிருந்தேன். கப்பலரிசி வந்து மூடை மூடையாகக் குவியுதாம், பேட்டைப் பிள்ளை சொன்னுர். இங்கையா, மண்ணோடு முட்டினுலும் ஒண்ணுமில்லை. அங்கெ ஙிக்கது மருதியா—ஏ மூதி! தொளுவிலே மாட்டுக்கு ரெண்டு செத்தை எடுத்துப் போட்டு விட்டு வா!" என்று அதிகாரம்

பண்ணிவிட்டு, "பிள்ளையவாள், ஆண்டி வந்தானு நந்தவனத்துக்கு வரச் சொன்னேன் என்று சொல்லுங்கள்," என்று குறுக்குப் பாதையாக அங்கு சென்றார்.

"ஏட்டி, ஓம் புருசன் என்னமோ பணங் குடுக்கணும் என்று சொல்லுதாகளே, அதுக்குப் பண்ணையாரு கோவிச்சாகளாக்கும்; இருந்தாலும் ஊரு பெரியவுகளை பகைச்சுக்கிடலாமாட்டி!" என்று மருதியிடம் பேச்சுக் கொடுத்தார் கடைக்காரர்.

"என்ன சாமி, எம் பள்ளன் பண்ணை யெசமாங்கிட்டே என்னமோ ஒரு ரெண்டு நூறு வாங்கிருக்காஞ் சாமி. ஊருக்குப் பெரிய நாயம்மாரே இப்படிப் படுத்துனு, நாங்க என்ன செய்வோஞ் சாமி? அதுலெ ரெண்டு காளையும் வண்டியும் வாங்கினு, இப்பொ அதுவும்,—அந்தச் சொடலெதான் பாக்கணும்!—இவிய இப்படி உருக்கினு, பணத்துக்கு எங்கே போக? சாமி, இம்பிட்டு கருப்பட்டிப் போயிலேயும் சருக்கும் குடுங்க சாமி, தொளுவெப் பார்த்துக்கிட்டு வாரேன்!" என்று அவளுக்குத் தெரிந்ததைப் புலம்பிக்கொண்டு, மாட்டுத் தொழுவத்தின் பக்கம் சென்றாள் மருதி.

II

மருதியின் புருஷன் பண்ணைப் பிள்ளையிடம் கடன் வாங்கும் பொழுது, 'நிச்சயமாகத் திருப்பிக் கொடுத்துவிடுவோம்' என்ற நம்பிக்கையிருந்துதான் வாங்கினான் என்று நினைக்கமுடியாது. கொஞ்ச நாட்கள் மாட்டை உபயோகித்துக்கொண்டு, அது நோஞ்சானாகும் சமயத்தில், பண்ணை எஜமானின் காலைப் பிடித்துப் பணமாகக் கடனைக் கொடுக்காமலிருந்துவிடலாம் என்ற யோசனையின் பேரில் தான் நடத்தியிருக்க வேண்டும். பண்ணை எஜமான் இவனுடைய கூழைக் கும்பிடுகளுக்கெல்லாம் மசிகிற பேர்வழியாகக் காணப்படவில்லை. மேலும் அவர் தான் என்ன செய்வார்? எங்கு பார்த்தாலும் பண முடை; தீர்வைக்குக்கூடக் கட்டிவராது போலிருக்கிறது. நிலத்தில் ஜெண்டாவை நட்டுவிடாமலிருக்க, மசிகிற பேர்வழிகளிடத்தில், சிறிது

(அரசாங்கத்தின் பயத்தினால் ஏற்பட்ட) முரட்டுத்தனத்தோடு நடந்துகொண்டார். காளைகள் அவர் வசமாயின. அவ்வளவுதான் மிச்சம். ஊர்ப் பறைச்சேரியில் ஏக களேபரம். வெள்ளையனும் அவன் பெண்டாட்டியும் குய்யோ முறையோ வென்று கத்தினார்கள். வெள்ளையன் கொஞ்சம் முரண்டினான்; உதை கிடைத்தது.

பண்ணையார், 'பறச் சனமோ குறச் சனமோ!' என்று வெறுத்துக்கொண்டார். என்ன செய்தாலும் நன்றி யில்லை என்ற மனக் கசப்பு.

வெள்ளையன் அன்று இரவு வெகு நேரம் வரை வீட்டிற்கு வரவில்லை.

மறுநாள் விடியற்காலமாகப் பண்ணைப் பிள்ளையவர்கள், வெளியில் செல்லுமுன் மாட்டுத் தொழுவத்திற்குச் சென்று பார்த்துவிட்டுப் போகலாமே என்று, உள்ளே நுழைந்தார். வெள்ளையனின் நோஞ்சான் காளைகள் தான் அசைபோட்டுக்கொண்டு ஆள் அரவத்தைக் கேட்டு எழுந்திருந்தன. மயிலைக் காளைகள் இரண்டையும் காணவில்லை. உடனே, கி. மு. பிள்ளையைப் எழுப்பிக் காண்பித்துவிட்டு, சவுக்கையின் பக்கத்தில் கிடந்த தலையாரித் தேவனை எழுப்பிச் சமாசாரம் சொன்னார்கள்.

தலையாரித் தேவனுக்கு வெள்ளையன்மீது சந்தேகம். உடனே அவன் வீட்டிற்குச் சென்று பார்க்க, மருதி மட்டுமே அங்கிருந்தாள். புருஷன் எங்கே என்று மூவரும் நின்று விசாரிப்பதைப் பார்த்து, உள்ளுக்குள் பயந்துகொண்டு தன் புருஷன் அவ்வளவு நேரம் வீட்டிலிருந்துவிட்டு அப்பொழுதுதான் வெளியே போனான் என்று ஒரு பொய் சொன்னாள்.

அவள் சொல்வது நிஜமா பொய்யா என்பதைத் தீர்மானிப்பதற்குத் தலையாரித் தேவனுக்கு ஒரே வழி தான் தெரியும். உடனே தலை மயிரைப் பிடித்திழுத்து, அவளைக் கீழே தள்ளி, உதைக்க ஆரம்பித்தான். தேவனுக்கு மருதியை உதைப்பதில் ஒரு குஷி.

அவள் குய்யோ முறையோ வென்று கத்தினாலும் தலையாரித் தேவனின் ஜபம் சாயவில்லை. அதற்குள் சேரி

திரண்டது. களவு விவரமும் பரவியது. வெள்ளையனை இரவு வெகு நேரம் வரை கள்ளுக்கடையில் பார்த்ததாகப் பலர் சொன்னார்கள்.

பிறகு என்ன? மருதி எவ்வளவு கூச்சல் போட்டும் பயனில்லை. வெள்ளையன் பனங்காட்டில் குடித்துவிட்டு மயங்கிக் கிடந்ததைக் கண்டுகொண்டார்கள். ஆள் பிடிபட்டவுடன், அவன் உண்மையில் திருடாமல் இருந்தாலும் என்ன? விஷயம் வெகு எளிதில் போலீஸ் கேசாக மாறி வெள்ளையன் சிறைக்குச் சென்றான்.

அவன் சிறை செல்லுமட்டும் ஊர் அல்லோலகல்லோலம்தான். முடிவில்லாமல், சளைக்காமல், பேசுவதற்குச் சமாசாரங்கள் நிறைந்திருந்தன. பண்ணைப் பிள்ளையவர்கள் என்ன முட்டிக்கொண்டும் மாடுகள் வந்தபாடில்லை. அதற்காக வெள்ளையன் பயலைச் சும்மா விடுகிறதா? ஏமாற்றிய பணத்திற்காவது அங்கு போய்விட்டு வரட்டுமே என்பதுதான் அவருடைய வாதம்.

இந்தக் களேபரக் காலத்தில் மருதிக்கு இரண்டு மாதம். அவளைப் பொறுத்தவரை, சேரியில் கிடைக்கும் சௌகரியங்களுக்குத் தகுந்தவாறு, வெள்ளையனுடன் 'கண்ணாலம்' செய்துகொள்ளும்பொழுது வாழ்க்கை இன்பகரமாகத்தான் ஆரம்பித்தது. புது மாப்பிள்ளை என்ற உற்சாகத்தில் அவன் வண்டியும் மாடும் வாங்கி இக்கோலமாகும் என்றிருந்தால், அவள் என்ன செய்யமுடியும்? வெள்ளையன்மீது அவளுக்கு அளவுகடந்த பிரியந்தான். இருவரும் கள்ளைக் குடித்துவிட்டு அடிக்கடி சச்சரவிட்டுக் கொண்டாலும், சேரியின் திருஷ்டி தோஷத்தைப் பெற்றிருப்பார்கள். எப்படியோ வெள்ளையன் சிறை சென்றான். மருதி அப்பன் வீடு சென்றாள். பிள்ளையவர்களுக்கு ஏச்சும் இரைச்சலுந்தான் மிச்சம். ஆனால், வெள்ளையன் சிறைக்குப் போனதில் பணத்திற்குப் பதிலாக ஒரு திருப்தி.

எங்கு பார்த்தாலும் பணமுடையாகவும் நிலங்கள் தீய்ந்துபோயும் இருக்கும் காலத்தில், அப்பன் வீடானாலும், அன்பையும் ஆதரவையும் தவிர வேறு என்ன கிடைக்கப்போகிறது, அதிலும் ஏழைப் பறையனுக்கு

இருக்கும்பொழுது? அந்தச் சமயம் பார்த்துச் சாலைக்குக் கப்பிபோட ஆரம்பித்தார்கள். மருதிக்கும் அவள் பெற்றோருக்கும் சிறிது வேலை கிடைத்தது. இரண்டு மூன்று மாதம் கையில் காசு ஓட்டம். வீட்டிலே, புருஷன் அநியாயமாகச் சிறை சென்றான் என்பதைத் தவிர, வேறு ஒரு கவலையும் இல்லாமல் இருந்தது.

எப்பொழுதும் சாலையில் கப்பி போட்டுக்கொண்டேயிருக்க ஜில்லா போர்டிற்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? மறுபடியும் கஷ்ட சக்கரம் அவர்கள்மீது சுழல ஆரம்பித்தது.

அப்பொழுது தேயிலைத் தோட்டத்திற்கு ஆள்பிடிக்கும் ஏஜெண்டு ஒருவன் வந்தான். பறைச்சேரியில், தேயிலைத் தோட்டம் இவ்வுலக வாழ்க்கையில் மோட்சம் போலத் தோன்றியது. திரைகடல் ஓடியாவது திரவியம் தேட வேண்டுமாமே! அதற்காகத் திரைகடலோடிச் சுதந்திரத்தைப் பணயம் வைத்தால் என்ன? கடைசியிலாவது ஏதாவது மொத்தமாகக் கொண்டு வரலாமே!

மருதியும் அவளுடைய • தாயாரும், கங்காணியுடன் கொழும்புக்குப் புறப்பட்டார்கள்.

III

விஸ்வாமித்திரரும் வியாசரும் மலைக்குச் செல்வதற்குக் காரணம் ஒன்று; மிஸ்டர் ஸ்டோடார்ட், ஐ. ஸி. எஸ். மலைக்குச் செல்வதற்குக் காரணம் வேறு:—ஸ்ரீமதி மருதியம்மாள் மலைக்குச் செல்வதென்றால் அதற்கும் ஒரு காரணம் இருக்கிறது. ரிஷிகளின் பூர்வாசிரமத்தைப் பற்றி ஆராய்வது நாஸூக்கில்லை என்று கூறுவார்கள். மருதியம்மாளின் மலை வாசத்தைப் பற்றியும் அப்படித்தான்.

'வாட்டர் பால்ஸ்' என்பது தேயிலைத் தோட்டத்திற்காகவே தெய்வத்தினால் இலங்கையில் சிருஷ்டிக்கப்பட்ட இடம் என்பது கிரௌன் தேயிலைத் தோட்டத்தின் தற்போதைய முதலாளியான ஸர் ஜோஸப் பிட்ஜ்

மார்ட்டின் கிரௌனின் திட்டமான அபிப்பிராயம். இதில் சுவாரஸ்யம் என்னவென்றால், ஸர் ஜோஸப் சீமையைவிட்டுச் சிறிதாவது விலகியதே கிடையாது. இங்கிலீஷ்'பீப்'பும் (மாட்டுக்கறி), இங்கிலீஷ் 'பேக்க'னும் (பன்றி இறைச்சி) அவர் சொந்தப் பார்வையிலேயே தயாரிக்கப்படாத தேசம் அவர் தேகத்திற்கு ஒத்துவராது என்று, அவருடைய ஹார்லிதெரு (லண்டனில் பிரபல வைத்தியர்கள் வசிக்குமிடம்) குடும்ப வைத்திய நிபுணர் அவருக்குக் கூறியிருக்கிறாராம். அதற்காக, மலேரியா விற்கும் சூரியஉஷ்ணத்திற்கும் வருஷம் 2,000 பவுனுக்கு ஈடு கொடுப்பதாக ஒப்புக்கொள்ளும் நபர்களிடம் தேயிலைத் தோட்ட நிர்வாகத்தை அவர் விட்டுவிடுவது வழக்கம்.

தற்பொழுது பாட்ரிக்ஸன் ஸ்மித் என்பவர் 'வாட்டர் பால்'ஸில் நிர்வாகத்தை ஏற்று நடத்தும் 45-வயதுப் பிரம்மச்சாரி. அவருக்கு இரண்டு விஷயங்கள் சந்தேக மில்லாமல் தெரியும். ஒன்று, இலங்கைத் தேயிலைத் தோட்டத்தில் பிரம்மச்சாரியாக இருப்பது என்பதன் அர்த்தம்; இரண்டாவது, தேயிலை உற்பத்தியில் கறுப்பு மனிதர்களுடன் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது. இதற்கு மேலாகக் கறுப்புக் கூலிகளின் பாஷை யும் நன்றாகத் தெரியும்.

கறுப்பு மனிதர்கள் 'வாட்டர் பால்ஸ்' என்ற இடத்தை 'வாட்டர் பாலம்' என்று கூறுவார்கள். இலங்கைக் குன்றுகளின் சரிவில் ஒரு நீர்வீழ்ச்சியின் பக்கத்தில் இருப்பதால் அதற்கு அந்தப் பெயர் வந்தது. அந்த மலைச் சரிவில், இரண்டு மைல் நீளமும், மூன்று மைல் அகலமுமுள்ள தேயிலைக் காடு நீர் வீழ்ச்சியின் இரு பக்கத்திலும் உள்ளது. துரையவர்களின் பங்களா நீர்வீழ்ச்சிக்கு மேலே ஒரு பாறையின்மீது கட்டப்பட் டிருக்கிறது. அதற்கு எதிரே, அந்தப் பெயரற்ற காட் டாற்றின் மறு பக்கத்தில், கூலிகளின் காறைக் குடிசை கள்—கோழிக்கூடுகள் மாதிரி. அதற்கும் தள்ளி, ஒரு ஆஸ்பத்திரி, மற்ற கறுப்பு அதிகாரிகள் இருக்கும் இடங்கள். அதிகாரிகளோ, தோலைத் தவிர மற்ற எல்லா

அம்சத்திலும், துரைகளின் மனப்போக்கை யுடையவர்கள். அங்கு போய்க் குடியிருந்தால் இரண்டு விதமான மனப்பான்மைதான் ஏற்படும். ஒன்று அங்கிருக்கும் கறுப்புத் துரைகளுடையது. இரண்டாவது சிறைக்குத் தயாராக்குவது. மூன்றுவதும் ஒன்றிருக்கிறது. அதுதான் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி போடுவது.

தட்டப்பாரையில் தங்கி, பிறகு கப்பலேறி மலைக்கு வருமட்டும், மருதிக்கும் அவள் தாயாருக்கும் என்னவோ பெரிய புதையல் எடுக்கப் போவதாக உற்சாகம். 'வாட்டர் பால'த்திற்கு வந்தவுடன், அதன் சீதளமான பருவமும், அவர்களுக்குக் கொடுக்கப்பட் டிருக்கும் காறைக் குடிசையும் கவர்ச்சித்தன. இரவில் குளிருக்குப் போர்த்திக்கொள்ளவும், மழையில் தேயிலை பறிக்கும் பொழுது குடையாகத் தலையில் போட்டுக்கொள்ளவும் கம்பளி, வாரத்திற்கு வாரம் கைமேல் காசு! எல்லாம் வெகு சௌகரியமாக இருந்தன. அங்கிருக்கும் நாற்றம் வாசவன்பட்டிச் சேரியின் நாற்றத்தைவிடச் சிறிது அதிகம். அதுவும் சில நாட்களில் பழகிப் போய்விட்டது. குளிரின் கடுமையால், காலை 7—மணிக்குத்தான் எழுந் திருக்க முடியும். பிறகு கஞ்சியைக் காய்ச்சிக் குடித்து விட்டு, முதுகில் ஒரு கூடையைப் போட்டுக்கொண்டு, தேயிலைக் கொழுந்து பறிக்கச் செல்லுவார்கள். முதலில் பக்கத்திலிருந்தவர்களிடம் கேட்டுப் பழகிக்கொண்டார்கள். ஆரம்பத்தில் இரண்டு மூன்று வாரத்திற்குக் குஷாலாகத்தான் இருந்தது. ஆனால், கூட வேலைசெய்யும் பெண் கூலிகளின் பேச்சும் நடத்தையும் அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

மூன்றுவது வாரத்தில் தாய்க் கிழவிக்கு மலைக் காய்ச்சல் வந்தது. ஆஸ்பத்திரிக்குச் சென்று மருந்துத் தண்ணி வாங்கிக் குடித்துக்கொண்டிருந்தாள். அவளுக்குத் துணையாக மருதியும் போய்விட்டு வருவாள்.

அப்பொழுது தேயிலை ஸ்டோர் மானேஜர் அவளை ஆஸ்பத்திரியில் கண்டார். 'புது உருப்படி' என்பதால் அவர் 'குளித்துவிட்டு வா!' என்றதின் அர்த்தம் அவளுக்குப் புரியவில்லை. கூலிகளின் சம்பிரதாயத்தைப்

பற்றிக் காரியம் மிஞ்சிய பிறகுதான் அறிய முடிந்தது. கிழவிக்கும் வயிற்றில் இடி விழுந்தது மாதிரி ஆயிற்று. ஆனால், பக்கத்தில் பேச்சுக் கொடுத்துப் பார்த்தால், இது மிகச் சாதாரணமான காரியம் என்று ஆயிற்று. அதற்கப்புறம் அவள் அந்தத் திசையிலேயே எட்டிப் பார்ப்பதில்லை. ஆனால் ஸ்டோர் மானேஜர் லேசானவரா? விலக்க முடியாத பழக்கம். வேறு விதியில்லாமல் தலை கொடுக்க வேண்டியிருந்தது. தன் வெள்ளையனை நினைத்துக் கண்ணீர் வடித்தாள் மருதி. வெள்ளையன் இருந்தால்......

நாட்களும் ஓடின. மருதியின் குழந்தையும் பிறந்தது பெண் குழந்தை. பெண் என்று தெரிந்ததும் மருதிக்குத் தாங்கமுடியாத துக்கமாக இருந்தது. பெரிதானால் அதற்கும் அந்தக் கதிதானே!

கிழவி யிருப்பதினால் குழந்தைப் பாதுகாப்பிற்குச் சிறிது வசதியாக இருந்தது. அந்த மலேரியாப் பிரதேசத்தில் என்ன இருந்து என்ன பயன்? உயிர் வாழவேண்டும் என்ற வேட்கை ஜீவநாடியில் இருக்கவேண்டும். அது அந்தக் குழந்தைக்கு இருந்தது.

தேயிலை பூக்க ஆரம்பித்துவிட்டது என்றால் மலேரியா தேவதைக்குப் பசி என்று அர்த்தம். நீர்வீழ்ச்சியிலும் ஜலம் வற்றிவிடும். வேலையும் அதிகம். எண்ணிக்கை யில்லாமல் பிறக்கும் மலேரியாக் கொசுக்களைப் போல் கூலிகளும் மடிவார்கள். அங்கேயே பல காலம் தங்கிப் பழகிப்போன கூலிக்காரர்களைப் புலி அடித்துத் தின்றால் அதற்கும் மலேரியாக் காய்ச்சல் வந்துவிடும். அவ்வளவு சக்தி பொருந்திய மலேரியாவின் முன்பு கிழவியின் பொக்கான சரீரம் எதிர்த்து நிற்க முடியுமா? மருதியையும் குழந்தையையும் விட்டுவிட்டு அவள் போய் விட்டாள். கிழவியின் மரணம் மருதிக்குப் பின்பலத்தையே போக்கி, வாழ்க்கையின் தனிமையை அதி பயங்கரமாக்கியது. வேறு வழி யில்லாவிட்டால், என்ன பயங்கரமாக இருந்தால் தான் என்ன?

தெய்வத்தின் கருணை அவ்வளவு மோசமாகப் போய் விடவில்லை. கண்ணைக் கெடுத்தாலும், கோலையாவது

கொடுத்தது. ஸ்டோர் மானேஜர் கண்ணப்ப நாயனார் ரகத்தைச் சேர்ந்த பேர்வழி. தனது இஷ்ட தெய்வத்திற்குத் தான் ருசித்துப் பார்த்துத்தான் சமர்ப்பிப்பார். தற்செயலாக வருவதுபோல் திரு. பாட்ரிக்ஸன் ஸ்மித் அவர்களை அழைத்து வந்தார். ஸ்மித்தினுடைய ரசனையும் அவ்வளவு மட்டமானதன்று.

மருதியும் குழந்தையுடன் பங்களாவின் பக்கத்தில் தோட்டக்காரியாக வசிக்க ஆரம்பித்தாள்.

இப்படி இரண்டு வருஷம் சென்றது.

IV

ஸர் ஜோஸப் பிட்ஜ்மார்ட்டின் கிரெளனின் மூன்றுவது தலைமுறைக்கு முன்பு, குடும்ப கௌரவத்தை ஸ்தாபித்த ஸர் ரெட்மன்ட் கிரெளன், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அஸ்திவாரத்திற்குக் காரணமான அசல் பிரிட்டிஷ் குணத்தைப் பெற்றவர். அவர் ஏதோ ஒரு பெயர் தெரியாத பாங்கியில் குமாஸ்தாவாக இருந்த தகப்பனுரை அடிக்கடி தொந்தரவு செய்து, குடும்பத்தில் காலாடி என்ற பட்டப் பெயருடன் கப்பலேறி, இலங்கைத் தேயிலையில் பட்டமும் பணமும் சேகரித்து, ஒரு பிரபுவின் குடும்பத்தில் கலியாணம் செய்துகொண்டவர்.

அந்த மூன்றுவது தலைமுறையின் குடும்ப இலட்சியத்தின் சகல குணங்களையும், துணிச்சலையும், ஸர் ஜோஸப்பின் ஏக புத்திரியான மாட் கிரெளன் பெற்றிருந்தாள். இங்கிலீஷ் மோஸ்தர்படி அவள் அழகு ஆட்களை மயக்கி யடிக்கக்கூடியது. அவர்கள் 'ஸெட்'டில் அவள் செய்யாத அட்டகாசம் கிடையாது. திடீரென்று அவளுக்கு ஆகாய விமானத்தின் வழியாக உலகத்தை ஒரு சுற்றுச் சுற்றி வரவேண்டும் என்று பட்டது. பிறகு என்ன? புறப்பட்ட பத்தாம் நாள் இலங்கையில் விமானத்தின் கோளாறினால் இறங்கவேண்டியதாயிற்று.

திரு. பாட்ரிக்ஸன் ஸ்மித்திற்கு ஒரு தந்தி பறந்தது. அவர் தமது மோட்டாரை எடுத்துக்கொண்டு கொழும்புக்

குத் துரிதமாக வந்தார். அன்று முதல் இரண்டு நாட்கள் கொழும்பில் குதூகலம். ஸ்ரீமதி மாட் கிரெளன் குஷியான பேர்வழி என்று அவர் கண்டு கொண்டார்.

புதிய அனுபவத்தில் மிக்க ஆசையுள்ள ஸ்ரீமதி கிரெளனிற்கு இது மிகவும் பிடித்தது. இருவரும் தோட்டத்திற்குப் பிரயாணமானார்கள்.

பங்களாவில் அவர்களுக்கு ஒரு தனியறை. மருதி அவளுக்குப் பணிவிடைக்காரி. ஸ்ரீமதி மாட் அசட்டுப் பேர்வழியல்ல. தோட்டங்களில் பிரம்மச் சாரிகள் கறுப்புப் பெண்களை எப்படி நடத்துவார்கள் என்பது அவளுக்குத் தெரியும். ஆனால் அந்தப் 'போக்கிரி'யுடன் பழகுவதில் ஒரு உற்சாகம்.

உஷ்ணப் பிரதேசம் மதனனின் ஆஸ்தான மண்டபம் என்பது மேல்நாட்டு அபிப்பிராயம். எனவே, திரு. ஸ்மித்தும் ஸ்ரீமதி மாட் கிரெளனும் காதலர்கள் ஆனதில் அதிசயமில்லை.

அப்பொழுது...

* * * *

சிறையிலிருந்து விடுபட்ட வெள்ளையன் நேராக ஊருக்குப் போகவில்லை. நேராக மாமனார் வீட்டிற்குச் சென்றான். அங்கு மருதியைக் காணாதது பெரும் ஏமாற்றமாக இருந்தது. சிறையிலிருந்து வரும்பொழுதே அவன் மனது உடைந்துவிட்டது. மருதியின் நினைவு ஒன்றுதான் பசையாக இருந்தது அவனுக்கு.

மாமனிடம் கொஞ்சம் கடன் வாங்கிக்கொண்டு மருதியைப் பார்ப்பதற்காக அவன் தேயிலைத் தோட்டத்திற்குப் புறப்பட்டான்.

வெள்ளையனும் மாமனைப் போல் மருதியின் இலட்சியமான தேயிலைத் தோட்டத்தைப் பற்றி நினைத்துக் கொண்டு சென்றான்.

'வாட்டர் பால'த்திற்கு வரும் ஒரே மோட்டார் பஸ் சாயங்காலம் அங்கு வரும்.

இறங்கியவுடன் பக்கத்தில் நின்றவர்களை விசாரித்தான். அவர்கள் சிரித்துக்கொண்டு பங்களாவின் பக்கத்திலிருக்கும் குடிசையைக் காட்டினார்கள்.

அவன் நேரே நடக்கும்பொழுது, எதிரே, அந்த மங்கிய வெளிச்சத்தில், துரையும் துரைசாணியுமாக இருவர் இடையில் கைபோட்டுக்கொண்டு சிரித்துப் பேசிக்கொண்டு சென்றார்கள்.

அவனுக்கு மருதியின் நினைவு பொங்கியது.

குடிசையை யடைந்து கதவைத் தட்டினான். உள்ளிருந்து ஈன ஸ்வரத்தில், "யாரது?" என்று குரல் கேட்டது. மனமுடைந்த குரல்; வெள்ளையனுக்குத் தெரிந்துகொள்ள முடியவில்லை.

"மருதியா?" என்று கதவைத் திறந்தான். கருங் கம்பளியில் மருதி படுத்திருந்தாள். பக்கத்தில் குழந்தை படுத்து உறங்கிக்கொண்டிருந்தது.

மாடத்தில் தகர விளக்கு புகைவிட்டுக்கொண்டிருந்தது.

வெள்ளையன் திடுக்கிட்டான். மருதி பேய் என்று பயந்தாள். பேயாக இருந்தாலும் புருஷனின் பேய் என்று பட்டதால், எழுந்து உட்கார்ந்து, "வெள்ளையனா?" என்றாள்

வெள்ளையன்தான்! அவளைக் கையைப் பிடிக்கப் போனான். "என்னைத் தொடாதே! மேலெல்லாம் பாத்தியா?" என்று முதுகையும் கைகளையும் காட்டினாள். மேலெல்லாம் பறங்கிப் புண்.

வெள்ளையனுக்கு நெஞ்சில் சம்மட்டிகொண்டு அடிப்பதுபோல் இருந்தது.

"இங்கே இதுதான் வளமொறை!"

வெள்ளையன் பதில் பேசவில்லை. அவன், "இங்கிருந்து புறப்படவேண்டும்!" என்றான். அவள், "என்னால் வர முடியாது, குழந்தையைக் கொண்டுபோ!" என்றாள்.

முதலில் தன் குழந்தை என்பதில் ஆசை. பின், வேறு யாருடையதோ என்பதில் பொறுமை.

"உன் குழந்தைதான்!" என்றாள்.

"கண்ணாணை?"

"கண்ணாணை!"

"கிளவி போன வருசந்தான் செத்துப்போனா!"

வெள்ளையன் பதில் சொல்லவில்லை.

மருதி கூரையிலிருந்த தகரப் பெட்டியை எடுத்தாள். அதில் 5 ரூ. நோட்டுக்களாக 200 ரூ. இருந்தது. அது துரை அப்போதைக்கப்போது கொடுத்தது.

"எஞ் சம்பளப் பணம்......புள்ளையைப் பாத்துக்கொ!" என்று அதை நீட்டினாள்.

அன்று இருவர் தூங்கவில்லை.

பேசி முடிவதற்குள் விடிந்துவிட்டது.

"இந்தா!" என்று குழந்தையை நீட்டினாள்; "அதும்பேரு வெள்ளச்சி!"

வெள்ளையன் தலை மறையும் மட்டும் ஓர் உருவம் பாறையின்மீது நின்று பார்த்துக்கொண்டேயிருந்தது.

"அந்த லெக்கிலேதான் நம்ம ஊரு!" என்று சொல்லிக்கொண்டு, அடிவானத்தின் பக்கம் பார்த்துக் கொண்டே நின்றது.

ஒரு சிரிப்பு,—ஒரு பெருமூச்சு!

* * * *

வாசவன்பட்டிச் சவுக்கையில் பண்ணைப் பிள்ளை உட்கார்ந்து 'கோடு' விஷயங்களைப் பேசிக்கொண்டிருக்கிறார். பொழுது இருட்டிவிட்டது. எதிரில் நிற்கும் ஆள் தெரியாது.

அப்பொழுது ஓர் உருவம் தெருவின் ஓரத்தில் வந்து நின்றது.

"யாரது?"

"சாமி, வெள்ளையனில்லா!"

"எப்பலே வந்தே? புத்தியா யிரு சவமே! கையிலே என்னலே?"

"புள்ளே சாமி!"

"அவ, மருதி எங்கலே!"

"செத்துப்போனா, சாமி!...சாமீ!"

"என்னலே!"

"பணம்!"

"போலே, முட்டா மூதி! நீயே வச்சுக்கோ! புத்தியாப் பொளே!"

"புத்தி!"

V

வாட்டர் பாலத்தில் வெள்ளையன் வந்து போன பிறகு பல சம்பவங்கள் நடந்துவிட்டன. மருதிக்கு உலகத்தின்மீது இருந்த சிறு பசையும், இப்பொழுது அவளை விட்டு விலகி, நெடுந் தூரம் சென்றுவிட்டது. அடிக்கடி குழந்தையின்மீது நினைவு சென்று விழுந்துகொண்டேயிருந்தது. குழந்தைக்கு வெள்ளச்சி என்ற பெயர் கொடுத்திருந்தாள். நியாயமாக, அந்த விஷயத்தில் விதி சரியாகத்தான் நடந்துகொண்டது. அதை வெள்ளையனிடம் சேர்த்துவிட்டது.

துரையவர்கள், சீமைக்குத் தனது புதிய ஆங்கிலக் காதலியுடன் செல்லுமுன், மருதிக்குக் கொடுத்த பரிசு— பறங்கிப் புண். அதனுடைய ஆதிக்கம் அதிகமாக வளர ஆரம்பித்தது.

அடுத்த துரை வந்ததும்,—அவருக்கு சுகாதாரம் ஒரு பெரிய பைத்தியம்,—மருதிக்குத் தோட்டக்காரி என்ற அந்தஸ்துப் போய், மறுபடியும் அவள் தேயிலைக் கூலியாகிவிட்டாள். ஆனால் முன்போல் பெரிய தெய்வங்கள் இவளை ஏறெடுத்துப் பார்ப்பதும் கிடையாது; அதற்குப்

பதிலாக வசை மொழிகள் கிடையாது போனால் அவள் அதிர்ஷ்டம்.

அங்கிருக்கும் கூலிகளில் பலர் அவளுக்குக் கள்ளுத் தண்ணி வாங்கிக் கொடுத்து அவளுடைய தயவை எதிர் பார்ப்பது என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது.

சில சமயம் மருதிக்கு, ஊரைப் பார்த்துப் போய்விட லாமா என்ற எண்ணம் தோன்றும். ஊரில் போனால் அப்பன் வீட்டில்தான் இருக்க வேண்டும். வெள்ளைய னிடம் செல்வதற்கு மனத்தில் எவ்வளவு ஆசை இருந்தும், அங்கு செல்வதற்கு அவள் மனம் ஒப்பவில்லை.

இங்கு வந்த சில காலத்திற்குள் அவளுடைய உருவம், அதன் யௌவனக் களை எல்லாம் மாறிவிட்டன. பழைய மருதியல்ல; வாசவன்பட்டியில் இருந்த அவளுடைய சிரிப்பும் பேச்சும் பழங் கதை யாகிவிட்டன.

அன்று விடியற்காலம் வெள்ளையன் குழந்தையை எடுத்துக்கொண்டு சென்ற காட்சி அவள் கண்முன் அடிக்கடி தோன்றும். குழந்தை, குழந்தை, குழந்தை! இதுதான் எப்பொழுதும் நினைப்பு. வெள்ளைச்சி இப் பொழுது என்ன செய்துகொண்டிருப்பாள், பேசுவதற்குப் படித்திருப்பாளா?—என்பதெல்லாம் கனவு.

உள்ளூறப் பூச்சி யரித்தது மாதிரி நினைவுகள் குடைய ஆரம்பித்துவிட்டால், பொக்கான தேகம் என்னதான் எதிர்த்து நிற்க முடியும்? செத்தால் வாசவன்பட்டியில் தான் சாகவேண்டும் என்ற ஆசை அதிகரித்துவிட்டது.

இப்பொழுது மருதிக்குக் கால் கைகளில் புண். அத்துடன் குத்திருமலும் சேர்ந்துகொண்டது. ஆஸ் பத்திரி மருந்துத் தண்ணியை எத்தனை நாள் குடித்தும் பயன் இல்லை. வைத்தியர் மருந்தூசி குத்தவேண்டும் என்றார். அது கொஞ்ச நாள் கங்காணிச் சுப்பன் தயவில் நடந்தது; அதுவுமல்லாமல் அவளுக்குப் பக்கத்து வீட்டில் இருந்த பேச்சியும் கூட இருந்து உதவிசெய்தாள்

அது எப்படியிருந்தாலும் காலையில் தேயிலைக் கொழுந்து பறிக்கச்செல்வது தடைபட்டுவிடக் கூடாது.

2

அதில் கங்காணிச் சுப்பன் கரூர் பேர்வழி. உதை, அடி அப்புறம் வசவு முதலியவை சாதாரணத் தண்டனைகள். இதைவிடக் கொடுமையானது அபராதம் பிடித்து வாரக் கூலியில் மண்ணைப் போடுவது.

அன்று ஆஸ்பத்திரிக்குச் சென்றுவிட்டு வந்து, கொழுந்து எடுக்கப் போவதற்குச் சற்று நேரமாகிவிட்டது. கூடையைத் தோளில் போட்டுக்கொண்டாள். கங்காணிச் சுப்பன் சுற்றிப் பார்த்துவரும் இடத்தின் பக்கம் அல்லாமல் வேறு பக்கமாகச் செல்லவேண்டும் என்று பயந்துகொண்டே, தோட்டத்தின் மேல் பக்கமாகச் சென்று, கொழுந்துகளை அவசர அவசரமாகப் பறித்துக் கொண்டிருந்தாள் மருதி. அப்பக்கத்தில் தேயிலைச் செடிகள் கொஞ்சம் உயரமாகச் செறிந்து வளர்ந்திருந்தன. மறு பக்கத்தில் தனக்கு உதவியான பேச்சியும் கங்காணிச் சுப்பனும் இருப்பதை அவள் பார்க்கவில்லை. அவர்கள் இருந்த நிலைமை அங்கு சர்வ சாதாரணம்.

ஆனால், இவள் நிற்பதைச் சுப்பன் பார்த்துவிட்டான். அவள் தன்னை ஒற்றுப் பார்க்கிறாள், அதனால் ஏதேனும் சச்சரவு வந்து துரை காதிற்கு எட்டிவிடும் என்ற பயம். தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக எதிரியின்மீது பாய்வது உயிர்ப் பிராணிகளின் இயற்கைக் குணம். சுப்பனும் ஒரு ஜீவன் தானே!

சுப்பன் அவள்மீது பாய்ந்து, இரைந்துகொண்டே, உதைக்க ஆரம்பித்தான்.

மருதி, பேயோ என்ற நினைப்பில், கதிகலங்கிக் கல்லாக நின்றாள்.

சுப்பன், கூடையைப் பிடுங்கி, இலைகளை அவள் தலைவழியாகக் கொட்டி, நெஞ்சில் ஒரு மிதி மிதித்தான். கூடையில் இருந்தவை கொழுந்துகள் அல்லாமல் பெரும் பாகம் முற்றிய இலையாக இருந்ததைக் கண்டதும், சுப்பனின் கட்சி இன்னும் வலுத்தது. கையில் இருந்த கழியினால் நன்றாகச் சாத்திவிட்டு, அபராதம் போடுவதற்கு நேராக ஆபீஸைப் பார்த்து நடந்துவிட்டான்.

பேச்சிக்குத் தடுக்க ஆசையிருந்தாலும், சுப்பன் என்றால் பெரும் பயம். அதுவுமல்லாமல் அவன் தன்னிடம் நல்லதனமாக நடந்துகொள்ளும் பொழுது அதைக் கெடுத்துக்கொள்ள மனமில்லை. செடி மறைவில் ஒதுங்கியிருந்தவள், அவன் ஓடிய பிறகு, மருதியிடம் சென்று பார்த்தாள்.

மருதிக்குப் பேச்சு மூச்சில்லை. பக்கத்திலிருந்த ஓடையில் ஜலம் எடுத்து, அவள் முகத்தில் தெளித்து, நினைவு வரச் செய்தாள் பேச்சி.

மருதிக்குப் பிரக்ஞை வந்ததும், ஒரு பெரிய இருமல். அதில் இரண்டு மூன்று துளி இரத்தமும் விழுந்தது.

கைத் தாங்கலாக மருதி குடிசைக்கு அழைத்துச் செல்லப்பட்டாள்.

VI

மருதிக்கு அதிலிருந்து எழுந்து நடக்கவும் ஜீவனற்றுப் போய்விட்டது. சில சமயம், வியாதியின் மகிமையால் சித்த சுவாதீனமற்று, குழந்தையுடன் கொஞ்சுவதுபோல், சிரித்துப் பேசிக் கொள்வாள். 'கலியாணமான ஜோரில் இருந்த முகக் களை, அப்பொழுதுதான் தோன்றும்.

மறுபடியும் புத்தி தெளிந்தால் மங்கிய கண்கள்—இடிந்த மனத்தின் செயலற்ற ஏக்கம்—அவள் முகத்தில் கவிந்திருக்கும்.

பேச்சிக்கு ஒரு யோசனை தோன்றியது. 'ஊருக்கு எழுத்துப் போடணும்' என்று சுப்பனிடம் சொன்னாள். வெள்ளையனுக்கு, 'இதைத் தந்தியாகப் பாவித்து வர வேண்டும்!' என்று ஒரு கார்டு எழுதப்பட்டது.

அது போன நான்கு தினங்களுக்குள், புதிதாக வந்த துரைக்குக் கூலிகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்று எண்ணம் பிறந்தது. அதிலும் வியாதியஸ்தராக இருப்பவர்களுக்குச் சம்பளத்தைக் கொடுத்து அனுப்பிவிட வேண்டும் என்பது அவரது நோக்கம்.

மருதியுடைய பெயரும் அந்த ஜாபிதாவில் சேர்ந்தது.

இந்தச் சமாசாரம் மருதிக்கு எட்டியதும், அவளுக்குத் தெளிவு ஏற்பட்டது. வாசவன்பட்டிக்குப் போய்விடலாம் என்ற நம்பிக்கையிலோ என்னவோ, சிறிது நடமாடவும் முடிந்தது. ஆனால் பலவீனம் மாறவில்லை.

புதன்கிழமைக் கப்பலுக்கு அனுமதிச் சீட்டு, சம்பளம்—எல்லாம் வந்து சேர்ந்தன.

VII

வெள்ளிக்கிழமை மத்தியான்னம் வெயிலின் ஆதிக்கம், ஹிட்லரை நல்லவனுக்கியது. மருதி குளக்கரை வழியாகச் சேரியை நோக்கி நொண்டி நொண்டி நடந்துகொண்டிருந்தாள். அவள் இருந்த நிலையில் யாரும் அடையாளம் கண்டுகொள்ள முடியாது. கையில் ஒரு கம்பு, தலையிலும் இடுப்பிலும் இரண்டு மூட்டைகள். இடையில் வைத்திருந்த மூட்டையில் நாலைந்து கதலிப் பழம், இரண்டு ஜோடி வளையல்கள்,—எல்லாம் வெள்ளைச்சிக்கு.

சேரியில் பறையும் தம்பட்டமும் அடிப்பது அவள் காதில் ஒலித்து நடைக்கு வேகமூட்டியது. மூலை திரும்பினல் ஊர்ப் பொட்டல், அதற்கப்புறம் அந்த மூலையில் வெள்ளையன் குடிசை. சுடலைமாடன் பீடத்தை அணுகியாய்விட்டது.

அப்பொழுது மேள தாள முழக்கங்களுடன் அந்த மத்தியான்னப் பன்னிரண்டு மணி வெயிலில் ஓர் ஊர்வலம் வந்துகொண்டிருந்தது. முன் பக்கம் சிலம்பம், ஆட்டத்துடன் பறை! அதற்கப்புறம் ஒற்றைக் குதிரைச் சாரட்டில் மாப்பிள்ளையும் பெண்ணுமாக ஓர் ஊர்வலம்!

நெருங்கிப் பார்க்கிருள் மருதி, கண் கூசுகிறது. கொண்டையில் பூவும், நெஞ்சில் சந்தனமும், ஜரிகைக் குல்லாவும் வைத்து உட்கார்ந்திருப்பவன்—வெள்ளையன்தான்! என்ன ஜோராக உட்கார்ந்திருக்கிருன்! அவள்

மனசில் ஏதோ பாரம் நீங்கியது மாதிரி இருந்தது. அவளை ஒருவரும் கண்டுகொள்ளவில்லை.

மருதிக்குத் திடீரென்று குத்திருமல் மல்லு மல்லென்று வந்துவிட்டது. கீழே துப்பினாள்; அதில் இரண்டு துளி இரத்தம் கலந்திருந்தது.

VIII

"ஏ மூதி! புல்லுக்கட்டு என்ன விலை?"

"ஆறணாச்சாமி! எடுக்கறதுன்னா எடுங்க..."

"ஒரே விலையாச் சொல்லு..."

"ஒரே வெலேதான், ஆறணா! எங்கனெ தூக்கியார...?"

அங்கே நிற்பவன் டவாலிச் சேவகன், பாளையங்கோட்டை சப் ரிஜிஸ்திரார் சேவகன். எதிரே நிற்பவள் மருதி. வாசவன்பட்டியில் அவள் கனவு கண்ட சந்தோஷத்தைப் பாளையங்கோட்டையில் பெற முயற்சிக்கிறாள். மருதி வந்ததும் சென்றதும் வாசவன்பட்டியினருக்குத் தெரியாது. பாளையங்கோட்டையில் ஆஸ்பத்திரி இருக்கிறது, மருந்துத் தண்ணி வாங்கிக் குடித்துக்கொள்ள. ஏதோ கூலி கிடையாமலா போய்விடும் என்ற தைரியம் அவளுக்கு.

பகலில் புல் வெட்டி விற்பது. கிடைக்கும் காசு அன்றைய வயிற்றுப்பாட்டிற்குப் போதும். தாமிரவர்ணித் தண்ணீர் விசேஷத்தினாலோ என்னவோ, நோயின் கொடுமைகள், அதாவது வெளித்தோன்றிய புண்கள், உள்ளடங்கின. மேலெல்லாம் மேக நீரின் மினுமினுப்பும் கறுப்புத் தடங்களும் இருந்தாலும், மருதி அவ்வளவு மோசமாகி விடவில்லை.

சப் ரிஜிஸ்திரார் வீட்டில் வாடிக்கையாகப் புல் கொண்டு வந்து போடுவதாக ஒப்புக்கொண்டாள். வாடிக்கையாகப் போடுவதாலும், அன்றாடம் கைமேல் காசு கிடைப்பதாலும், நான்கணா போதும் என்று பட்டது.

மருதியின் தேவைகள் ஒன்றும் ஜாஸ்தியாகிவிட வில்லை. அதனால் அவளுக்கு அந்த நான்கணுவில் சிறிது மிச்சமும் விழுந்தது.

ஆனால், குழந்தையைப் பார்க்கவேண்டும் என்ற ஆசை நாளுக்குநாள் வளர ஆரம்பித்தது. எப்படிப் போய்ப் பார்ப்பது? அதிலும் வெள்ளையனுக்குத் தெரியாமல்...

'குழந்தை, குழந்தை!'—இதுதான் சதா காலத் தியானமும்.

ரிஜிஸ்திரார் பக்கத்தூருக்குப் போகவேண்டி யிருந்த தால், இரண்டு மூன்று நாட்களுக்குப் புல்வெட்டும் தொழி லில் சிறிது ஓய்வு. ஏன் வாசவன்பட்டிக்குப் போய் விட்டு வரக்கூடாது?

அவள் கொழும்பிலிருந்து வெள்ளைச்சிக்கு வாங்கி வந்த ஒரு ஜோடிக் கண்ணாடி வளையல்களையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

புறப்படும் வரையில் வெள்ளைச்சியை எப்படிச் சந்திப் பது என்ற பிரச்னை எழவில்லை. வழியிலெல்லாம் அதே கேள்விதான். குழந்தையை எப்படிச் சந்திப்பது?

ஊரைத் தாண்டியதும், மருதி மூட்டையை இடுக்கிக் கொண்டு, வெகு வேகமாக நடந்தாள். ஒவ்வொரு நிமிஷ மும் வெள்ளைச்சியின் உயரம், பேச்சு இவையெல்லாம் எப்படி யிருக்கும் என்ற மனக் கனவு.

IX

மருதி வாசவன்பட்டிக்குள் செல்லும்பொழுது, பகல் 11 மணியிருக்கும். அவளும் ஊரைச் சுற்றிக்கொண்டு ஆட்கள் நடமாட்டமில்லாத பாதையின் வழியாகவே சென்றாள். நல்ல காலம், தெரிந்தவர்கள் ஒருவராவது எதிரில் வரவில்லை.

வெள்ளையனின் வீடு வந்துவிட்டது. சேரியில் பறை யர்கள் நடமாட்டம் அதிகமில்லை. பகலில் வீட்டில்,

உட்கார்ந்து கொண்டிருக்க, அவர்கள் என்ன ஜமீன்தார்களா? அல்லது அவர்களுக்கு வயிறில்லையா ?

வெளியே, எதிரே நின்று ஒரு நாய் குரைத்தது.

திடீரென்று குடிசைக்குள்ளிருந்து ஒரு குழந்தையின் கதறல், பொத்துப் பொத்தென்று விழும் அடியின் சப்தம்! அதற்குமேல், "கஞ்சிப் பானையெ கவுத்துப்புட்டியே, மூதி! என்னெத்த குடிப்பெ! உங்கப்பன் வந்தான்னா மண்ணையா திம்பான்? அந்தத் தட்டுவாணி முண்டையோடெ தொலையாமெ...சவமே, சவமே..." என்ற ஒரு பெண்ணின் கோபச் சொற்கள்.

மருதிக்கு உதரம் கொதித்தது. உள்ளே பாய்ந்து சென்றாள். அடிபட்டுக் கொண்டிருக்கும் குழந்தையை அப்படியே கையில் வாரியெடுத்துக்கொண்டு, அடித்துக் கொண்டிருந்தவளைக் கன்னத்தில் ஓங்கி யடித்தாள்.

எதிர்பாராத விதமாகத் திடீரென்று ஒரு புதிய ஆள், வீட்டிற்குள் வந்து, ஒருவரை அடித்தால், யாராவது சும்மா இருப்பார்களா ?

சண்டை ஏக தடபுடலாக ஆரம்பித்தது. ஒருவரையொருவர் மாறி மாறி அடித்துக் கொண்டனர். மருதிக்கு முகத்திலும் மார்பிலும் இரத்தம் கண்டது.

இவர்கள் கூக்குரலைக் கண்டதும் குழந்தையும் வீரிட்டுக் கத்தத் தொடங்கியது. சேரிப் பெண்கள் கூடினார்கள்.

பாதிப் பேர் மருதியின் கட்சி, சிலர் வெள்ளையன் இரண்டாவது மனைவியின் கட்சி. ஆனால், இன்னும் ஒருவரும் மருதியை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. மருதியும், தன்னை யார் என்று கூறிக்கொள்ளவும் இல்லை.

அந்நிய வீட்டிற்குள் புகுந்து யாராவது அடிக்கப் பார்த்துக் கொண்டிருப்பார்களா? சேரியின் ஏச்சும் உதையும் அவளுக்குக் கிடைத்தன. மருதி துரத்தப்பட்டாள். அன்று சாயங்காலம் குழந்தை வெள்ளைச்சியை வீட்டில் காணவில்லை.

என்றும் உதையும் திட்டும் வாங்கிக்கொண்டிருக்கிற குழந்தை, பொரிகடலையும் தின்பண்டமும் வாங்கிக் கொடுக்கும் ஒருவரைக் கண்டால், உடன் வருவதற்குச் சம்மதியாமலா இருக்கும்?

மருதி குழந்தையுடன் பாளையங்கோட்டைக்கு வரும் பொழுது இரவு ஒன்பது மணி. பாளையங்கோட்டையில் இருந்தால் தொடர்ந்து வந்து பிடித்துவிடுவார்களோ என்ற பயம் அவளுக்குண்டு.

இரவில் நேராக ரயிலடியில் சென்று படுத்துக்கொண்டாள். எங்காவது வெகு தூரத்தில் போய்விட வேண்டும்—இவர்கள் இருக்கும் இடத்திற்கு வெகு தூரத்திற்கப்பால்!

மருதிக்கு அதிர்ஷ்டம் இல்லை என்று யார் கூற முடியும்?

ரயில் ஸ்டேஷனில் கங்காணிச் சுப்பனைச் சந்தித்தாள். அவன் இடுப்பில் வெள்ளி அரைஞாணும், வெள்ளை வேட்டியுமாகத் தடபுடலாக இருந்தான்.

"ஏட்டி, மருதி! நீ எங்கெ போறே?" என்றான்.

பிறகு என்ன! கங்காணிச் சுப்பன் 'வாட்டர் பால'த்திற்குப் போகிறானாம். இவளையும் கூப்பிட்டான். 'சரி' யென்று உடன்பட்டாள்.

"இந்தப் புள்ளெ யாரு?"

"என்னுது!"

"சவத்தெ அங்கெ ஏன் கொண்டாரே?"

"அது செத்தாலும் என் கிட்டத்தான் சாகணும்!"

X

பதினான்கு வருஷங்கள் கழிந்தன.

கங்காணிச் சுப்பனுடன் சென்ற மருதி இத்தனை காலமும் 'வாட்டர் பாலத்'திலேயே கழித்து விட்டாள். அங்கு இப்பொழுது மருதியின் ஸ்தானம் தேயிலைக் கூலி

என்பதல்ல. சுப்பனின் மனைவி என்றே அழைக்கப் பட்டாள். பதினான்கு வருஷங்கள் ஒருவனுடன் தன் வாழ்க்கையைப் பிணித்துக்கொண்ட பிறகாவது, மனைவி என்ற அந்தஸ்து வரக்கூடாதா?

மருதி—அவள் இப்பொழுது கொஞ்சம் பருத்து சற்று விகாரமாக இருந்தாள். முன் பல் இரண்டு விழுந்து விட்டது. தலையும் கத்தை கத்தையாக ஒவ்வொரு பக்கத்தில் நரைத்துவிட்டது. மருதி சுப்பனுக்கு என்ன மருந்து வைத்துவிட்டாளோ என்று கூலிகள் பேசிக் கொள்வதுண்டு. காரணம் சுப்பனின் திருவிளையாடல் கள் எப்படி யிருந்தாலும், மருதியின் பேச்சை யாராவது எடுத்தால், அவர்கள் கதி அதோகதிதான்.

வெள்ளச்சி—அவள்தான் மருதியின் வாழ்க்கைப் பற்றுதலுக்கு ஒரு சிறு தீபம்! 'வாட்டர் பால'த்திலேயே பதினான்கு வருஷங்களைக் கழித்தால் ஒருவரும் களங்க மற்றவராக இருக்க முடியாது. அவளுக்குச் சகல விஷயங் களையும் அடித்துப் பேசத்தெரியும். ஆனால் அவ்வளவும் வெறும் விளையாட்டுத்தனம். அவள் நின்ற விடத்தில் மௌனத்தைக் காண முடியாது. சிரிப்பும் சத்தமும் எங்காவது கேட்டால் வெள்ளச்சி அங்கு இருக்கிறாள் என்று திட்டமாகச் சொல்லிவிடலாம். வெள்ளச்சி இப்பொழுது பிராயமடைந்துவிட்டாள். மருதி கலியாண மாகி வாசவன்பட்டிக்கு முதல் முதலாக வந்த சமயத்தில் இருந்த மாதிரி, அதே அச்சாக மூக்கும் முழியுமாக இருந் தாள். மருதிக்கு அவளை ஒரு நல்ல இடத்தில் கலியாணம் பண்ணி வைத்துவிட வேண்டுமென்று ஆசை. அந்த 'வாட்டர் பால'க் கும்பலில், 'கருவாட்டைக் காக்கிற மாதிரி'—(மருதியே இப்படிச் சொல்லிக்கொள்வாள்)— காத்து வந்தாள். வெள்ளச்சி வேலை யில்லாமல் சுத்திக் கொண்டு வரவில்லை. அவளும் தேயிலைக் கூலியாகச் சிறிது காசு சம்பாதிக்கிறாள். வெள்ளைச்சியின் சம்பளம் வந்து வீடு நிறையப் போவதில்லை. ஆனாலும் அவள் கூலியைச் செலவு செய்யாமல் சேர்த்து வைத்தால்......

சுப்பன் இப்பொழுது தலைமைக் கங்காணி வேலை பார்த்து வருகிறான். அதனால் கொஞ்சம் சம்பள உயர்வு.

மருதிக்கும், வெள்ளச்சிக்கும், அவனுக்கும் போக, எல்லோரும் சேர்ந்து குடிப்பதற்கும் சிறிது மிஞ்சும். கங்காணிச் சுப்பனுக்கு மேலதிகாரிகளிடம் தக்கபடி நடந்து கொள்ள அனுபவமும் உண்டு......

அதிலும் வெகு காலமாக இருந்துவரும் ஸ்டோர் மானேஜரின் கையாள் அவன். அவருக்கு வயது ஐம்பதுக்கு மேலாகி விட்டது. கிழவர், 'வாட்டர் பால' வாசத்தினுல் பெற்ற சில வியாதிகள் உண்டு. கம்பெனி அவருக்கு இன்னும் ஒரு வருஷத்தில் உபகாரச் சம்பளம் கொடுத்து அனுப்பிவிடும். ஆனால், தமது இடத்தில் தமது பந்து ஒருவனை வைத்துவிட்டுப் போகவேண்டும் என்று அவருக்கு ஆசை. அந்தரங்கமான நோக்கம் ஒன்றும் உண்டு. தமது ஒரே பெண்ணைச் சகோதரியின் மகனுக்குக் கொடுத்து, அவனை அங்கு கொண்டுவந்து வைத்துவிட வேண்டும். இதை நிறைவேற்றுவதற்காகவே தம் சகோதரியின் மகன் தாமோதரனை அங்கு தருவித்தார்.

அப்பொழுது கம்பெனியின் முதலாளியிடமிருந்து 'வாட்டர் பாலத்'தில் ஒரு பள்ளிக்கூடம் வைக்கவேண்டும் என்று ஓர் ஆர்டர் வந்தது.

கம்பெனியின் விளம்பரத்திற்கு ராமச்சந்திரன் பதில் அளித்தான். கம்பெனியும் அவனை 'வாட்டர் பால'த்துப் பள்ளிக்கூடத்தின் உபாத்தியாயராக நியமித்தது.

ராமச்சந்திரன் 'வாட்டர் பால'த்திற்கு வந்து கொண்டிருந்த அதே பஸ்ஸில், ஸ்டோர் மானேஜரின் மகள் மரகதம் பள்ளிக்கூட விடுமுறைக்காக வீட்டிற்கு வந்து கொண்டிருந்தாள். மரகதம் நல்ல அழகி.

XI

பள்ளிக்கூடம் என்பது, ஸ்டோர் மானேஜரின் வீட்டிற்கு எதிர்ப்புறத்தில் இருந்த தேக்கந் தோப்பில் ஒரு சிறு குடிசை. அதில் ஒரு மேஜை, நாற்காலி, ஒரு கரும் பலகை, அதற்குப் பின்புறத்தில் ராமச்சந்திரனின் நாற்

கட்டில். எதிரே பிள்ளைகள் உட்கார்ந்துகொள்வதற்கு மணைகள். கூலிக்காரப் பிள்ளைகளுக்கு இது போதாதா?

மேஜையின் வலப்புறத்தில் தேயிலைத் தோட்டத்தின் அதிகாரிகளின் குழந்தைகளுக்கு நாலைந்து நாற்காலிகள்.

பிள்ளைகள் எண்ணிக்கை இருபதுக்குமேல் போகாது. டாக்டருடைய இரண்டு சிறுமிகள், தேயிலை ஸ்டோர் குமாஸ்தாக்களின் மூன்று பையன்கள்—அவர்கள் எல்லோருக்கும் இனிமேல் தான் அட்சராப்பியாசம். பதினைந்து கூலிக்காரக் குழந்தைகள். எல்லாம் ஆறு வயதுக்கு மேற்படாதவை.

ராமச்சந்திரனுக்கு உபாத்திமைத் தொழிலில் ஒரு கிறுக்கு. அதிலும் கொஞ்சம் இலட்சியங்களும் அவனைப் போட்டு அலைத்தன. இல்லாவிடில் அவன் ஏன் பி. ஏ. படித்துவிட்டு, தகப்பனார் சிபார்சில் கிடைக்கவிருந்த உத்தியோகத்தையும் தள்ளிவிட்டு, இங்கு வரவேண்டும்?

ராமச்சந்திரன் நல்ல அழகன்.

குழந்தைகளில் அவன் வித்தியாசம் பாராட்டுவது கிடையாது. கூலிக்காரக் குழந்தைகள் தங்கள் மடத்தனத்தினால் அவனைக் கோபமூட்டுவதும் உண்டு. ஆனால் சாயங்காலமாகிவிட்டால், குழந்தைகள் 'ஸாரு'டன் விளையாடாமல் வீட்டுக்குச் செல்வதில்லை.

குழந்தைகளுக்குக் கதை கேட்பதில் ரொம்பப் பிரியம். அதிலும் 'ஸார்' கதை சொன்னால் நேரம் போவதுகூடத் தெரியாது.

ராமச்சந்திரன், தன் பள்ளிக்கூடத்தின் முன்பு கொஞ்சம் அலங்காரமாக இருப்பதற்கு, புஷ்பச் செடிகள் வைத்துப் பயிர் செய்யவேண்டும் என்று நினைத்தான். ரோஜாப் புஷ்பங்கள் வளுந்தரமாக முளைத்துக் கிடக்கும் அப்பக்கத்தில், அதற்கு மட்டிலும் குறைவில்லை. மற்றச் செடிகளின் கன்றுகள் ஸ்டோர் மானேஜரின் வீட்டில் தான் ஏராளம்.

அதனால் தான் ராமச்சந்திரன் மரகதத்துடன் பேசிப் பழக நேர்ந்தது.

XII

ராமச்சந்திரன் பள்ளிக்கூடத்தின் முன்பு இருக்கும் பாத்திகளுக்குத் தண்ணீர் தெளித்துக்கொண்டிருக்கிறான். பள்ளிக்கூடம் விட்டுச் சிறுவர்களெல்லாம் சென்றுவிட்டார்கள். எங்கு பார்த்தாலும் நிசப்தம்.

அவன் மனம் அடிக்கடி ஒரு சிந்தனையில் சென்று விழுந்துகொண்டிருந்தது. மரகதம்!—அவளுடன் தான் அதிகமாக நெருங்கிப் பழகுவது தவறு என்று அடிக்கடி பட்டுக்கொண்டிருந்தது. இந்தக் குழந்தைகளின் கலகலப்பான பேச்சுக்கப்புறம், மரகதத்திடந்தான் அவனுக்குப் பேச மனமிருந்தது.

அப்பொழுது வெள்ளைச்சி அங்கு வந்தாள்.

"என்ன விசேஷம்?" என்றான். வெள்ளைச்சியை அவன் பார்த்திருக்கிறான், ஆனால் பேசியதில்லை.

"எளுத்துப் படிக்கணும்! அதுக்காக வந்தேன்!" என்றாள் வெள்ளைச்சி.

"படிக்க வேண்டுமா? பள்ளிக்கூட சமயத்தில் நாளையிலிருந்து வா!"

"தடிச்சி மாதிரி, அப்ப வரமாட்டேன். வெக்கமாக இருக்கு. இந்த நேரத்துக்கு வந்தா என்ன?"

"யாரும் ஏதாவது நினைக்க மாட்டார்களா—நீ என்னுடன் தனியாக இருந்தால்?"

"யாருக்கு அவ்வளவு தைரியம்? பல்லை உதுத்துப்புட மாட்டேனா?" என்றாள் வெள்ளைச்சி. அவள் முகத்தின் துடிதுடிப்பைக் கண்டதும் அவனுக்கே சிரிப்பு வந்துவிட்டது. அவ்வளவு தைரியம், களங்கமற்ற தன்மை! அவளுக்குப் படித்துக் கொடுக்கவேண்டும் என்று அவன் தீர்மானித்தான்.

"இப்போதே ஆரம்பிப்போமா?" என்றான் ராமச்சந்திரன். உடனே அவள் உட்கார்ந்துவிடுவாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

முதலில் உயிரெழுத்துக்களை வரிசையாகச் சொல்லிக் கொடுத்தான்.

அரை மணி நேரமாயிற்று.

"மரகதம்மா மாதிரிப் படிக்க எத்தனை நாளாகும்?" என்றாள் வெள்ளைச்சி.

"ரொம்ப ஆசை இருக்கிறதுபோல் இருக்கே?" என்று சிரித்தான் ராமச்சந்திரன்.

"இன்றைக்கு இவ்வளவு போதும், நாளைக்கு வா!" என்றான்.

"சரி!" என்று அவள் எழுந்தாள்.

அச்சமயம் மரகதம், "வாத்யார் ஸார்!" என்று சிரித்துக்கொண்டு, உள்ளே வந்தாள்.

இருவரும் தனியே இருப்பதைக் கண்டதும் சிறிது நின்றாள்.

ராமச்சந்திரன் சிரித்துக்கொண்டு, "எனது புதிய மாணவி. உன்னைப்போல் படிக்கவேண்டுமாம்!" என்றான். அவன் குரல் தொனியைக் கேட்டதும், மாகதத்திற்குத் தோன்றிய சந்தேகம் மறைந்தது.

"வெள்ளைச்சிக்கு ஆசை ரொம்ப! பொல்லாதவள்!" என்றாள் மரகதம்.

"நானும் ஒங்களைப் போலப் படிக்கப் போரேன்!" என்று சொல்லிக்கொண்டே ஓடிவிட்டாள் வெள்ளைச்சி.

"இன்று அத்தான் வந்திருக்கிறார். வீட்டுக்கு வருகிறீர்களா?"

"நான் என்னத்திற்கு? சமைத்தது வீணாகப் போகும்!" என்றான் ராமச்சந்திரன்.

"ஆமாம்! நாளைக்கு வேண்டுமானால் நான் செய்து தந்துவிடுகிறேன். வாருங்கள் போகலாம்!" என்றாள் மரகதம்.

"புதிய ஆட்கள் இருக்கும்பொழுது நான் வருவது நன்றாக இல்லை, எப்படியும் நான் அவர்களைப் பார்க்காமலா இருக்கப்போகிறேன்? நாளைக்கு வருகிறேன்!"

"நான் சொல்வதைக் கேட்பீர்களா, மாட்டீர்களா?"

"இப்படி முரண்டினால்......"

"பின்னே......"

"இரண்டு பேருக்கும் பொதுவாக ஒன்று சொல்லுகிறேன். இப்பொழுது இருட்டிவிட்டது. பாதி வழிவரை கொண்டுவந்து விட்டுவிட்டு வருகிறேன்!"

"நீங்கள் பிடித்த முயலுக்கு மூன்று கால்தான் போலிருக்கிறது!"

"இல்லை, மூன்றரை! நீ சொன்னபடிதான் பாதி கேட்கிறேனே!"

"கேட்க வேண்டாம், போங்கள்!" என்று விர்ரென்று திரும்பிச் சென்றாள் மரகதம்.

ராமச்சந்திரன், அவளைக் கூப்பிட்டுக்கொண்டு ஓடி, அவள் முன்பு நின்றான். அவள் கண்களில் நீர் தளும்பி நின்றது.

"இதற்கெல்லாம் இப்படி அழுதால்? வருகிறேன்!" என்று சொல்லி அவளுடன் சென்றான்.

பாதி வழியில் சென்றதும், "அத்தான் எதற்கு வந்திருக்கிறார் தெரியுமா?" என்றாள்.

"எதற்கு?"

"என்னைக் கலியாணம் செய்துகொள்ள!"

"அப்படியா! சந்தோஷம்."

பிறகு இருவரும் பேசவில்லை.

XIII

வெள்ளைச்சியின் படிப்பு வெகு மும்முரமாகச் சென்றது. உயிரெழுத்து, மெய்யெழுத்து, எல்லாம் பாராமல் சொல்லுவாள். சிறிது கஷ்டப்பட்டு எழுதவும் தெரியும்.

ராமச்சந்திரனுக்கு அவளிடம் ஒரு பிரேமை ஏற்பட்டது. அவளுடைய பேச்சில் ஓர் இன்பம். சில சில சமயம்

முதிர்ந்த விபசாரியின் பேச்சுக்களுடன், களங்கமற்ற அவள் உள்ளமும் வெளிப்பட்டது.

படிப்பு முடிந்தால், கூலிக்காரர்களுடைய சமாசாரங்களையெல்லாம் தன் அபிப்பிராயங்களுடன் கலந்து, அவனிடம் சொல்லுவாள்.

யாருக்கும் தெரியாமல் ஒன்றைச் செய்தால் பாவமில்லை. இது வெள்ளைச்சியின் அபிப்பிராயம்.

இதை எவ்வளவோ மாற்ற முயன்றும் ராமச்சந்திரனால் முடியவில்லை. ஆனால் அவனுடன் பழகியதில் சுத்தமாக இருக்கப் பழக்கப்படுத்திக் கொண்டாள் வெள்ளைச்சி.

மருதிக்கு மகள் வாத்தியாரிடம் சென்று வருவது பிடிக்கவில்லை. ஆனால் வெள்ளைச்சியிடம் எவ்வளவு சொல்லியும் பயன் இல்லை. வாத்தியாரைப்பற்றி ஏதாவது பேச்செடுத்தால் மல்லு மல்லென்று சண்டைக்கு வந்து விடுவாள்.

துரை பங்களாவில் வேலை செய்யும் குதிரைக்காரச் சின்னானுக்கு அவளைக் கட்டிக் கொடுத்துவிட வேண்டும் என்பது மருதியின் ஆசை.

கங்காணிச் சுப்பனும் சம்மதித்தான். விஷயம் பேச்சு மட்டில் இருக்கிறது. குதிரைக்காரச் சின்னானுக்கும் அவளைக் கல்யாணம் செய்துகொள்வதில் இஷ்டமாம்.

அன்று சாயங்காலம் வெள்ளைச்சி சிறிது நேரம் கழித்துப் பாடம் படிக்க வந்தாள்.

பாலர் பாடப் புத்தகத்தை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு, "வா, வெள்ளச்சி, இந்த நாற்காலியில் உட்காரு! ஏது இவ்வளவு நேரம்?" என்றான் ராமச்சந்திரன்.

வெள்ளைச்சி பதில் சொல்லவில்லை.

ராமச்சந்திரன் சொல்லுவது அவள் காதில் ஏறவேயில்லை. பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தாள்.

"என்ன வெள்ளைச்சி இன்றைக்குப் படிப்பு சுகமில்லை போலிருக்கிறது! நாளைக்கு வேண்டுமானாலும் பார்த்துக் கொள்ளலாம். ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்? வீட்டில் ஏதாவது சண்டையா?" என்றான்.

"நான் இங்கே வரப்படாதாம். குதிரைக்காரச் சின்னானை எனக்குக் கலியாணம் செய்யணுமாம்!"

"அது நல்லதுதானே! முந்தியே சொன்னேனே, யாராவது சொல்லுவார்கள் என்று. மருதி சொல்லுகிறபடி கேள்!"

"நான் வரப்புடாதா? எனக்குச் சின்னான் பயலைப் புடிக்கலை, அப்போ—"

"அது எப்படி இருந்தால் என்ன? மருதி சொல்வதைக் கேள்!"

"நான் அப்படித்தான் வருவேன். மானேஜர் அய்யா கிட்டச் சொல்லி என்னெ வரவுடாமே ஆக்குவாங்களாம். நான் படிச்சா இந்த மூதிகளுக்கு என்ன?"

ராமச்சந்திரனுக்கு எப்படி விளக்குவதென்று தெரியவில்லை. அவள் பிடிவாதம் குழந்தையின் பிடிவாதத்தைப் போல் இருந்தது.

அவளைச் சமாதானப்படுத்தி அனுப்பிவிடுவது மேல் என்று பட்டது. ஆனால் அவளை விரட்டுவதற்கு அவனுக்குப் பிடிக்கவில்லை.

ஒரு யோசனை பட்டது. ஒரு பைத்தியக்காரத்தனமான யோசனை. அவளைத் தானே கலியாணம் செய்து கொண்டால்—அவளுடைய குழந்தைத்தனம், அவளுடைய பிடிவாதம், ஆனால் உள்ளுக்குள் இருக்கும் விளைந்த அன்பு, எல்லாம் வசீகரித்தன. ஆனால் பறைச்சி! ஒத்து வருமா?

"வெள்ளைச்சி! நீ என்னைக் கலியாணம் செய்து கொள்ளுகிறாயா?"

வெள்ளைச்சியின் முகத்தில் ஆச்சரியம், அன்பு, குதூகலம்—எல்லாம் அலைமேல் அலையாக எழுந்தன.

"கலியாணம் எதுக்கு?..." என்று அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அப்பார்வையில், அவளது அன்பு, அதற்கு மேல், அவர்கள் இருவருக்குமிடையில் இருந்த தடையின் பயம்—எல்லாம் கலந்திருந்தன.

அவள் உள்ளத்தின் போக்கு ராமச்சந்திரனுக்குத் தெளிவாகத் தெரிந்தது. அவனுக்காக அவள் எதை வேண்டுமானாலும் பணயம் வைக்கக் கூடியவள்.

"வெள்ளைச்சி! விளையாட்டிற்கல்ல—நிஜமாகக் கேட்கிறேன், என்னைக் கலியாணம் செய்துகொள்!" என்றான்.

அவள், "ஆகட்டும்!" என்று அவனை நெருங்கினாள்.

XIV

ஸ்டோர் மானேஜருக்கு ஐம்பது வயதிற்கு மேலானாலும் மனமும் ஆசையும் குறைந்தபாடில்லை. இப்பொழுது அவருடைய திருவிளையாடல்கள் எல்லாம் மிகவும் மறைமுகமாக நடக்கும். ஆனால், அவற்றிற்குக் கையாள் குதிரைக்காரச் சின்னான்.

நெடுநாளாக ஸ்டோர் மானேஜருக்கு வெள்ளைச்சியின் மீது கண் உண்டு. இப்பொழுது இருந்த வளமையில், மருதியும், கங்காணிச் சுப்பனும் முரடர்கள். மேலும் வெள்ளைச்சியின் குணம் 'வாட்டர் பால'த்திற்கு நன்றாகத் தெரியும். ஆனால், ஆசை யாரை விட்டது? குதிரைக்காரச் சின்னான் இந்த விஷயத்தைத் தெரிந்துகொண்டான். நெடுநாளாகக் கங்காணி வேலையில் அவனுக்குக் கண் உண்டு.

நீர்வீழ்ச்சியின் கீழ் $2\frac{1}{2}$ மைல் வரை தேயிலைத் தோட்டம் படர்ந்திருந்தது. அப்பக்கத்தில் ஆட்கள் நடமாட்டம் அவ்வளவு கிடையாது. தோட்டத்தின் எல்லையைத் தாண்டினால் அழிக்கப்படாத 'ரிஸர்வ்' காடுகள். அவற்றின் இடையே நீர்விழ்ச்சியிலிருந்து ஓடும் ஆறு, பாறைகளின் மீது சலசலத்துப் பாய்கிறது.

வெள்ளைச்சியை மெதுவாக அந்தப் பக்கமாக அழைத்து வர, அவளுடன் கூட அலையும் சிறு பெண்களுக்குக் காசு கொடுக்கப்பட்டது.

அவர்கள் அப்போதைக்கப்போது சின்னானின் நட்பைப் பெற்றவர்கள். இத்தனை நாளும் அகப்படாத வெள்ளைச்சியைப் பிடித்துக் கொடுப்பதில் அவர்களுக்குக் கொஞ்சம் குதூகலம்! ஏற்பாட்டின்படி நடந்தது. சின்னான் ஸ்டோர் மானேஜருடன் அங்கு வந்திருந்தான். வெள்ளைச்சியைக் கொழுந்து பறிக்க வைத்துவிட்டு, மெதுவாக நழுவி விட்டார்கள் கூடவந்த சிறுமிகள்.

வேறு விஸ்தரிப்பானேன்? அவளை முரட்டுத்தனமாகப் பிடித்து மரத்தில் கட்டிவிட்டான் குதிரைக்காரன்.

வெள்ளைச்சியின் கூச்சலைக் கேட்டு உதவிக்கு வருவதற்கு அங்கு ஆட்கள் இல்லை. ஆனால், அன்று தற்செயலாக ராமச்சந்திரன் அப்பக்கம் வந்தான்

தூரத்தில் வரும்பொழுதே வெள்ளைச்சியின் நிலையைப் பார்க்க நேர்ந்தது. முதலில் அவன் வெள்ளைச்சி என்று நினைக்கவில்லை.

கிட்ட நெருங்கியதுந்தான் அவனுக்குத் தெரிந்தது. வெறிபிடித்தவன்போல, அவ்விருவரையும் தாக்கினான்.

சின்னான் முரடன். ராமச்சந்திரன் அடிக்கப் பார்த்துக்கொண்டிருப்பானா? தடியைப் பிடுங்கிக்கொண்டு அவன் வெளுத்துவிடவே, ராமச்சந்திரன் மூர்ச்சையாகி விட்டான்.

அவனுக்குப் பிரக்ஞை வரும்பொழுதும் வெள்ளைச்சியின் கூக்குரல்தான் கேட்டது. மெதுவாக எழுந்து அவள் கட்டுக்களை அவிழ்த்துவிட்டான்.

வெள்ளைச்சி அவனைக் கட்டிக்கொண்டு தேம்பித் தேம்பி யழுதாள். சில சில சமயம் ரௌத்திராகாரமாகக் காளியைப்போல் இடிக் குரலில் பிதற்றுவாள்.

ராமச்சந்திரனுக்கு வலி சகிக்க முடியாது போனாலும், யாராவது கொஞ்சம் தைரியத்துடன் இருந்தால்தானே வீட்டிற்காவது போகலாம்!

இருவரும் நேரே மருதியின் குடிசைக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

மருதிக்கு, அவர்கள் செய்தியைக் கேட்டதும், பேரிடி விழுந்ததுபோல் ஆயிற்று.

அதிலும், தன்னைக் கெடுத்த பாவியின் கையாள்தான் மருமகனுகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தச் சின்னுன். குய்யோ முறையோ வென்று கூவிக்கொண்டு, ஸ்டோர் மானேஜர் பங்களாவிற்கு ஓடினுள். அவர் அப்பொழுது தான் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்து நின்றுகொண்டிருந் தார். பக்கத்தில் மரகதமும், தாமோதரனும் நின்றுகொண் டிருந்தார்கள்.

ஓடிவந்த மருதி, "என்னைக் கெடுத்த பாவி, என் மகளை யும் குலைத்தாயே!" என்று ஒரு கல்லைத் தூக்கி, அவர்மீது போட்டாள். நெற்றிப் பொருத்தில் பட்டு உயிரைப் பறித்துச் சென்றது கல்!

தாமோதரன் மருதியை ஓங்கி யடித்தான். அவள் மூர்ச்சை போட்டு விழுந்துவிட்டாள்.

மரகதம் தகப்பனுர்மீது விழுந்து கதறினுள். வேலைக் காரர்கள் வந்து கிழவரை உள்ளே எடுத்துச் சென்றுர்கள்.

இதற்குள் நடந்த விஷயம் கூலிக்காரர்களுக்குள் பரவி விட்டது. அவர்கள் எல்லோரும், கம்பையும் தடியையும் எடுத்துக் கொண்டு, துரை பங்களாவின் பக்கம் ஓடினுர்கள்.

சின்னுன் அங்குதான் இருப்பான் என்பது அவர்கள் நம்பிக்கை. அப்பொழுதுதான் தூங்கி விழித்த துரை, துப் பாக்கியை எடுத்துக்கொண்டு, கீழே இறங்கினுர். கூட்டம் அடக்கக்கூடியதாக இல்லை.

மறுபடியும் உள்ளேபோய், கொழும்புப் போலீஸாரை டெலிபோனில் அழைத்து விட்டு, அவர் கூட்டத்தை நோக் கிச் சுட்டார். கூட்டம் சின்னுன் வீட்டில் தீ வைத்து விட்டது. ஆனுல், சின்னுன் பைத்தியக்காரனல்லன். கூட்டம வருமுன்பே எங்கோ ஓடிவிட்டான்.

கூலிக்காரர்களின் கூட்டம் ஸ்டோர் மானேஜர் வீட்டுப் பக்கத்தை நாடியது.

கூலிக்காரர்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள் என்று தெரிந்ததும், ராமச்சந்திரனுக்குப் பயம் அதிகமாகி யது. மரகதத்தையும் அவள் வீட்டிலுள்ளவர்களையும் ஏதாவது செய்துவிட்டால் என்ன செய்வதென்று கவலைப் பட்டான்.

வெள்ளைச்சியிடம் தன் மனத்தில் உள்ளதைக் கூறி ளுன். அவளுக்கு முதலில் சம்மதமில்லை. பிறகு அவன் இஷ்டத்திற்காகச் சென்றாள். அங்கு போனதும்தான் நடந்த சமாச்சாரம் தெரிந்தது. மரகதத்தையும் தாமோ தரனையும் அழைத்துக்கொண்டு துரை பங்களாவிற்கு வந்தான்.

மருதிக்குக் காவலாக வெள்ளைச்சி நின்றுகொண்டிருந் தாள். அப்பொழுது கூட்டம் அவர்கள் வீட்டை நோக்கி வந்தது.

வெள்ளைச்சி முரட்டுத் தைரியம் கொண்டவள் :

"கிழவன் போய்விட்டான், இனி ஒன்றும் செய்ய வேண்டாம்!" என்று கூவினாள்

கூட்டத்தில் பலருக்கு அவ்வித அபிப்பிராயம் கிடை யாது. ஆனால், முதல் ஆவேசம் அடங்கிவிட்டது. எல்லோ ரும் மெதுவாகத் திரும்பினார்கள்.

மருதிக்குப் பிரக்ஞை வந்தது; ஆனால் சித்தம் தெளியவில்லை.

ராமச்சந்திரன் துரையிடம் நடந்த சமாச்சாரங்களைக் கூறினான். துரையோ அநுபவம் பெற்றவர்.

குற்றம் அதிகாரிகள் பக்கம் இருக்கிறது என்று தெரிந் ததும், சமாதானம் செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்று தெரிந்துகொண்டார். பத்திரிகையில் கம்பெனியின் பெயர் அடிபடுவதில் அவருக்குப் பிரியமில்லை.

அன்று விடியற்காலம் போலீஸ் பட்டாளம் ஒன்று வந்தது.

விவகாரங்கள் ஒருவிதமாக முடிவதற்குக் காரணம் துரைதான். துரை கொலையை நாஸுக்காக அமுக்கி விட்டார். பத்திரிகைகளில் இந்த விஷயம் வெளிவரக் கூடாது என்பதே அவர் கவலை.

மருதிக்குப் பைத்தியம் தெளியவே யில்லை. அவளும், வெள்ளைச்சியும், ராமச்சந்திரனும் எங்கோ சென்றுவிட்டார்கள்.

'வாட்டர் பால'த்தில் மறுபடியும் அமைதி குடிகொண்டது. தேயிலை உற்பத்தியில் அது தன்னை மறந்தது.

மரகதம்! அவளும் இப்பொழுது 'வாட்டர் பால'த்தி லில்லை.

தாமோதரன், இப்பொழுது நெல்லூர்ப் பக்கத்தில் வாத்தியாராக இருக்கிறனும். அவனுடன் மரகதம் இருப்பதைப் பார்த்தால், அவர்களுக்குக் கலியாணமாகிவிட்டது என்றுதான் நினைக்கவேண்டி யிருக்கிறது. அப்படித்தான் பலரும் சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

சிற்பியின் நரகம்

சூரியாஸ்தமன சமயம். காவிரிப்பூம்பட்டினத் துறை முகத்தில் என்றையும்விட அதிக நெருக்கடி. கறுத்து ஒடுங்கிய மிசிர தேச வாசிகளும், வெளுத்து ஒடுங்கிய கடார வாசிகளும், தசை வலிமையின் இலட்சியம் போன்ற கறுத்த காப்பிரிகளும், வெளுத்த யவனர்களும், தென்னுட்டுத் தமிழும், வடநாட்டுப் பிராகிருதமும்—எல்லாம் ஒன்றிற்கொன்று முரண்பட்டுக் குழம்பின. சுங்க உத்தியோகஸ்தர்கள், அன்னம் போலும், முதலைகள் போலும் மிதக்கும் நாவாய்களிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பண்டங்களையும், வேலைக்காரர்களையும், பொற்பிரம்பின் சமயோசிதப் பிரயோகத்தால் தணிக்கை செய்துகொண்டிருந்தனர். அரசனுக்குக் கடாரத்திலிருந்து வெள்ளை யானைகள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பார்க்கத்தான் என்றுமில்லாத கூட்டம்!

அஸ்தமன சூரியனின் ஒளியே எப்பொழுதும் ஒரு சோக நாடகம். கோவில் சிகரங்களிலும், மாளிகைக் கலசங்களிலும் தாக்கிக் கண்களைப் பறிப்பதுமட்டுமல்லாது, கடற்கரையில் கரும் பாறையில் நிற்கும் துவஜஸ்தம்பத்தின்மீது, கீழ்த்திசை நோக்கிப் பாயும் பாவனையில் அமைக்கப்பட்ட பொன் முலாம் பூசிய வெண்கலப் புலியின் முதுகிலும் வாலிலும் பிரதிபலிப்பது, அவ்விடத்திற்கே ஒரு மயக்கத்தைக் கொடுத்தது.

இந்திர விழாவின் சமயத்தில் மக்களின் வசதிக்காக அமைக்கப்பட்ட ஸ்நான கட்டத்தின் படிக்கட்டில், **பைலார்க்கஸ்** என்ற யவனன், கடலை நோக்கியபடி உட்கார்ந்திருந்தான். நீண்ட போர்வையான அவனது **டோகா,** காற்றில் அசைந்து படபடவென்றடித்து, சிலமயம் அவனது தாடியையும் கழுத்துடன் இறுகப் பின்னியது.

பெரிய அலைகள் சமயா சமயங்களில் அவனது பின்னிய தோல்வார்ப் பாதரட்சையை நனைத்தன. அவ்வளவிற்கும் அவன் தேகத்தில் சிறிதாவது சலனம் கிடையாது. மனம் ஒன்றில் லயித்துவிட்டால், காற்றுத்தான் என்ன செய்ய முடியும், அலைதான் என்ன செய்யமுடியும்?

பைலார்க்களின் சிந்தனை சில சமயம் அலைகளைப் போல் குவிந்து விழுந்து சிதறின. கனவுகள் அவனை வெறியனைப்போல் விழிக்கச் செய்தன.

திடீரென்று, "சிவா!" என்ற குரல். ஒரு தமிழ்ப் பரதேசி!

"யவனரே! உமது சித்தம் உமக்குப் பிரியமான ஒன்றுமற்ற பாழ்வெளியில் லயித்ததோ? நான் நேற்றுச் சொன்னது உமக்குப் பதிந்ததா? எல்லாம் **மூலசக்தியின்** திருவிளையாடல். அதன் உருவம்! கொல்லிப் பாவையும் அதுதான்; குமரக் கடவுளும் அதுதான்! எல்லாம் ஒன்றில் லயித்தால்......?"

"உமது தத்துவத்திற்குப் பதில் ஒரு கிண்ணம் திராட்சைமது எவ்வளவோ மேலானது. அதுவும் ஸைப்பிரஸ் தீவின் திராட்சை...அதோ போகிறானே, அந்தக் காப்பிரியும் ஏதோ கனவை நம்புகிறான். உமது முதல் சூத்திரத்தை ஒப்புக்கொண்டால் உமது கட்டுக்கோப்பில் தவறு கிடையாதுதான்...அதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? ஒவ்வொருவனுடைய மனப் பிராந்திக்கும் தகுந்தபடி தத்துவம்......எனக்கு அது வேண்டாம்...... நாளங்காடியில் திரியும் உங்கள் கருநாடிய நங்கையும், மதுக் கிண்ணமும் போதும்......"

"சிவ! சிவ! இந்த ஜைனப் பிசாசுகள்கூடத் தேவலை, கபாலி வெறியர்கள்கூடத் தேவலை...உம்மை யார் இந்த அசட்டு மூட்டையைக் கட்டிக்கொண்டு யவனத்திலிருந்து வரச் சொன்னது?"

"உம்மைப் போன்றவர்கள் இருக்குமிடத்தில் நான் இருந்தால்தான் அர்த்தமுண்டு. எங்கள் *ஜூபிட்டரின்

---

* ஜூபிட்டர் - யவன இதிகாசங்களில் குறிப்பிடப்படும் தேவர்களுக்கு அரசன்—கிரகங்களில் வியாழம்.

அசட்டுத்தனத்திற்கும் உங்கள் கந்தனின் அசட்டுத்தனத்திற்கும் ஏற்றத் தாழ்வில்லை..." என்று சிரித்தான் பைலார்க்கஸ்.

"சிவ! உம்மிடம் பாசத்தை வைத்தான், அதுவும் அவன் விளையாட்டுத்தான்!" என்று, தம் சம்புடத்திலிருந்த விபூதியை நெற்றியில் துலாம்பரமாக அணிந்துகொண்டார் பரதேசி.

"நாளங்காடிப் பக்கம் போகிறேன், வருகிறீரா?" என்றார் மீண்டும் அச்சந்நியாசி.

"ஆமாம்! அங்கே போனாலும் சாத்தனைப் பார்க்கலாம்; அவனிடம் பேசுவதில் அர்த்தமுண்டு...அவனுக்குத் தெரியும் சிருஷ்டி ரகசியம்..."

"ஓஹோ! அந்தச் சிலை செய்கிற கிழவனையா? உமக்கு ஏற்ற பைத்தியக்காரன்தான்...ஏதேது! அவனே அதோ வருகிறானே!" என்றார் சாமியார்.

பைலார்க்கஸ் எழுந்து அவனை யவன முறையில் வணங்கினான்.

சாத்தனுக்கு எண்பது வயதிருக்கும்; தொண்டு கிழவன். ஆனால் வலிமை குன்றவில்லை; கண்களில் தீட்சண்யம் போகவில்லை. பிரமன் மனித வடிவம் பெற்றது போல் காணப்பட்டான். அவனும் கைகூப்பி வணங்கி, "பைலார்க்கஸ், உன்னைத்தான் தேடிவந்தேன்! வீட்டிற்கு வருகிறாயா? எனது லட்சியம் இன்றுதான் வடிவம் பெற்றது...!" என்று ஒரு குழந்தையின் உற்சாகத்துடன் கூவியழைத்தான்.

"இவரைத் தெரியுமா? பாண்டிய நாட்டு உங்கள் பரதேசி...அவர் தத்துவங்களை எல்லாம் என்னுள் திணித்துப் பார்த்தார்......பைலார்க்கஸிடம் முடியுமா?" என்று கேலியாகச் சிரித்தான் யவனன்.

"சுவாமி வரணும், இன்று என் குடிசையில் அமுது படி கழிக்கவேண்டும்," என்று பரதேசியைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான் சாத்தன்.

''என்ன, என்ன! நீயுமா?'' என்றான் பைலார்க்கஸ்.

''பைலார்க்கஸ் ! நீ நிரீசுவர வாதியாக இருப்பதில் எனக்கு வருத்தமில்லை; மற்றவரைக் கேலி செய்யாதே...''

''அதற்குத்தான் நான் பிறந்திருக்கிறேன், அப்பா! எனது வேலை அது...''

''சரி, வாங்கள் போகலாம், சுவாமி வரணும்?'' என்று இருவரையும் இரட்டை மாட்டு வண்டிக்கு அழைத்துச் சென்றான் சிற்பி.

வண்டியின் கதி மெதுவாகத்தான் இருக்க முடிந்தது. எதிரே யானைகளும், பொதி கழுதை பொதி மாடுகளும், துறைமுகத்தை நோக்கி வரும் நேரத்தில், தீப்பந்தம் பிடித்துச் செல்லும் மக்களை விலக்கிக்கொண்டு வண்டி செல்வது கடினந்தான். திடீரென்று அரசாங்க உத்தியோகஸ்தர்களின் ரதம், யானை வந்துவிட்டால் தெருவே தூளிபடும். முரசொலி இருந்து என்ன பயன்? அந்த உப்பு வண்டி ஓட்டிச் செல்லும் பெண், சிறிது தவறினால், ரதத்தின் அடியில்தான்! சாத்தனின் வண்டி அதில் முட்டிக்கொள்ள விருந்தது.

'' தெய்வச் செயல்!'' என்றான் சாத்தன்.

''உன் சிருஷ்டி சக்தி!'' என்றான் பைலார்க்கஸ், வேறு எதையோ நினைத்துக்கொண்டு.

''பைலார்க்கஸ், உனது பேச்சு எனது பெருமையைச் சாந்தி செய்யலாம். நான் எத்தனை நாள் கஷ்டப்பட்டேன்! அது உனக்குத் தெரியுமா? நீ நேற்றுப் பிறந்தவன்...... கூத்து!...அதில் எவ்வளவு அர்த்தம் ! மனிதனுக்குத் தெரிந்ததெல்லாம், தெரியவேண்டுவதெல்லாம்......இந்தப் பிரபஞ்சமே, பைலார்க்கஸ், நீ நினைப்பதுபோல் வெறும் பாழ் வெளியன்று; அர்த்தமற்ற பேய்க் குழப்பம் அன்று... இருபது வயசிருக்கும்; அப்போ ஒரு தரம் பாண்டிய நாட்டுக்குப் போயிருந்தேன்...சிற்பத்தைப் பார்க்க வேண்டுமானால் **கொல்லிப் பாவையைப்** பார்க்க வேண்டும். அங்கேதான், ஒரு மறவன், நாகன், ஒரு கூத்தில் அபிநயம் பிடித்தான். அந்தக் கால் வளைவு, அதை அதிலே பிடித்தேன்...

உலகத்தின் அர்த்தத்தை...ஒவ்வொன்ருக, படிப்படியாக வளர்ந்து...அந்த மலையத்து நடிகைதான் முகத்தின் சாந்தியை, அந்த அபூர்வமான புன்சிரிப்பை, அர்த்தமற்ற அர்த்தத்தை,—பைலார்க்கஸ், உனக்கென்ன! நீ கேலிக்காரன்—உபநிஷத்தில் தேடியலேந்தேன்......ஹிமயத்தில் தேடியலேந்தேன்...சாந்தி அந்த இரவு...என் மனைவி அங்கயற்கண்ணி இறந்த அன்று கிட்டியது...பிறகு வெண்கலக் கலப்பிற்கு என்ன பரீட்சை! என்ன ஏமாற்றம்!...ஆசைதான் வழி காட்டியது. அந்த ரூப சௌந்தரியம் பெறுவதற்கு எத்தனை ஆட்களைத் தேடினேன்!...அதன் ஒரு சாயை...நீலமலைக் கொடுங்கோலன்—பத்து வருஷங்களுக்கு முன்பு சிரச்சேதம் செய்யப்பட்டானே—அவனுடைய இடை துவளுதலில் கண்டேன்...தெய்வம் ஒன்று உண்டு...அதன் அர்த்தத்தை என் சிலே உணர்த்த முடிந்தது எனது பூர்வ ஜன்மப் பலன்...இந்தக் கைகளால்... பின்னலிருந்து ஓர் அர்த்தமுள்ள வஸ்து தூண்டாவிட்டால்...அதைச் சாதிக்க முடியும்?"

"நீதான் சாதித்தாய்! நீதான் பிரம்மா! உன் சாதனைதான் அது. சிருஷ்டி! மயங்காதே!—பயப்படாதே! நீதான் பிரம்மா! சிருஷ்டித் தெய்வம்!" என்று பைலார்க்கஸ் அடுக்கிக்கொண்டே போனான்.

சாமியார் புன்சிரிப்புடன் வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

வண்டியும் நாளங்காடியை அடைந்து, கீழ்ச் சதுக்கத்தின் வழியாக ஒரு சந்தில் திரும்பி, ஒரு வீட்டின் முன்பு நின்றது.

மூவரும் இறங்கி வாசற்படியில் ஏறினர். ஒரு யவனப் பெண் வந்து காலைக் கழுவினாள். ஒரு காப்பிரி, மரியாதையாகக் குனிந்து, கலிங்க வஸ்திரத்தினால் துடைத்தான்.

"சுவாமி, வரவேண்டும்! பைலார்க்கஸ், இப்படி வா!" என்று இருவரையும் அழைத்துக்கொண்டு, ஓர் அறைக்

குள் சென்றான் சாத்தன்...அவன் வயதிற்கு அவ்வளவு துடிதுடிப்பு ஆச்சரியமானதுதான்!

"மூபாங்கோ, தீபம்!" என்று கத்தினான். அந்தக் காப்பிரி ஒரு கைவிளக்கை எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தான். ஜன்னல் இல்லாத அந்த அறையிலும் காற்று நூலிழைபோல் வந்து உள்ளத்தையும் உடலையும் மயக்கியது.

"இங்கு கூடவா விளக்கு இல்லை! திரையை ஒதுக்கு! ஸ்வாமி, பைலார்க்கஸ், இதுதான் என் வாழ்க்கை!" என்று திரையை ஒதுக்கினான்.

இருவரும் ஸ்தம்பித்து நின்றனர். அந்த மங்கிய தீப வொளியில், ஒற்றைக் காலைத் தூக்கி நடிக்கும் பாவனையில், ஆள் உயரத்தில் மனித விக்ரகம்! விரிந்த சடையும் அதன்மீது விளங்கும் பிறையும், விரிந்து சின்முத்திரைகளைக் காண்பிக்கும் கைகளும், அந்த அதரத்தில் தோன்றிய அபூர்வப் புன்னகையும், மனத்தில் அலைமேல் அலையாகச் சிந்தனைக் கற்பனைகளைக் கிளப்பின. மூவரும் அந்தச் சிலையே யாயினர். சிலையின் ஒவ்வொரு வளைவிலும், ஒவ்வொரு அங்கத்திலும் என்ன ஜீவத் துடிதுடிப்பு!

சந்நியாசி, தம்மை யறியாமல், பாட ஆரம்பித்தார்...

பனித்தச் சடையும், பவளம்போல்
மேனியிற் பால் வெண்ணீறும்,
குனித்தப் புருவமும், கொவ்வைச்
செவ்வாயிற் குமிண் சிரிப்பும்,
இனித்தங்கசிய எடுத்த பொற்
பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மா நிலத்தே!

"சுவாமி, அப்படிச் சொல்லக் கூடாது!"

"சாத்தா! அவர் சொல்லுவதுதான் சரி! இது கலையா! இது சிருஷ்டி! இதை என்ன செய்யப் போகிறாய்?"

"அரசன் கோவிலுக்கு...இதென்ன கேள்வி?"

"என்ன! இந்த அசட்டுத்தனத்தை விட்டுத்தள்ளு... அரசனுடைய அந்தப்புர நிர்வாண உருவங்களின் பக்கவில் இதை வைத்தாலும் அர்த்தம் உண்டு...இதை உடைத்துக் குன்றின்மேல் எறிந்தாலும் அந்தத் துண்டுகளுக்கு அர்த்தம் உண்டு; ஜீவன் உண்டு..." என்று வெறி பிடித்தவன்போல் பேசினான் பைலார்க்கஸ்.

"சீ, பைலார்க்கஸ்! உனது வெறி பிடித்த கொள்கைகளுக்கு யவனந்தான் சரி! அகஸ்தூஸா—அந்த உங்கள் சாம்ராட்—அவனுக்குத்தான் சரி உன் பேத்தல்!"

"சாத்தனாரே! உமது இலட்சியத்திற்கு அரசன் கோரிக்கைதான் சரியான முடிவு. இனி ஏன் இந்த ஜைனர்கள் தலை தூக்கப் போகிறார்கள்..." என்றார் சாமியார்.

"இந்த வெறி பிடித்த மனிதர்களைவிட, அந்தக் கடலுக்கு எவ்வளவோ புத்தியிருக்கிறது..." என்று கோபித்துக்கொண்டு, பைலார்க்கஸ் வெளியேறிவிட்டான்.

II

அன்றுதான் கும்பாபிஷேகம். சிலையைப் பிரதிஷ்டை செய்த தினம். சோழ தேசத்திலேயே அது ஒரு பெரும் களியாட்டம் என்று கூறவேண்டும். சாத்தனுக்கு இலட்சியம் நிறைவேறிற்று. அன்று பைலார்க்கஸ் தனது குதூகலத்தில் பங்கெடுத்துக்கொள்ள உயிருடன் இல்லையே என்ற வருத்தம் சாத்தனுக்கு அதிகம்.

புதிய கோவிலிலிருந்து வீடு சேரும்பொழுது அர்த்த ஜாமமாகி விட்டது.

வயதின் முதிர்ச்சி அன்றுதான் அவனைச் சிறிது தளர்த்தியது. சோர்ந்து படுத்தான். அயர்ந்துவிட்டான்...

அப்பா! என்ன ஜோதி! அகண்டமான எல்லையற்ற வெளி! அதிலே சாத்தனின் இலட்சியம், அந்த அர்த்தமற்ற, ஆனால் அர்த்தபுஷ்டி மிகுந்த ஒரு புன்சிரிப்பு!

மெதுவான ஹிருதய தாளத்தில் நடனம்! என்ன ஜீவன்! என்ன சிருஷ்டி!

திடீரென்று எல்லாம் இருண்டது! ஒரே கன்னக் கனிந்த இருள்! ஹிருதய சூனியம் போன்ற பாழ் இருட்டு!

பிறகும் ஒளி......இப்பொழுது தங்கத்தினுலான கோவில்! கண்கள் கூசும்படியான பிரகாசம்!...கதவுகள் மணியோசையுடன் தாமே திறக்கின்றன......உள்ளே அந்தப் பழைய இருள்!

சாத்தன் உள்ளே செல்லுகிறுன், இருட்டின் கரு போன்ற இடம். அதில் மங்கிய தீபவொளி தோன்று கிறது! என்ன! இதுவா பழைய சிலை! உயிரில்லை! கவர்ச்சிக்கும் புன்னகை யில்லையே!......எல்லாம் மருள் ...மருள்!

அந்தகார வாசலில் சாயைகள் போல் உருவங்கள் குனிந்தபடி வருகின்றன. குனிந்தபடி வணங்குகின்றன.

"எனக்கு மோட்சம்! எனக்கு மோட்சம்!" என்ற எதிரொலிப்பு. அந்தக் கோடிக் கணக்கான சாயைகளின் கூட்டத்தில், ஒருவராவது சிலையை ஏறிட்டுப் பார்க்க வில்லை! இப்படியே தினமும்......

நாட்கள், வருஷங்கள், நூற்றுண்டுகள் அலைபோல் புரள்கின்றன—அந்த அனந்த கோடி வருஷங்களில் ஒரு சாயையாவது ஏறிட்டுப் பார்க்கவேண்டுமே!—

"எனக்கு மோட்சம்...!" இதுதான் பல்லவி, பாட்டு எல்லாம்!

சாத்தன் நிற்கிறுன்......

எத்தனை யுகங்கள்! அவனுக்கு வெறி பிடிக்கிறது. "உயிரற்ற மோட்சச் சிலையே! உன்னை உடைக்கிறேன்! போடு! உடை! ஐயோ, தெய்வமே! உடைய மாட்டாயா! உடைந்துவிடு! நீ உடைந்து போ! அல்லது உன் மழு என்னைக் கொல்லட்டும். அர்த்தமற்ற கூத்து!..." இடி இடித்த மாதிரி, சிலை புரள்கிறது—சாத்தனது ஆலிங்

கனத்தில், அவன் ரத்தத்தில், அதுதோய்கிறது...ரத்தம் அவ்வளவு புனிதமா! பழைய புன்னகை!......

சாத்தன் திடுக்கிட்டு விழித்தான். வெள்ளி முளைத்துவிட்டது. புதிய கோவிலின் சங்கநாதத்துடன் அவனது குழம்பிய உள்ளம் முட்டுகிறது.

"என்ன பேய்க் கனவு, சீ!" என்று விபூதியை நெற்றியில் அணிந்துகொள்ளுகிறான்.

"பைலார்க்கஸ்—பாவம் அவன் இருந்தால்......" சாத்தனின் மனம் சாந்தி பெறவில்லை.

கலியாணி

வாணிதாஸபுரம் என்பது ஒரு பூலோக சுவர்க்கம். ஆனால், இந்த சுவர்க்கத்தில் ஒரு விசேஷம். மேலே இருக்கும் பௌராணிகரின் சுவர்க்கம் எப்படி யிருக்குமென்று அடியேனுக்குத் தெரியாது. ஆனால் இந்த சுவர்க்கத்தைப் பொறுத்தவரை, இது வாணியின் கடைக்கண் பார்வை ஒரு சிறிதும் படாத இடம் என்று எனக்குத் தெரியும்.

வாணிதாஸபுரத்திற்குப் போக வேண்டுமானால், ஜில்லா போர்டு ரஸ்தாவை விட்டு மாமரம் நிறைந்த வாய்க்கால் கரைமீது அரை பர்லாங்கு நடக்கவேண்டும். ரஸ்தாவின் கீழ்ப் பாரிசத்தில் ஊர். அதன் பக்கத்தில் தான், கிழக்கே பார்த்த சிவன் கோவிலில். தொடங்கி, பத்துப் பதினைந்து வீடுகள் உள்ள அக்ரகாரம். பிறகு ஊர்ப் பொட்டல். சற்று வட பாகமாகப் போகும் சந்து, பிள்ளைமார் சந்து. அதற்கப்புறம் மறவர்கள் தெரு. இவ்வளவையும் கடந்துவிட்டால் வேளாளர் தெருவின் தொடர்ச்சியான மறவர் தெருவின் கடைசிக்கு வந்து விட்டால், வயலும் குளமும். குளம் தடாகமன்று, வெறும் மண் கரையிட்ட ஏரி. சுற்றிலும் கண்ணுக் கெட்டியவரை கழனிகள். வான வளையத்தைத் தொடும் மூலையில் பச்சை மரங்கள்.

வயல்களின் வழியாக இரண்டு மைல் நடந்தால் நதி, இரு கரையிலும் மருத மரமும் பனையும் கவிந்து நிற்கும். அதிலிருந்துதான் ஊரை யொட்டிப் பாயும் வாய்க்கால் புறப்படுகிறது. வேனிற் காலத்தில் குளத்திலும், வாய்க் காலிலும் ஜலம் வற்றிவிடும். அப்பொழுது விடியற் காலையில் ஸ்நானம் செய்வதை இன்பமாகக் கருதுவோர்கள் வாணிதாஸபுரத்திற்கு வந்தால் இரண்டு மைல் நடையைத் துச்சமாகக் கருதுவார்கள்.

வாணிதாஸபுரம், வஞ்சனைச் சுழலிலும், தியாகப் பெருக்கிலும் செல்லும் நாகரிகத்தின் கறைகள் படியாதது. நாயக்கர்கள் காலத்தில் மானியமாகச் சிலருக்குக் கொடுக்கப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை, அழியாத, மாறுதல் இல்லாத, நித்திய வஸ்துப் போல, பழைய பழகிய பாதைகளிலேயே அது ஓடிக்கொண்டிருக்கிறது.

கிராம வாசிகள் உயிர் வாழ்தலைப் பொறுத்தவரை வெளியூருக்குச் செல்லவேண்டிய அவசியம் கிடையாது. செல்வதுமில்லை. வேண்டியதெல்லாம் சாப்பாட்டிற்கும் துணிக்குந்தானே! உடையைப் பொறுத்தவரை 'கும்பினியான்' துணி வியாபாரத்தில் அதிக நம்பிக்கை. கிராம வாசிகளுக்கு உலகம் எந்தத் திக்கில் செல்லுகிறது என்ற அறிவும் கிடையாது, அறிய ஆவலும் இல்லை. சனிக்கிழமைச் சந்தைக்கு இலை காய்கறிகளைத் திருநெல்வேலிக்குக் கொண்டு சென்று, விற்றுமுதல் செய்துவிட்டு, அன்று 12-மணி நேரத்தில் அரைகுறையாகக் கேட்டதை மறு சனிக்கிழமை வரை பேசிக்கொண்டிருப்பதில் திருப்தியடைந்துவிடுவார்கள் அந்த மகாஜனங்கள்.

கோவில் பூஜை, உபாத்திமைத் தொழில், உஞ்சவிருத்தி என்ற சோம்பற் பயிற்சி—இவைதான் அங்குள்ள பிராமண தர்மத்தின் பிரதிநிதிகளின் வாழ்க்கை இலட்சியம். வேளாண்மை என்ற சோம்பர்த் தொழில் அங்குள்ள பிள்ளைமார்களின் குல தர்மம். மறவர்கள், ஏவின வேலையைச் செய்தல், ஊர்க் காவல் என்ற சில்லறைக் களவு உட்பட்ட சோம்பல் தர்மத்தைக் கடைப் பிடித்தனர். பறைச்சேரி ஊரின் போக்குடன் கலந்தாலும், அல்லும் பகலும் உழைத்து உழைத்து, குடித்து, பேசிப் பொழுதைக் கழித்தது.

ஊருக்கு, கிராம முனிஸீப்பு சுந்தரம்பிள்ளை, பண்ணையார் ராமையாப் பிள்ளை, சுப்பிரமணிய பண்டாரம், சிவன் கோவில் அர்ச்சகர் சுப்புவையர்—இவர்கள் எல்லோரும் 'பெரிய' மனிதர்கள். எல்லோரும் ஏகமட்டம்; ஏனென்றால், தற்குறிப் பேர்வழிகள். அவர்களில் 'மெத்தப் படித்தவாள்' என்று கருதப்பட்டவரே பிரைமரியை எட்டிப் பார்க்கவில்லை. எழுத்துக் கூட்டி வாசிப்

பார்கள். தமிழ்ப் படிப்புத் தெரியும் என்று கூறுவார்கள். ஆனால் வாழ்க்கைக்கு அவசியமான உலக அநுபவம் உண்டு; 'படித்தவர்'களைப்போல் அவர்கள் வடிகட்டின அசடர்கள் அல்லர்.

II

அர்ச்சகர் சுப்புவையர், ஏறக்குறைய மெஜாரிட்டியைக் கடந்துவிட்டவர். குழந்தை குட்டி கிடையாது. தமது 45-வது வயதில் 'மூத்தாளை' இழந்துவிட, இரண்டாவது விவாகம் செய்து கொண்டவர். இளையாள் வீட்டிற்கு வந்து சிறிது காலந்தான் ஆகிறது. அவள் சிறு குழந்தை. 16 அல்லது 17 வயதுள்ள கலியாணி, சுப்புவையரின் கிரகத்தை மங்களகரமாக்கவே, அவரது சமையற்காரியாகக் காலம் கழித்தாள்.

சுப்புவையர் மன்மதனல்லர். அதுவும் 50 வயதில் ஒருவரும் மன்மதனாக இருக்க முடியாது விதி விலக்காக. ருசியான பக்ஷணங்களுடன் விருந்து சாப்பிடும் யாரும் வயிற்றை ஆலிலைபோல் ஒட்டியிருக்கச் செய்ய முடியாது. நரைத்த குடுமியுடன் பஞ்சாங்கத்திற்கு ஒத்தபடி க்ஷவரம் செய்து கொள்வதாகச் சங்கற்பமும் செய்து கொண்டால், நிச்சயமாக எவரும் மன்மதனாக இருக்க முடியாது.

சுப்புவையர் சாதுப் பேர்வழி; கோயிலுண்டு, அவருண்டு. வேறு எந்த ஜோலியிலும் தலையிடுகிறதில்லை. வேளைக்கு வேளை நாவிற்கு ருசியாக உணவு கொடுத்து, தூங்கும்பொழுது கால் பிடித்துவிட்டு, தொந்தரவு செய்யாமலிருப்பதே மனைவியின் லட்சணம் என்று எண்ணுபவர். அதிலும், ஏறக்குறைய இருபது வருடங்களாகப் பழகி, திடீரென்று தன்னை விட்டுவிட்டு இறந்து போன மூத்தாள்மீது அபாரப் பிரேமை. அவருக்கு அது பழக்க தோஷம். அவளைப்போல் இனி யார் வரப் போகிறார்கள் என்ற சித்தாந்தத்தில், கலியாணியின் பாலிய அழகும், சிச்ருஷையும் தெரியாது போய்விட்டன.

கலியாணி,—அவளும் ஏழைப் பெண்தான். உபாத்திமைத் தொழில் பார்த்து வந்த சாமிநாத கனபாடிகளின்

மகள். அவ்வூரிலேயே பிறந்து, வெகு காலமாக மாமாவென்றும், சித்தப்பாவென்றும் அழைத்து வந்த ஒருவரைக் கணவராகப் பெற்றவள். ஏழையாகப் பிறந்தால் அழகாகப் பிறக்கக்கூடாது என்ற விதியிருக்கிறதா? கலியாணியின் அழகு, ஆளை மயக்கியடிக்கும் மோக லாகிரியில் பிறந்த காம சொரூபம் அன்று. நினைவுகள் ஓடி மறையும் கண்கள். சோகம் கலந்த பார்வை! அவளது புன்னகை ஆளை மயக்காவிட்டாலும் ஆளை வசீகரிக்கும். அப்படி வசீகரிக்கப் படாதவன் மண் சிலை தான். சுப்புவையரும், அவர் வழிபடும் லிங்க வடிவத்திலிருக்கும் 'விரிசடைக் கடவுளின்' உருவச் சிலையின் ஹிருதயத் துடிதுடிப்பை ஏறக்குறையப் பெற்றிருந்தார். கலியாணி வாலைப் பருவத்தினள். அதிலும் இயற்கையின் பரிபூரண சக்தியும் சோபையும் கொந்தளிக்கும் நிலையிலுள்ளவள். எதற்கெடுத்தாலும் தன்னை மரக் கட்டையாகக் கருதி, இறந்த மூத்தாளின் பெருமையை நினைத்து உருகும் சுப்புவையரின் எண்ணங்களைத் தன் வசம் திருப்புவது என்று கங்கணம் கட்டிக்கொண்டவள். அதாவது, உள்ளூற அவளறியாமலே இயற்கை அந்த வேலையில் அவளைத் தூண்டியது. அவர் வார்த்தைகள் அவளது வாலிப அழகின் முகத்திலடித்தன. அவரைக் கவர்ச்சிக்கக்கூடியபடியெல்லாம் தனது பெண்மைக் குணங்களைப் பயன்படுத்தினாள். சுப்புவையர் மசிகிற பேர்வழியாகத் தெரியவில்லை. கல்யாணியும் ஒரு பெண்ணாயிற்றே, அவளுக்கும் இயற்கையின் தேவையும் தூண்டுதலும் இருக்குமே என்ற ஞானம் சிறிதும் கிடையாது போயிற்று சுப்புவையருக்கு.

அப்பொழுதுதான் சைத்ரிகரான சுந்தர சர்மா அங்கு வந்தார்.

III

அப்பொழுது முன் வேனிற்காலம். பனி நீங்கிவிட்டது. வாய்க்காலில் ஜலமும் வற்றிவிட்டது. பயிர்கள் அறுவடையை எதிர்பார்த்துத் தலை சாய்ந்து நின்றன. குளத்தில் நீர் வற்ற இன்னும் இரண்டு மூன்று மாதமாகும். ஊருக்குக் குடி தண்ணீர் குளத்திலிருந்துதான். ஆற்றிற்கு நடக்க

முடியாதவர்களும், நடக்கப் பிரியமில்லாதவர்களும், குளத்திலேயே ஜலம் எடுத்துக் கொள்ளுவார்கள்.

சுந்தர சர்மா அக்ரகாரத்தில் ஒரு காலிக் குச்சு வீட்டில் வாடகைக்கு இருந்துகொண்டு, சாப்பாட்டிற்குச் சுப்புவையர் வீட்டில் வாடிக்கை வைத்துக் கொண்டார். வரும்பொழுது அவர் மனம் களங்கமற்ற மத்தியான்ன வானம்போல் இருந்தது. எப்பொழுதும் குளக்கரையிலோ அல்லது வாய்க்கால் கரையிலோ இருந்துகொண்டு இரண்டு மூன்று மாட்டுக்காரப் பையன்கள் வேடிக்கை பார்க்கச் சித்திரம் தீட்டிக் கொண்டிருப்பது அவரது பொழுது போக்கு.

சில சமயங்களில் மத்தியானச் சாப்பாட்டிற்கு வர இரண்டு அல்லது மூன்று மணியாகிவிடும். சில சமயம் காலைச் சாப்பாடு இல்லாமலே சென்றுவிடுவார். வருவது எந்த நேரமென்பதில்லை.

கலியாணி அவரைத் தனது சகோதரன்போல் பாவித்து வந்தாள். ஆனால், உள்ளம் அவரைக் கண்டவுடன் பயத்தினால் சலிக்கும். அவர் வந்து இரண்டு மூன்று நாட்களுக்கு அவருக்குச் சாப்பாடு போடுவது என்றால் வியர்த்து விருவிருத்து முகஞ் சிவந்து விடுவாள். காரணம் சர்மா வாணிதாஸபுரத்தினரைப்போல் அல்லாது, சற்று நாகரிகமாகவும் சுத்தமாகவும் உடையணிந்து கொள்வதுதான். ஆனால், அவரது கிராப்புத் தலை கழுத்து வரை வளர்ந்து மறைத்திருந்தாலும், எப்பொழுதும் சீர்குலைந்தே முகத்திலும் காதிலும் கிடக்கும். கறுத்த கண்கள் எப்பொழுதும் எதையோ சிந்தித்துக் கொண்டிருப்பது போல எதையாவது நோக்கற்றுப் பார்த்துக்கொண்டிருக்கும்.

சர்மா சைத்திரிகராக இருந்தும் கலியாணியைப் பார்க்காதது ஆச்சரியம் என்று நினைக்கலாம். கனவுகள் அழுத்தும் உள்ளத்தைக் கொண்ட அவர், சுப்புவையரின் இல்லத்தை மறைமுகமான ஹோட்டலாகக் கருதியதனால், சாப்பாடு முடிவது அவர் அறியாமலே நடந்து வந்தது. மேலும் சுப்புவையரின் வீடு, ஜன்னல்களுக்குப் பெயர்

போனதன்று. காற்றும் ஒளியும் உள்ளே எட்டிப் பார்க்கக்கூடாது என்று சங்கற்பம் செய்துகொண்ட சுப்பு வையரின் மூதாதைகளில் ஒருவரால் கட்டப்பட்டது. பகலில் இருட்டு, இரவில் குத்து விளக்கின் மங்கலான இருட்டு. சாதாரண காலத்திலேயே எதிரில் வருவது என்னவென்று உணர்கிற பழக்கமில்லாத சர்மாவுக்குப் புலப்படாமல் இவ்வளவு வெளிச்ச உதவியும் சுப்புவைய ரின் மனைவியை மறைத்துவிட்டது அதிசயமன்று. மேலும் கலியாணிக்கு அதிகமாக வெளியில் நடமாடும் பழக்கம் கிடையாது. அவள் பொங்துக்கிளி. மேலும் குளம் வாய்க் கால்களுக்குக் கருக்கலிலேயே போய் வந்துவிடுவாள். இத ஞல் சர்மா கலியாணியைத் தினம் சந்தித்தாலும் பார்த்தது கிடையாது. அவருக்கு அவளைப் பொறுத்தவரை, உணவு பரிமாறும் கருவளை யணிந்த கைகள் மட்டிலும் தெரியுமோ என்னவோ!

IV

அன்று சுந்தர சர்மா வருவதற்குச் சாயங்காலமாகி விட்டது. காலையிலேயே சென்றவர், மத்தியான்ன போஜ னத்திற்குக்கூடத் திரும்பவில்லை. வரும்பொழுது நன்ருக இருட்டிவிட்டது. வரும் வழியிலேயே குளத்தில் குளித்து விட்டு நேராகத் தமது குச்சு வீட்டிற்குச் சென்று உடை களை மாற்றிக்கொண்டு, சுப்புவையரின் வீட்டையடைந் தார். அன்று அவருக்குப் பசி.

சுப்புவையர் வெளித் திண்ணையில் உட்கார்ந்திருந்த தால் இவரைக் கண்டதும், "என்ன அய்யர்வாள் பகல்லே கூடச் சாப்பிடல்லே என்று சொன்ளுளே; இப்படி யிருந்தா உடம்பு என்னத்துக்கு ஆகும்?...அடியே, சர்மா வந்திருக்கார், இலையைப் போடு! இன்னும் விளக்கை ஏன் ஏற்றி வைக்கவில்லை! நேக்குத் தெரியுமே. அவள் இருந்தா வீடு இப்படிக் கிடக்குமா? பகவான் செயல்!" என்று சொல்லிக் கொண்டே, உள்ளே சென்று, குத்து விளக் கின்மேல் இருக்கும் மாடக்குழியில் தீப்பெட்டியைத் தேடினர்.

சமையல் உள்ளிலிருந்த கலியாணியும் கையில் அகல் விளக்குடன் வந்து குத்து விளக்கை ஏற்றினுள்.

"என்னடி, விளக்கை ஏன் ஏற்றக்கூடாது? இவ்வளவு நேரமும் என்ன பண்ணினே?"

"ஏற்றினேனே! மங்கியிருக்கும் திரியைத் தூண்டா திருந்துவிட்டதிஞல் அணைந்துவிட்டது. சாத்தை வடிச் சுட்டுருந்தேன்!" என்ருள் கலியாணி.

"சரி சரி! எனக்குத் தெரியுமே! வீடும் வாசலும் கெடக் கிற கெடையைப் பார்த்தால் நன்ஞயிருக்கு. பெருக்கி விட்டுச் சீக்கிரம் இலையைப்போடு!" என்ருர்.

கலியாணியின் முகம் சிவந்தது. அந்நியர்கள் முன்பாக வும் இம்மாதிரிப் பேசுகிருரே என்று அவள் உள்ளங் கலங் கியது. 'அவர் என்ன நினைப்பார்!' என்ற நாணம், எல்லாம் சுறுக்குச் சுறுக்கென்று தைக்கும் வார்த்தைகள், இவை அவள் உள்ளத்தைக் குழப்பிவிட்டன. சரேலென்று உள்ளே சென்றுவிட்டாள். அவளுக்கு அழுகை அழுகை யாக வந்தது.

"இன்று எங்கே போயிருந்தேள்?" என்ருர் சுப்பு வையர்.

"அணைக்கட்டுப் பக்கம் போயிருந்தேன். வேலை முடிவ தற்கு நேரமாகிவிட்டது. மத்தியானம் வெய்யிலில் வரு வானேன் என்று நினைத்தேன். நாளைக்கு அல்லது மறு நாளைக்குக் கொழுந்து மாமலைப் பக்கம் போகலாம் என்று நினைக்கிறேன். போவதை இப்பொழுதே சொல்லிவிட்டால் நீங்கள் காத்திருக்க வேண்டியதில்லையல்லவா?" என்று சிரித்தார் சர்மா.

இதற்குள் கலியாணி கதவோரத்தில் நின்றுகொண்டு, "என்ன செய்றேள்? சொம்பில் ஜலம் வைத்திருக்கிறேன்!" என்ருள்.

"இந்தாருங்கள், கால் கைகளைக் கழுவிக் கொள்ளுங் கள்!" என்று சர்மாவிடம் ஒருசெம்பு ஜலத்தைக்கொடுத்து விட்டுத் தானும் கால் முகம் கழுவினுர்.

இருவரும் உள்ளே சென்று குத்து விளக்கின் முன்பு போடப்பட்டிருந்த இலைகளின் எதிரே உட்கார்ந்து கொண்டனர்.

அன்று இருவருக்கும் பரிமாறுவதென்றால் பிராணன் போவது போலிருந்தது.

முதலில் சுப்புவையருக்குச் சாதத்தைப் படைத்தாள். கை நடுங்கியதினால் சிறிது சிதறிவிட்டது.

"எனக்குத் தெரியுமே! இப்படிச் சிந்திச் சிதறினால் வாழ்ந்தாற் போல்தான்! பார்த்துப் போடக்கூடாதா? போதும், போதும்!" என்றார். பிறகு மனத்திற்குள்ளாகவே, "அவள் இருந்தால்...கர்ம பலன்!" என்று முனகிக்கொண்டார். இவ்வார்த்தைகள் கலியாணிக்குக் கேட்டன. ஏற்கெனவே, குழம்பிய மனம் மேலும் கலங்கி விட்டது. கைகள் இன்னும் அதிகமாக நடுங்கின.

சர்மாவுக்குப் படைப்பதற்காகக் குனிந்தாள். பதற்றத்தில் தட்டிலிருந்த சாதம் முழுவதும் இலையில் கவிழ்ந்து விட்டது. சர்மா, 'போதும்' என்று இடைமறித்தார். அவரது புறங்கைமீது ஒரு குவியல் மட்டும் தடைப்பட்டு நின்றது. 'போதும்' என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே தட்டிக்கொண்டிருக்கும் பிரகிருதி அசடா. அல்லது அதற்குக் குறும்பா என்று நோக்கினார். அவர் சற்று அண்ணாந்து பார்த்ததும் அவர் எதிர்பார்த்ததற்கு விபரீதமான காட்சி!—பயம்,—கூச்சத்திலும், குத்து வார்த்தைகளிலும் ஏற்பட்ட பயம்,—என்பது முகத்தில் எழுதி ஒட்டியதுபோல் மிரண்ட பார்வை!

அவர் பார்த்ததும் அவளுக்கு இன்னும் மிரட்சி அதிகமாயிற்று. அந்தக் குழப்பத்தில் அவர்கள் கைகள் சந்தித்தன. அவள் கண்களில் ஆறுதலை எதிர்நோக்கும் குழந்தையின் வருத்தம்; அழுகை துடிதுடிக்கும் உதடுகள். ஒரு கணம் இருவரும் ஒரே பார்வையில் அசைவற்றிருந்தனர். மறு கணம் அவள் நிமிர்ந்து திரும்பிப் பாராது வேகமாக உள்ளே சென்று விட்டாள். சர்மாவின் உள்ளத்தில் அது ஒரு விலக்க முடியாத சித்திரமாகப் பதிந்தது.

மறுபடியும் கலியாணி எத்தனையோ தடவை வந்து பரிமாறினாள். ஆனால், ஒரு கணமாவது சர்மாவைப் பார்க்கவில்லை. ஆனால், சர்மா அவளது உள்ளத்தைத் துருவும் பார்வைகளைச் செலுத்தினார். அவை பாறைகளில் பட்ட கல்லைப்போல் பயனற்றுப் போயின. 'காரணம், காரணம்?' என்று அவர் உள்ளம் அடித்துக் கொண்டது. சாப்பிட்டு விட்டுப் பேசாது நேரே தமது குச்சு வீட்டிற்குச் சென்று, தமது உள்ளத்துடன் போராடிக் கொண்டிருந்தார். அவரது உள்ளம் கலியாணியைத் தன்னுள் ஐக்கியமாக்கியது. அவள் அழகு சர்மாவின் சைத்ரிகக் கண்களுக்குப் பல நீண்ட காவியங்களாகத் தோன்றிற்று. அன்று இரவு முழுவதும் அவர் தூங்கவில்லை; தமது கனவுகளுடன் போராடிக் கொண்டிருந்தார்.

* * * *

அன்று சாப்பாடு முடிந்தவுடன், சுப்புவையர், வெற்றிலைச் செல்லத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, வெளியே வந்து உட்கார்ந்துகொண்டு வெற்றிலை போடலாம் என்று பெட்டியைத் திறந்தார். வெற்றிலை பாக்கு எல்லாம் இருந்தன. ஆனால் சுண்ணும்பு மட்டும் காய்ந்து காறைக் கட்டியாக இருந்தது. "ஜடம்!" என்று கூறிக்கொண்டே, "அடியே!" என்று உள்ளே தலையை நீட்டிக்கொண்டு கூப்பிட்டார். சமையல் உள்ளில் தனது மனத்துடன் போராடிக்கொண்டிருந்த கலியாணி, 'என்ன?' என்று கேட்டுக் கொண்டே வெளியில் வந்தாள்.

"அட ஜடமே! உனக்கு எத்தனை நாள் சொல்லுவது—செல்லத்தில் எல்லாம் சரியாயிருக்கிறதா வென்று பார்த்து வை என்று? மூணுது இல்லையே! அர்த்த ராத்திரியிலே யார் கொடுப்பார்கள் ? போய் ஒரு துளி ஜலம் எடுத்துண்டு வா ! ஒன்னைக் கட்டிண்டு அழரதைவிட ஒரு மிருகத்தைக் கட்டிண்டு மாரடிக்கலாம். தொலை, சீக்கிரம். அவளும் போனாள். குடியும் குடித்தனமும்—எல்லாம் சொல்ல வேண்டியதில்லை!" என்று வைதார்.

கலியாணி உள்ளே சென்று, ஒரு டம்ளரில் ஜலம் கொண்டு வந்து வைத்து விட்டு, அவர் பாயையும் தலையணையையும் எடுத்து உதறிக் கூடத்தில் விரித்துவிட்டு மறுபடியும் உள்ளே சென்றுவிட்டாள்.

அன்று பசி வேறு வரப் போகிறது! அவள் மனம் எங்கெல்லாமோ சுற்றியது. சர்மாவைப்பற்றி அடிக்கடி அவளையறியாமல் அவள் உள்ளம் நாடியது. ஆனால், தனது கணவர் அந்நியர் முன்பும் இப்படிப் பேசுகிறாரே என்ற வருத்தம்.' ஏங்கி ஏங்கி யழுதாள். அழுகையில் ஓர் ஆறுதல் இருந்ததுபோல் தெரிந்தது.

மறுபடியும் 'அடியே!' என்ற சப்தம். "என்ன?" என்று கேட்டுக் கொண்டே எழுந்து சென்றாள்.

"இன்னும் சாப்பிட்டு முடியவில்லையா? இந்தக் காலைப் பிடி! அப்பா! முருகா! சம்போ, சங்கரா!" என்று கொட்டாவி விட்டுக் கொண்டே பாயில் படுத்துக் கொண்டார் சுப்புவையர்.

உட்கார்ந்து மெதுவாகக் காலைப் பிடித்துக்கொண்டேயிருந்தாள் கலியாணி. அவளுடைய கலங்கிய கண்களிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் அவர் முழங்காலில் விழுந்தது.

"என்னடி, மேலெல்லாம் எச்சல் பண்ராய்? ஒரெழவும் தெரியல்லெ, என்ன ஜன்மமடா?" என்றார்.

கலியாணி சற்று நேரம் மௌனமாக இருந்தாள். அவரிடம் ஒன்று கேட்க வேண்டுமென்று துணிச்சல் பிறந்தது.

" பாருங்கோ!" என்றாள்.

" உம், போதும் பிடித்தது!" என்றார் ஐயர்.

அவர் கையை மெதுவாக எடுத்துத் தன் மார்பின் மீது வைத்துக்கொண்டு, " அவாள் முன்னெல்லாம் என்னைப் பேசுகிறீர்களே ! நான் என்ன செய்துவிட்டேன்?" என்று சிரிக்க முயன்றாள். கண்களிலிருந்து கண்ணீர் வந்தது. அவள் புன்னகை பரிதாபகரமாக இருந்தது.

"எதற்காக? உனக்குப் புத்தி வரத்தான்! என்ன சொல்லியும் ஒன்றும் உறைக்கவில்லையே! அவள் இருந்தாளே, ஒரு குறையுண்டா? எல்லாம் கணக்கா நடந்தது. கிருகலட்சுமி என்றால் அவள்தான். சொன்னால் போதுமா?"

"அவள், அவள், என்கிறீர்களே? நான் என்ன செய்துவிட்டேன்? இப்படித் திரும்பிப் பாருங்கோ! இப்படி யிருக்கும் பொழுது சொன்னால் கேக்கமாட்டேனே!"

"கையை விடு! எனக்குத் தூக்கம் வந்துடுத்து. என்னைப் படுத்தாதே!" என்று சொல்லிவிட்டுச் சுவர்ப் புறம் திரும்பிக்கொண்டு குறட்டை விடலானார்.

கலியாணிக்கு நெஞ்சில் சம்மட்டியால் அடித்தது போல் இருந்தது. தனது ஸ்பரிசம் சிறிதாவது அவரை மனிதனாக்கவில்லையே என்றதில் ஒரு ரோஷம், சிறிது கோபமுங்கூட. அன்று முழுவதும் அவளுக்குத் தூக்கமே வரவில்லை. அவள் உள்ளம் எண்ணங்களுடன் போராடிக் கொண்டிருந்தது.

அன்று முழுவதும் கலியாணிக்குத் தூக்கம் எப்படி வரும்! தூரத்திலே, எங்கிருந்தோ ஒரு வெளிச்சம் தன்னை அழைப்பதுபோல் ஓர் உணர்வு. அது தன்னை வாழ்விக்குமோ அல்லது தகித்துவிடுமோ என்ற பயம் அவளைத் தின்றுகொண்டிருந்தது.

கணவர் தன்னிடம் என்ன குறை கண்டார்? ஏன் இப்படி உதாசீனமாக இருக்கவேண்டும்? அதற்குக் காரணம் தனது குறையா, அல்லது அவரது...அவருக்குக் குறை எப்படிச் சொல்ல முடியும்?

இப்படியே அவள் அன்று முழுதும் தூங்கவில்லை. பாயில் படுத்துப் புரண்டுகொண்டிருந்தாள். சற்று ஒரு புறமாகப் புரண்ட சுப்புவையர் பிரக்ஞையில்லாது கையைத் தூக்கிப் போட்டார். அது அவள் மார்பில் அம்மிக் குழவி மாதிரிப் பொத்தென்று விழுந்தது. மயக்கம் கலைந்தது. பயம்! பிறகு புருஷனின் கைதான் என்ற உணர்ச்சி. அதில் ஒரு சாந்தி பிறந்தது. அந்தப்

போதையில் அவளுக்குக் கண்கிறங்கியது. தூங்கி விட்டாள். நடைமுறை உலகத்தில் இல்லாவிட்டாலும், கனவு உலகத்திலாவது, கணவன் சிரித்த முகத்துடன் பேசிக்கொண் டிருப்பதுபோல் அன்று அவளுக்குத் தோன்றியது.

காலையில் கலியாணி எழுந்திருக்கும்பொழுது என் றும் இல்லாதபடி வெகு நேரமாகிவிட்டது. எழுந்ததும் குடத்தை எடுத்துக்கொண்டு நேராகக் குளக்கரைக்குச் சென்றாள்.

V

அன்று இரவு முழுவதும் சுந்தர சர்மாவுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை என்றால் வியப்பில்லை. இத்தனை நாட்களும் தமது மனத் திரையை விலக்கி அவளைப் பார்க்காததற்கு ஆச்சரியப்பட்டார். அந்த ஆச்சரியம் அவரை எங் கெங்கோ இழுத்துக்கொண்டு சென்றது. அவரோ, சைத்ரிகர்—அழகுத் தெய்வத்தின் அடிமை! கலியாணி யின் சோகம் தேங்கிய கண்கள் அவருக்குக் கற்பனைக் கதையாக காவியமாகத் தெரிந்தது. அன்று இரவு முழு வதும் உள்ளம் கட்டுக்கடங்காமல் கொந்தளித்தது.

சுப்புவையர் பாவம், அது ஒரு பிரகிருதி. அவர் வசம் கலியாணி பிணிக்கப்பட்டால், விதியின் அற்பத்தனமான லீலைகளை உடைத்தெறிய ஏன் மனம் வராது? அவரை மனிதனாகவே சர்மா நினைக்கவில்லை. அவரது சிறையி லிருந்து அவளை விடுவிக்க வேண்டும் என்று அவர் நினைத் தார். அதில் கலியாணியின் சம்மதம்,—அதைப்பற்றிக்கூட அவருக்கு அதிகக் கவலையில்லை.

அவளை அழைத்துக்கொண்டு சென்றுவிட்டால்...... ....வாழ்க்கை எவ்வளவு இன்பமாக இருக்கும்! இலட்சியத்திற்கு அவள் எவ்வளவு பெரும் ஊக்கமாக இருப்பாள். மனிதப் புழுக்களே இல்லாத, மனிதக் கட்டுப் பாடற்ற, மனித நாகரிகம் என்ற துர்நாற்றம் வீசாத கானகத்தில், வாழ்க்கையையே ஓர் இன்பப் பெருங் கன வாகக் கழித்தால் என்ன?

அன்று முழுவதும் அவர் உள்ளத்தில் ஓடிய எண்ணங்கள் ஒரு நிரந்தரப் பைத்தியக்காரனுடைய உள்ளத்தையும் தோற்கடித்துவிடும். இரவு முழுவதும் விளக்கு அணைக்கப்படவில்லை. மூலையில் சன்னலை யொட்டியிருந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, விளக்கையே கவனித்துக்கொண்டிருந்தார். விளக்கின் சிமினி கரி பிடித்து மேலே புகையடைந்து வெளிச்சத்தை அமுக்கியது. இரண்டு நிமிஷம் விளக்கு 'பக் பக்' என்று குதித்தது. அவ்வளவுதான், அதுவும் அணைந்துவிட்டது.

அறை முழுவதும் இருட்டு. உள்ளே உட்கார்ந்திருக்க முடியவில்லை. மேல் வேஷ்டியை எடுத்துப் போட்டுக்கொண்டு வெளியே சென்ருர், விடிந்துவிட்டது. ஆனல் நட்சத்திரங்கள் மறையவில்லை. கிழக்கே சற்று வெளுப்பு —வெள்ளைக் கீறல் மாதிரி.

சர்மாவுக்குக் காலையில் நடப்பது மனத்திற்கு நிம்மதியாக விருந்தது. அவர் வாய்க்கால் கரை வழியாகவே நடந்துகொண்டிருந்தார். சற்றுத் தூரம் சென்றவுடன் வயல் வரப்புக்களின் மீது நடக்க ஆரம்பித்தார். தேகந்தான் ஏதோ யந்திரம் மாதிரி நடந்துகொண்டிருந்தது. மனம் மட்டும் தங்கு தடையின்றிக் கலியாணியின் பின் சென்றுவிட்டது. "கலியாணியை அழைத்துச் சென்றுவிட்டால்? அதற்கு இசைவாளா? அதற்கு என்ன சந்தேகம்? பிறகு எங்கு போவது? எங்கு போனல் என்ன—மனிதன் இருக்கும் இடத்தைத் தவிர......?"

சூரியோதயமாகிவிட்டது. முகத்திற்கு நேரே வெய்யில் விழுந்து கண்கூச ஆரம்பித்ததும் சர்மாவுக்கு 'வெகு தூரம் வந்துவிட்டோம்' என்ற எண்ணம் தோன்றியது. உடனே திரும்பி, குளத்தில் குளித்துவிட்டுப் போவதென்று, அப்பக்கமாகத் திரும்பி நடந்தார்.

வெய்யிலின் சூடு நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகமாகிறது. முதுகு பொசுக்கப்படுவது போல் காலை வெய்யில் தகிக்கிறது.

"அப்பா!"

குளக்கரை வந்துவிட்டது. குனிந்துகொண்டு மேட்டில் ஏறி, கரையின்மீது வளர்ந்திருந்த மரத்தடியில் நின்று, முகத்தைத் துடைத்துக்கொண்டார். இரண்டு மூன்று வினடிகளில் கண் கூச்சம் விலகியது. குளத்தில் யாருமில்லை.

யாருமில்லையா !

மரத்தின் மறைவில் ஜலத்தில் நின்றுகொண்டு கலியாணி தனது ஈரப் புடவையைப் பிழிந்து உடுத்திக்கொண்டிருந்தாள். ஈரம் சொட்டும் கூந்தல் முதுகை மறைத்தது. கன்னத்திலும், தோளிலும், குளக்கரையில் நன்ருக விளக்கி வைத்திருந்த குடத்திலும், கிளைகளின் ஊடே பாய்ந்த சூரியவொளி பிரதிபலித்து மின்னியது. "அப்பா! வர்ணப் பெட்டியும் படம் எழுதும் திரைச் சீலையும் எடுத்து வரவில்லையே!" என்று நினைத்தார் சர்மா. கலியாணிக்கு அவர் இருப்பது தெரியாது. தனிமை என்ற மன மறைவில் தனது ஈரப் புடவைகளை எடுத்து உதறிக் கொசுவி உடுத்திக்கொண்டாள். ஈரப் புடவையில் நின்ற அந்த அழகு அவருக்கு மஜ-ம்தாரின் சித்திரத்தை நினைவூட்டியது. குனிந்து குடத்தை எடுத்து இடுப்பில் வைத்துக்கொண்டு, கலியாணி கரையேறுவதற்குத் திரும்பினுள். அவள் முன்பு சர்மா வைத்த கண் மாருமல் பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டதும் திகைத்துவிட்டாள். முகம் முழுவதும் சிவந்துவிட்டது. கண்கள் மிரண்டு அவரையே வெறித்து நோக்கின.

போவது என்ருல், அவரைக்கடந்து போகவேண்டும். மனம் குழம்பியது. என்ன செய்வது? என்ன செய்வது? வெட்கம் தலை குனியச் செய்துவிட்டது.

சர்மாவுக்கு அவளிடம் பேசவேண்டுமென்ற ஆசை, எப்படிப் பேசுவது? என்ன சொல்லுவது?

"நான் இன்று கொழுந்து மாமலைப் பக்கம் போகிறேன். நேற்றுப் போல் இன்றைக்கும் பட்டினியாக இருந்துவிடாதீர்கள்? நான் வராவிட்டால் பட்டினி இருப்பதாவது? அதென்ன பைத்தியக்காரத்தனம்?" என்று சிரித்தார். அவர்கள் உள்ளம் இருந்த நிலையில்,

இம்மாதிரியான பேச்சு, அபாயகரமான துறைகளிலிருந்து விலகி, நிம்மதி அளிப்பதுபோல ஒரு பிரமையை உண்டு பண்ணியது.

கலியாணிக்கு இவ்வார்த்தைகள் கொஞ்சம் தைரியத்தை யளித்தன. அவரிடம் பேசுவதற்கு மனம் ஆவல் கொண்டது. உள்ளத்தின் நிம்மதி கன்னத்தின் சிவப்பைச் சிறிது குறைத்தது.

''ஆண் பிள்ளைகள் சாப்பிடுமுன் கொட்டிக்கொண்டு, அவாளுக்குக் கல்லையும் மண்ணையுமா போடுவது? இப்பவே போரேளா? காலையிலே ஏதாவது சாப்பிட வேண்டாமா? அங்கு சாப்பாட்டிற்கு...'' என்றாள்.

''இப்பொழுது சாப்பிட வருகிறேன். மத்தியானத்திற்கு என்ன? அதை நான் பார்த்துக்கொள்ளுவேன். ஏது இவ்வளவு நேரம்? எப்பொழுதும் அருணோதயத்தில் ஸ்நானம் ஆய்விடுமே?'' என்றார்.

அதற்கு அவள் ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவள் முகம் மறுபடியும் சிவந்தது. இரவு பட்ட வேதனையும், ஓடிய எண்ணங்களும், மறுபடியும் அவள் மனத்தில் தோன்ற ஆரம்பித்தன.

அவரைப் பரிதாபகரமாகப் பார்த்துவிட்டுக் கரையேறி, வீட்டை நோக்கி நடந்தாள். அவரைத் தாண்டிச் செல்லும்பொழுது அவள் ஈரப் புடவை அவர்மீதுபட்டது. சர்மாவுக்கு அவளை அப்படியே பிடித்து ஆலிங்கனம் செய்யக் கரங்கள் துடித்தன. ஆனால், தமது கனவுக் கோட்டை இடிந்து பாழாகிவிட்டால் என்ன செய்வது என்ற பயந்தான் அவரைத் தடுத்தது.

சர்மா குளித்துவிட்டு நேராகக் கலியாணியின் வீட்டையடைந்தார். அப்பொழுது சுப்புவையர் கோவிலுக்குச் சென்றுவிட்டார். வீட்டில் கலியாணியைத் தவிர வேறு ஒருவருமில்லை.

இவ்வரவை எதிர்பார்த்திருந்த கலியாணி, இலையைப் போட்டுச் சுடுசாதம் எடுத்து வைத்தாள்.

"என்ன! ஏது, இதற்குள் சமையலாகிவிட்டது? ஏன் இவ்வளவு அவசரம்!" என்றார் சர்மா. அவருக்குச் சாப்பாடு செல்லாததற்குக் காரணம் பசியின்மையன்று.

"இன்னும் கொஞ்சம் குழம்பு போட்டுச் சாப்பிடுங்கள்," என்றாள் கலியாணி. அன்று அவளுக்கு வாய்ப் பூட்டுத் திறக்கப்பட்ட மாதிரி இருந்தது. அவரிடம் பேசுவதில் ஓர் ஆறுதல்.

"காலையில் சுடு சாதம் சாப்பிட முடியுமா?... அவர் எங்கே? கோவிலுக்குப் போயிருக்கிறாரா? எப்பொழுது வருவார்?...கொஞ்சமாகப் போடுங்கள், போதும்!" என்றார்.

சாப்பாடு முடிந்தது. கை கழுவ ஜலம் வெளியில் வைக்கப்படவில்லை. பாத்திரத்தை எடுத்துக்கொண்டு சமையலறைக்குள் சென்ற கலியாணி வரச் சிறிது தாமதமாயிற்று. சர்மா பின்புறம் சென்று கைகழுவிக் கொண்டு, சமையலறைப் பக்கமிருந்த தாழ்வாரத்தின் பக்கம் வந்தார்.

"ஐயோ! ஜலம்வைக்க மறந்துவிட்டேனே! இந்தாருங்கள். இதை மத்தியானத்திற்கு வைத்துக்கொள்ளுங்கள்!" என்று ஒரு சிறு பொட்டலத்தைக் கையில் கொடுத்தாள்.

"இதென்ன? எனக்கு ஒன்றும் வேண்டாம் என்றேனே!" என்றார்.

"தோசை! கொஞ்சந்தான் வைத்திருக்கிறேன். மத்தியானம் பூராவும் பட்டினியிருக்கவாவது?" என்றாள் கலியாணி.

அதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கெஞ்சுவது போல அவளுடைய கண்கள் அவரை நோக்கின.

சர்மா, 'கலியாணி!' என்று கம்மிய குரலில் அவளையழைத்துவிட்டு, அப்படியே இழுத்து ஆலிங்கனம் செய்து, அதரத்தில் முத்தமிட்டார். கலியாணியும், கட்டுண்ட சர்ப்பம்போல், தன்னையறியாது கொந்தளித்த உள்ளத்தின் எதிரொலிக்குச் சிறிது செவி சாய்த்துவிட்டாள். பிரக்ஞை வந்ததுபோல் நடைமுறைச் சம்பிரதாயங்கள் அவளைத் தாக்கின.

தனது வலிமையற்ற கைகளால் பலமுள்ள வரை அவரை நெட்டித் தள்ளிவிட்டு, முகத்தைத் திருப்பி, "என்னை விட்டுவிடுங்கள்!" என்று பதறினாள்.

சர்மா தமது கைகளை நெகிழ்த்தினார். கலியாணி விலகி நின்றுகொண்டு, "என்ன போங்கள்!" என்று அவரைத் தண்டிப்பதுபோல் நோக்கினாள்.

சர்மா, "கலியாணி, நான் சொல்வதைக் கேள்!" என்று மறுபடியும் நெருங்கினார். கலியாணி சமையலறைக்குள் சென்று தாளிட்டுக்கொண்டாள். உள்ளிருந்து விம்மி விம்மி அழும் குரல் கேட்டது.

"கலியாணி! கலியாணி!"

பதில் இல்லை.

சர்மாவும் கலங்கிய உள்ளத்துடன் வெளியே சென்றார். கொழுந்து மாமலைக்குச் செல்வது அவருக்கு நிம்மதியை யளிக்கலாம்.

VI

கலியாணிக்கு அன்று முழுவதும் மனம் ஒன்றிலும் ஓடவில்லை. முதலில் பயம், தவறு என்ற நினைப்பில் பிறந்த பயம். ஆனால் சர்மாவின் ஸ்பரிசம் அவள் தேகத்தில் இருந்துகொண்டிருப்பதுபோன்ற நினைவு சுகமாயிருந்தது. அவள் உள்ளத்தின் ரகசியத்தில் சர்மாவின் ஆசைகள் எதிரொலித்தன.

அன்று முழுவதும் அவளுக்கு ஓரிடத்திலும் இருப்புக் கொள்ளவில்லை. சுப்புவையர் மத்தியானம் வந்தார். அவருடைய இயற்கைப் பிரலாபத்துடன் போஜனத்தை முடித்துக்கொண்டு நித்திரை செய்ய ஆரம்பித்தார்.

கலியாணிக்கு அவரைப் பார்க்கும்போதெல்லாம் பரிதாபமாக இருந்தது. தன்னை 'மூத்தாளைப்போல்' இருக்கவில்லை என்று வைதாலும், தன்மீது ஓர் அந்தரங்கமான நம்பிக்கை வைத்திருப்பதால், அதை மோசம் செய்வதா என்று எண்ணினாள்.

கலியாணிக்கு இரண்டையும் ஏக காலத்தில் பிரிய மனமில்லை. வீடு, பேச்சு, சம்பிரதாயம் இதையெல்லாம் உடைக்க மனம் வரவில்லை. சுப்புவையரை ஏமாற்றவும் மனம் துணியவில்லை. இருளில் வழி தெரியாது தவிக்கும் பாதசாரி, ஏதாவது ஒன்றைத் தனது நம்பிக்கைக்குப் பாத்திரமானது என்று சங்கற்பித்துக்கொண்டு அதை நோக்கிச் செல்லுவதுபோல், தன் கணவர் நித்தியம் பூஜை செய்யும் கோயிலுக்குச் சென்று கலங்கிய உள்ளத்திற்குச் சாந்தியை நாடினாள். கோவில் மூலஸ்தானத்தின் இருளுக்கு இவளது மன இருள் தோற்றுவிட்டதாகத் தெரியவில்லை. மூலஸ்தானத்தின் மங்கிய தீப வொளியில் லிங்கம் தெரிவதுபோல் சர்மாவின் முகம்தான் அவள் அகத்தில் பிரதிபலித்துக்கொண்டிருந்தது.

அன்று இரவு கலியாணி சுப்புவையர் பக்கத்தில் உட்கார்ந்து கால் பிடித்துக்கொண்டிருக்கும் பொழுது, அதிகாலையில் எழுந்து ஆற்றிற்குச் சென்று குளித்துவிட்டு வருவதற்கு அனுமதி கேட்டாள். காரணம், சர்மாவின் மீது ஆசை யிருந்தாலும், அவரைச் சந்திக்காதிருக்க வேண்டுமென்ற நினைப்பு.

"விடியக் காலத்தில் ஏன் நதிக்கு...?" என்றார் சுப்புவையர்.

"குளத்தில் ஜலம் வற்றி நாற்ற மெடுக்கிறதே என்று யோசித்தேன்!" என்றாள்.

"சரி, சரி. போய்விட்டு வாயேன்; அதுக்கென்ன கேள்வி வேண்டியிருக்கு? நேக்குத் தூக்கம் வருகிறது. சும்மா தொந்தரவு செய்யாதே!" என்று மறுபுறம் திரும்பிப் படுத்துக்கொண்டார்.

கலியாணிக்கு அன்று இரவு முழுவதும் உறக்கம் வரவில்லை. சர்மாவை நினைக்கும் பொழுதெல்லாம் ஒரு மகிழ்ச்சி, அவர் மறுபடியும் தன்னைத் தழுவமாட்டாரா என்ற ஆசை. இப்படியே தன் பொருளற்ற கனவுகளிடையே அவள் தூங்கினாள்.

* * *

கொழுந்து மாமலைக்குச் சென்ற சர்மாவுக்கு வேலை ஓடவில்லை. அன்று முழுவதும், கலியாணி என்ன நினைப்

பாளோ, அவளை மறுபடியும் எப்படிப் பார்ப்பது என்பதே யோசனை. அன்று இரவு முழுவதும் காட்டிலேயே இருந்து விட்டார். அப்பொழுதும் சாந்தி பிறக்கவில்லை. அதிகாலையில் சென்று சாமானை எடுத்துக்கொண்டு, ஊரை விட்டே போய்விடுவது என்று நினைத்துக்கொண்டு திரும்பினார்.

கொழுந்து மாமலை, ஆற்றுக்கு அக்கரையில்இருந்தது. ஊருக்கு வரவேண்டுமானால் ஆற்றைக் கடந்துதான் வர வேண்டும். மணி மூன்று இருக்கும்பொழுது ஆற்றங்கரையை யடைந்தார். மனத்தில் சாந்தி பிறக்கவில்லை. உள்ளம் பேய் போலச் சாடியது.

இன்னும் நன்றாக விடியவில்லை. ஆற்றில் யாரோ துணி துவைப்பதுபோலச் சப்தம். இவ்வளவு அதிகாலையில் அங்கு யார் வர முடியும்?

"யாரது?" என்றார்.

"யாரது?" என்ற பதில் கேள்வி பிறந்தது.

குனிந்து துவைத்துக்கொண்டிருந்த உருவம் நின்றது. ஒரு பெண்—கலியாணி!

"கலியாணி! நீயா இங்கு!...இந்த நேரத்தில்! பயப்படாதே! நான்தான் சர்மா!"

"நீங்களா!"

அவள் சொல்லி முடியுமுன் சர்மா அவளை அப்படியே தழுவிக்கொண்டார். அவள் விலக முயன்றாள். இருவரும் தடுமாறிப் பாதி ஜலத்திலும் பாதி மணலிலும் விழுந்தனர். கலியாணியின் முகத்திலும் அதரத்திலும் மாறி மாறி முத்தமிட்டார். கலியாணி தடுக்கவில்லை. அவருடைய போக்கிற்கெல்லாம் தடை செய்யவில்லை.

சற்று நேரம் கழிந்தது.

"கலியாணி!"

"என்ன?"

"என்னுடன் வந்துவிடு! இந்த மனித நாற்றமே அற்ற விடத்திற்குச் சென்றுவிடுவோம்!"

"ஐயோடி! அது முடியாது!"

அந்த மங்கிய வெளிச்சத்திலும் அவளது மிரண்ட பார்வை மின்னியது.

"பிறகு......?"

"எனக்கு ஒன்றும் தெரியவில்லை. நீங்கள் சொல்லு கிறமாதிரி.........அதற்குப் பயமாக இருக்கிறது!"

சர்மாவுக்கு உலகம் அர்த்தமற்ற கேலிக் கூத்துப் போலும், அசட்டுத்தனம் போலும் பட்டது.

"கலியாணி, நான் போகிறேன்!" என்றார்.

"எங்கே? போகவேண்டாம்! இங்கேயே இருந்து விடுங்கள்!"

"சீ! அது முடியாத காரியம். என்னுடன் வா" என்று கையைப் பிடித்தார்.

"முடியாது!"

மறுபடியும் அக்கரைப் பக்கம் ஒரு மனித உருவம் சென்று இருளில் மறைந்தது.

கலியாணியின் வாழ்க்கை-அலையில் ஒரு குமிழி உடைந்து போயிற்று.

ஒரு நாள் கழிந்தது

"கமலம்! அந்தக் கூஜாவிலே தண்ணீர் எடுத்தா! வெற்றிலைச் செல்லம் எங்கே? வச்சது வச்ச இடத்தில் இருந்தால் தானே?"—என்று முணமுணத்தார் முருகதாசர்.

கையில் இருக்கும் கோரைப் பாயை விரிப்பதே ஒரு ஜால வித்தை. நெடுநாள் உண்மையாக உழைத்தும் பென்ஷன் கொடுக்கப்படாததால், அது நடு மத்தியில் இரண்டாகக் கிழிந்து, ஒரு கோடியில் மட்டிலும் ஒட்டிக் கொண்டிருந்தது. அதை விரிப்பது என்றால், முதலில் உதறித் தரையில் போட்டுவிட்டு, கிழிந்து கிடக்கும் இரண்டு துண்டுகளையும் சேர்த்துப் பொருந்த வைக்க வேண்டும். அதுதான் பூர்வாங்க வேலை. பின்பு, விடுதலை பெற முயற்சிக்கும் அதன் கோரைக் கீற்றுகள் முதுகில் குத்தாமல் இருக்க, ஒரு துண்டையோ, அல்லது மனைவியின் புடவையையோ, அல்லது குழந்தையின் பாவாடையையோ, எதையாவது எடுத்து மேலே விரிக்க வேண்டும்.

முருகதாசரைப் பொறுத்தவரை—அது அவரது புனைபெயர்—அது இரண்டு பேர் செய்யவேண்டிய காரியம்.

மறுபடியும், "கமலா!" என்று கூப்பிட்டார்.

சமயல் + உக்ராண + ஸ்நான அறை, மூன்று நான்கு கட்டுகள் தாண்டி, துண்டாக, அலாதியாக இருப்பதால், இவருடைய பாய் விரிப்புக் கஷ்டங்கள் அந்த அம்மையாருக்கு எட்டவில்லை.

சென்னையில் 'ஒட்டுக் குடித்தனம்' என்பது ஒரு ரசமான விஷயம். வீட்டுச் சொந்தக்காரன், குடியிருக்க

வருகிறவர்கள் எல்லோரும் 'திருக்கழுக்குன்றத்துக் கழுகு' என்று நினைத்துக்கொள்ளுவாரோ என்னமோ!

'குடித்தனக்காரர் குடியிருக்க இரண்டு ரூம் காலி' என்று வெளியில் போட்டிருந்த போர்டை நம்பித் தான் முருகதாசர் வீடு–வேட்டையின்போது அங்கே நுழைந்தார்.

உள்ளே வீட்டின் பாக வசதிதான் விசித்திரமாக இருந்தது. முன் பக்கம், ஒற்றைச் சன்னல் படைத்த ஒரு சிற்றறை. அதற்கப்புறம், எங்கோ பல கட்டுகள் தாண்டி, மற்றொரு அறை. அதுதான் சமையல் வகையராவுக்கு. முதல் அறை படிக்க, படுக்க, நாலு பேர் வந்தால் பேச—இவை எல்லாவற்றிற்கும் பொது இடம். முதலில், முருகதாசர் பொருளாதாரச் சலுகையை உத்தேசித்தே, அதில் குடியிருக்கலாம் என்று துணிந்தார். அதனால், தமக்கும் தம் சகதர்மிணிக்கும் இப்படி நிரந்தரமான 'பிளவு' இருக்கும் என்று சிறிதும் எட்டி யோசிக்கவில்லை; மேலும் அவர், யோசிக்கக் கூடியவரும் அல்லர்.

பக்கத்தில் இருந்த அரிக்கன் விளக்கை எடுத்துக் கொண்டு, அவர் சமையல் பகுதியை நோக்கிப் பிரயாணமானார்.

இடைவழியில், குழாயடியில் உள்ள வழுக்குப் பிரதேசம், அடுத்த பகுதிக்காரர் விறகுக் கொட்டில் முதலிய விபத்துக்கள் உள்ள 'பிராட்வேயை' எல்லாம் பொருட்படுத்தாது, ஒருவாறு வந்து சேர்ந்தார். சமையல் அறை வாசலில் ஒரே புகை மயம். ''கமலம்!'' என்று கம்மிய குரலில் கூப்பிட்டுக்கொண்டு, உள்ளே நுழைந்தார்.

உள்ளே புகைத் திரைக்கு அப்பாலிருந்து, ''வீடோ லட்சணமோ! விறகைத்தான் பாத்துப் பாத்து வாங்கிக் கொண்டு வந்தியளே! ஒங்களுக்கின்னு தண்ணீலே முக்கிக் குடுத்தானா? எரியவே மாட்டுதில்லே! இங்கே என்ன இப்போ? விறகு வாங்கின சீரைப் பாத்து மகிழ வந்திட்டியளாக்கும்!'' என்று வரவேற்புப் பத்திரம் வாசிக்கப்பட்டது.

"தீப்பெட்டியை இப்படி எடு! அதுக்காகத்தான் வந்தேன்!" என்று நடைப் பக்கமாகப் பின் நோக்கி நடந்தார்.

"இங்கே குச்சியுமில்லே, கிச்சியுமில்லே! அலமுவெத் தீப்பெட்டி வாங்க அனுப்பிச்சேன். மண்ணெண்ணெய் விளக்கெ நீங்கதான் துடைச்சுக் கொள்ளணும்!" என்றாள் கமலம்.

"குழந்தையை அந்தியிலே வெளியிலே அனுப்பிச் சையே நான் வந்த பிறகு வாங்கிக்கொள்ளப்படாதா?" என்று அதட்டினார் முருகதாசர்.

"ஆமாம், சொல்ல மறந்தே போயிட்டுதே...செட்டி யார் வந்துவிட்டுப் போனார்; நாளை *விடியன்னை வருவா ராம்!" என்றாள் கமலா.

முருகதாசர் இந்தப் பாசுபதாஸ்திரத்தை எதிர்பார்க்க வில்லே.

"வந்தா, வெறுங் கையை வீசிக்கிட்டுப் போக வேண்டியதுதான்! வர்ரதுக்கு நேரம் காலம் இல்லே?" என்று முணுமுணுத்துக் கொண்டே வெளியேற முயற்சித்தார்.

"அங்கே, எங்கே போயிட்டிஹ, ஒங்களேத்தானே! கொஞ்சம் நல்லெண்ணெ வாங்கிக்கிட்டு வாருங்களேன்!"

"எங்கிட்ட இப்பொ துட்டுமில்லெ, காசுமில்லே!" என்று திரும்பி நின்று பதிலளித்தார் முருகதாசர்.

"அதுவும் அப்படியா! இன்னு இந்த †மிளவொட்டி யிலே ‡மூணு துட்டு இருக்கு; அதெ எடுத்துக்கிட்டுப் போங்க!"

"வந்ததுக்கு ஒரு வேலேயா? அங்கே ஒரு பாடு எழுதித் தொலேக்கணும்; இங்கே உனக்கு இப்பத்தான்

---

* விடியுமுன் என்பதன் மரூஉ.

† மிளவொட்டி (மிளகுப் பெட்டி) ஐந்தறைப் பெட்டி என்பது சகஜமான பெயர்.

‡ மூணு துட்டு - ஓர் அணு; ஒரு துட்டு என்பது பாண்டி நாட்டில் நான்கு தம்பிடி.

எண்ணெ புண்ணுக்கு—பகலெல்லாம் என்ன செய்துகிட்டு இருந்தே? இருட்டினம் பொறவா எண்ணை வாங்றது! எல்லாம் நாளேக்குப் பார்த்துக்கலாம்!"

"சோம்பல் வந்தா சாத்திரமும் வரும், எல்லாம் வரும். ஏன் அண்ணைக்குப் போய் வாங்கிட்டு வரலியா—எல்லாம் ஓங்களுக்குத்தான். இப்பத்தான் அப்பளக்காரன் வந்து கொடுத்துட்டுப் போனுன்; பிரியமா சாப்பிடுவே ளென்று சொன்னேன். பின்னெ அந்தச் சின்னக் கொரங்கே என்ன இன்னும் காணலே! போனுப் போனதுதான்; நீங்கதான் சித்த பாருங்களேன்!"

இவ்வளவிற்கும் அவர் இருந்தால் தானே! விறகுப் பிரதேசத்தைத் தாண்டி வழுக்குப் பிரதேசத்தை எட்டி விட்டார். புகையையும் பேச்சையும் தப்பி வந்தால் போதும் என்ருகிவிட்டது. முருகதாசரின் ஆஸ்தான அறையின் ஒரு விசித்திரம் என்னவென்ருல், சென்னையில் 'லேட்டிங் டைம்' அட்டவணையைக்கூட மதிக்காமல், அது இருண்டு விடும்.

இம்மாதிரி மண்ணெண்ணெய் நெருக்கடி ஏற்படாத காலங்களில், அந்த அறைக்குத்தான் முதலில் இராத்திரி. ஆனல், எண்ணெய் நெருக்கடிக் காலங்களில் சிவபிரானின் ஒற்றைக் கண் போன்ற அந்த அறையின் சன்னல் எதிர்ப் பக்கம் நிற்கும் மின்சார விளக்குக் கம்பத்திலிருந்து கொஞ்சம் வெளிச்சத்தைப் பிச்சை வாங்கும். கார்ப்பொரேஷன் தயவு வரும்வரை. ஸ்ரீ முருகதாசர், வேறு வழியில்லாமல், தெருநடையில் நின்று அலமுவின் வருகையை எதிர்நோக்கியிருக்க வேண்டியதாயிற்று.

முருகதாசர் வானத்தை அளக்கும் கதைகளைக் கட்டுவதில் மிகவும் சமர்த்தர்; 'சாகா வரம் பெற்ற' கதைகளும் எழுதுவார். அந்தத் திறமையை உத்தேசித்து, ஒரு விளம்பரக் கம்பெனி மாதம் முப்பது ரூபாய்க்கு வானத்தை யளக்கும் அவரது கற்பனைத் திறமையைக் குத்தகை எடுத்துக்கொண்டது. அதனல் அவர், வீர புருஷர்களையும், அழியாத சித்திரங்களையும் எழுத்தோவியமாகத் தீட்டுவதை விட்டு விட்டு, சோயாபீன்ஸ் முதல்,

மெழுகுவர்த்தி வரையிலும், வெளிநாடுகளிலிருந்து வந்து குவியும் பண்டங்களின் காவியங்களை இயற்றிக்கொண்டிருக்கிருர். 'டபாஸா' வீரிய மாத்திரையின்மீது பாடிய பரணியும், தேயிலைப் பானத்தின் சுய சரிதையும், அந்தத் தமிழ் தெரியாத வெள்ளைக்காரனையும் இவர்மீது அனுதாபம் காட்டும்படி செய்துவிட்டன. அதற்காகத் தான் அந்த முப்பது ரூபாய்!

வீட்டு எதிரில் நிற்கும் மின்சார விளக்கின் உதவியைக்கொண்டும் பிள்ளையவர்களால் அலமுவைக் கண்டுபிடிக்க இயலவில்லை. வெற்றிலை, வேலை, குழந்தை வராத காரணம்—எல்லாம் அவரது மனத்தில் கவலையைக் கொண்டு கொட்டின. நடையிலிருந்து கீழே இறங்கிச் சந்தின் மூலைவரை சென்று பார்த்து வரலாமா என்று புறப்பட்டார்.

பக்தி மார்க்கத்தில் ஏகாக்கிரக சிந்தையைப் பற்றிப் பிரமாதமாக வர்ணிக்கிருர்கள். மனம் ஒரே விஷயத்தில் லயித்துவிட்டால் போதுமாம். பிள்ளையவர்களைப் பொறுத்தவரை, அவர் இந்தப் 'பணம்' என்ற மூன்றெழுத்து மந்திரத்தில் தீவிர சிந்தை செலுத்துபவர். பணத்தை வாரிச் சேர்த்துக் குபேரனுகிவிடவேண்டும் என்ற எண்ணம் ஒன்றுமில்லை. கவலையில்லாமல் ஏதோ சாப்பிட்டோம், வேலை பார்த்தோம், வந்தோம் என்று இருக்கவேண்டும் என்பதற்காக, எத்தனையோ வித்தைகளையெல்லாம் செய்துவிட்டார். அவருடைய குடும்பத்தின் வரவு செலவுத் திட்டத்தை மட்டிலும், அவரால் எப்பொழுதும் சமன் செய்ய முடியவில்லை. நிதி மந்திரியாக இருந்தால், பட்ஜட்டில் துண்டுவிழுவதற்குப் பொருளாதாரக் காரணங்கள் காட்டிவிட்டு, உபமான்யங்களைத் தைரியமாகக் கேட்கலாம். கவலையில்லாமல், கொஞ்சமும் உடம்பில் பிடிக்காமல், கடன் கேட்டுப் புறப்படுவதற்கு முடியுமா? குடும்பச் செலவு என்ருல், சர்க்கார் செலவாகுமா?

கவலை இருக்கப்படாது என்ற உறுதியின் பேரில் தான் நம்பிக்கை என்ற இலட்சியத்தை மட்டும் திருப்தி செய்விக்க, 'சாகா வரம் பெற்ற' கதைகளை எழுதுவதைக்

கொஞ்சம் கட்டிவைத்துவிட்டு, இந்த 'லிப்டன் தேயிலை,' காப்பி, கொக்கோ ஆகியவற்றின் மான்மியங்களை அவர் எழுத ஆரம்பித்தார். ஒரு பெரிய நாவல் மட்டிலும் எழுதிவிட்டால், அது ஒரு பொன் காய்க்கும் மரமாகிவிடும் என்று அவர் நெஞ்சழுத்தத்துடன் நினைத்த காலங்களும் உண்டு. இப்பொழுது அது ஒரு நெடுந்தூர இலட்சியமாகவே மாறிவிட்டது.

முன்பாவது, அதாவது நம்பிக்கைக் காலத்தில், ஏதோ நினைத்ததைக் கிறுக்கிவைக்கக் காகிதப் பஞ்சமாவது இல்லாமல் இருந்தது. அப்பொழுது ஒரு பத்திரிகை ஆபீஸில் வேலை. ஆனால், இப்பொழுது காசு கொடுத்து வாங்காவிட்டால் முதுகில்தான் எழுதிக்கொள்ளவேண்டும். முருகதாசர் நல்ல புத்திசாலி; அதனால்தான் முதுகில் எழுதிக்கொள்ளவில்லை. யாராவது ஒரு நண்பரைக் கண்டுவிட்டால் போதும்; தமது தூர இலட்சியத்தைப் பற்றி அவரிடம் ஐந்து நிமிஷமாவது பேசாமல் அவரை விடமாட்டார். நண்பர்கள் எஸ். பி. ஸி. ஏ. (ஜீவஹிம்சை நிவாரணச் சங்கம்) யின் அங்கத்தினர்களோ என்னவோ, அத்தனையையும் சகித்துக் கொண்டிருப்பார்கள்...

சந்தில் திரும்பிப் பார்த்தால் அலமுவின் ராஜ்யம் நடந்து கொண்டிருந்தது.

''எட்டி, என்ன! நீயோ உன் லட்சணமோ?'' என்று ஆரம்பித்தார் முருகதாசர்.

ஒரு ரிக்ஷா வண்டி. ஏர்க்கால் பக்கத்தில் வண்டிக்காரன் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். அலமு, ஒரு சுண்டெலி மாதிரி, ஜம்மென்று மெத்தையில் உட்கார்ந்திருக்கிறாள். ரிக்ஷாக்காரனுடன் ஏதோ நீண்ட சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது போலும்!

''எட்டி!'' என்றார் முருகதாசர் மறுபடியும்.

''இல்லே யப்பா? நீ இனிமெ என்னை அலமுன்னு கூப்டு''வேன்னியே! என்று சொல்லிக் கொண்டே, வண்டியிலிருந்து இறங்கப் பிரம்மப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தாள்.

"தீப்பெட்டி எங்கடா?" என்றார் முருகதாசர்.

"கடைக்காரன் குடுக்கமாட்டேங்கறான், அப்பா!"

"குடுக்காதெ போனா நேரே வீட்டுக்கு வாரது! இங்கெ என்ன இருப்பு?"

"அப்படிக் கேளுங்க சாமி! நம்ம கொளந்தென்னு மெரட்டாமே சொல்லிப் பாத்தேனுங்க. வீட்டுக்கு வண்டியிலே கொண்டாந்துவுடணுமுண்ணு மொண்டி பண்ணுதுங்க. எனக்குக் காலுலே சுளுக்கு. அந்தச் சின்னம்மபயலே காணும்..." என்று நீட்டிக் கொண்டே போனான் ரிக்ஷாக்காரன்.

"அப்பா, அவன் பங்கஜத்தெ மாத்திரம் கூட்டிக்கிட்டே போறானே!" என்றாள் அலமு. பங்கஜம் எதிர் வீட்டு சப் ரிஜிஸ்திரார் குழந்தை. அது ரிக்ஷாவிலும் போகும், மோட்டாரிலும் போகும்! அந்த விஷயம் ரிக்ஷாவுக்குத்தான் புரியுமா, குழந்தைக்குத்தான் புரியுமா?

"அலமு! ராத்திரிலே கொழந்தைகள் ரிக்ஷாவிலே போகப்படாதுடா! எறங்கி வா!" என்று குழந்தையைத் தூக்கிக்கொண்டு, வாடிக்கைக் கடைக்காரனிடம் சென்றார் முருகதாசர்.

பிள்ளையவர்கள் கடையை எட்டு முன்பே, கடைக்காரன், "சாமி! இந்த மாதிரி யிருந்தாக்கட்டுமா? போன மாசத்திலே தீர்க்கலியே! நானும் சொல்லிச் சொல்லிப் பார்த்தாச்சு. பாக்கியை முடிச்சு, கணக்கெத் தீர்த்துடுங்க! எனக்குக் குடுத்துக் கட்டாது. நான் பொளைக்க வந்தவன்!" என்றான்.

"நானும் பிழைக்க வந்தவன்தான். எல்லாரும் சாகவா வருகிறார்கள்! மின்னெ பின்னெதான் இருக்கும். நான் என்ன கொடுக்கமாட்டேன் என்று சொல்லுகிறேனா?"

"போங்க சாமி! அது ஒண்ணுதான் பாக்கி! ரூ. 2-5-4 ஆச்சு; எப்ப வரும்?"

"தீப்பெட்டியெக்குடு சொல்றேன்!"

"பெட்டிக் கென்ன பிரமாதம்! இந்தாருங்க, எப்ப வரும்?"

"எப்பவா ? சம்பளம் நாளைக்குப் போட்டுருவாங்கன்னு நினைக்கிறேன்; நாளை இல்லாவிட்டால் திங்கக்கிழமை."

"திங்கக்கிழமெ நிச்சயந்தானே? நான் சீட்டுக் கட்டணும்!" என்றான்.

"சரி, பார்க்கிறேன்!" என்று திரும்பினார் தாசர்.

"பார்க்கிறேன்னு சொல்ல வேண்டாம், நிச்சயமாக வேண்டும்!"

ஒரு கவலை தீர்ந்தது...அதாவது திங்கட்கிழமை வரை.

பாதி வழியில் போகையில், "அப்பா!" என்றது குழந்தை.

அவர் எதையோ நினைத்துக் கொண்டிருந்ததால், தன்னை யறியாமல் கொஞ்சம் கடினமாக, "என்னடி!" என்றார்.

"நீதான் கோவிச்சுக்கிறியே, அப்பா! நான் சொல்ல மாட்டேன், போ!"

"கோவம் என்னடி, கோவம்! சும்மா சொல்லு!"

"அதோ பார், பல்லு மாமா!"

முருகதாசரின் நண்பர் சுப்பிரமணிய பிள்ளைக்குக் கொஞ்சம் உயர்ந்த பற்கள். அவை, வெளியே நீண்டு கொண்டு, தமது இருப்பை அனுவசியமாக உலகத்திற்கு அறிவித்துக் கொண்டிருந்தன. அதனால் அலமு அவருக்கு இட்ட காரண இடுகுறிப் பெயர் அது.

"எங்கடி!"

"அதோ பார், வீட்டு நடேலே! என்னை எறக்கி விடப்பா!" என்று, அவரது கையிலிருந்து வழுகி விடுவித்துக்கொண்டு, வீட்டிற்கு ஓட ஆரம்பித்தது.

"மெதுவா! மெதுவா!" என்றார் பிள்ளை; குழந்தையா கேட்கும்?

"மாட்டேன்!" என்றது. அதற்கப்புறம் ஏக களேபரம். பாவாடை தடுக்கியதோ என்னமோ! அலமு வலுக் கட்டாயமாக அங்கப் பிரதக்ஷணம் செய்ய ஆரம்பித்தாள்.

பிள்ளையவர்கள் ஓடிப்போய்க் குழந்தையை வாரி எடுத்தார். ஆனால் இவர் பதட்டத்திற்கு ஏற்ப, அங்கு குழந்தைக்கு ஒன்றும் ஏற்படவில்லை.

"தோளுக்கு மேலே தொண்ணூறு. தொடச்சுப் பாத்தா ஒண்ணுமில்லே!" என்று பாடிக் கொண்டு குழந்தை எழுந்தது.

"என்ன ஸார், குழந்தையை நீங்க இப்படி விடலாமா?" என்று சொல்லிக் கொண்டே சுப்பிரமணியம் அவர்கள் பக்கம் வந்தார்.

"என்ன ஸார் செய்யட்டும்! என்ன சொன்னாலும் கேட்கிறதில்லை என்ற உறுதி மனசிலே ஏறிப்போயிருக்கு. வெளியிலே புறப்பட்டாச்சா, அப்புறம் தேடிக்கொண்டு பின்னோடே பத்துப் பேர். இவளைக் கடைக்கனுப்பிச்சுட்டா தாயார். இவ்வளவு நேரம் அந்த ரிக்ஷாக்காரனோடே தர்க்கம்—என்ன செய்கிறது! வாருங்கள் ஸார், உள்ளே! ஒன் மினிட்! விளக்கை ஏத்துகிறேன்."

குழந்தை அலமு அதற்குள் வீட்டிற்குள், "பல்லு மாமா வந்துவிட்டார்!" என்று பொதுவாக உச்ச ஸ்தாயியில் விளம்பரம் செய்து கொண்டு ஓடிவிட்டாள்.

"குழந்தை துருதுருவென்று வருகிறதே! பள்ளிக்கூடத்திற்காவது அனுப்பக் கூடாதா" என்றார் நண்பர்.

"ஆமாம் ஸார், தொந்தரவு சகிக்கலே. அங்கே தான் கொண்டு தள்ளணும். வயசு கொஞ்சம் ஆகட்டுமே என்று பார்க்கிறேன்" என்றார் முருகதாசர், விளக்குத் திரியை உயர்த்திக்கொண்டே.

"நேத்து பீச்சுக்குப் போயிருந்தேன்! சுந்தரத்தைப் பார்த்தேன்......" என்று ஆரம்பித்தார் சுப்பிரமணிய பிள்ளை.

"அந்த ராஸ்கல் வந்துட்டானா! என்றைக்கும் அவன் தொல்லைதான் பெரிய தொல்லையாக இருக்கிறது. இங்கே

வந்தான்னு ஆபீஸுக்கு வந்து யாருக்காவது வத்தி வச்சுட்டுப் போயிடரது...மின்னே வந்தப்போ, என்ன எழவு சொன்னுனே, அந்த ஆர்ட்டிஸ்ட் 'பதி' இருந்தானே அவனுக்குச் சீட்டுக் கொடுக்க வழி பண்ணிட்டான்..." என்று படபடவென்று பேசிக் கொண்டே போனுர் முருகதாசர்.

"அப்படிப் பார்த்தா உலகத்திலேயே யார் தான் ஸார் நல்லவன்! அவன் உங்களைப் பத்தி ரொம்பப் பிரமாதமாக அல்லவா கண்ட இடத்திலெல்லாம் புகழ்ந்து கொண்டிருக்கிறுன்?"

"சவத்தெத் தள்ளுங்க, ஸார்! பேன் பார்த்தாலும் பார்க்கும், காதை அறுத்தாலும் அறுக்கும். அவன் சங்காத்தமே நமக்கு வேண்டாம்......நீங்க என்ன சொல்ல வாயெடுத்தீர்கள்?"

"அதுதான், உங்களைப் பத்தித்தான் ஒரு இங்கிலீஷ்காரனிடம் பிரமாதமாகப் பேசிக் கொண்டிருந்தான்..."

"இவ்வளவுதானு! கதையை எழுதரேன், அல்லது கத்தரிக்காயை அறுக்கிறேன், இவனுக்கென்ன...?"

அதே சமயத்தில் வெளியிலிருந்து, "முருகதாஸ்! முருகதாஸ்!" என்று யாரோ கூப்பிட்டார்கள்.

"அதுதான்! அவன்தான் வந்திருக்கிறுன் போலிருக்கிறது! பயலுக்கு நூறு வயசு..."

" 'சைத்தான் நினைக்கு முன்னுல் வந்து நிற்பான்' என்பதுதான்!" என்று முணுமுணுத்தார் முருகதாசர்.

பிறகு அவர் எழுந்து நின்று வெளியில் தலையை நீட்டி "யாரது?" என்றுர்.

"என்ன! நான் தான் சுந்தரம், இன்னும் என் குரல் தெரியவில்லையா?" என்று உரத்த குரலில், கடகடவென்று சிரித்துக்கொண்டு, உள்ளே நுழைந்தார் வந்தவர். அவருடைய சிரிப்புக்கு இசைந்தபடி காலில் போட்டிருக்கும் ஜோடு தாளம் போட்டது.

"என்ன சுந்தரமா? வா! வா! இப்பொத்தான் உன்னைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். நீயும் வந்தாய்!

காப்பிபோடச் சொல்லட்டுமா? அலமு! அலமு!" என்று உரக்கக் கூவினுர் முருகதாசர்.

எங்கிருந்தோ, "என்னப்பா!" என்று அலமுவின் குரல் வந்தது.

"அம்மாவை மூணு கப் காப்பி போடச் சொல்லு. சீக்கிரம் ஆகணும்!"

"நீ என்ன பத்திரிகையையே விட்டுவிட்டாயாமே! இப்பத்தான் கேள்விப்பட்டேன்."

"வயிற்றுப் பிழைப்பிற்கு எதில் இருந்தால் என்ன? சீலேப்பேன் குத்துகிறதும் ஒரு 'பிஸினஸ்' ஆக இருந்து, அதில் ஒரு 'சான்ஸ்' கிடைத்தால், அதையும் விட்டா வைக்கிறது? நான் பத்திரிகையை விட்டுவிட்டா, கதை எழுதாமல் இருந்துவிடுவேனு? ஒரு பெரிய நாவலுக்குப் 'பிளான்' போட்டிருக்கேன். தமிழன்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தால், எனக்குக் காகிதம் வாங்கவாவது காசு கிடைக்கும். அதில் 'சென்ட்ரல் ஐடியா' என்ன தெரியுமா?......"

"நீங்க நேற்றுப் பொருட்காட்சிக்குப் போனீர்களாமே!" என்று பேச்சை மாற்ற முயன்ருர் சுப்பிரமணிய பிள்ளை. இந்த விஷயத்தைத் தொட்டுவிட்டால், முருகதாசர், கீறல் விழுந்த கிராமபோன் பிளேட் மாதிரி, விடாமல் திருப்பித் திருப்பி அதையே கதைத்துக் கொண்டிருப்பார்!

"அப்பா! காப்பியாயிட்டுது. நீதான் வந்து எடுத்துக்கிட்டுப் போகணும். சுடுது!" என்று சொல்லிக்கொண்டு, நிலேப்படி இரண்டு பக்கத்தையும் தொட்ட வண்ணமாய், ஒற்றைக் காலே ஆட்டிக்கொண்டு நின்ருள் அலமு.

"அம்மா எங்கே?"

"அம்மா சாத்தெ வடிச்சிக்கிட்டிருக்கா, அப்பா?"

"சரி! இதோ வாரேன், போ!"

"வாயேன்!"

"வர்ரேன்னு, போடீ உள்ளே!"

"காப்பி ஆறிப்போயிடும், அப்பா!"

"இதோ ஒரு நிமிஷம்!" என்று சொல்லிக்கொண்டு உள்ளே சென்றார்.

"மாமா! நீ என்ன கொண்டாந்தே!" என்று கேட்டுக் கொண்டு, சுப்பிரமணிய பிள்ளை மடியில் உட்கார்ந்து கழுத்திலிருக்கும் நெக் டையைப் பிடித்து விளையாட ஆரம்பித்தாள் அலமு.

"அதெப் பிடித்து இழுக்காதே! மாமாவுக்குக் கழுத்து வலிக்கும்!" என்றார் சுந்தரம் பிள்ளை.

"வலிக்காதே!" என்று மறுபடியும் ஆரம்பித்தாள்.

முருகதாசரும், மேல் துண்டின் உதவியால் ஒரு செம்பை ஏந்திய வண்ணம், உள்ளே நுழைந்தார்.

"என்னப்பா, மூணு டம்ளர் கொண்டாந்தே! எனக் கில்லையா"

"உனக் கென்னடி இங்கே! அம்மாகூடப் போய்ச் சாப்பிடு."

"மாட்டேன்," என்று ஒரு டம்ளரை எடுத்து வைத்துக் கொண்டது குழந்தை.

முருகதாசர் காப்பியை ஆற்றி, சுந்தரம் கையில் ஒரு டம்ளரைக் கொடுத்தார்.

சுந்தரம் வாங்கி மடக் மடக்கென்று மருந்து குடிப்பது போல் குடித்துவிட்டு, "காப்பி வெகு ஜோர்!" என்று சர்டிபிகேட் கொடுத்தான்.

மற்றொரு டம்ளர் சுப்பிரமணிய பிள்ளையிடம் கொடுக் கப்பட்டது. "மாமா! எனக்கில்லையா" என்று அவரிடம் சென்று ஒண்டினாள் அலமு.

"வாடி, நாம் ரெண்டு பேரும் சாப்பிடுவோம்?" என்றார் முருகதாசர்.

"மாமா கூடத்தான்!" என்றது குழந்தை. சுப்பிர மணிய பிள்ளை கையிலிருந்த டம்ளரில் அலமுவைக் 'குடிக் கச் செய்தார்.

பாதியானதும், "போதும்!" என்றது குழந்தை.

"இந்தாருங்க ஸார்!" என்று மற்றடம்ளரையும் நீட்டினார் முருகதாசர்.

"வேண்டாம்! வேண்டாம்! இதுவே போதும்!" என்றார் சுப்பிரமணிய பிள்ளை.

"நான்சென்ஸ்!" என்று சொல்லிவிட்டு, குழந்தை எச்சிற்படுத்தியதைத் தாம் வாங்கிக்கொண்டார் தாசர்.

"நேரமாகிறது, மவுண்டில் ஒரு நண்பரைப் பார்க்க வேண்டும்!" என்று எழுந்தார் சுந்தரம். "அதற்குள்ளாகவா? வெற்றிலை போட்டுக்கொண்டு போகலாம்!" என்றார் முருகதாசர்.

"கையில் எடுத்துக்கொண்டேன். நேரமாகிறது! அப்புறம் பார்க்கிறேன்!" என்று சொல்லிக்கொண்டு வெளியேறினார் சுந்தரம்.

கையில் இருந்த புகையிலையை வாயில் ஒதுக்கிவிட்டு, சிறிது சிரமத்துடன், தமக்கு நேரமாவதைத் தெரிவித்துக் கொண்டார் சுப்பிரமணியபிள்ளை.

தொண்டையைச் சிறிது கனைத்துக்கொண்டு, "சுப்ரமண்யம், உங்களிடம் ஏதாவது சேஞ்ச் இருக்கிறதா? ஒரு மூன்று ரூபாய் வேண்டும்!" என்றார் முருகதாசர்.

"ஏது அவசரம்"

"சம்பளம் போடலே; இங்கு கொஞ்சம் அவசியமாக வேண்டியிருக்கிறது......திங்கட்கிழமை கொடுத்து விடுகிறேன்!"

"அதற்கென்ன...?" பர்ஸை எடுத்துப் பார்த்துவிட்டு "இப்போ என் கையில் இதுதான் இருக்கிறது!" என்று ஓர் எட்டணாவைக் கொடுத்தார் சுப்பிரமணியம்.

"இது போதாதே!" என்று சொல்லி, அதையும் வாங்கி வைத்துக்கொண்டார் முருகதாசர்.

"அப்பொ..." என்று மீண்டும் ஏதோ ஆரம்பித்தார்.

"பார்ப்போம்! எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது," என்று சுப்பிரமணியமும் விடைபெற்றுச் சென்றார்.

முருகதாசர், தமது ஆஸ்தான அறையின் சிம்மாசனமான பழைய கோரைப் பாயில் உட்கார்ந்துகொண்டு, அந்த எட்டணாவைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டு, நீண்ட யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

"அங்கெ என்ன செய்யறீங்க?" என்ற மனைவியின் குரல்!

"நீதான் இங்கே வாயேன்!"

கமலம் உள்ளே வந்து, "அப்பாடா!" என்று உட்கார்ந்தாள். அவர் கையில் இருக்கும் சில்லறையைப் பார்த்துவிட்டு, "இதேது?" என்றாள்.

"சுப்பிரமணியத்திடம் வாங்கினேன்!"

"உங்களுக்கும்...வேலையில்லையா?" என்று முகத்தைச் சிணுக்கினாள் கமலம். பிறகு திடீரென்று எதையோ எண்ணிக்கொண்டு, "ஆமாம். இப்பத்தான் நினைப்பு வந்தது. நாளைக்குக் காப்பிப் பொடியில்லை. அதெ வச்சு வாங்கி வாருங்களேன்!" என்றாள்.

"அந்தக் கடைக்காரனுக்காக அல்லவா வாங்கினேன்! அதைக் கொடுத்துவிட்டால்?"

"திங்கட்கிழமை கொடுப்பதாகத்தானே சொன்னீர்களாம்!"

"அதற்கென்ன இப்பொழுது?"

"போய்ச் சீக்கிரம் வாங்கி வாருங்கள்!"

"திங்கட்கிழமைக்கு?"

"திங்கட்கிழமை பார்த்துக்கொள்ளுகிறது!"

விநாயக சதுர்த்தி

அன்று விநாயக சதுர்த்தி. நான் பலசரக்குக் கடையிலிருந்து சாமான்கள் கட்டி வந்த சணல் நூல்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து முடிந்து, வீட்டின் கூடத்தில் நாற்கோணமாகக் கட்டினேன். அப்புறம் மாவிலைகளை அதில் தோரணமாகக் கோத்துக் கொண்டிருந்தேன். ஆமாம், பட்டணத்திலே மாவிலைகூடக் காசு கொடுத்துத் தான் வாங்க வேண்டும். 'என்ன மாவிலைக்குமா விலை?' என்று பிரமித்துப் போகாதீர்கள்! மாவிலைக்கு விலையில்லை யென்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளுங்கள். ஆனால், மரத்தில் ஏறிப் பறித்து, வீடு தேடிக் கொணர்ந்து கொடுப்பதற்குக் கூலி கொடுக்க வேண்டுமா, இல்லையா? நாங்கள் படித்த பொருளாதார சாஸ்திரப்படி, இந்த 'உழைப்பின் மதிப்பை' அந்த இலையின்மேல் ஏற்றி வைத்துப் பார்க்க வேண்டும். இதுதான் 'விலை' என்பது! நீங்கள் கிராமாந்தரங்களில் இருந்தால், எவனுடைய மாமரத்திலேனும், வழியிற் போகும் எவனையாவது ஏறச் சொல்லி, "டேய், ரெண்டு மாங்குழை பறித்துப் போடடா!" என்று சொல்லிவிடுவீர்கள். சில பிள்ளைகள் தாங்களே மரத்திலேறிப் பறிப்பார்கள்; சிலர் மரத்தோடு கட்டி வைக்கப்படுவதும் உண்டு. இந்த 'ரிஸ்க்' எல்லாம் நினைத்துத்தான் பட்டணவாசிகள், மண் முதல் மாங்குழை வரை, எல்லாப் பொருள்களையும் விலை கொடுத்து வாங்க முயற்சிக்கிறார்கள். இதுதான் அழகு, நாகரிகம்! பட்டணத்திலே, ஆந்தைகள் வசிக்கும் பொந்துகள் மாதிரியுள்ள வீடுகளில், கும்பல் கும்பலாய் வசிக்கும் நாங்களும் இந்த நாகரிகத்தின் சிறுசிறு துணுக்குகள் தானே!...நிற்க... ...நான் தோரணத்தைக் கட்டிக் கொண்டிருந்தேன். அதாவது, காசு கொடுத்து வாங்கின மாவிலைகளில் 'வேஸ்டேஜ்' (கழிவு) இல்லாமலிருக்க, எல்லாவற்றையும் சேர்த்து

வைத்துத் தொடுத்துக் கொண்டிருந்தேன். எனக்குப் பல் முளைத்த மாதிரி, அவை கோணல் மாணலாகத் தொங்கின.

நான் தோரணம் கோத்துக் கொண்டிருக்கிறேன்...

பக்கத்திலே பிள்ளையார், பச்சைக் களிமண் ஈரமும், எண்ணெய்ப் பசையும் பளபளக்க, சர்க்கரைப் பொட்டலம், காகிதக் குடை, நாவற்பழம், புளி வகையராக்களுடன் அரங்கத்தில் பிரவேசிக்கக் காத்திருக்கும் ராஜபார்ட்போல, ஏன், "சிம்மாசனம் காலியாகட்டுமே, ஏறி உட்காருவோம்!" என்று காத்திருக்கும் பட்டத்திளவரசன்போல, பரிதாபகரமாகக் காத்துக் கொண்டிருக்கிறார்.

என் மனம் ஒரு ரசமான பேர் வழி. இந்த மாதிரியான சோம்பேறி வேலை எனக்குக் கிடைத்துவிட்டால், அது கண்டபடி ஓட ஆரம்பித்துவிடும்.

"உனக்கு ஒரு ரசமான கதை சொல்லட்டுமா?" என்றது.

" 'பிரேக்' கழன்று போய்விட்டது. இனி வெறிதான்!" என்று திட்டப்படுத்திக் கொண்டேன்.

"ஆமாம்! வண்ணாரப்பேட்டையிலே சுப்பு வேளான் இருந்தானே, ஞாபகம் இருக்கிறதா?" என்றது.

ஒரு வரிசைத் தோரணத்துக்கு இலைகளை வைத்துச் சரிக்கட்டி விட்டேன்.

"அவன்தான் ஆக்கு!—கடைசியிலே வெள்ளைக் களிமண்ணையே தின்று செத்தானே. அந்த மருத வேளான் மகன்!" என்றது மறுபடியும்.

அப்படியேநான் எங்கள் ஊருக்குச் சென்றுவிட்டேன். அந்தத் தாமிரவருணி ஆற்றின் கரை, தூரத்திலே மேற்குத் தொடர்ச்சி மலை, சமீபத்தில் சுலோசன முதலியார் பாலம், சின்னமண்டபம், சுப்பிரமணியசாமி கோவில், சாலைத்தெரு, பேராச்சி கோவில், மாந்தோப்பு, பனை விடலிகள், எங்கள் வீடு—எல்லாம் அப்படி அப்படியே என் கண் முன்பு தோன்றலாயின.

"ஆமாம், எல்லாம் வாங்கிக்கொண்டு வந்தீர்களே! பிள்ளையாருக்கு விளாம்பழம் எங்கே?" என்று கேட்டுக் கொண்டே, சர்க்கரைப் பொட்டலத்தை எடுத்தாள் என் மனைவி.

"கூடைக்காரி வருவாளே! வாங்கினாப் போகிறது!' என்று சொல்லி, ஒரு முரட்டு மாவிலையை எடுத்து, பத்து அங்குல இடத்தையும் அதொன்றினால் மறைத்து 'அலங் 'காரம்' செய்ய முயற்சித்தேன்.

"கூடைக்காரி வந்தால்தானே! நீங்கள் போய் எட்டிப் பாருங்களேன்!" என்றாள் சகதர்மிணி.

"திட்டமாக வருவாள், நான் சொல்லுகிறேன் பார்!" என்றேன். என் வாழ்க்கையில் ஒரு நாளாவது தீர்க்கதரிசி, அல்லது 'பலிக்காவிட்டால் பணம் வாபீஸ்!' என்று விளம்பரம் செய்யும் ஜாமீன் ஜோஸியராக ஆகிவிடுவது என்று, (சந்தர்ப்ப விசேஷத்தால்) என் சோம்பலை வியாக்கியானம் செய்தேன்.

பக்கத்திலே இருக்கும் பரிவாரங்களில் ஒன்றைப் பறி கொடுத்தார் விநாயகர்.

"சுப்பு வேளான் குடும்பத்துக்கே சாபம், தெரியுமா?" என்றது என் மனசு.

"அதென்ன?"

"கும்பினிக்காரன் வந்த புதுசு. அந்தக் காலத்திலே சுலோசன முதலியார் பாலம் கட்டலே நம்ம சாலைத் தெருதான் செப்பரை வரைக்கும் செல்லும். அங்கே தான் ஆற்றைக் கடக்க வேண்டும். கொக்கிரகுளத்திலே இப்பொழுது கச்சேரிகள் இருக்கே, அங்கே தான் கும்பினி யான் சரக்குகளைப் பிடித்துப் போடும் இடம். அந்த வட்டாரத்திலே நெசவும், பாய் முடைகிறதும்—இந்தப் பத்தமடைப் பாய் இருக்கே அது—ரொம்பப் பிரபலம். அப்பொழுது ஒரு இருநூறு முந்நூறு வண்ணான்களைக் குடியேற்றி வைத்தான் கும்பினிக்காரன். 'குஷ்டந் தீர்ந்த துறை' என்ற பேர் 'வண்ணாரப்பேட்டை' என்று ஆயிற்று!"

"இதோ, இதைப் பாருங்கள். இந்த உப்புப் போதுமா என்று பாருங்கள்!" என்று கையில் கொஞ்சம் உப்பைக் கொணர்ந்தாள் பத்தினி.

"இதெல்லாம் உன் 'டிபார்ட்மெண்டு' என்னைக் கேட்டால்......?" என்று சிரித்துக்கொண்டு, அவளைப் பார்த்தேன்.

"என்னிக்குமா உங்களைக் கேக்கறேன்.? ஏதோ கேட்டால்..."

அவள், காலையில் ஸ்நானம் செய்து, தலையை ஈரங் காயாமல் எடுத்துக் கட்டியிருந்தாள். அவ்வளவு அவசரம்! நெற்றியில் விபூதி, அதற்கு மேல் குங்குமம்...பறந்து பறந்து வேலை செய்வதால் முகத்தில் ஒரு களை...வேகத் திலும் ஓர் அழகு இருக்கத்தான் செய்கிறது என்று நினைத்தேன்...

"ஏடி, கமலா! கொஞ்சம் அந்தச் செல்லத்தை எடுத்து வை!" என்று கேட்டேன்.

"ஆமாம், அடுப்பிலே பாகு என்னமாக் காய்கிறதோ! இந்தச் சமயத்தில்தான் உங்களுக்கு..." என்று சொல்லிக் கொண்டு வெற்றிலைப் பெட்டியை எடுத்து வைத்துவிட்டு, உள்ளே சென்றாள்.

அப்பொழுது எங்கிருந்தோ மெல்லிய தளிர்க் காற்று வீட்டிற்குள் பிரவேசித்து உலாவியது. மாவிலைக் கும்ப வில் உட்கார்ந்து கொண்டு வெற்றிலை மடிக்க ஆரம்பித் தேன். எனக்கு வெற்றிலை போடுகிறதென்றால் ஒரு தனிப் பிரயோக முறை. அந்தச் சடங்கில் ஒரு சிறிதும் வழுவிவிட்டால் இலட்சியம் நிறைவேறிய மாதிரியே இருக்காது.

வெளியே வெய்யில் ஏற ஏற, உள்ளே பிள்ளையார் காய ஆரம்பித்தார். எப்படியானாலும் சுய குணத்தைக் காண்பிக்காமல் இருக்க முடியுமா?

"அப்பொ பாளையங்கோட்டையிலே இருந்த கோட்டை கூட இடியலே. மதுரை வரைக்குந்தான் ரயில் வங்

திருக்கும். இந்தப் பக்கத்திலே எல்லாம் வண்டிப் பாதைதான்...

''இப்போ மாதிரியா? சாயங்காலம் நாலு மணிக் கப்புறம் அந்தப் பக்கத்திலே போகிறதென்ருல் யாருக்கும் பயந்தான். இப்பொழுது கட்டடமும் பங்களாவும் இருக்கிற இடமெல்லாம் அப்பொது* உடங்காடு...

''அப்பா! அந்தக் காலத்திலே ஒரு மருத வேளார் இருந்தார். நல்ல மனுஷர். சோழியப் பிராமணன் மாதிரி உச்சிக்குடுமியும் பூணூலும் இருந்தாலும், முகத்திலே ஒரு களை இருக்கும். அவருக்கு ரொம்பக்காலமா பிள்ளையில்லே. இப்போ சின்ன மண்டபத்துக்குப் போகிற பாதையில் இருக்கே ஒரு பிள்ளையார், அதை அந்தக் காலத்திலேதான் பேச்சியா பிள்ளை வைத்து ஒரு 'அரசுக் கல்யாணம்' நடத்தி வைத்தார். அந்தப் புதுப் பிள்ளையாரை இருபது வருஷம் சுற்றி வந்ததின் பயனுகை, ஒரு பிள்ளை பிறந்தது மருத வேளாருக்கு. ஆண் குழந்தைதான். அழகுன்னு, சொல்லி முடியாது! உன் மனைவிக்கு இருக்கே அப்படி அழகான கண்கள்! அவனுக்குச் சுப்பிரமணியன் என்று பெயரிட்டார். பிள்ளை வெகு துடி......ஆனுல், நாலு காரியம் உருப்படியாய்ப் பண்ணத் தெரியாது......எப்பப் பார்த்தாலும் விளையாட்டுத்தான். என்ன செல்லம் கொடுத்தாலும், 'அடியாத மாடு படியாது' என்பது வேளாரின் கொள்கை. அதிலேயே அவர் நம்பிக்கை இழக்கும் படி நடந்துகொண்டான் என்ருல், பயல் எவ்வளவு துடியாக இருந்திருக்கவேண்டும்!

''சாயங்காலமும் வேளார் குளித்துவிட்டுப் பிள்ளையாரைச் சுற்ற வருவார். அப்பொழுது படித்துறைப் பக்கம் உட்கார்ந்திருக்கும் பிள்ளையாருடனும், சாயங்கால பூஜைக்கென்று கோவிலுக்குத் தண்ணீர் எடுக்க வரும் விசுவநாத தீட்சதரிடமும் அவர் தம் குறைகளைச் சொல்லி அழுவார். அன்று பேச்சியா பிள்ளையும் அங்கு வந்திருந்தார். அவர் வேளாரைக் கண்டதும் ஆவேசமாய்ப் பேச ஆரம்பித்தார்.

---

* உடை மரம் - கருவேல மரம்.

'என்னவே! இண்ணக்கி அந்தப் பய சுப்பு நம்ப தோட்டத்திலே இறங்கி நாலு மாங்கா களவாடிக்கிட்டு ஆடிட்டானுமே...!' 'ஓய்' என்ற விளியிடைச்சொல், 'வேய்' ஆகி, பின்னர் வெறும் 'வே' என்று குறுகிவிட்டது: 'வே' போட்டுப் பேசுகிறவர் காசியிலிருந்தாலும் சரி, அவர் தென் பாண்டி நாட்டு ஆசாமி என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

"என்ன எசமான் செய்ய! கண்டிச்சுப் பாத்தாச்சு. மண்ணெடுக்கப் போடான்னு போரதில்லே சக்கரத்துக் கிட்டயே வரமாட்டான். படிக்கவாவது போட்டுப் பார்த் தேன்......வாத்யாரய்யா அவனுக்குக் குளிர் விட்டுப் போச்சு என்று சொல்லிக் கைவிட்டுவிட்டார். என் விதி! பயலுக்குத் தொழில் தெரியாமலா இருக்கு?...வீடு முழுக்கலும், ஒரு நாளேக்குப் பாத்தா, யானையும் குதிரை யுமாப் பண்ணிப் போட்டுவிடுவான்......இதெல்லாம் சுட் டுக் கொண்டா. வர்ணம் பூசித் தாரேன் கொலுவுச் சாமானு விக்கலாண்டா! இன்னு, 'அதெல்லாம் எனக்குத் தெரியாது!' என்று சொல்லி மறுபடியும் வெறும் களி மண்ணுக்கிவிடுகிறுன். 'அட! சும்மாவாவது வீட்டோட கெட!' என்ருல் கேட்கிருனு?...எப்பப் பார்த்தாலும், சண்டை, சண்டை, சண்டை! எப்பப் பார்த்தாலும் போராட்டந்தான்! அதோ போகுது பாருங்கோ அந்தக் களுதெ! கூப்புட்டு எசமான் மின்ன வச்சுக் கேக்கரேன்... 'ஏலே அய்யா, சுப்பு!' என்று குரலெடுத்துக் கூப்பிட்டார் வேளார்.

" 'பயல் கெடக்கிருன் வே! சவத்தெ தள்ளும்! நாலு காயிலே என்ன பெரமாதம்! இவன் எடுக்காட்டா, அணில் கொத்தித் தள்ளுது...நான் சொல்றது என்னன்னு, இந்த வயசிலே இது ஆகாது!' என்ருர் பேச்சியா பிள்ளை.

"பிள்ளைவாள்! நீங்க சொல்றது நூத்துக்கொரு வார்த்தை" என்ருர் விசுவநாத தீட்சதர்.

" 'ஆமாம் எசமான்!' என்று ஏங்கினுர் மருத வேளார்..."

"நீங்கதான் ஏன் சும்மா இருக்கிறீர்கள்? பிள்ளையாரை எடுத்து வைத்தால் ஆகாதோ?" என்று சொல்லிக் கொண்டு வந்தாள் என் மனைவி.

"அதெல்லாம் முடியாது, நான் நாஸ்திகன். அதெல் லாம் குடும்ப விளக்கு குல விளக்கு 'டிபார்ட்மெண்ட்'!" என்றேன் நான்.

"மஹா 'டிபார்ட்மெண்'டைக்கண்டுவிட்டீர்களாக்கும்! சோம்பல் என்றால் அப்படிச் சொல்றதுதானே! எல்லா நாளுமா......கைவேலையா இருக்கே!" என்று பெருங் காய டின்னை எடுத்துக்கொண்டே, அவள் சொன்னாள்.

அதற்குள் என் மன ராணி என்னை மடியைப் பிடித் திழுத்தாள். இரண்டு பெண்டாண்டிக்காரன் பாடுதான்...

"சுப்பு வெளானுக்குப் பதினாறு வயசு. அப்பொ மதத்திலே கிறுக்கு விழுந்தது. நாலு நாள் ஓயாது ஒழியாது அற்புதமாக விக்கிரகங்கள் செய்வான்...அப் புறம் அது பழைய களிமண்தான்...வேளார் தான் தள்ளாத வயசிலேயும் குடும்ப போஷணையைக் கவனிக்க வேண்டியதாச்சு.

"அப்போப் பார்த்து அந்தக் கசமுத்து வேளார் மகளிடம் தடித்தனமா நடந்துகொண்டானும் சுப்பு. சாயங் காலம் அந்தப் பெண் இசக்கி அம்மை, தண்ணீர் எடுக்க ஆற்றங்கரைக்கு வந்தாளாம்...இவன் போய் அவள் எதிரில் நின்றுகொண்டு, 'ஏட்டி! என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியா' என்று கேட்டானும்.

"உள்ளுக்குள் பூரிப்போ என்னவோ! பானையைக் கீழே போட்டு உடைத்து, 'ஓ, ராமா!' என்று அழுது கொண்டு, 'இவன் என்னை இப்படிக் கேக்க ஆச்சா?' என்ற நினைப்பில் வீட்டுக்குச் சென்றாளாம்.

"ஊர்க்காரர்கள் இவனை அடிக்கக் கூடிவிட்டார்கள். இவன் தோழர்கள் எல்லாம் இவனுக்குப் பரிந்து பொய் சொல்லியும், "விளையாட்டுக்குச் சொன்னான்" என்று சொல்லியும் பார்த்தார்கள்.

"இந்தப் பயல் ஒரே பிடிவாதமாக 'நேசத்துக்குத் தான் கேட்டேன்!' என்றானாம். அன்றைக்கு நல்ல உதை. இந்த சமாசாரம் மருதவேளாருக்கு எட்டிற்று. கோயிலுக்கு 'நூறு தேங்காய் அபராதம்' கொடுப்பதாகச் சொல்லிப் பையனை மீட்டு வந்தார்.

"ஆனால் மறுநாளைக்கு கசமுத்து வேளார் மண் எடுக்கப்போன சமயம், இவன் அவர் வீட்டுக்குள் போய்ப் பெண்ணுக்கு *அடுக்களைத் தாலி கட்டிவிட்டான்.

"ஊரில் ரகளைதான். 'கலியாணம் என்னமோ ஆச்சு'! என்று இரண்டு சம்பந்திகளும் கூடிக்கொண்டால்... கொஞ்ச நாள் ஊர்க்காரருக்கு நன்றாகப் பேசிக்கொண்டிருக்க விஷயம் கிடைத்ததுதான் மிச்சம்...

"இரண்டு சிறுசுகளும் புதுக் குடித்தனம் செய்தன.

"கொஞ்ச நாள் வரைக்கும் சுப்பு ஒழுங்காக வீட்டுக் காரியங்களைக் கவனித்து வந்தான். பானை வனைகிறது, சுடுகிறது—இதிலெல்லாம் ரொம்ப ஜோர்...

"அப்பத்தான் கும்பினியானும் கட்ட பொம்முவும் முட்டிக்கிற சமயம்—கும்பினிக்காரன் 'துபாஷ்' யாரோ பட்டணத்து முதலியார். அந்த வட்டாரத்திலே அவருக்குக் கொஞ்சம் சொற் சக்தியுண்டு. அவரும் குட்டந்தீர்த்த துறையிலேதான் குடியிருந்தார்.

"ஒரு நாள் சுப்பு மண்வெட்டப் போனதிலிருந்து பிடித்தது வினை.

"ஏதோ ஒரு இடத்திலே வெள்ளைக் களிமண் அகப்பட்டது. பயல் வண்டி நிறைய வாரிக்கொண்டு வந்தான். ஆனால் பழைய பொம்மை செய்கிற வெறி வந்துவிட்டது. அதற்கப்புறம் சக்கரத்தைச் சீந்துவதில்லை. அந்தச் சமயத்தில்தான் அவன் மனைவிக்கு நாலு மாசம் கர்ப்பம். வீட்டில் கிடைத்ததைச் சாப்பிடுகிறது, பொம்மை செய்கிறது, அழிக்கிறது, மறுபடியும் செய்கிறது, அழிக்கிறது, மறுபடியும் செய்கிறது, அழிக்கிறது—இப்படியே நாட்

---

* அந்தரங்கமாகச் சென்று தாலி கட்டுவது; கந்தர்வ விவாகத்திற்குச் சமமான பழக்கம்.

கள் கழிந்தன. பெண் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். அதெல்லாம் நடக்கிற காரியமா? 'போ! போ!' என்று சொல்லிவிட்டான் சுப்பு.

"அன்னிக்கி விநாயக சதுர்த்தி. சுப்பு விடியற்காலையிலேயே எழுந்து ஒரு விநாயகர் செய்துகொண்டிருந்தான். விநாயகர் என்றால், உம்முடன் பேசுவதுபோல் இருக்கும், —அவ்வளவு உயிருடன் இருந்தது அந்தக் களிமண் கண்கள்! மனைவியும் ரொம்ப ஜரூராகப் பூஜைக்கு வேண்டிய வேலைகளெல்லாம் செய்துகொண்டிருந்தாள்.

" 'ஏட்டி, நான் குளிச்சிட்டு வாரேன்!' என்று வெளியே சென்றான் சுப்பு.

"அன்றைக்குப் பார்த்து துபாஷ் வீட்டுச் சேவகர்கள் நல்ல பிள்ளையார் வேண்டித் தேடி யலைந்தார்கள். சுப்பு செய்த பிள்ளையார் எசமானுக்குப் பிடித்திருக்கும் என்று நம்பினார்கள். அதிலும் வெள்ளைப் பிள்ளையார்; கேட்கவா வேண்டும்!

"முதலில் இசக்கி அம்மைக்குக் கொடுக்க இஷ்டமில்லைதான். இருந்தாலும் நாலு பணம் அஞ்சு பணம் என்று ஆசை காட்டினால்! வில்லைச் சேவகன் (டவாலி போட்டவன்) சும்மா தூக்காமல், காசு கொடுப்பதாகச் சொன்னதிலேயே அவளுக்குப் பரம திருப்தி. அதைக் கொடுத்து விட்டு .மாமனார் செய்த குட்டிப் பிள்ளையார்களில் ஒன்றைக் கொண்டுவந்து அந்த இடத்தில் வைத்திருந்தாள்.

"சுப்பு குளித்துவிட்டு வந்தான். வீட்டில் நடந்த கதை தெரிந்தது......

" 'இந்தத் தேவடியாத் தொழில் உனக்கு எதுக்கு?' என்று அவளை எட்டி உதைத்துவிட்டு, ஈரத் துணியைக் கூடக் களையாமல், அவன் நேரே வெளியே சென்றான்.

"அப்பொ துபாஷ் முதலியார் வீட்டில் பூஜை சமயம். இந்தப் பயல் தட-தடவென்று உள்ளே போய், பூஜைக்கு வைத்திருந்த பிள்ளையாரைத் தூக்கிக்கொண்டு வெளியே ஓடினானாம். முதலில் துபாஷ் திடுக்கிட்டார். ஆனால்

சேவகர்கள் தொடர்ந்து ஓடினார்கள். இவன், பிள்ளையாரை இறுக மார்பில் கட்டிக்கொண்டு, மேல்மூச்சுக் கீழ்மூச்சு வாங்க, தெருவழியாக ஓடினான். சேவகர்கள் நாலு பக்கமும் மறிக்கவே, அவன் வசந்த மண்டபத் தோப்புக்குள் குதித்து ஓடினான். சேவகர்கள் நாலைந்து பகுதியாகப் பிரிந்து மடக்க ஓடினதினால், பேச்சிக் கசத்தின் பக்கம்தான் அவன் ஓட முடிந்தது. அதைத் தாண்டினால் கும்பினிக் காவல்காரன் கையில் அகப்படவேண்டியதுதான். சுப்புவுக்கு என்ன தோன்றியதோ – சட்டென்று கசத்தில் குதித்து விட்டான். அவன் அப்புறம் வெளி வரவே இல்லை.

"வலைகூடப் போட்டு அரித்துப் பார்த்தார்கள். உடம்புகூட அகப்படவில்லை!"

அப்பொழுது சாம்பிராணிப் புகையும் வெண்கல மணிச் சப்தமும் என்னை அவள் பக்கம் இழுத்தன.

என் மனைவி, நின்று கண்ணை மூடிக்கொண்டு, கை கூப்பிய வண்ணம், அந்தக் களிமண்ணுக்கு அஞ்சலி செய்துகொண்டிருந்தாள். அவள் கண்களை எப்பொழுதும் 'மோட்டார்கார் ஹெட்லைட்' என்று கேலி செய்வேன். அவையும் மூடி ஒரு பரிதாபமான புன்சிரிப்புடன் ஒன்று பட்டன. அவள் மனசில் என்ன கஷ்டம்! என்ன நம்பிக்கை!

அவளையே பார்த்துக்கொண்டு நின்றேன்.

"அப்புறம் என்ன தெரியுமா? அவன் குடும்பத்தில் பிறக்கிற பிள்ளைகளுக்கு எல்லாம் அவன் செத்த வயசில் இந்தப் பிரமை ஏற்படும்......கடைசியில் வெள்ளைக் களி மண்ணைத் தின்று உயிரை விடும்!—" என்றது மனசு!

"இதையும் நம்பவேண்டுமா?" என்றேன்.

"இது முழுப் பொய். கதை ரசமாக இருப்பதற்குச் சொன்னேன்......?"

"ஆக்கு......?"

"வெயிலாகிறதே, எழுந்திருங்கள்! சாப்பிடவாவது வேண்டாமா? என்ன பிரமாதமான யோஜனை?" என்றாள் என் மனைவி.

"ஒரு கதை!" என்றேன் நான்.

"உங்களுக்குச் சொல்ல இஷ்டமில்லா விட்டால், ஒரு கதையாக்கும்!" என்று சொல்லிக்கொண்டு, இலைகளைப் போட்டாள்.

"நிஜமாக!" என்றேன்.

"நாங்கள் நம்புகிறதிலெல்லாம் உங்களுக்கு நம்பிக்கையில்லை. பின் நாங்கள் எப்படி உங்களை நம்புவது?"

"நம்பவேண்டாமே!"

"இந்தப் புதுமாதிரிப் பேச்சு எனக்குப் புரியலே! வாருங்கள், நேரமாகிறது!" என்றாள் அவள்.

யாரும் சாப்பிடப் பின்வாங்குவார்களா இந்தத் தேசத்தில்!

வேதாளம் சொன்ன கதை

எனக்கு வேட்டையாடுவதிலே அபார பிரேமை. எனக்கு இந்தப் பழக்கம் வருவதற்குக் காரணமே காசித் தேவர்தான். அவர் பொதுவாக நல்ல மனுஷ்யர்; கொஞ்சம் சிலபுலன்களும் உண்டு. வருகிற கலெக்டர்களுக்கு எல்லாம் 'ஷிகாரி' உத்தியோகம் பார்த்துப் பல மெடல்கள் பெற்றவர். சமயா சமயங்களில், சில கலெக்டர்களுக்குப் புலிகளைச் சுட்டுக் கொடுத்து, புகழும் புலித்தோலும் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறார்.

எனக்கு வேட்டையில் பிரியம் பழக்க வாசனையில் பிறந்த தென்றாலும், மிளா, மான், முயல் இவைகளின் எல்லையைத்தான் எட்டியிருந்தது. ஏனென்றால், நமக்கு நிச்சயமாக இந்த ரகத்தில் அபாயம் கிடையாது அல்லவா?

அன்று நான் காசித் தேவரை அழைத்த பொழுது, தமக்குக் கோர்ட்டில் வேலையிருப்பதாகக் கூறிவிட்டார். அவருடைய துப்பாக்கியை வாங்கிக்கொண்டு, பழைய பாபநாசத்தை யடைந்தேன். ஏன் கலியாண தீர்த்தம் வரை சென்று வரலாகாது என்ற யோசனை தட்டியது.

முட் புதர் வழியாகவுள்ள குறுக்குப் பாதையாகச் சென்றேன். அப்பொழுது சித்திரை வெய்யில். குத்துச் செடிகளையும் முட் புதர்களையும் தாண்டி, உயர்ந்தமரங்கள் அடர்ந்த பாதைகள் வழியாக, சருகுகள் வழுக்கும் சமயம் துப்பாக்கிக் கட்டையை ஊன்றிக்கொண்டு, சென்றேன். கீழே திரும்பிப் பார்த்தால் பாறைகளும், கண் கூசும் கானலும்! உயர, எங்கோ இடைவெளி மூலமாகத் தூரத்துப் பொதிய மலைச் சிகரம் தெரியும். பஞ்சு மேகங்கள் சிகரத்தைத் தழுவியும் தழுவாமலும் நீலவானில் மிதந்தன.

போகும் பாதையில் வழி நெடுக, சில் வண்டுகளின் காதைத் துளைக்கும் ரீங்கார சப்தம். சமயா சமயங்களில், திடீரென்று பேசி வைத்தாற்போல் ஒலி நிற்கும். அந்த நிசப்தம்—மௌனம்—சிரமமற்று ஒன்றிலிருந்து ஒன்றில் தாவிச் செல்லும் சிந்தனை வண்டின் போக்கைச் 'சக்' கென்று விசை வைத்ததுபோல் நிறுத்திவிடும். அந்த ஒற்றை விநாடி அமைதியின் பயங்கரத்தை விவரிக்க முடியாது. அப்பொழுதுதான், சப்த கன்னிகைகள் பிரம்ம ராக்ஷஸுகள், இவற்றின் மீது நமக்கு இருக்கும் நம்பிக்கை நம்மைப் பன்மடங்கு கெட்டியாகப் பிடித்துக் கொள்ளும்.

நான் ஏதோ நினைத்துக்கொண்டு சென்றேன். எவ்வளவு தூரம் சென்றேனோ! இந்தச் சில்வண்டு ரீங்கார அமைதிதான், என்னைச் சட்டென்று நிறுத்தியது. எந்த இடத்திலோ வழி தவறியிருக்க வேண்டும். நான் நின்ற இடத்திற்கு இதுவரை நான் வந்ததில்லை. இருந்தாலும் அவ்வளவு இலகுவில் பாபநாசம் காடுகளில் நான் வழி தவறிவிடக் கூடியவனல்லன்; சிறு பிராயம் முதலே இப் பகுதிகளில் அலைந்து பழக்கம்.

'பார்ப்போம், குடி முழுகிவிடவில்லை!' என்று கையில் இருந்த கடிகாரத்தைப் பார்த்தேன். மணி பன்னிரண்டு. உச்சி நேரம். கடிகாரம் பசியை எழுப்பியது. தண்ணீரை யாவது குடித்துப் பசியாறலாம் என்று மேலும் கீழுமாகச் சுற்றிப் பார்த்தேன்.

நான் இருந்த இடத்திற்குக் கீழே, பாறைச் சரிவில் ஒரு சுனை; தூரத்துச் சூரியனின் பளபளப்பு அதில் ஒரு கணம் மின்னியது. அங்கு இறங்கித் தாகத்தைத் தீர்த்துக் கொண்டு, ஆகவேண்டிய காரியத்தைப் பார்க்கலாம் என்று நினைத்தேன்.

மலைச்சரிவில் நேரே செங்குத்தாக இறங்க வழியில்லை. சிறிது சுற்றி இரண்டு மைல் நடந்து அந்தச் சுனையருகில் வந்து சேர்ந்தேன். கோபுரம்போல் குவிந்து சரிந்த இரு பாறைகளுக்கிடையில் உள்ள ஒரு குகையில் சுனை. அதில் பெருக்கெடுக்கும் நீர் வழிந்து ஒரு சிறிய தடாகமாக முன் பக்கத்தை நிறைத்தது. தரை தெரியும்படியாக அவ்வளவு

தெளிவாக இருந்தாலும், குறைந்தது நாற்பதடி ஆழமாவது இருக்கும். உள்ளே சிறு மீன்களும், கறுப்புத் தவளைக் குஞ்சுகளும் பளிச் பளிச்சென்று மின்னி ஓடின.

பாறைச் சரிவில் நின்று இரு கைகளாலும் அள்ளி அள்ளித் தண்ணீரைக் குடித்தேன். அளவுக்கு மிஞ்சிக் குடித்ததினால் சிறிது சோர்வு. வலிக்கும் கால்களைத் தண்ணீரில் முழங்கால் அளவுக்கு விட்டுக்கொண்டு உட்கார்ந்து விட்டேன். அப்பா, என்ன சுகம்!

பழையபடி எந்த வழியாகத் திரும்புவது என்பது பெரிய பிரச்னையாயிற்று. உட்கார்ந்து சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே யோசித்தேன்.

சுனைக்குப் பக்கத்தில், பாறைச் சரிவில், ஓர் உயர்ந்த ஆலமரம். நான் அத்தனை நேரம் அதைக் கவனிக்கவில்லை. அதன் ஓர் உச்சி நான் சிறிது நேரத்திற்கு முன் நின்றிருந்த உயர்ந்த மேட்டை எட்டியது. 'எத்தனை வயதிருக்கும்? பழங்கால விருட்சம்!' என்று எண்ணமிட்டுக் கொண்டே அண்ணாந்து பார்த்தேன்.

அந்த ஓரத்து உச்சிக் கிளையில் என்ன தொங்கிக் கொண்டிருக்கிறது? பழந்தின்னி வௌவால்! நரித் தலையும், தோல் இறகுகளும் பிரம்மாண்டமாக இருக்கும். காசித் தேவர் இந்த ஜாதி வௌவால்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார் கிடைப்பதே அருமையாம்! மேலும் அவருக்குப் பிரியமான மாமிசமாம்.

'அதை ஒரு கை பார்ப்போமே!' என்று பாறையில் வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து, அதை நோக்கிக் குறி வைத்தேன்.

"அடேடே! சுட்டுவிடாதே! நில் நில்!" என்று, பயத்தில் பிளிறும் மனிதக் குரல் கேட்டுத் திடுக்கிட்டேன்.

"அடேடே! நில்! நான் வௌவாலில்லை! வேதாளம்! சுட்டுவிடாதேயப்பா, தயவு செய்து!" என்று மறுபடியும் கூவியது அக்குரல்.

என் கையிலிருந்த துப்பாக்கி நழுவிச் சுனையுள் விழுந்துவிட்டது.

வேதாளம் என்றால் யாருக்குத்தான் பயமிருக்காது? அதிலும் எனக்கு!

வேதாளப் பயத்தில், துப்பாக்கியையும் சுனைக்கு அர்ப்பணம் பண்ணியாகிவிட்டது. காசித் தேவருக்கு என்ன பதில் சொல்லுவது என்றுதான் புரியவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில், வேதாளம் ஒரு அந்தர் அடித்துச் சிறகை விரித்துப் பறந்து வந்து, எனக்கெதிரில் உட்கார்ந்துகொண்டது. அதன் பல்லும் முகமும், என்ன கோரம்! முதுகின்மேல், முதுகோடு முதுகாய், அது சிறிது முன் பறந்து வர உதவிய, தோல் சிறகு ஒட்டிக் கிடந்தது. தலை சுத்த வழுக்கை; கபால ஓரத்தில் இரண்டொரு நரைத்த சடைகள்; கைகால் விரல்களில் நாட்பட வளர்ந்து பழுப்பேறிய நகங்கள்.

அது பல்லைப் பல்லைக் காண்பித்துக்கொண்டு, என்னைப் பார்த்தவண்ணம், குரங்கு மாதிரிக் குந்தி உட்கார்ந்து கொண்டிருந்தது. அதன் ஆழமான கண்களில் கிணற்று ஜலம் மின்னுவது மாதிரி, அதன் கண்மணிகள் மின்னின.

கொஞ்சம் மரியாதையாகப் பேசி, தட்டிக் கழித்து விட்டு அதை ஒழித்துவிட வேண்டும் என்பதுதான் என் ஒரே ஆசை.

தட்டுக்கெட்டாற்போல, "நீர் ஏன் அப்படித் தலை கீழாகத் தொங்கிக் கொண்டிருந்தீர்?" என்று கொஞ்சம் மரியாதைப் பன்மையிலேயே விசாரித்தேன்.

"நான் வேதாளம்! நாங்கள் தலை கீழாகத்தான் தோங்கவேண்டும்!"

"வௌவால்களல்லவா அப்படித் தொங்க வேண்டும்?" என்றேன். நான் இதுவரையில் ஒரு வேதாளத்தையாவது நேரில் சந்தித்தது கிடையாதல்லவா!

"வௌவால்களும் அப்படித்தான் என்று சொல்லும். தலைகீழாகத் தொங்குவது எங்களது அசைக்க முடியாத

உரிமை. எங்கள் ஜீவனுள்ள மட்டிலும் அதற்காகப் போராடுவோம்!" என்று கொஞ்சம் ஆவேசத்துடன், தலையை ஆட்டிப் பேசியது, அந்த வேதாளம்.

அது தலையை ஆட்டிய வேகத்தில் அதன் கோரப் பற்கள் இரண்டும் கீழே விழுந்துவிட்டன. வேதாளம், அவற்றை உடனே எடுத்துச் சுனைத் தண்ணீரில் கழுவி விட்டு, மறுபடியும் ஈற்றில் ஒட்ட வைத்துக்கொண்டது.

இதைக் கண்டதும் எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. களுக்கென்று சிரித்துவிட்டேன்.

"ஏதேது! என்னைக் கண்டால் உமக்குப் பயம் தட்ட வில்லையா! ஜாக்கிரதை! மனிதர் எல்லாரும் என்னைக் கண்டால் பயப்பட வேண்டும் என்பது சம்பிரதாயம்!—நீர் மனிதர்தானே!" என்று கேட்டது.

இந்த வேதாளத்தின் விசித்திர சந்தேகங்கள், அதன் மீது எனக்கு அனுதாபத்தை உண்டுபண்ணின.

"உமக்கு நான் மனிதனா அல்லவா என்றுகூட ஏன் தெரியவில்லை? நான் மனிதன்தான்!" என்று சொன்னேன்.

"எனக்குப் பார்வை கொஞ்சம் மங்கல், அதனால்தான். பார்வை மங்கக் காரணம் என்ன தெரியுமா? நான் பிறந்ததே திரேதா யுகம்!" என்று தனது வயதை அறிவித்து விட்டு, "அதெல்லாம் அந்தக் காலத்திலே!—இந்தக் காலத்து மனுஷனுக்குத்தான் பயப்படக்கூடப் புத்தியும் இல்லை, திராணியும் இல்லையே!" என்று மனித வர்க்கத்தின் தற்போதைய பலவீனத்தைப் பற்றித் தன் அபிப்பிரா யத்தை எடுத்துக் காட்டியது.

"அட பாபமே!" என்று, நான் எனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டேன்.

"அந்தப் பாபத்தாலேதான், ஐயா, நான் சைவனானது! அந்தக் காலத்து மனுஷன் என்றால், எங்கள் ஜாதியைக் கண்டு பயப்படுவான், ரத்தத்தைக் கக்குவான்! இப்போது

தான் உங்களுக்குக் கக்குவதற்குக்கூட ரத்தம் இல்லையே! அதனாலேதான், அதோ இருக்கு பாரும், தேன் கூடு!— அதிலிருக்கும் தேனைச் சாப்பிட்டுக்கொண்டு, சென்ற ஒரு நூறு வருஷமாக ஜீவித்து வருகிறேன்!"

"தினை மாவும் கொஞ்சம் சேர்த்துக் கொள்ளக் கூடாதோ? உடம்புக்கு நல்லதாச்சே!" என்றேன்.

"இந்தக் காலத்திலே அது எங்கய்யா கிடைக்கிறது? முந்திக் காலத்திலேன்னு எல்லாரும் பயப்பட்டா, நாங்க நினைக்கிறதெ குடுத்தா. இந்தக் காலத்திலே, எதுக்கெடுத்தாலும் துட்டு இல்லாமல் காரியம் நடக்கமாட்டேன் என்கிறதே!" என்றது.

"நீர் பூர்வ ஜன்மத்தில்..."

"பூர்வாசிரமத்தில் என்று சொல்லுங்காணும்!" என்று இரைந்துகொண்டு என்னை அடிக்க வேகமாகக் கையை ஓங்கியது.

திடீரென்று ஓங்கியதால் அதன் கை 'மளுக்' என்ற சப்தத்துடன் சுளுக்கிக்கொண்டது. இந்தக் கிழ வேதாளத்தின் மீது நிஜமாகவே எனக்கு அன்பு தோன்றவும், அதன் கையைப் பிடித்து உதறிச் சுளுக்கைத் தடவி விட்டுக்கொண்டே, "வயசு காலத்திலே இப்படி உடம்பை அலட்டிக்கொள்ளலாமா? நீர் பூர்வாசிரமத்தில் பிராமணன் தானே! அப்படியானால் தர்ப்பணம், சிரார்த்தம் செய்து வைத்துப் பிழைக்கலாமே!" என்று ஆலோசனை சொன்னேன்.

"நீர் சொல்லுகிறதும் நல்ல யோசனைதான்; ஆனால் எனக்கு வாதமாச்சே! குளிர்ந்த ஜலத்தில் குளித்தால் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாதே! என்ன செய்யலாம்?"

"அப்படியானால் உடம்புக்கு ஏதாவது டானிக் வாங்கிச் சாப்பிட வேண்டும். உங்கள் வேதாள உலகத்தில் வைத்தியர்கள் கிடையாதா?"

"எங்களுக்குத்தான் சாவே கிடையாது என்று பிரம்மா எழுதி வைத்துவிட்டானே! அதனாலேதான் வைத்திய சாஸ்திரத்தை நாங்கள் கற்றுக்கொள்ளவில்லை!"

"சிட்டுக்குருவிலேகியம் சாப்பிடும்; உடம்புக்குநல்லது!"

"மறுபடியும் மறுபடியம் இப்படிச் சொல்லுகிறீரே! நான் சைவனுகித்தான் குடலே பலவீனமாகிவிட்டதே! வேறெ ஏதாவது மூலிகைச் சத்து இருந்தாச் சொல்லும்!"

"அப்படியானுல் ஜஸ்டிஸ் சோமேசத்திடம் கேட்டுச் சொல்லுகிறேன். எனக்கு நேரமும் ஆகிறது" என்று சொல்லி எழுந்தேன்.

"நான் வேண்டுமானுல் வழிகாண்பிக்கிறேன் வாரும்!" என்று எழுந்தது வேதாளம்.

"துப்பாக்கியை எடுக்கவேண்டுமே!" என்றேன்.

"உமக்கு ஞாபகப் பிசகு அதிகமோ! தண்ணீரில் கால் பட்டாலே எனக்கு வாத ஜுரம் கண்டுவிடுமே! இருந்தாலும் நீர் நல்லவராக இருக்கிறீர். உமக்காக—" என்று தண்ணீருக்குள் அந்தரடித்து, துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வந்தது.

கரையில் அதற்கு நிற்கக்கூடச் சக்தியில்லே. ஓட்டைப் பல்லும், கைகால்களும் வெடவெடென்று ஆடின. என் மேல் வேஷ்டியைக் கொடுத்துப் போர்த்திக்கொள்ளும்படி சொன்னேன்.

போகும் வழியில், "அந்தக் காலத்து வளமுறை எப்படி?" என்று பேச்சுக்கொடுத்தேன்.

முன்னே சென்ற வேதாளம், நின்று திரும்பி, "எனக்கு ராமன் கிருஷ்ணன் எல்லாரையும் தெரியும். அவாள்கூடப் பயந்துண்டுதான் இருந்தா. எனக்கு அவாளேச் சின்னப் பையனுக இருக்கும்போதே தெரியும். அவாள் எல்லாம் தைரியசாலிகள்தான். ராக்ஷஸன் என்றுல் தொம்சம் பண்ணிடுவாள். ஆனுல் எங்களேக் கண்டா எப்போதுமே நல்லதனமாப் பயப்படுவா. அந்தக் காலத்து மனுஷாள்தான் என்னங்கிறீர்? தைரியத்திலே அசகாய சூரர்கள்தான். ஆனுல், அவாளுக்கு மட்டு மரியாதை எல்லாம் தெரியும். முன்னேர்கள் சொன்னபடி, தெய்வம். பேய் பிசாசு, பூசாரி என்றுல் ஒழுங்காகப் பயப்படுவாள். உங்கள் சுந்தரமூர்த்தி நாயனுர்தான் என்ன, அவரைக்

கூட எத்தனை தரம் பயங்காட்டி யிருக்கேன் தெரியுமா? அந்தக் காலத்திலேதான் எங்களுக்கு முதல்லே பிடிச்சது வினை. எங்கேயோ வடக்கே இருந்து சமணன் என்றும், புத்தன் என்றும் கூட்டம் கூட்டமாக வந்தாள். அந்த முட்டாள் பயல்கள், 'கொல்லப்படாது! பாவம் ஜீவம்' என்று சொல்லி ஆட்களைத் தங்கள் கட்சிக்குத் திருப்பி விட்டார்கள். அந்தக் காலத்திலேயிருந்துதான், நம்ம பரமசிவன் முதற்கொண்டு எல்லாத் தேவாளும் சைவராகி விட்டார்கள். காலம் அவாளை அப்படி ஆட்டி வைத்தது. முன்னே திரிபுரத்தை எரித்தாரே, இந்தச் சிவன், இப்போ அவராலே அந்தக் குருவிக் கூட்டைக்கூட எரிக்க முடியாது!" என்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு சிறு முயல், அதன் காலில் இடறிப்பாய்ந்து, பக்கத்துப் புதரைப் பார்த்துத் தாவியது.

"ஐயோ!" என்று கூவிக்கொண்டு, வேதாளம் வந்து என்னைக் கட்டிப் பிடித்துக்கொண்டது.

ஓடியது ஒரு முயல்தான் என்று சொல்லி, அதன் பயத்தைத் தெளிவித்தேன்.

"நாங்கள் தலை கீழாகத் தொங்கித் தொங்கிக் கால்களெல்லாம் பிரயோஜனமில்லாமல் போய்விட்டன. இந்தத் தலைகீழ் ராஜ்யம் வந்ததும் அந்தச் சமணர்கள் காலத்தில் தான்!" என்றது.

"எப்படி?" என்றேன்.

"அவர்கள் எல்லாம் மரத்திலே உரியைக் கட்டி அதிலே உட்கார்ந்துகொண்டார்கள். ஜனங்களெல்லாரும் அந்தப் பக்கம் திரும்ப ஆரம்பிச்சா! நான்தான் அப்போ அதற்கு இந்த வழி பண்ணி, மறுபடியும் எங்களைப் பார்த்துப் பயப்படும்படி செஞ்சேன்!" என்று அது கொஞ்சம் பெருமையடித்துக்கொண்டது.

பேசிப் பேசி அதற்குள் பழைய பாபநாசத்திற்கு வந்துவிட்டோம்.

மண்டபத்தருகில் நின்ற ஒரு முருங்கை மரத்தைப் பார்த்ததும், எனக்கு ஒரு யோசனை தட்டியது.

"உமக்கு உச்சினிபுரத்து வேதாளத்தைத் தெரியுமா?"

"அந்த விக்கிரமாதித்தப் பயலைத் தூக்கிக்கொண்டு அலைந்தாரே, அவரா! அவர் என் அண்ணு பிள்ளை!"

"இதோ ஒரு முருங்கை மரம் இருக்கிறதே, இதில் ஏறி உட்கார்ந்துகொள்ளும்! நான் வேண்டுமானால் தினம் இங்கு வருகிறேன். உம்முடைய பழைய கதை எல்லாம் சொல்லுமே!" என்றேன்.

"ஓஹோ! அப்படியா சேதி? எங்க அண்ணு சுத்த அசடு. ஏமாந்து சொல்லிக்கொண்டு கிடந்தான். நான் சொல்லவேண்டுமானால் என்ன தெரியுமா? உமக்குக் கிடைக்கிற லாபத்தில் சரி பாதி எனக்குக் கொடுக்க வேண்டும். அப்படி ஸ்டாம்பு ஒட்டிப்பத்திரம் எழுதினால் தான் மேலே பேசலாம்!" என்றது.

"இப்பொ எல்லாம் புஸ்தக வியாபாரம் கொஞ்சம் மந்தம். நீர் அப்படி யெல்லாம் கேட்கக்கூடாது!"

"அப்படியானால் ஒரு கோவிலாவது கட்டிவையும்."

வேதாளப் பொருளாதார சாஸ்திரத்தில், கோவில் அவ்வளவு லேசாகக் கட்டிவிடலாம் என்றால், மனுஷ உலகத்தில் அப்படி இல்லையே! "பிறகு யோசித்துக் கொள்ளலாம்!" என்று நினைத்துக்கொண்டு எழுந்து, தவிடுள்ள அரிசி, 'விடமின் டி' எல்லாம் சேர்த்துச் சாப்பிட்டு உடம்பைத் தேற்றிக்கொள்ளும்படி அதற்கு ஆலோசனை கூறிவிட்டு காசித் தேவர் வீட்டை நோக்கி நடந்தேன். நான் எப்படிச் சத்தியம் செய்தாலும், அவர் என்னை நம்பப் போகிறாரா? எங்கோ படுத்துத் தூங்கினேன் என்றுதான் சொல்லுவார்.

நான் திரும்பிப் பார்க்கையில், அந்த வேதாளம் வௌவால் மாதிரிப் பறந்து சென்று, ஓரத்து மலைச் சரிவில் மறைந்துவிட்டது!

பிரம்ம ராக்ஷஸ்

நித்தியத்துவத்திற்கு ஆசைப்பட்டு, இடர்ப்பட்டு, அறிவுற்றவர்களின் கடைசி எச்சரிக்கையாக இருந்தது, அவன் கதை.

அவன் பொன்னை விரும்பவில்லை, பொருளை விரும்பவில்லை, போகத்தை விரும்பவில்லை. மனக் கோடியில் உருவம் பெறாது, வைகறை போல் எழும் ஆசை எண்ணங்களைத் துருவி யறியவே ஆசைப்பட்டான். மரணத்தால் முற்றுப்புள்ளி பெறாது, ஆராய்ச்சியின் நுனிக் கொழுந்து வளரவேண்டுமென்ற நினைப்பினால், அவன் ஏற்றுக் கொண்ட சிலுவை அது. அன்று முதல்,—ஆம், அது நடந்து வெகுகாலமாகிவிட்டது—இன்றுவரை, ஆசைகள் உந்த அறிவு அவனைக் கைவிட, மரணம் என்ற விழிப்பற்ற ஒரு சொப்பனாவஸ்தைபோல, மூலகாரணங்களாலும் நியதிகளாலும் ஏற்றுண்டு, ஜடத்திற்கும் அதற்கு வேறான பொருளுக்கும் உண்டான இடை வெளியில், அவன் அலைந்து திரிந்தான். ஆசை அவியவில்லை; ஆராய்ச்சி அவிந்து மடிந்து, நியதியை யிழந்து, விபரீதத்தில் தீவிர கதியில் சென்றது. அவன் இப்பொழுது வேண்டுவது, முன்பு விரும்பித் துருவிய இடைவெளி ஆராய்ச்சியன்று, சாதாரணமான மரணம். உடல் இருந்தால் அல்லவா மரணம் கிட்டும்! ஜடமற்ற இத் திரிசங்கு நிலையில் சமூகத்தில் அடிபட்டு நசுங்கியவர்கள் ஆசைப்படும் மோட்ச சாம்ராஜ்யம் போல, மரண லட்சியம் அவனுக்கு நெடுந் தூரமாயிற்று.

அவன் அப்பொழுது நின்ற இடம், அப்புறத்து அண்டமன்று; கிரக கோளங்கள் சுழலும் வெளியன்று; அது பூலோகந்தான். அவனுடைய வாசஸ்தலமாயிருந்த குகையின் பலிபீடத்தில் அவனுடைய ஆசையின் நிலைக்

களமான பழைய தேகம், துகள்களாகச் சிதைவுபட்டுக் கிடந்தது. ஜடத்திலே வெறும் ஆகர்ஷண சக்தி போல், சூட்சுமமான உருவற்ற கம்பி போல், பார்வைக்குத் தென் படாத ஒளி ரேகை போல், அவ்வுடல் அவனுக்குக் காட்சி யளித்துவந்தது. உலகத்தைப் பதனமாகப் பாதுகாக்க அமைந்த ஏழு சஞ்சி போன்ற லோகங்களிலே, எங்கு வேண்டுமானாலும் அவன் அலையலாம். ஆனால் அவற்றைத் தாண்டி இடை வெளியிலே செல்ல அவனுக்குச் சக்தி யில்லை, நியதியில்லை.

அவன் அப்பொழுது நின்ற இடம் ஜடத்தின் சூட்சும ரூபங்களான வாயுக்களும் செல்லக்கூடாத வெறும் சக்தி களை முட்டி மோதிச் சஞ்சரிக்கின்ற, உலக கோளத்தின் மிகவும் சூட்சுமமான ஏழாவது சஞ்சி.

அவ்விடத்திலே அவனுக்கு வெகு நேரம் நிற்க முடி யாது. ஆனால், சூட்சும உடலின் இயற்கையால், அடிக்கடி அங்கு உந்தித் தள்ளப்படுவான். சக்திகள், பிரளயம் போலக் கோஷித்து, உருண்டு புரண்டு, சிறிய வித்துப் போல் நடு மையத்தில் கிடக்கும் ஜடத்திற்கு உயிர் அணுக்களை மிகுந்த வேகத்தில் தள்ளும். அவ்விடத்திலே சக்தி அலைகள், நினைவு பிறந்து மடியும் கால எல்லைக்குள், இடைவழித் தேகத்தைக் குழப்பி நசுக்கும், புதிய சக்திகளை அவனது சூட்சும தேகத்தில் ஊட்டி உள்ளே பூமியை நோக்கித் தள்ளிவிடும். புதியசக்தி யூட்டப்பட்ட அவனது சரீரம், ஜட தாதுக்கள் பாசிபோல் உற்பத்தியாகி உரம் பெற்று, கீழ்நோக்கி யிறங்கும் இடைச் சஞ்சிகளில் நின்று செக்கச் செவேலென்று எங்கும் பரந்து, நினைவின் எல்லைக் கோடாகக் கிடக்கும் கிரககோளங்களின் வானப்பாதைகளை நோக்கும்.

அவனது உருவம் சூட்சும உருவம். அதாவது ஆசை யின் வடிவத்தை ஏற்கும் உருவம். அவன் தனது பழைய ஜீவியத்தில் எந்த அம்சத்தைப்பற்றி நினைக்கிறானோ, அச் சமயத்தில் முன் அவனது பூத உடல் பெற்றிருந்த வடிவத் தைச் சூட்சும தேகம் இப்பொழுது பெறும். பூதவுடலிலே பார்ப்பதும், கேட்பதும், உண்பதும், வெளிப்படுத்துவதும்

முதலிய காரியங்களைத் தனிப்பட்ட கருவிகள் செய்தன. இப்பொழுது அவனுக்கு உடல் முழுவதுமே வாய்.

அவன் பார்வைகள் வெளியே எட்டினாலும், ஆசைகள் பூமியை நோக்கி இழுத்தன. ஆசையின் ரேகைகள் அவனைப் பலிபீடத்தை நோக்கி யிழுத்தன!

அவன் அன்று பூதவுடலை நீங்கி வெளிப்பட்டதும், இவ்வுலகத்தைப் பாதுகாக்கும் ஏழு சஞ்சிகள் போல், உள்ளிருக்கும் வஸ்துவின் விடுதலைக்குத் தடையாக ஏழு இருப்பதையும் உணர்ந்தான். ஒன்றைக் கடந்தால் மற்ற ஆறையும் இறுகப் பிடித்தது போல் ஒன்ற வைத்து, ஏழையும் நீக்கிப் பாயவேண்டும். இப்பொழுது ஒன்றை விட்டுப் பிரிந்ததினால், போக்கின் படியாகக் கிடைக்கும் மரணத்தால் விழிப்பையும் இழந்து, சொப்பனவஸ்தை போன்ற இந்த இடை நிலையில் கட்டுப்பட வேண்டியதாயிற்று.

ஆசைகள் மெதுவாக மரணத்தை நோக்கித் திரும்பின. பழைய நிலைகள், படிப்படியாகப் பரிணமித்து, அவனையே விழுங்கிப் பூமியை நோக்கித் தள்ளின.

பலி பீடத்தில் வந்து வீழ்ந்தான். அவனே பிரம்ம ராக்ஷஸ்!

II

குறிஞ்சிப்பாடியில் பக்கத்திலே சூரங்காடு பெரிய மலைப் பிரதேசம். காலத் தேவனின் தங்கைகள் போன்ற பாறைகள் இயற்கையின் செழிப்பான கானகம் என்ற அந்தப்புரத்திலே, மறைந்து கிடந்தன.

சூரங்காடு மனிதர்கள் பலத்துக்கு நிலைக்களமாக விளங்குவது. அங்கே இருப்பது என்னவென்று ஒருவருக்கும் தெரியாது.

குறிஞ்சிப்பாடியின் சமூகத்தின் திவலை ஒன்று, எப்பொழுதோ நெடுங்காலத்திற்கு முன்பு, அதில் சென்றது -

திரும்பவில்லை; குறிஞ்சிப்பாடியினர் பிறகு அத்திசையில் செல்வதில்லை.

சூரங்காட்டில் கொடிய மிருகங்கள் கிடையா. விஷக் கிருமிகள் கிடையா. அதுரிசப்தமும், இயற்கைத் தேவியும் கலக்குமிடமாம். சப்த கன்னிகைகள் திரிவார்களாம். மனிதர்கள் போனால் திரும்ப மாட்டார்கள். இது குறிஞ்சிப் பாடியினரின் எழுதாக் கிளவி.

இந்த வேத வித்திற்குக் குறிஞ்சிப்பாடியில் தோன் றும் மகான்கள் அடிக்கடி பாஷ்யம் விரித்து அதை ஒரு பெரும் சமுதாயக் கட்டுப்பாடாக்கினர்.

அக்காலத்திலே, குறிஞ்சிப்பாடியின் சமூகத்திலே தோன்றி, அதன்வளர்ச்சிக்கும் பிரபலத்திற்கும் பாடுபட்ட வன் நன்னய பட்டன் என்ற வாலிபன்.

குறிஞ்சிப்பாடியில் குறுகிய ஆசைகளைப் பலப்படுத்தி வளர்ப்பதே அவனுக்கு ஒரு மகத்தான சேவையாகப் பட் டது. போரிலே மரணத்தை நேருக்கு நேராகப் பார்த்த வன். குறிஞ்சிப்பாடிச் சமூகத்தின் விஷப் பூச்சிகளைச் சித்திரவதைசெய்து, மரணக் கதவை மெதுவாகத் திறந்து, அதன் உளைச்சலிலே பயத்தைப் போக்கியவன். அவனுக்கு மரணம் பயத்தைத் தரவில்லை.

விதியின் விசித்திர கதிக்கு அளவுகோல் உண்டா? நன்னய பட்டனுக்கு மரணத்தின் பயத்தை அறிவிக்க மூல சக்திகள் நினைத்தன போலும்.

அவன் மனைவி பெண் குழந்தையைப் பெற்றுக் கொடுத்து அந்த உளைப்பிலே உயிர் நீத்தாள்.

அன்று, நன்னய பட்டன், மரணத்திற்கு எத்தனையோ ரூபங்கள் உண்டு என்று அறிந்தான்.

அதற்கப்புறம் மூன்று வருஷங்கள், வெங்காயச் சருகு போல் உதிர்ந்துவிட்டன. அந்த மூன்று வருஷங்களும், நன்னய பட்டனுக்கு, சமூகத்தின் குறுகிய கால அளவு கோலைக் கடந்து வேறு உலகத்தில் யாத்திரை செய்வதா யிருந்தன. அவன் சக்திகளின் பௌருஷத்தின் எல்லையை நாடினன்.

ஒரு நாள், அந்தி மயங்கும் சமயம், குறிஞ்சிப்பாடி இருவரை இழந்தது. காலம் என்ற அரங்கில் சரித்திரம் மீண்டும் ஒருமுறை பழையபடி நடித்தது.

நன்னய பட்டன் திசையறியாமல் சென்றான். பசியறியாமல் சென்றான். கைக்குழந்தையின்—மூன்று வயதுக் குழந்தையின்—சிறு தேவைகள், அவனுக்குப் பூத உடம்பின் தேவைகளை இடித்துக் கூறும் அளவுகோலாயின. அதன் பசியைச் சாந்தி செய்யும் பொறுப்பு இல்லாவிட்டால், அவனிடம் பசியின் ஆதிக்கம் தலைகாட்டி யிராது.

அவன் அன்று ஆசைப்பட்டது எல்லாம் மரணத்தினின்றும் தப்புவதற்கு வழி.

ஏன் மரணத்தினின்றும் தப்ப வேண்டுமென்று அவனிடம் யாராவது கேட்டிருந்தால், அவனால் காரணம் கூறியிருக்க முடியாது. ஆனால், பயம் என்று ஒப்புக்கொண்டிருக்கமாட்டான். மரணத்தை வெல்வதே—காலத்தின் போக்கைத் தடை செய்வதே—ஆண்மை என்று பதில் சொல்லியிருப்பான். பேதை! மரணம் என்பது இல்லாவிடில் நரகம் என்பது எப்படித் தெரியும்?

அப்பொழுது அவனது சிறு மனம், குறிஞ்சிப்பாடிக்கு மேல் விரிந்து, அகில லோகத்தையும் கட்டி ஆள்வதற்கான மூல சக்திகளின் சூட்சுமக் கயிற்றைக் கைக்குள் அடக்க வேண்டும் என்ற அறிவு கெட்ட ஆசையால் கட்டுண்டது.

இருண்டு நெடு நேரமாகியும் நடந்துகொண்டே யிருந்தான். கையில் குழந்தை, ஆசையற்று, ஆனால் ஆசையின் வித்துக்களான தேவையில் மட்டும் நிலைக்கும் மன நிலையில் கட்டுண்டு, நித்தியத்துவத்திற்கும், மரணப் பாதையின் சுழலுக்கும் மத்தியிலுள்ள பிளவுக் கோட்டின் எல்லை வெளியான இடைவெளியில் நின்று உறங்கியது.

குறிஞ்சிப்பாடியின் வேதம் பொய்யாகும் நிலையை நன்னயபட்டன் நிதரிசனமாகக் கண்டான்.

நெடுநேரம் நடந்த களைப்பு, இருளின் கருவைப் போன்ற ஒரு குகை வாயிலில் சிறிது உட்கார வைத்தது.

உறக்கத்தை அறியாத கண்கள் குகைக்குள் துருவின.

அந்தக் குகைதான் பிரம்மராக்ஷஸாகத் தவிக்கும் ஒரு பழைய மனிதனுடைய ஆசையின் பயங்கரமான பலி பீடம்.

வெகு காலமாக அப்பாதையிலே யாரும் வரவில்லை.

மனித தைரியத்தின் உச்ச ஸ்தானமாக இருந்த அந்தக் குகையின் வாசலில், நன்னய பட்டன் உட்கார்ந்ததும், குழந்தை வீரிட்டு அலறத் தொடங்கியது. குழந்தையைத் தேற்றிப் பார்த்தான்; எவ்வளவோ தந்திரங்களைச் செய்து பார்த்தான். குழந்தையின் அலறல் நிற்கவில்லை.

அதைத் தோளில் சாத்திக்கொண்டு, முதுகைத் தட்டிக்கொடுத்த வண்ணம் எழுந்து உலாவி அங்குமிங்குமாக நடக்கத் தொடங்கினான். குகையின் வாசலை விட்டு அகன்று செல்லும்பொழுது, குழந்தையின் அழுகை படிப் படியாக ஓய்ந்தது. ஆனால், திரும்பிக் குகையை அணுகியதுதான் தாமதம்; குழந்தையின் குரல் உச்ச ஸ்தாயியை எட்டியது.

இரண்டு மூன்று முறை இப்படிப் பரீட்சித்த பிறகு, இந்த அதிசயமான செயல், குகையில் என்ன இருக்கிறது என்று பார்க்க அவனுள் ஆசையை எழுப்பியது.

மரத்தடியில் சற்று நேரம் இருந்து குழந்தையை உறங்க வைத்துவிட்டு, எழுந்து குகையை நோக்கி நடக்கலானான்.

காற்றற்று, அசைவில்லாது நிற்கும் மரங்களிடையே, ஒரு துயரம் பொதிந்த பெருமூச்சு எழுந்தது.

சற்று நின்று, சுற்றுமுற்றும் கவனித்தான். அவனைத் தவிர வேறு யார் இருக்கப் போகிறார்கள்?

குகை வாயிலின் பக்கம் போனதும், தேக மாத்யந்தமும் காரணமற்றுக் குலுங்கியது. மயிர்க்கால்கள் திடீரென்று குளிர்ந்த காற்றை ஏற்றதுபோல் விரைத்து நின்றன.

நன்னய பட்டன் உள்ளத்தில், இயற்கைக்கு மாறான இக்குறிகளினால் ஆச்சரியம் தோன்றியது.

குகை வாயிலைக் கடந்து உள்ளே சென்று, அவன் இருள் திரையில் மறைந்தான்.

உள்ளே சென்றதும் நன்னய பட்டனுக்குப் புதிய சக்தி பிறந்தது. என்றுமில்லாதபடி, அவன் மூளை, தீவிரமாக, விவரிக்க முடியாத எண்ணங்களில் விழுந்து, அவற்றைத் தாங்கச் சக்தியற்று, புயலில் அகப்பட்ட சிறு படகு போலத் தத்தளிக்கிறது. நெஞ்சுறுதி என்ற சுங்கான், மனத்தின் அறிவு கெட்ட வேகத்தைக் கட்டு மீறிப் போகாது காத்ததினால், நிரந்தரமான பைத்தியம் பிடிக்காது தப்பினான்.

இருட்டிலே, இருட்டின் நடு மையம் போல், ஏதோ ஒன்று தெரிந்தது. சிறிது சிறிதாக, மனித உருவம்போல் வடிவெடுத்தது. பின்னர் இருளில் மங்கியது. இதைப் பார்த்த வண்ணமாகவே யிருந்தான் நன்னய பட்டன். அதைத் தவிர மற்ற யாவும் மறந்து போயின.

அதைப் பார்த்துக் கொண்டிருக்க இருக்க, இரத்தத்திற்குப் பதிலாக வேறு ஏதோ ஒரு புதிய திரவப்பொருள் புரண்டு புரண்டு ஓடுவதுபோல், சிறு வலியுடன் கூடிய இன்பத்தைக் கொடுத்தது.

மனத்திலே, குகை மறைந்து, வேறு ஓர் உலகம் தென்பட்டது. ஜடத்திலே தோன்றாத விபரீதமான பிராண சக்திகள், பேரலை வீசி எல்லையற்ற சமுத்திரம் போல் கோஷித்தன. அந்தச் சக்திக் கடலின் திசை முகட்டிலே ஒளிச் சர்ப்பங்கள் விளையாடித் திரிந்தன. இதன் ஒலி தானா, அந்தக் கோர கர்ஜனைகள்!

நன்னய பட்டனின் பார்வை மங்கியது. மேகப் படலம் போல் ஏதோ ஒன்று கண்களை மறைத்தது. இருட்டையும் நிசப்தத்தையும் தவிர, அவன் இந்திரியங்கள் வேறொன்றையும் உணரவில்லை.

எத்தனை காலம் கழிந்ததோ, அவனுக்கு உணர்வில்லை. மந்திரத்தால் கட்டுண்டு, பின்னர் அதிலிருந்து விலகிய சர்ப்பம்போல் எழுந்து நடந்தான். கால்கள் தள்ளாடின. குகையின் வெளியில் வருவதற்குள் அவனுக்குப் பெரிய பாடாகி விட்டது.

இவ்வளவும் ஒரு விநாடியில் நடந்தேறியது என்று சொன்னால் நன்னய பட்டன் நம்பமாட்டான். அவன் குழந்தையின் பக்கம் வந்து தரையிலே சோர்ந்து படுத்தான். மனிதனது பலவீன மெல்லாம் இயற்கைத் தாயின் மடியிலே ஒருங்கே தஞ்சம் புகுந்ததுபோல, ஆசை வித்தின் ஆரம்ப வடிவமான குழந்தையின் பக்கத்தில் கிடந்தான்.

கானகத்திலும் இருள் மயங்கி மடிய, வைகறை பிறந்தது. குகைக்கு மேல் முகட்டுச் சரிவில் நின்ற மாமரக் கொம்பின் கொழுந்துகளில் பொன் முலாம் பூசப்பட்டிருந்தது.

நன்னய பட்டன் எழுந்தான்.

அவனுக்கு முன்பே குழந்தை எழுந்து தவழ்ந்து விளையாடிக்கொண்டிருந்தது.

சூரங்காட்டிலே பசி தீர்த்துக்கொள்ள என்று நெடுந்தூரம் அலைய வேண்டியதில்லை. மா, பலா முதலியவை சாதாரணமாக வளர்ந்து கிடக்கும். பாறைக் குடைவுகளிலே குளிர்ந்த சுனை யூற்றுக்களும் ஏராளம்.

III

ஆசை அவனை மறுபடியும் குகைக்குள் இழுத்தது. குழந்தையை மரத்தடியில் வைத்து விட்டு, உள்ளே சென்றான்.

குகையில் இருள் திரண்ட ஓரத்திலே கருங்கற் படுக்கை போன்ற ஒரு பாறை, சுற்றிலும், யாரோ ரசவாதியொருவன், எப்பொழுதோ அங்கிருந்து ஆராய்ச்சி நடத்தியதுபோல், மட்பாண்டங்களும் குடுவைகளும், ஓரத்திலே வரிசையாக அடுக்கப்பட்டும், உறி கட்டித் தொங்கவிடப்பட்டும் கிடந்தன.

இவ்வாறு அடுக்கடுக்காய்க் கிடந்த மனித வாசத்தின் அறிகுறிகளுக்கிடையில் ஒரு பொருள் அவன் கவனத்தை இழுத்தது.

அந்தக் கருங்கற் பாறைப் படுக்கையிலே ஒரு எலும்புக் கூடு கிடந்தது!

நன்னய பட்டன் பயம் என்பதை அறியாதவன். மரணத்தையும், பச்சை ரத்தப் பிரவாகத்தோடு வெளியே தெரியும் மண்டையோடுகளையும், அவன் கண்டு அஞ்சிய வனல்லன். ஆனால், அவனுக்கு அதை நெருங்க நெருங்க, முந்திய நாள் இரவு இருட்டிலே குகைக்குள் நுழைந்த சமயம் ஏற்பட்ட, விவரிக்க முடியாத, உள்ளத்தை விறைத்துப் போகச் செய்யும், உணர்ச்சிகள் தோன்ற லாயின. ஆனால் அவன் ஒன்றையும் பொருட்படுத்தாது நெருங்கினான்.

அப்பொழுது குகையின் எந்த இடைவெளியி லிருந்தோ ஒரு சிறு சூரிய கிரணம் வந்து, எலும்புக் கூட்டின் வலக் கண் குழியில் விழுந்தது. நன்னய பட்டன் முன்னால் ஓர் அடி யெடுத்துவைக்க முடியாது, கட்டுண்ட சர்ப்பம் போல நின்று, வெளிச்சம் விழுந்த மண்டை யோட்டில் இருக்கும் கண் குழியை நோக்கினான். அதில் ஒரு புழு நெளிவதுபோலத் தோன்றியது.

அது புழுவா? அன்று.

ஒரு சிறிய கருவண்டு, மெதுவாக வெளியேறி, ஒளி ஏணியில் ஏறிச் செல்வது போல், சிறகை விரித்து ரீங்கார மிட்டவண்ணம் பறந்து சென்று, முகட்டிலிருந்த இடை வெளியில் மறைந்தது.

மறைந்ததுதான் தாமதம்!—அந்தத் துவாரத்திற்கு வெளியே அண்ட கோளமே இற்று விழும்படியாகக் காதைச் செவிடாக்கும் இடிச் சிரிப்பு! அது அந்த அமைதியின் நிலையமான சூரங்காட்டையே ஒரு குலுக்குக் குலுக்கியது.

நன்னய பட்டன் உடல் வியர்த்தது. அவனது பூத வுடல் கட்டுக்கடங்காது நடுங்கியது; ஆனால், கண்கள் மட்டிலும் பயப்பிராந்தியில் அறிவை இழக்கவில்லை. அசாதாரண விவகாரத்தில் தூண்டப்பட்டு, உண்மையை அறியத் தாவுகிறது என்பதை உணர்த்தும் பாவனையில்,

எலும்புக் கூடு கிடக்கும் இடத்தையும், வண்டு மறைந்த திசையையும் ஒருங்கே கவனித்தான்.

வெடிபடச் செய்த சிரிப்பு மங்கியதும் சூரிய கிரணம் மறைந்தது. அசாதாரணமான அமைதி பிறந்தது.

நன்னய பட்டன் குகையைச் சுற்றிப் பார்க்கத் தொடங்கினன்.

கற்பாறைப் படுக்கைக்கு மறு பக்கம் குகையின் ஒரு சுவர். அதன்மேல் இருளிலும் தெரியக்கூடிய ஒளித் திராவகத்தால் சிவப்பாக எழுதப்பட்டதுபோன்ற யந்திரம். அதன் ஒரு பாகத்தில் தாமரைப் பூ ஒன்று செதுக்கப்பட்டிருந்தது. தாமரை மலரின் இதழ்கள் எலும்புக் கூட்டின் மார்பகத்துக்கு நேராக இரண்டடி உயரத்தில் சுவரின் மேல் இருந்தன.

கற் பலகையில், எலும்புக் கூட்டிற்கும் சுவருக்கும் உள்ள ஒரு சிறு இடை வெளியில், சுவரில் இருப்பதைப் போலவே யந்திரம் செதுக்கப்பட்டு, அதன் மையத்திலும் ஒரு செந்தாமரைப் புஷ்பம் செதுக்கப்பட்டிருந்தது. கற் பலகையில் வரையப்பட்ட யந்திரம் இருளில் பொன்னிறமாக மின்னியது. தாமரை மலர் வெண்மையான பளிங்கினல் செய்து பொருத்தப்பட்டது போல் இருந்தது.

நன்னய பட்டன் அதன்மீது கையை வைத்துத் தடவிப் பார்த்தான். அது தனியாகச் செதுக்கிப் பாறையில் பொருத்தப்படாத விசித்திரமாக இருந்தது. அது எப்படி அமைக்கப்பட்டது?

எலும்புக் கூடு ஆறடி நீளம். உயிருடன் இருந்த பொழுது அம்மனிதன் ராக்ஷஸன் போல இருந்திருக்க வேண்டும் என்பதில் சந்தேகம் இல்லை.

இவ்வாறு நினைத்துக்கொள்ளவே, நன்னய பட்டன் வேறு பக்கமாகத் தலையை நிமிர்த்தி நோக்கினன்.

என்ன ஆச்சரியம்!

ஒரு பிரம்மாண்டமான முதலை வாயைத் திறந்து கொண்டு அந்தரத்தில் தொங்கியது.

இருட்டில் தோன்றும் மயக்கமா?

இல்லை! இல்லை!

இரண்டு சரடுகள் விளையங்கள் போல் உயரே யிருந்து தொங்கவிடப்பட்டு, அவற்றின் ஊடே இம்முதலை புகுத் தப்பட்டு, உயரத்தில் தொங்கிக்கொண்டிருந்தது.

இருட்டின் கூற்றால் முதலில் சரடு தொங்குவது தெரியவில்லை நன்னய பட்டனுக்கு.

மெதுவாக அதை யணுகினான். இருட்டில் கால் இடறியது. ஜோதியாக ஒரு திரவ பதார்த்தம் உருண்ட பானையிலிருந்து வழிந்தோடியது. அதன் பளபளப்பு, கருங்கல் தளத்தைத் தங்க மெருகிட்டதுமல்லாது, குகையையே சிறிது பிரகாசமடையச் செய்தது.

லாகவமாகப் பலிபீடத்தின்மீது ஒரு காலை வைத்து ஏறி நின்று, அவன் முதலையின் வாயை நோக்கினான். கண் கள் ஒளி வீசின; வாய் கத்தியால் வெட்டி வைத்த சதைக் கூறுபோல் தெரிந்தது. ஆனால் அதன்மீது சலனம் இல்லை, உயிர் இல்லை.

முதலையின் திறந்த வாயில் ஓலைச் சுவடிகள் போல் கட்டுக் கட்டாக என்னவோ இருந்தன.

நன்னய பட்டன் அவற்றை யெடுத்தான்.

ஓலைச் சுவடிகள் போலில்லாமல், அவை மிகவும் கன மாக இருந்தன.

அவற்றை அப்படியே சுமந்துகொண்டு குகைக்கு வெளியே வந்தான்.

அச்சமயத்தில்தான் நன்னய பட்டனுக்குப் 'பூலோகத் தில் இருக்கிறோம்' என்ற உணர்வு ஏற்பட்டது. அத்தனை நேரம், ஜன்னி கண்ட நிலையில், உள்ளுக்குள் போராடும் பயத்தை அமுக்கி, அந்தக் குகை இரகசியங்களைத் துருவிக் கொண்டிருந்தான்.

குழந்தை, ஒரு மர நிழலில் தவழ்ந்து விளையாடிக் கொண்டு, சிறிது தூரத்தில் இரை பொறுக்கும் மைனா வைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தது.

நன்னய பட்டனுக்கு சுயப் பிரக்ஞையாக—அதாவது ஓடித் திரியும் எண்ணக் கோணல்களிலிருந்து யதார்த்த உலகத்திற்குக் கொண்டுவரும் ஒரு துருவ நட்சத்திரமாக —அக் குழந்தை இருந்தது.

அதைத் தூக்கி வைத்துக்கொண்டு கையிலிருந்த ஓலைச் சுவடியை அவிழ்த்தான். வெளிச்சத்தில் பிடித்து, ஏடு ஏடாக வாசித்தான்.

முதலில் அவனது கவனம் அந்தச் சுவடிகளின் விசித்திரமான குணத்திலேயே தங்கியது. அப்பொழுதுதான் கருக்கிலிருந்து நறுக்கித் திருத்தப்பட்ட பனை ஓலை மாதிரியே காணப்பட்டது. இளம் பச்சைகூட மாறவில்லை. ஓலையில் ஓடும் மெல்லிய நரம்புகள் கூட வெள்ளையாகத் தென்பட்டன. ஆனால் ஓலைதான் உலோகம் போல் கெட்டியாகவும் கனமாகவும் இருந்தது. அதில் எழுத்துப் பள்ளங்களில் சிறிது பளபளப்பு இருந்தது.

இதென்ன விசித்திரமான ஓலை என்பது பிடிபடாமல், உள்ளிருக்கும் வாசகத்தை உரக்கப் படிக்க ஆரம்பித்தான்:

"...........காலத்தின் கதியைத் தடை செய்யும் உண்மையைக் கண்டுபிடித்துவிட்டேன். ஆமாம், அது மட்டிலுமா? வெறும் ஜடத்தை, மூலப் பிரகிருதிகளை, பிராண பக்திகொண்டு துடிக்கும் உயிர்க் கோளங்களாக மாற்றுந் திறமை படைத்துவிட்டேன். நான்தான் பிரம்மா! சேதன அசேதனங்கள் எல்லாம் எனது அறமே! நானே நான்! நான் நானே......"

இவ்வாறு சில ஏடுகள், முழுதும் தறிகெட்ட மூளையின் ஓட்டம் போல், வார்த்தைக் குப்பையால் நிறைக்கப் பட்டிருந்தன. நன்னய பட்டனுக்கு இந்தக் கொந்தளித்துச் செல்லும் லிபிகளின் அர்த்தம் புரியவில்லை. மூளை சுழன்றது!

பின்னர்:

"இவ்வளவு தூரம் உனக்குப் பொறுமையிருக்கிறதா! இனிமேல் என் இரகசியத்தைக் கேள்!"

"பிரபஞ்ச ரகசியத்தை அறிய எங்கெல்லாம் சென்றேன் தெரியுமா? மிசிர தேசம் வரை. அக புராணம் வழி காட்டியது! செமிராமிஸ், காலத்தின் கதியை நிறுத்தும் வித்தையைக் கற்பித்தான். உண்மையில் ஒரு படி அது! அதற்கு மேல் எத்தனை! மூளை குழம்பாது நீ என்னுடன் வருவாயா? அப்படியானால்......குகைக்குள் மூலையில் தொங்குகிறதே முதலைக்கூடு, அது ஒடிந்து மண்ணாகி மண்ணுடன் சேராதாடி செய்தவன் அவன்தான். அதை இப்பொழுதும் உயிருடன் எழுந்து நடமாடச் செய்யலாம். அதை யார் அறிவித்தான் என்று உனக்குச் சொல்ல வேண்டுமா? அதைத்தான் சொல்ல மாட்டேன். அது உனக்குத் தெரியலாகாது.

"வேண்டுமானால் உண்மையைப் பரிசோதித்துப் பார்.

"மூலையில் நீ கொட்டிவிட்டாயே அந்த ஜீவ ரசம், அதை ஒரு துளி எடுத்து, உன் இரத்தத்தில் கலந்து, அதன் மூக்கில் பிடி! அப்புறம் பார்!

"எனது எலும்புக்கூட்டிற்கு உடலளித்துப் பின்னர் என் உயிரை அதில் பெய்யவேண்டும். அப்பொழுதுதான் நான் உனக்கு இரகசியங்களை விளக்கமாகச் சொல்ல முடியும்...—"

இவ்வாறு வாசித்துக்கொண்டிருந்த நன்னய பட்டனுக்குக் கண் பிதுங்குவது போலிருந்தது. என்ன! ஓலை வெறும் ஓலை. அதிலிருந்த ஓர் எழுத்தைக்கூடக் காணவில்லை. அவ்வளவும் மறைந்து, வெறும் தகடுகளாக மங்கி மறையும் சூரிய ஒளியில் சுவடிகள் மின்னின.

வாசித்ததெல்லாம் உண்மையா அல்லது வெறும் சித்தப் பிரமையா?

அவன் சொன்னதைப் பரீட்சித்துப் பார்த்தால்? நன்னய பட்டன் மறுபடியும் குகையினுள் சென்றான்.

குகையிலிருந்த சூரிக் கத்தியால் விரலில் சிறிது நறுக்கி இரத்த மெடுத்து, மின்னிக்கொண்டிருந்த ஜீவ ரசத்தில் கலந்தான். குகை முழுதிலும் சுகமான ஒரு பரிமள கந்தம்பரவியது. அவனுடைய உடலையும் உள்ளத்தையும் மோகலாகிரியில் தள்ளியது.

மெதுவாக முதலைக்கூட்டை எடுத்துக் கீழே வைத்து, அதன் மூக்கில் இந்த வாசனைக் கலவையைப் பிடித்தான்.

சிறிது நேரம் ஒன்றும் நிகழவில்லை. பின்னர், ஒளியிழந்து நீங்கி ஒரே நிலையில் நின்ற முதலையின் கண்களில் சிறிது பச்சை ஒளி வீசியது. மெதுவாக அதன் உடல் அசைந்தது. திறந்தபடியே இருந்த வாய் மெதுவாக மூடியது. முதலை அவனை நோக்கி நகர ஆரம்பித்துவிட்டது!

அதே சமயம் 'களுக்' என்ற ஒரு பெண்ணின் சிரிப்பு. ஏறிட்டுப் பார்த்தான் நன்னய பட்டன். எதிரே குகை வாயிலில் தவழுந் தனது குழந்தையின் முன்னால், அழகின் வரம்பைச் சிதற அடித்து, பிறந்த மேனியில் நிற்கும் ஒரு பெண் உருவம், குழந்தையை நோக்கிச் சிரித்த வண்ணம் நின்றது! என்ன அழகு! அப்பெண்ணின் நீண்டு சுருண்ட கறுத்த தலைமயிர், இரு வகிடாக அவளது உடலழகை அப்படியே முழங்கால் வரை மறைத்தது. நன்னய பட்டன் ஸ்தம்பித்து அவளையே நோக்கிய வண்ணம் நின்றான். வைத்த கண் எடுக்க முடியாதபடி அப்படியே நின்றான்.

"பயப்படாமல் அவள் திரும்பும்பொழுது கவனி! பின்பு உன் வேலை!" என்றது அவன் காதருகில் ஒரு குரல். அதற்கு என்ன கம்பீரம், என்ன அதிகாரத் தோரணை!

அப்பெண்ணோ, நெடு நேரம் குழந்தையையே நோக்கி நின்று சிரித்துக்கொண்டிருந்தாள். குழந்தையைத் தன்னிடம் வரும்படி சமிக்ஞை செய்தாள். குழந்தை அசையவில்லை. நெடுநேரம் முயன்றும் குழந்தை அசையவில்லை. மெதுவாக அவள் குழந்தையை ஏறிட்டுப் பார்த்த வண்ணமே, பின்னிட்டு நடந்துவந்தாள். அப்பொழுதும் குழந்தை அசையவில்லை... ஆனால் குழந்தையின் உடல் அவ்விடத்திலேயே கட்டுண்டு கிடப்பதுபோல் பட்டது நன்னய பட்டனுக்கு! ஏனென்றால், அப்படித் தவித்தது குழந்தை அவ்வுருவத்தினிடம் செல்ல! பின்னுகவே அடியெடுத்து வைத்துச் சென்ற அப்பெண்ணுருவத்தின் முகத்தில் சடக்கென்று ஒரு மாறுதல் ஏற்பட்டது. கோபம் தணலாகத் தீப்பொறி பறக்க, முகம் கோரமாகச்

சுருங்கி நிமிர்ந்தது. மேலுதட்டின் அடியிலிருந்து புறப் பட்டன இரண்டு மெல்லிய கோரப் பற்கள்!

மின்வெட்டுப் போல் திரும்பியது அவ்வுருவம். அவ்வளவுதான்! என்ன கோரம்! பின்புறம் முழுவதும் வெறும் எலும்புக் கூடு! மண்டையோட்டின் கீழ்ப் பாகத்திலிருந்து தொங்கியது ஒரு சிறு சடை!

நன்னய பட்டன்! நன்னய பட்டனு அவன்? அவன் முகமும் உடலும் ஏன் இக்கோர உருப்பெற்றுவிட்டன! கையில் நீண்ட நகம், தேகத்தில் சடைமயிர், வாயில் வச்சிர தந்தம், உதடுகள் நெஞ்சுவரை தொங்குகின்றன!

பேய்ப்பாய்ச்சலில் சென்று, மறையும் ஒரு பெண்ணுரு வின் சடையைப் பிடித்துத்திரும்பி, குகையுள் மறைந்தான். வெளியே என்ன ஆச்சரியம்! குமுறும் இடியும் மின்னலும் எங்கிருந்தோ வந்து கவிந்தன.

குகைக்குள்ளே பேயுருவத்தில் நடமாடுகிறான் நன்னய பட்டன்.

பலிபீடத்தின் மீது இருக்கும் எலும்புக் கூட்டின் உட் கலசங்களில் சுருண்டு உலர்ந்திருந்த குடல், ஈரல், இருதயம் இவற்றை எடுத்து வைத்துக் களிமண்ணால் சேர்த்துப் பிணித்துக் கொண்டிருக்கிறான். வெளியே மழையற்று, மின்னல்கள், பிரபஞ்சத்தின் கேலிச் சிரிப்பைப்போல் கெக் கலித்துக்கொண்டிருக்கின்றன.

அந்த உருவத்தின் தலைமாட்டில் குழந்தை சுய அறிவு இழந்ததுபோல், பிரக்ஞையற்று, விழித்த கண் திறந்தபடி உட்கார்த்தி வைக்கப்பட்டிருக்கிறது.

நன்னய பட்டன் அதன் இதயத்துடன் பெண் உரு விடமிருந்து பிடுங்கிய சடையைக் கட்டி, அதன் மற்றொரு மூலையை உருவத்தின் நாபியில் சேர்க்கிறான்.

அவனது நாக்கு மட்டிலும் சாதாரணமாகத் தொங்கு கிறது.

மெதுவாகப் பலிபீடத்தின் தாமரைக் குமிழ்களில் செப்புக் கம்பிகளைப் பின்னி, அவற்றைப் பலிபீடத்தின் மீது வைத்து வளர்த்தப்பட்டிருக்கும் உருவத்தின் கை,

கால், தலை இவற்றுடன் சுற்றி, குகைக்கு வெளியே கொண்டுவந்து ஓர் உயரமான மேட்டில் ஈசான திக்கு நோக்கிய யந்திரம்போல வளைத்துப் பதிக்கிறான்.

"உம்! உஷார்! ஜீவரசத்தைக் கண்களில் தடவு!" என்றது ஒரு குரல்.

நன்னய பட்டன் அவ்வாறே தடவினான்.

"கிட்ட நிற்காதே! விலகி நில்!" என்றது குரல்.

"சட்டச் சடசடா!" என்று ஆரம்பித்துப் புரண்டு வெடித்தது ஒரு பேரிடி.

மின்னல வீச்சு, கம்பிகள் வழியாகப் பாய்ந்து, குகை முழுவதும் ஒரே பிரகாசமாக்கிக் கண்ணைப் பறித்தது.

"தொட்டுப் பார்!" என்றது அக்குரல் மறுபடியும்.

நன்னய பட்டன் அணுகினான்.

பலிபீடத்தின் மீதிருந்த உருவத்தைத் தொட்டான்!

என்ன ஆச்சரியம்! வெறும் களிமண் சதைக் கோளமாக மாறிவிட்டது!

"அதன் நாபியிலும் இதயத்திலும் ஜீவரசத்தைத் தடவு!"

நன்னய பட்டன் அப்படியே செய்தான்.

மறுபடியும் ஏற்பட்டது மின்னலும் இடியும்.

"உணர்வு ஏற்பட்டுவிட்டது. தொட்டுப் பார்! இதயம் அடித்துக்கொள்ளும் இனி உயிர்தான் பாக்கி! குழந்தையை அதன் முகத்தில் படுக்கவை!"

நன்னய பட்டன் அப்படியே செய்தான். இதற்குள் அவனது கோர உருவத்தில் செம்பாதி மறைந்து விட்டது.

"முதலில் அந்த மூலையில் இருக்கும் மருந்தைக் கையில் தடவி, உருவத்தின் கைகளை உன் இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டு, முதலையின் முதுகில் நில்! ஒரு கையை எடுத்தால் உன் உயிர் போவது நிச்சயம். ஜீவரசத்தை எடுத்து இருவர் மீதும் கொட்டிவிட்டு, நான் சொன்னதுபோல் செய்!" என்றது அக்குரல்.

நன்னய பட்டன், யந்திரம் போல, அவற்றைச் செய்து முடித்தான்.

" உருவத்தின் கண்களையே பார்! வேறு பக்கம் திரும்பாதே !"

மறுபடியும் இடி இடிக்க ஆரம்பித்தது! கோர இடி சமுத்திர அலை போல் தனது உள்ளுணர்வைத் தாக்கி உடலில் தாங்கொணு வேகத்தில் புரளுவதை அறிந்தான். உருவத்தின் மீது வைத்த கண் மாறவில்லை. உருவத்தின் கண்கள் மெதுவாக அசைகின்றன. அதன் நெற்றியில் சிறு வியர்வை துளிர்க்கிறது. கண்கள் மெதுவாகத் திறக்கின்றன.

அச்சமயம் 'களுக்' கென்று பெண்ணின் சிரிப்புக் குரல்.

மறுபடியும் அதே உருவமா! பார்க்கவேண்டுமென்ற ஆசை மறுபடியும் அதன் உருவப் பிரமையில் சென்று லயித்தது. மெதுவாகக் கண்ணைத் திருப்பினுன்.

அப் பேயுருவம் மெதுவாகப் பலிபீடத்தை அணுகிச் சடையை எடுக்க முயன்றது. கட்டளையை மறந்து அதைத் தட்டக் கையெடுத்தான்!

"எடுக்காதே!" என்ற அதிகாரத் தொனியுள்ள குரல்! உருகிய பிழம்புகள் பாதங்கள் வழியாக இதயத்தை நோக்கிப் பாய்வது போல, ஒரு சிறு வினடி நினைத்தான். அவ்வளவுதான்—

மற்ருெரு பேரிடி! நீட்டின கையை மடக்க முடியவில்லை.

ஒரு கணத்தில் மூன்று எலும்புக் கூடுகள் தான் பலி பீடத்தின் மீது கிடந்தன.

ஏக்கமான பெருமூச்சு, குகையினின்று வெளிப்பட்டு வான வெளியில் மறைந்தது.

இன்னும் எத்தனை காலம்!......

வாழ்க்கை!

அம்பா சமுத்திரத்திற்கும் பாபநாசத்திற்கும் இடையிலுள்ள ரஸ்தா எப்பொழுதும் ஜன நடமாட்டத்திற்குப் பெயர் போனதல்ல. ஆனால், சொறிமுத்தையன் கோயில் விழாவன்று வேண்டுமானால், வட்டியும் முதலுமாக, ஜனங்கள் அந்த வழியில் நடந்து தீர்த்து விடுவார்கள். சில சமயம் பாபநாசம் நெசவாலை மோட்டார் லாரி, காதைப் பிய்க்கும்படியாகப் புழுதியை வாரி இறைத்துக்கொண்டு, கோலாகலமான ஓட்டை இரும்புக் கோஷத்துடன் செல்லும். மலை விறகு வண்டிகள் லொடக் லொடக் என்று, அல்லது சக்கரத்தின் பக்கத்தில் வண்டி சரிவில் வேகமாக உருண்டு விடாதபடி கட்டும் கட்டையை வண்டிக்காரன் அவிழ்க்க மறந்துவிட்டிருந்தால், 'கிரீச்' என்ற நாதத்துடன், தூங்கி வழிந்துகொண்டு சாரை சாரையாகச் செல்லும். வண்டிக்காரர்களும், வண்டிமாடுகளும், சமதளத்தில் இறங்கி விட்டால், எதிரிலோ பின்னே என்ன வருகிறது என்று கவனியாது, தூங்கி வழிந்துகொண்டு செல்ல இச் சாலையில் பூரண உரிமை யுண்டு. சாலையில் இரண்டு பக்கங்களில் இருக்கும் மரங்களின் சம்பிரமத்திற்குக்கேட்க வேண்டியதில்லை. எதிரே காணப்படும் மலைகளைக் கூடப் பார்க்க முடியாத குறுகிய பார்வையுடையவனானால் அடிமை நாட்டினர் மாதிரி பவ்வியமாக அடங்கி ஒடுங்கி வளர்ந்திருக்கும் மரங்களைப் பார்த்தால், போகும் வழி ஒரு நாளும் மலைப் பிரதேசத்தை அடையாது என்று எந்தக் கோவிலிலும் சத்தியம் செய்யத் தயாராக இருப்பான். விக்கிரமசிங்கபுரம் தாண்டிய பிறகுதான், நாணிக் குழைந்து வளர்ந்த இந்த மரங்கள், தங்கள் குலப் பெருமைகளைக் காட்ட ஆரம்பிக்கின்றன.

அன்று அவ்வளவு மோசமான வெய்யில் இல்லை. மலைச் சிகரத்தின் இரு பக்கங்களிலும் கவிந்திருந்த கறுப்பு

மேகங்களில் மறைந்து, அதற்குச் சிவப்பும், பொன்னு மான ஜரிகைக் கறையிட்ட சூரியன், கீழ்த் திசையில் மிதக்கும் பஞ்சு மேகங்களில் தனது பல வர்ணக் கனவு களைக் காண்பிக்க ஆரம்பித்துவிட்டான். பொதியை, பெரிய ரிஷிக் கிழவர் மாதிரி, கருநீலமும் வெண்மையும் கலந்து கறையேற்றிய மஞ்சுத் தாடிகளை அடிக்கடி ரூபம் மாற்றிக்கொண்டு, பார்ப்பவனின் மனத்தில் சொல்ல முடியாத அமைதி, துன்பக் கலப்பில்லாத சோகம், இவற்றை எழுப்பியது. பக்கத்தில், அதாவது இரு சிகரங் களுக்கும் ஊடே தெரியும் வான வெளியில் அக்னிக் கரை யிட்ட கறுப்பு மேகங்கள் அதற்குத் துணை புரிந்தன என்று சொல்லலாம். சக்தி பூஜைக்காரனுக்கு, சிவனும் சக்தியும் மாதிரி இக்காட்சி தோன்றியிருக்கும்.

விக்கிரமசிங்கபுரத்திற்கு இரண்டாவது மைலில், மலையை நோக்கி, அதாவது, பாபநாசத்தை நோக்கி, ஒரு வன் நடந்துகொண்டிருந்தான். நாற்பது வயது இருக்கும். இடையிடையே நரையோடிய தூசி படிந்த கறுப்புத்தாடி. அகன்ற நெற்றியின்மீது சிறிது வழுக்கை விட்டு, இரண்டு பக்கமும் கோதாமல் வளர்ந்து பின்னிய தலை மயிர், உச்சி யில் சிறிது வழுக்கையைக் காண்பித்து, கழுத்தை நன்றாக மறைத்தது. மூக்கு நீண்டிருந்தாலும் வாலிபத்தின் பிடிப்பு விட்டதினால், சிறிது தொங்கி மீசையில் மறைந் தது. கீழுதடு மட்டிலும் மீசைக்கு வெளியே தெரிந்தது. வாயின் இருபுறத்திலும் மூக்கிலிருந்து ஆரம்பித்து தாடி யில் மறையும் கோடுகள். அடிக்கடி நினைத்து நினைத்து நெஞ்சை யலட்டிக் கொள்வதனால் சுருக்கல் விழுந்து கண் ணின்மீது தொங்கும் புருவங்கள். உடல் திடகாத்திரமான தன்று; ஆனால் நாடோடியாக அலைந்து மரத்துப் போன தேகம். கிழிந்த சட்டையும் ஓரங்களில் முழங்கால் தடுக்கிய தால் கரைகள் கிழிந்த வேஷ்டியும் உடுத்தியிருந்தான். கைகளும் கண்களும் அவன் வயிற்றிற்காகத் திரியும் நாடோடியல்ல என்பதைக் காண்பித்தன. கையிலே ஒரு தடி, தோள் பட்டையில் ஒரு மூட்டை—அதில் ஒரு செம்பும் புஸ்தகமும் துருத்திக்கொண்டிருந்தன—அதன் மேல் ஒரு கம்பளி.

கண்களில், அடிக்கடி ஏதோ ஒருபெரிய ஏமாற்றத்தை ஒவ்வொரு நிமிஷமும் அனுபவிப்பவன் போல், ஒரு பிரகாசம்; அதனுடன் கலந்து. ஒரு பரிதாபகரமான, தோற்றவனின் சிரிப்பு. கண்கள் அவன் செல்லும் திக்கை நோக்காது வானிலும் மலையிலும்; ஒன்றையும் பற்ருது சலித்துக் கொண்டிருந்தன. கால்கள் நெடுந்தூரம் நடந்தாற்போல் ஒவ்வொரு நிமிஷமும் குழலாடின.

மூட்டையை எடுத்து மரத்தடியில் வைத்து, பக்கத்தில் தடியைச் சாத்திவிட்டு உட்கார்ந்து, முழங்காலையும் குதிரைச் சதையையும் 'தடவிக்கொண்டு, அப்பாடா!' என்று சாய்ந்துகொண்டான். இனி அந்த இடந்தான் வீடு. மூட்டையைப் பரப்பினுல் தட்டுமுட்டு சாமான்கள். இரவைக் கழிப்பதற்கு வேண்டிய சாப்பாட்டு வகைகள்! அங்கேயே உட்கார்ந்துகொண்டால் தண்ணீருக்கு எங்கே போவது? நாடோடிக்கு ஒன்றும் புரியவில்லை. கால் சொல்வதைக் கேட்டால் அன்றிரவு பட்டினி இருக்கவேண்டியதுதான். சீ, என்ன கஷ்டம்!

ஏதாவது அற்புதம் ஒன்று நடந்து, தான் நினைத்த இடத்திற்குப் போய்விடக் கூடாதா என்று அவன் மனக் குரங்கிற்குச் சிறிது ஆசை எழுந்தது. உதட்டில் ஒரு சிரிப்புடன் காலைத் தடவிக்கொண்டு, வேஷ்டியில் ஒட்டியிருந்த ஒரு சிறு வண்டைத் தட்டினுன்.

அப்பொழுது, அவன் வந்த திக்கிலிருந்து, 'ஜல்! ஜல்!' என்று சலங்கைகள் ஒலிக்க, தடதடவென்று ஓர் இரட்டை மாட்டு வண்டி வந்துகொண்டிருந்தது. வண்டிக்காரன் மாடுகளை 'தை! தை!" என்று விரட்டி, 'தங்கம் தில்லாலே' என்று பாடிக்கொண்டு வாலை முறுக்கினுன். வண்டி காலி. இல்லாவிட்டால் பாடிக்கொண்டு போக அவனுக்கு அவ்வளவு தைரியமா?

"ஓய், வண்டிக்காரரே! எவ்வளவு தூரம்? நானும் ஏறிக்கொள்ளட்டுமா?" என்ருன் சாலையில் உட்கார்ந்திருந்த நாடோடி.

"வண்டியா! பாவநாசத்துக்கு. வேணுமாஞ பெறத்தாலே ஏறிக்கிரும்!" என்ருன் வண்டிக்காரன்.

நாடோடியின் வாழ்க்கையில் முதல் முதலாக அவன் எதிர்பார்த்தபடி சம்பவிக்கும் ஓர் அற்புதம் நிகழ்ந்தது.

"நீர் எங்கே போராப்பிலே! பாவநாசத்துக்கா?" என்ருன் வண்டிக்காரன்.

"ஆமாம்! யாரு வண்டி!"

"இந்தக் காட்டுலே பண்ணையெ எசமான் வண்டி தெரியாத ஆளுவளும் உண்டுமா! கல்லடக்குறிச்சி பெரிய அய்யரு வண்டி. பழைய பாவநாசத்துலே, பட்டணத்திலே யிருந்து அய்யமாரும் அம்மாமாரும் ஊரு பாக்க வந்திருக் காங்க! கூட சாமியாரும் வந்திருக்காரு. அவுங்க எல்லாம் சீசப் புள்ளெங்க. அவரைப் பார்த்தால் சாமியாரு மாதி ரியே காங்கலே. பட்டும் சரிகையுமாத்தான் கட்டராரு கூட வந்திருக்காளுவளே, கிளிங்கதான்!" என்று அடுக்கிக் கொண்டே போனுன் வண்டிக்காரன்.

இதென்ன வேஷம் என்று ஆச்சரியப்பட்டான் நாடோடி. வண்டியின் ஒரு மூலையில் கிடந்த தியாசபி புஸ்தகங்கள் வந்திருப்பவர் யார் என்று விளக்கிவிட்டன. மனத்தின் குறுகுறுப்புச் சாந்தியானதும் வண்டிக்காரனின் பேச்சில் லயிக்கவில்லை.

'ஊச்' சென்று கொண்டு மனத்தை வெளியில் பறக்க விட்டான் நாடோடி. அது, கூடு திரும்பும் பட்சிபோல, பழைய நினைவுக் குப்பைகளில் விழுந்தது.

இன்று இந்த வண்டியில் ஏறியதுதான், இந்த நாற்பது நாற்பத்தைந்து வருஷங்களில், முதல் முதலாக அவன் விரும்பி நிறைவேறிய ஆசை.

"ஆசை! அதற்கும் மனிதன் சொல்லிக் கொள்ளும் லட்சியம் என்பதற்கும் வெட்கமே கிடையாது. இலட்சியத்தால் நடக்கிறதாம், நீதியால் நடக்கிறதாம், தர்மத்தால், காதலால் வாழ்க்கை நடக்கிறதாம்! உண்மையில் இதில் ஏதாவது அர்த்தமிருக்கிறதா? வாழ்க்கையில் ஒன்றுதான் நிஜமானது, அர்த்தமுள்ளது. அதுதான் மரணம். காதல், வெறும் மிருக இச்சை, பூர்த்தியாகாத மனப்பிராந்தியில் ஏற்பட்ட போதை. நானும் சுகம் அனுபவித்தாச்சு. என்ன

தான் பேசினாலும், இதற்குமேல் ஒன்றும் கிடையாது. அதற்கப்புறம் சமூகம். அன்றைக்கு அந்தப் பயல் ஜட்ஜ் மென்ட் சொன்ன மாதிரிதான்...பெரிய மீன் சின்ன மீனைத் தின்னலாம். ஆனால் சின்ன மீன் அதற்கும் சின்ன மீனைத் தின்றால், பெரிய மீன், 'குற்றம் செய்கிறாய்!' என்று தண்டிக்க வருகிறது. இதுதான் சமூகம்! இந்த அசட்டு மனிதக் கூட்டத்தின் பிச்சைக்காரத்தனம்... புனிதமாக ஏதாவது ஒன்று இருக்கிறதா? இந்தப் பால் காரன் விற்கிற பாலுக்கும், உலகத்தின் நன்மைக்கும் வித்தியாசமில்லை. நாமாக நினைத்துக் கொண்டால் நன்மை தான். பின் ஏன் இந்தப் பித்தலாட்டமான இலட்சியங் களை அறிந்துகொள்ள வேண்டும்! அதனால்தானே இந்த ஏமாற்றம், தொந்தரவு மிருகம் மாதிரி இருந்து தொலைத் தால் என்ன கெட்டுப் போகிறதோ? அசட்டுச் சமூகத்திற் கேற்ற அசட்டுப் பித்தலாட்டங்கள். இதில் 'நான் சொல்வதுதான் சரி' என்ற கட்சி. லோகத்தை மாற்றி யமைக்கப் போராளாம்...அதுவுந்தான் விடிய விடிய நடக்கிறதே..."

"பெரியவரே, இங்கேயே எறங்கிக்கிடும்! அய்யரு கண்டா கட்டிவச்சு அடிப்பாரு...நீங்க எந்தூரு?" என்றான் வண்டிக்காரன்.

"இந்தா, பலகாரம் வாங்கிச் சாப்பிடு!" என்று ஓரணா வைக் கொடுத்து விட்டு, இறங்கிக் கோவிலுக்குள் செல் லும் வழியில் பக்கத்திலிருந்த இட்டிலிக் கடையில்— அதற்கு 'ஓட்டல்' என்று பெயர்—நுழைந்து, கைகால் கழுவிவிட்டு முகத்தைத் துடைத்தான் நாடோடி.

அப்பொழுது நன்றாக அந்தி மயங்கி விளக்கேற்றப் பட்டுவிட்டது.

"கோவிலிலே கட்டி வாங்க நேரஞ் செல்லுமா?" என்றான் நாடோடி.

"ஆமாம், பூசையாயித்தானே! எட்டு மணி ஆகும்!"

"அப்போ ஒரு அணாவுக்கு இட்டிலி இலையில் கட்டிக் கொடு!" என்று வாங்கிக்கொண்டு, பழைய பாபநாசத் திற்குப் போகும் பாதையில் இருக்கும் மண்டபத்தை நோக்கி நடந்தான்.

மண்டபத்தில் அவன் எதிர்பார்த்தபடி நிம்மதியில்லை. பண்ணை அய்யர் 'தியாசபி' (பிரம்மஞான) கோஷ்டிக்கு விருந்து நடத்தும்பொழுது அங்கு அமைதி எப்படி இருக்க முடியும்! சமயம், அரசியல் முதல், நேற்றுச் செய்த சமையல்வரை சம்பாஷணையில் அடிபடுகிறது.

"வாழ்க்கையின் இணைப்பையும், சமயத்தின் சாரத்தையும் அறிவிப்பதுதான் தியாசபி, ஸார்!" என்றது ஒரு குரல்.

"நேற்று ஸ்நானம் செய்யரப்போ, மிஸ்டர் கிருஷ்ணன் இதைக் கேளுங்களேன்! ஒரு மான் குட்டி முண்டந் துறையிலே துள்ளித்தே, நீங்க பார்த்தியளா?" என்றது ஒரு பெண் குரல்.

ஆங்கிலத்தில், "நம் கூட்டத்தில் மான்களுக்குக் குறைச்சலில்லை!" என்றது ஒரு கரடிக் குரல். உடனே கொல்லென்ற சிரிப்பு.

"பேசாமலிருங்கள், சுவாமிஜீ பேசப் போகிறார்!"

நாடோடி, படித்துறையில் இட்டிலியை வைத்து விட்டு, கால் முகம் கழுவ ஜலத்தில் இறங்கினான். அப்பா, என்ன சுகம்! மெய்ம்மறந்தபடி கல்லில் உட்கார்ந்து காலைத் தண்ணீரில் விட்டுத் துழாவிக்கொண்டே யிருந்தான்.

"நமது வாழ்க்கையிலே, அசட்டுத்தனத்திற்காகப் போராடுவது, மிருகத்தனத்திற்காகச் சச்சரவு செய்வது இயற்கை..." என்ற சுவாமிஜீயின் குரல் கம்பீரமாக எழுந்தது.

நாடோடி இலை முடிப்பை அவிழ்த்தான்.

"சாமி, பசியா இருக்குது! ஒரு இட்டிலி..." என்ற குழந்தைக் குரல் ஒன்று அவன் பக்கத்தில் கேட்டது.

இருட்டில் ஒன்றும் தெரியவில்லை. இருட்டோடு இருட்டாகப் பாறையின் பக்கத்தில் நின்றது ஒரு சிறு குளுவ ஜாதிக் குழந்தை.

"எங்கே! இங்கேயா நிக்கிறே! இந்தா! உங்கப்பன் எங்கே! இருட்டிலே எப்படி வந்தே...?"

அப்பொழுதும் சுவாமிஜீ பிரசங்கம் நடக்கிறது.

"அப்பன் அதோ இக்குராரு..." என்றது சிசுக்குரல். பிறக்கும் போதே பிச்சையா!

"...ஆனல் உயர்ந்த ஆதர்சங்களுக்காக, மனித வர்க்கத்தின் இலட்சியங்களுக்காக, எத்தனை போர்கள்! எத்தனை சச்சரவுகள்! உண்மைக்குக் குணம் ஒன்றுதான்! அதையடையும் பாதைகள் பல...அதை யறியாத மனித நாகரிகம், அதற்குப் பிரசாரத்தைத் தொடங்கியது. நாங்கள் கூறுவது ஒன்றுதான். பேதங்கள் தோல் ஆளமுள்ளவை, இன்பம் ஒன்றுதான். இதன் சோலையும், அழகுமே கலியுக அவதார புருஷன் கிருஷ்ணஜீ..."

"இவன் கண்டான் பெரிசா!" என்று ஓர் இட்டிலியை விண்டு வாயினுள் போட்டான் நாடோடி.

மெதுவாக வீசிக்கொண்டிருந்த காற்று, திடீரென்று அதிகப்பட்டு, பெரும் பெரும் தூற்றலுடன் வீச ஆரம்பித்தது.

நாடோடி மூட்டையைத் தூக்கிக்கொண்டு ஒரு மரத்தின் நிழலுக்கு ஓடினன். அதில்தான் குளுவக் குடும்பத்தின் வாசம். குளுவச்சி மழை அதிகரிக்கிறது என்று மண்டபத்தை நோக்கி ஓடினள்.

"சீ, மூதேவி! எங்கே ஏறுறே! ஆள் இருக்கிறது தெரியலே! போ!" என்று ஒரு பெண் குரல் சீறியது.

மழை சொஞ்சம் பலந்தான். குளுவனுடைய சின்னக் குழந்தை மழை பெய்கிறது என்று கத்த ஆரம்பித்து விட்டது.

"ஓய்! ஜக்கம்மா! மந்தரம் போடறேன் பார்! பாப்பா, மளெ நிக்குது! ஏ! மளெ நிக்கலே! எங்க பாப்பாத்தி அளுவுரா! ஜல்! மந்திரக்காளி! ஜூ! மந்திரக் காளி!" என்று குழந்தைக்கு வேடிக்கை காட்டிக்கொண்டிருந்தான் குளுவன். குழந்தை இவன் பேச்சில் லயித்துச் சிரித்தது.

விழுந்து விழுந்து சிரித்துக்கொண்டு ஓடிவரும் குளுவச்சியைப் பார்த்து, "வேணுண்டி உனக்கு! ஓதைக்கிலே!" என்ருன் குளுவன்.

"நம்ம எடத்தை அவங்க புடிச்சுக்கிட்டாங்க இன்னிக்கி! உனக்கென்னடா குளுவா, நீ சொரணை கெட்டவன்..."

இருவரும் மழையின் உற்சாகத்தில் சண்டை போட ஆரம்பித்துவிட்டார்கள்.

நாடோடிக்கு இது விநோதமாக இருந்தது. இருக்க இடமில்லை இந்த மழையில். இதில் என்ன உற்சாகம்! வாழ்க்கையே இந்த அசட்டுத்தனந்தான், அல்லது ஏமாற்றந்தான்.

மழை விட்டு மரங்களிலிருந்து மட்டும் ஜலம் சொட்டிக் கொண்டிருந்தது. மேற்புறத்திலிருந்து வெளி வந்த சந்திரன், புதிதாக ஸ்நானம் செய்து எழுந்த பிரகிருதி தேவியின் மீது காதற் பார்வை செலுத்தினான்.

"ஏய் குளுவா! அங்கென பாருடா!" என்று இரண்டு உருவத்தைச் சுட்டிக் காண்பித்து, குசுகுசுவென்று சொன்னாள் குளுவச்சி.

"அதுவுஞ் சரிதான்!" என்று குளுவன் அவளைத் தன் பக்கமாக இழுத்தான். குளுவச்சிக்கு என்ன பலமில்லையா!

ஆனால், அந்த நாடோடி, ஒன்றிலும் லயிக்காது, துயரந்தேங்கிய முகத்துடன், மலைப் பாதையில் நடந்து மறைந்தான். அவன் கண்கள் ஒரு தடவையாவது திரும்பிப் பார்க்கவில்லை. சாலையின் இருளும் அவன் உருவமும் ஒன்றாயின.

தெரு விளக்கு

தெருக் கோடியிலே, அந்த மூலை திரும்பும் இடத்தில் ஒரு முனிசிபல் விளக்கு.

தனிமையாக, ஏகாங்கியாகத் தனது மங்கிய வெளிச்சத்தைப் பரப்ப முயன்று வாழ்ந்து வந்தது.

இளமை, மூப்பு, சாக்காடு என்பவை மனிதருக்கு மட்டும் உரிமையில்லை. எனவே, தெரு விளக்கிற்கும் இப்பொழுது மூப்புப் பருவம்.

நிற்கும் கல்—உடம்பு சிறிது சாய்ந்து விட்டது. சிரத்தில் இருந்த கண்ணாடிச் சில் ஒரு பக்கம் உடைந்து விட்டது. அந்தச் சிறுவன் விளையாட்டாகக் கல்லை எறிந்த பொழுது விளக்கின் கஷ்டத்தை நினைத்தானா?

காற்று அடித்தால் உயிரை ஒரே யடியாகவாவது போக்கிவிடுகிறதா? குற்றுயிராய்த் துடிக்கத் துடிக்க வைத்து அதைக் கொல்லுகிறதே!

கொஞ்சமாவது மங்கிய வெளிச்சத்தைக் கொடுக்கிறதென்று இந்தக் காற்றிற்கு நன்றி இருக்கிறதா?

போய்விட்டது! பிறகு மழையில் அதன் குளிரை யார் கவனிக்கிறார்கள்?

அது காற்றிற்குத் தெரியுமா?

இனிமேல் விளக்கு அந்தப் பக்கத்திற்கு வேண்டாமாம்! அதை எடுத்துவிட வேண்டுமாம்!

அதற்கு ஒரு தோழன்—ஒரு கிழவன்.

ஒத்த வயதில்தானே நட்பு ஏற்படும். இதில் என்ன அதிசயம்!

விளக்கிற்குக் கிழவன்.

கிழவனுக்கு விளக்கு.

விளக்கை எடுத்துவிடப் போகிறார்கள் என்று கிழவனுக்குத் தெரியாது.

அவனுக்கு எப்படித் தெரியும்?

அவன் வயிற்றுக்குப் பிச்சை எடுக்க வேண்டாமா?

வயிற்றுக்கில்லாமல் உயிர் வாழ முடியுமா?

தெரு விளக்கு அவன் தோழன்தான். அதன் வெளிச்சம் அவனுக்கு எவ்வளவு மன நிம்மதியை அளித்தது!

அன்று சாயங்காலம் வந்தான்.

வெறும் குழி ஒன்றுதான் இருந்தது.

இருள்! இருள்!

பற்றுக்கோலை யாரோ தட்டிப் பிடுங்கிக் கொண்ட குருடனின் நிலை!

அன்று அவனுக்கு உலகம் சூனியமாய், பாழ் வெளியாய், அர்த்தமற்றதாய் இருந்தது.

சாந்தி?

அது எங்கிருந்து வரும்!

உடைந்த தெரு விளக்குத்தான்! ஆனால், கொஞ்சமாவது அவனைத் தேற்றி வந்ததே!

வெளிச்சமில்லா விட்டாலும், ஸ்பரிசித்துப் பார்த்து ஆறுதலடைய வெறுங் கல்லாவது இருந்ததே?

மறுநாள் காலை, ஒரு கிழவனின் சவம் அங்கு கிடந்ததைக் கண்டார்கள்.

* * *

இப்பொழுது ஒரு புது விளக்கு!

மின்சார விளக்கு!

அதன் கீழே குழந்தைகள் உற்சாகமாக விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்குப் பழைய விளக்கையும் பழைய கிழவனை யும் பற்றிக் கவலை என்ன?

ஒரு காலத்தில் இவர்களும் அப்படித்தான் ஆவார்கள்! அதற்கென்ன?

எங்கும், எப்பொழுதும் அப்படித்தான்.

பழையன கழியும், புதியன வரும்.

இது உலக இயற்கையாம்!

கவந்தனும் காமனும்

ஒரு நகரத்திலே...

இரவு மணி எட்டு அல்லது ஒன்பது இருக்கலாம். நாகரிகத்தின் உச்சியைக் காணவேண்டும் என்ருல், அந்த நகரத்தை, ஏன்—எந்தப் பட்டணத்தையும், இரவில்தான் பார்க்கவேண்டும்.

நீங்கள் இரவு எட்டு மணிக்குமேல் சென்னை மா நகரில் சுற்றிப் பார்த்திருக்கிறீர்களா? சுற்றியிருந்தால் நான் கீழே சொல்லும் விஷயம் உங்களுக்குப் பிரமிப்பை உண்டாக்காது.

கண்ணைப் பறிக்கும் விளக்குகள், உள்ளத்தைப் பறிக்கும் நாகரிகம்!

மனிதனின் உயர்வையும், உடையையும் ஒரே காட்சியில் காண்பிக்கும் நாகரிகச் சின்னங்கள்!

இது கலியுகமல்ல, விளம்பர யுகம் என்பதற்குப் பொருள் தெரியவேண்டுமாளுல், இந்த நகரத்தின் இரவைக் காணவேண்டும். இந்தக் கூட்டங்கள்!—ஏன் இவ்வளவு அவசரம்? இதுதான் நாகரிகத்தின் அடிப்படையான தத்துவம்—போட்டி, வேகம்!

டிராம் வண்டிகளின் 'கண கண'வென்ற ஓலம். ஒரு வேளை இது நாகரிக யக்ஷனின் வெற்றிச் சிரிப்போ என்னவோ?

பெண்களின் பல் வரிசைக்கு முத்துக் கோத்தாற் போல் என்கிருர்கள். இந்த வரிசையான மின்சார விளக்குகளுக்கு உபமானமாகத் தேவலோகத்திலும் இவ்வளவு பெரிய முத்துக் கிடையாதே!

புதிதாக வந்தவன் மலைத்துப் போகலாம், உற்சாகப் பட முடியாது.

வெளிச்சம்! வெளிச்சம்! கண்ணைப் பறிக்கும் வெளிச்சம்!

இதுதான்...தெரு மூலை!

இதுதான் மனித நதியின் சுழிப்பு!

இதற்கு உபநதிகள் போல் பெரிய கட்டடங்களுக்கிடையே ஒண்டி ஒடுங்கிப் போகும் ரஸ்தாக்கள்.

இது வேறு உலகம்!

ஒற்றைப் பாதையில் பாதசாரிகள்; மங்கிய மின்சார விளக்குகள்!

இடையிடையே எங்கிருந்தோ வரும் எக்களிப்புச் சிரிப்பைப்போல் டிராமின் கணகணப்பு.

மணி எட்டுத்தானே சொன்னேன்? கொஞ்ச நேரம் சென்றுவிட்டால், ஆட்கள் நடமாட்ட மிருக்காது. 'ஆசாமிகள்' வருவார்கள். வாடிக்கைக்குக் கிராக்கி உண்டு.

இந்தப் பக்கங்களுக்கு அதற்குமேல் வரவேண்டுமென்றால், 'ஆசாமி'யாக இருக்கவேண்டும்; அல்லது குருடனாக இருக்கவேண்டும்; அல்லது கண்கள் எல்லாவற்றையும் பார்ப்பதற்குத்தான் என்ற இரும்புத்தத்துவம் கொண்ட மனிதனாக இருக்கவேண்டும்.

அதோ மூலையில் சுவரின் அருகில் பார்த்தீர்களா? சிருஷ்டித் தொழில் நடக்கிறது. மனிதர்களா, மிருகங்களா? நீங்கள் போட்டிருக்கிறீர்களே பாப்லின் ஷர்ட்டு, உங்கள் ஷெல் பிரேம் கண்ணாடி!—எல்லாம் அவர்கள் வயிற்றில் இருக்கவேண்டியதைத் திருடியதுதான். ரொம்ப ஜம்பமாக நாஸூக்காகக் கண்ணை மூட வேண்டாம். எல்லாம் அந்த வயிற்றுக்காகத்தான்.

வீட்டில் இவ்வளவு 'சீப்பாக'க் காரியம் நடத்த முடியாது. ஆனால், உங்களிடம் தத்துவம் பேசிக்கொண்டிருக்க நேரமில்லை.

தன் நினைவில்லாமலே ஒரு வாலிபன் தெரு வழியாக வருகிறான். களைப்பு, பசி இவை இரண்டுந்தான் அப்பொழுது அவனுக்குத் தெரியும். மனிதனை மிருக மாக்கும் இந்தத் தெரு வழியாகத்தான் அவன் ஆபீஸுக் குச் செல்வது வழக்கம். அந்தப் பெயரற்ற ஆபீஸ், அவனை முப்பது ரூபாய்களுக்குச் சக்கையாகப் பிழிந் தெடுத்த பிறகு, இந்த உணர்ச்சிதான் வருமாக்கும்! அதோ அந்தப் பெண்ணுடன் இருக்கும் ஒருவன்—இவனை விட அதிகமாகக் கொழுத்த தினியா தின்கிறான்? அவன் தன்னை மறக்க—யோகிகளைப்போல் அல்ல—குடிக்கிறான். இவனுக்கு அது தெரியாது.

ஒரு மூலை திரும்புகிறான்; சற்று ஒதுக்கமான மூலை.

அலங்கோலமான ஸ்திதியில் ஒரு பெண்! பதினறு, பதினேழு வயது இருக்கும். காலணா அகலம் குங்குமப் பொட்டு, மல்லிகைப் பூ, இன்னும் விளம்பரத்திற்குரிய சரக்குகள்.

அவளை அவன் கவனிக்கவில்லை.

"என்னப்பா, சும்மாப் போரே? வாரியா?"

வாலிபன் திடுக்கிட்டு நிற்கிறான்.

"நீ என்னப்பா, இதான் மொதல் தரமா? பயப் படுரியே?"

கையை எட்டிப் பிடித்தாள்.

"உன் பெயரென்ன?"

"ஏம் பேரு ஒனக்கு என்னாத்துக்கு?"

இவனுக்கு என்னசெய்வதென்று தெரியவில்லை. ஒரே ஒரு வழிதான் புலப்படுகிறது.

அதற்குள் அவள் சந்திற்குள் இழுக்கிறாள்.

வாலிபன் உடனே மடியிலிருந்த சில்லறைகளை யெல்லாம் அவள் கையில் திணித்துவிட்டு, "போ! போ!" என்று அவளை கெட்டித் தள்ளிவிட்டு ஓடிவிடுகிறான்.

"ஏண்டா, பேடிப் பயலே! பிச்சைக்காரின்னு நெனச்சுகினே!" என்று சில்லறைகளை விட்டெறிகிருள்.

அவன் அதற்குள் ஓடிப்போய்விட்டான்.

இந்த அசம்பாவிதமான செய்கையினுல் அவள் மலேக்கிருள். சற்றே பயம்.

"பேடிப் பயல்! பேமானி!" என்று முணுமுணுத்துக் கொண்டே, இருட்டில் சில்லறையைத் தேடுகிருள்.

ஆனுல் அவனும் அன்று பட்டினி என்று இவளுக்குத் தெரியாது.

எக்காளச் சிரிப்பு மாதிரி, எங்கோ ஒரு பக்கத்திலிருந்து டிராமின் கணகணப்பு!

ஞானக் குகை

அவன் ஓர் அதிசயப்பிறவி. பிறந்து பத்து வருஷங்கள் வரை ஊமையாகவே இருந்தான். மன்மத ரூபமாக இருந்து என்ன பயன்! வாயிலிருந்து எச்சில் அருவிபோல் வழிந்த வண்ணமாக இருக்கும். ஆளை விழுங்கும் கரு விழிகள் தான்; ஆனால் உயிரின் சலனம் இருக்காது, பிரகாசம் இருக்காது. வெருகு விழித்த மாதிரி, அறிவு மங்கி விழித்துக்கொண்டிருக்கும் கண்கள்.

மதுரைச் சீமையில், குறுமலைக்கு அடுத்த சிற்றூரின் தலைமைக்காரத் தேவர் மகன். சொத்தையும் செல்வாக்கையும் ஆளவந்த ஏகபுத்திரன். காசி, ராமேசுவர யாத்திரைப் பயன் என்பது அவன் தகப்பனார் எண்ணம்.

குழந்தை பிறந்ததும் தகப்பனாருக்கு மனம் இடிந்து விட்டது. பத்ரகாளியையும் கூசாது எதிர்த்துப் பார்க்கும் அவர் கண்கள் தரையை நோக்கின. ஆகக்கூடி உள்ளூர் ஜோசியனும், வைத்தியனும் இந்த அற்புதமான சிசுவைப் பற்றிச் சொன்னவைகூடப் பொய்த்துவிட்டன.

பிறந்தவுடனேயே தாயார் இந்த உலகத்தில் குழந்தைக்குத் தன் இடத்தைக் காலிசெய்து கொடுத்ததினால், அவளைப் பொறுத்த வரை அந்தக் கவலை நீங்கிற்று என்றே சொல்லலாம். தலைமைக்காரத் தேவர் பொறுப்பின் பளு தாங்க முடியாதது. மறவக்குறிச்சிப் பெண்ணைப் பார்த்துக் கலியாணம் செய்துகொண்டிருந்தார். அந்த அம்மையாருக்கு ஜாதகப்படி குழந்தை கிடையாது என்பதைத் தேவருடன் கூடிய ஐந்தாறு வருஷ வாழ்க்கை நிரூபித்தது. அதில் ஏற்பட்ட பொறாமை இந்த அசட்டுக் குழந்தையின் மீது பாய்ந்ததில் அதிசயம் ஒன்றும் இல்லை.

தேவரவர்களுக்கு இந்தக் குழந்தை என்றால் உயிர், கண்ணுக்குக் கண். பலசாலிகள் தங்கள் ஆசைகளை எல்லாம் பலவீனர்களின்மீது சுமத்துவது—தங்கள் வெறுப்பைச் சுமத்துவது போலவே—இயற்கை. அந்த இயற்கை, விதியையும் கடக்கவேண்டியதாயிற்று.

பத்து வருஷங்களாகத் தலைமைக்காரத் தேவரின் பூஜைகளும், நோன்புகளும் குழந்தைக்கு 'அப்பா' 'அம்மா' என்ற இரண்டு வார்த்தைகளைச் சொல்லும்படி தான் செய்ய முடிந்தன. ஓட்டை வாளியை வைத்துத் தண்ணீர் எடுத்துக் கொண்டிருக்கிறவனுக்கு, பானையில் ஒரு சிரங்கை தண்ணீர் ஊற்ற முடிந்துவிட்டால் ஏற்படும் நம்பிக்கைக்கும் குதூகலத்திற்கும் எல்லையே இராது தேவரவர்களுக்கு, தமது ஊமைப்பிள்ளையும் சகலகலா பண்டிதனாகி, நாட்டாண்மையைக் கம்பீரமாக வகிப்பான் என்ற அசட்டு நம்பிக்கையும் பிறந்தது.

குழந்தை 'அப்பா' 'அம்மா' என்று சொல்லும் சமயத்தில்தான் அதன் கண்களில் அறிவின் சுடர் சிறிது பிரகாசிக்கும். ஊர்க்காரர்களுக்குக்கூட அசட்டுத்தனம் என்று படும்படி தகப்பனார் நடந்துகொண்டார். அவருடைய அசட்டுத்தனத்தின் சிகரம் என்னவென்றால், பிள்ளையை உள்ளூர்த் திண்ணைப் பள்ளிக்கூடத்திற்கு அழைத்துச் சென்றதுதான். "ஒத்தைக்கொரு பிள்ளை என்றால் புத்திகூடக் கட்டையாப் போகுமா?" என்று ஊர்க்காரர்கள் கூடச் சிரித்தார்கள்.

பள்ளிக்கூட வாத்தியாருக்கு அதிகமாக ஒன்றும் தெரியாவிட்டாலும், அவர் படிப்பு, ஊர்க்காரர்களைப் பிரமிக்க வைப்பதற்குப் போதுமானது. மேலும் அநுபவம் நிறைந்தவர். பையனுக்குப் படிப்பு வராது என்று சொல்லவில்லை. நளினமாக சமஸ்கிருதக் கதை ஒன்றைச் சொல்லி, மாடு மேய்த்தல் அறிவு விருத்தியாவதற்கு முதற்படி என்று சொல்லி வைத்தார்.

தலைமைக்காரத் தேவர் மகனுக்கா மாட்டுக்காரப் பிள்ளைகளின் துணை கிடைக்காமற் போகும்? ஜாம் ஜாம் என்று எருமை சவாரி செய்துகொண்டு அவன் குறுமலைப்

பிரதேசத்தைச் சுற்றிவர ஆரம்பித்தான். உபாத்தியாயர் சொன்னபடி உள்ளுணர்வு வளர்ந்ததோ என்னவோ, ஈசனுக்குத்தான் வெளிச்சம். ஆனால், ஆந்தையையும், கோட்டானையும், சில வண்டுகளையும் தேடியலையும் முயற்சியில் எப்படியோ அவன் ஈடுபட ஆரம்பித்தான். அதில் மனத்தைப் பறிகொடுத்தான் என்றே சொல்லவேண்டும். அவனுக்கு வீட்டுக்கு வருவதென்றாலே வேப்பங்காயாகி விட்டது.

தேவருக்குப் பிரச்னை மேல் பிரச்னையைக் கொடுத்துப் பரிசோதிக்க வேண்டும் என்று, அவர் பிள்ளைக்காக வழி பட்ட கடவுளுக்கு ஆசையிருந்தது போலும்! பையனை வீட்டுக்குத் திருப்புவது எப்படி என்றாகிவிட்டது.

நீண்ட யோசனையின் பேரில் அவர் ஒரு முடிவுக்கு வந்தார். என்ன அசடனானாலும் பையன் ஒரு மனிதப் பிராணிதானே! அவனுக்குக் கலியாணத்தைச் செய்து வைத்தால் வீட்டுப் பற்று ஏற்படக்கூடும் என்று நினைத்தார்.

தேவருடைய வட்டாரத்திற்குள் பெண்ணா கிடைக்காமற் போய்விடும்? மருதையாத் தேவன் ஏழைதான். அதனால் அவன் மகள் அழகாக இருக்கக் கூடாதா? கருப்பாயி பேருக்கு ஏற்ற கறுப்பாக இருந்தாலும் நல்ல அழகி. அவள் தேவரின் கட்டளையின் பேரில் அவன் முன்பு தென்பட ஆரம்பித்ததிலிருந்து, தேவருடைய மகன் முகத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. கருப்பாயியைக் கண்டவுடன் அவன் முகம் அறிவுக்களையுடன் பிரகாசிக்கும். கருப்பாயிக்கும் தனக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கின்றது என்று அந்த இருண்ட சித்தத்தில் மின் வெட்டுக்கள்போல் தோன்றலாயிற்று.

அச்சமயத்தில் அவனுக்கு வயது பதினைந்து. 'அப்பா' 'அம்மா' என்ற இரண்டு சொற்களுடன் இப்பொழுது 'கருப்பாயி' என்ற வார்த்தையும் தெரியும். குறுமலைக் குன்றின் காடுகளும் அவனுக்குத் தெரியும்.

II

குறுமலைச் சாரலில் பிரம்மாண்டமான விருட்சங்களும் கண்ணுக்கு ரம்மியமாகச் செழித்து நெருங்கிய புல்பூண்டு களும் கிடையா. பெரிய நாய்க்குடைகள் ரூபத்தில் வளர்ந்த உடை மரம், கள்ளி, முட்புதர்களான குத்துச் செடிகள் இடையிடையே விழுதுவிட்ட ஆல், அதைச் சுற்றி வளரும் பனை, கண்ணுடிக் கொம்மட்டிக் கொடிகள்—இவை தான் குறுமலைக் காடு. முயலும், நரியும், கோட்டானும், ஆந்தையுந்தான் அங்குள்ள பயங்கரப் பிராணிகள். கல்லும் கள்ளிமுள்ளும் நிறைந்து இடையிடையே குத்துப் பாறை களைச் சுற்றிச் சுற்றிப் போகும் ஒற்றையடித் தடங்களில் மேய்ச்சலுக்குப் போகும் வழிகள் குறுமலைப் பிரதேசத்து மாடுகளுக்கும் மாட்டுக்காரப் பிள்ளைகளுக்குந்தான் தெரியும்.

இந்தக் காட்டில் சித்தர்களும், ஔஷத மூலிகைகளும் உண்டு என்பது ஐதீகம். மாட்டுக்காரப் பையன்கள் கொண்டுவரும் கதைகள் பிரத்யட்சப்பிரமாணமாகக்கொள் ளப்பட்டு வந்தன. இடையிடையே ஜடாமுனிக் கதைகளும் ஊரார் பேச்சின் சுவாரஸ்யத்தை அதிகப்படுத்தி வந்தன.

அன்று தலைமைக்காரத் தேவரின் மகனுக்குத் தாகம் அதிகரித்ததற்குக் காரணம், என்றுமில்லாதபடி சுட்டுப் பொசுக்கும் வெய்யிலின் கொடுமைதான். உச்சி வெய் யிலில் மாடுகள்கூட நிழலில் படுத்துவிட்டன. மலைச் சாரலில் நின்று சமவெளியையும் தூரத்தில் தெரியும் சிற்றூர்களையும் பார்த்தாலே, பூமி ஓர் அக்னி லோகம் போல் தகதகவென்று கானலில் பிரகாசித்தது.

உயர வானத்தின் இரண்டொருமூலைகளிலிருந்த பஞ்சு மேகங்களும் பார்க்க முடியாதபடி கண் கூசும்.

குறுமலையில் ஒரே சுனைதான் உண்டு. இருண்ட ஊற்று என்றே அதற்குப் பெயர். உச்சி நேரங்களில் நாவரட்சியினால் செத்தாலும், மாட்டுக்காரப் பையன்கள் அந்தத் திக்கிற்குச் செல்லவே மாட்டார்கள்.

இந்த அசட்டுப் பிள்ளைக்குத் தாகம் அதிகரித்தது. அறிவு, சுடர்விளக்காகவும், பயத்தை விரட்டும் கருவியாக

வும் இருக்கலாம். ஆனால், அறிவு, சலனம் இல்லாது இருண்டுவிட்டால், பயம் என்பதே ஏன் தோற்றப் போகிறது?

பையன் இருண்ட குகைக்குள் சென்று இரண்டு சிரங்கை ஜலம் வாரிக் குடித்தான். என்ன தோன்றிற்றோ அந்த இருளுண்ட அறிவிற்கு? தண்ணீரில் குதித்து நீந்த ஆரம்பித்தான். அரைமணி நேரம் கழிந்தது. ஜில்லென்ற நீர் உடலை நடுக்க ஆரம்பித்தது. கரையில் வந்து, ஒரு பாறைமீது வெய்யில் படும்படியான இடத்தில், மரத்துக் கிளைகளைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந் திருந்தான்.

எவ்வளவு நேரம் சென்றதோ?

இருண்ட குகைக்குள்ளிருந்து திடீரென்று ஒரு வெளிச் சம் தோன்றியது. அது மெல்ல மெல்லப் பரந்து, இருண்ட குகையிலும், அதனடியில் சிறிது அலையிட்டுக் கொண் டிருக்கும் ஜலத்திலும் மின்னியது. அதன்பின் திவ்விய மான வாசனை குகை முழுவதும் பரவியது.

இந்த அசட்டுப் பிள்ளைக்கு அது அற்புதமாகத் தோன்றியதோ என்னமோ—அது வேடிக்கையாக இருந் தது என்பதில் தடையில்லை. வெளிச்சத்தை நோக்கிச் சிரித்துக்கொண்டே இருந்தான்.

வெளிச்சம் அதிகமாகப் பரவியது. ஆனால் மயக்கும்படி அதிகரித்தது. அச்சமயத்தில் குகையின் உள் மூலையி லிருந்து ஓர் உருவம் நடந்து வர ஆரம்பித்தது. உருவம் மிகவும் குள்ளமாக இருந்தாலும், வயதை மதிக்க முடியாத படி இருந்தது. குழந்தையின் முகம்; அதில் பொன்னிற மான தாடி, இடையில் ஒரு லங்கோடு. கண்கள் கறுத்து குகையின் நீர்போல் புரண்டு பிரகாசித்தன. அந்த உருவம் இயற்கை விதிகளுக்குப் புறம்பானது போல் ஜலத்தின் மேல் நடந்து வர ஆரம்பித்தது. அப்பொழுதும் இந்த ஊமைப் பிள்ளைக்குப் பயம் தோன்றவில்லை; ஆச்சரியம் தோன்றவில்லை.

அந்தத் தவ உருவம் குகையின் வாசலை நெருங்கியதும் இந்த அசட்டுக் குழந்தை பேசாமல் அவர் பாதத்திலே விழுந்து நமஸ்கரித்தது.

அந்தத் தவ உருவத்தின் முகத்தில் ஒரு புன்னகை தவழ்ந்தது. கண்களில் ஒரு கணம் சிந்தனை தேங்கி யது. அசட்டுக் குழந்தையின் கண்களையே அது கூர்ந்து கவனித்தது.

ஸ்பரிசத்திலே புளகாங்கிதமடைந்த குழந்தையின் சிரிப்பு, படிப்படியாக மறைந்தது. கண்களில் அறிவுச் சுடர் ததும்பியது.

"என்னுடன் வா!" என்று குழந்தையின் கையைப் பிடித்துக்கொண்டு வந்த வழியே திரும்பியது உருவம்.

குகையில் படிப்படியாக இருள் கவிய ஆரம்பித்தது. அமைதி குடிகொண்டது.

பழைய இருள், பழைய அமைதி.

III

தவ உருவமும் பையனும் நெடுந்தூரம் நடந்து சென்றார்கள்.

சுனையைத் தாண்டியதும் மணல். எவ்வளவு தூரம் சென்றார்களோ! குகை விரிந்து விரிந்து இரண்டு பிரமாண் டமான பாறைச் சுவர்களாயிற்று. எங்கோ, உயரப் பறவைகள் எட்டிப் பிடிக்கும் தூரத்தில், வானத்தின் துண்டு அங்கொன்றும் இங்கொன்றுமாக நட்சத்திரங் களைக் காண்பித்து வழி காட்டியது.

முனி உருவம் கத்திபோல் கதிக்கச் சென்றது. அசட் டுக் குழந்தை பாறையையும் வானத்தையும் பார்த்துச் சிரித்துக்கொண்டு அவரைப் பின்தொடர்ந்தது.

இருவரும் மணல் வழியின் கடைசியை அடைந்தார் கள். அங்கும் பாறைச் சுவர் வழியை மூடியிருந்தது.

அந்த மூலையில் ஒரு சுனை. அதன் பக்கத்தில் ஒரு பாறை.

பாறையின்மீது இருவரும் உட்கார்ந்தனர்.

முனிவர் குழந்தையைத் தன் மூகமாக உட்கார வைத்து, அதன் கண்களில் நோக்கி மந்திரத்தை உச்சரித் தார்.

குழந்தையைச் சுற்றிலும் ஒரு தேஜஸ் ஒளிவிட ஆரம்பித்தது. அதற்குப் புதிய விஷயங்கள் தென்படலாயின.

எங்கு பார்த்தாலும் செங்குத்தாகவும் குறுக்கும் நெடுக்குமாகவும் கிடக்கும் மணிகள், பாறைகள்! அதில் தங்கங்களும் வெள்ளியும் கொடி போலப் படர்ந்து மூடிக் கிடக்கின்றன. பவழத்தாலும் தங்கத்தாலும் கிளைகள் கொண்டு, வைரங்களாக மலரும் ஓர் அற்புதப் பூங்காவனம். ஒவ்வொரு மரமும் ஒவ்வொரு லோகம். அதன் மலர் அல்லது கனி பல வர்ணங்களில் பிரகாசிக்கும் வைர வைடூரியங்கள். கிளைகளிலிருந்து சுருண்டு தொங்கும் நாகசர்ப்பங்கள், கண்ணுடிகள் போல் பிரகாசிக்கும் மேல் தோலையுடைய பிரமாண்டமான விரியன்கள், விஷப் புகையைக் கக்கிக்கொண்டு திமிர்பிடித்தவை போல் சாவதானமாக நெளிகின்றன. பல பல வகையில் ஒளி விட்டுக் கண்களைப் பறிக்கும் மணலில் அங்கங்கே உலகத்து ஜீவராசிகளின் எலும்புக் கூடுகள் பாதி புதையுண்டு கிடக்கின்றன.

குழந்தையை அழைத்து வந்த சித்தரின் பிரதிபிம்பங்கள் போல் அச்சு அசல் மாருத உருவங்கள் ஒவ்வொரு மரத்தடியிலும் நிஷ்டையில் ஆழ்ந்து சலனமற்றிருக்கின்றன. அந்த இயற்கைக்கு விரோதமான உலகத்திலே, சுவையையும் பரிமளத்தையும் பெற்ற காற்று, உணவாகத் தவழ்ந்து கொண்டிருக்கிறது.

"தேவியைப் பார்!" என்று இடி முழக்கமான குரல் ஒன்று கேட்டது. உடனே அந்தப் புதிய உலகம் மறைந்தது.

பழைய இருட்டில், அந்தப் பாறைச் சுவரின் முகட்டில், ஒரு கன்னங் கனிந்த இருள் உருவம்.

அந்த இருளுக்கே ஒரு பிரகாசம் உண்டு போலும்!

அவள்தான் தேவி!

பிறந்த கோலத்திலே வாலைக் கனிவு குன்ருத கன்னி உருவம்!

உயர இருந்தாலும் குழந்தைக்கு ஒவ்வொரு அங்கமும் நன்ருகத் தெரிந்தது.

அசைவற்று நிற்கும் உருவத்தின் முகத்தில் ஒரு புன்னகை—கொடூரமான, உயிரைக் கொல்லக்கூடிய—ஆனுல் உடலில் உணர்ச்சி வேட்கையைப் பெருக்கக்கூடிய—புன்னகை !

குழந்தை அவளையே நோக்கிக் கொண்டிருந்தது. வைத்த கண் எடுக்காமல் நோக்கிக் கொண்டிருந்தது.

மெதுவாகக் 'கருப்பாயி' என்ற வார்த்தை அதன் வாயிலிருந்து வெளிப்பட்டது.

சப்த உலகங்களும் மோதுவன போல் ஒரு பேரிடி. உருவம் இரு கூருகப் பிளந்து மறைந்தது. பாறைச் சுவர்கள் கவிழ்ந்து விழுந்தன. ஆயிரம் மின்னல்கள் குழந்தையின் நெஞ்சில் பாய்ந்தன.

ஒரே இருட்டு.

தலைமைக்காரத் தேவரின் குழந்தை கருகிக் கரிக் கட்டையாகச் சுனையில் மிதப்பதை மாட்டுக்காரப் பையன்கள் கண்டு, ஊராருக்குத் தெரிவித்தார்கள்.

திறந்த ஜன்னல்

சாயங்காலம்.

சிறு பசி என்ற நினைப்பைச் சாந்தி செய்ய ஒரு ஹோட்டலுக்குள் சென்றேன்.

கூட்டத்திலே இடம் கிடைப்பது கஷ்டந்தான்; எனினும், என் அதிர்ஷ்டம் ஒரு மேஜை காலியாயிருந்தது.

போய் உட்கார்ந்தேன்.

"என்ன ஸார் வேண்டும்?"

ஏதோ வேண்டியதைச் சொல்லிவிட்டு, என்னத்தையோ பற்றி யோசித்துக்கொண்டு இருந்துவிட்டேன். அவன் வைத்துவிட்டுப் போனதையும் கவனிக்கவில்லை.

மறுபடியும், "என்ன ஸார் வேண்டும்?" என்ற குரல் கேட்டது.

"முன்பே சொல்லியாகிவிட்டதே!" என்று நினைத்துத் திரும்பினேன்.

அவன் கேட்டது என்னையல்ல; என் எதிரிலிருந்த ஒருவரை. மெலிந்த தேகம்; கிழிந்த சட்டை, ஆனால் அழுக்கில்லை; கிழிசல் தைக்கப்பட்டிருந்தது. இரண்டு மூன்றுவாரம் கத்தி படாத முகம்; சோர்வடைந்திருந்தாலும் கண்களில் ஒருவிதப் பிரகாசம் தென்பட்டது.

கீழே குனிந்து, மேஜைக்கு அடியிலிருந்த கைகளைக் கவனித்துவிட்டு, ஒரு பெருமூச்சுடன், (அது வெகு மெதுவாக வந்தது) "அரை கப் காப்பி!" என்றார்.

முகத்தில் 'பசி' என்பது ஸ்பஷ்டமாக எழுதியிருந்தது.

கையில் சில்லறை யில்லை போலும்! இதனால்தான் கீழே கவனித்துப் பார்த்துக்கொண்டார். பார்ப்பானேன்? நினைவில் இல்லாமலா போய்விடும்? யாரோ என்னைப்போல் இலக்கிய உலகத்தில் வேலை செய்பவர் என்ற முடிவிற்கு வந்தேன். அவர்களுக்குத்தானே இந்தக் கதி வரும்! சகோதரத் தொழிலாளி என்ற பாசம் ஏற்பட்டது. உதவி செய்யவேண்டுமென்ற ஆசை. தர்ம உணர்ச்சியாலல்ல, சகோதர பாசத்தால்.

எப்படி ஆரம்பிப்பது? கோபித்துக்கொள்வாரோ என்னவோ ? பக்குவமாகச் சொல்லிப் பார்த்தால் என்ன குடி முழுகிப் போகிறது?

"தங்களை எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறதே!" என்று மனமறிந்து பொய் கூறினேன்.

"பார்த்திருக்க முடியாது!"

இது தடையுத்தரவு மாதிரி இருந்தது. இருந்தாலும் இன்னொரு தடவை.

"எனக்குப் பசி பிராணன் போகிறதே! தங்களுக்கு உடம்பிற்கு என்ன?" என்று காப்பிக் கோப்பையைக் கூர்ந்து நோக்கினேன்.

"பசியாமல் ஏன் ஓட்டலுக்கு வரவேண்டும்?" என்றார்.

"மறந்து போயிருக்கும்; அதனாலென்ன? நீங்கள் இன்று என்னுடைய விருந்தினராக இருக்கவேண்டும். இன்று என் பிறந்த நாள்!" என்றேன்.

"காசைக் கண்டபடி இறைக்காதேயும்" என்றார்.

"பாதகமில்லை. தயவு செய்து......"

"சரி, உமதிஷ்டம்" என்றார். இருவரும் குதூகல மாகச் சாப்பிட்டோம். குதூகலம் என்னுடையது; அவர் மௌனமாகத்தான் சாப்பிட்டார். இடையிலே இரண் டொரு வார்த்தை சிக்கனமாக இருப்பதைப் பற்றி, வெகு கூச்சமுள்ள பிராணி போலும்! இந்த ரகத்தை எனக்கு நன்றாகத் தெரியும். இலக்கியத்தில் இது எதிர்பார்க்கக்

கூடிய விஷயமே. மிகவும் கஷ்டப்பட்டவர். அதனுல்தான் சிக்கனத்தில் அதிகக் கருத்து!

ஒரு குழந்தையைப் போஷிப்பதைப்போல் மனம் கோணுமல் நாசூக்காகச் செய்தேன். 'பில்' ஏறக்குறைய ஒரு ரூபாயை எட்டிவிட்டது.

எழுந்திருந்தோம். மௌனமாக அவர் முன் சென்ருர்.

பணத்தைக் கொடுக்கச் சில நிமிஷம் தாமதித்தேன்.

நேராக வெளியே சென்று ஒரு பளபளப்பான 'ஹில்மன்' காரில் கூசாமல் ஏறி உட்கார்ந்தார் அந்த மனுஷர்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. பைத்தியமோ என்ற சந்தேகம்.

மோட்டார் டிரைவர் இயற்கையான சாவதானத்துடன் காரை விட்டுக்கொண்டு போய்விட்டான்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை.

'ஹோட்டல் காஷியர்' என்னமோ தெரிந்தவர்போல் விழுந்து விழுந்து சிரித்தார்.

நான் விழித்தேன்.

"அவன் பெரிய லக்ஷாதிபதி. பெரிய கருமி, கஞ்சன். யார் தலையையும் தடவுவதில்—இந்தச் சாப்பாட்டு விஷயத்தில்தான்—ஒரு பைத்தியம். இன்று நீர் [illegible]'பட்டுக் கொண்டீர் போலிருக்கிறது!" என்ருர்.

நானும் சிரித்தேன். எதற்கு என்று எனக்குத் தெரியாது.

"தர்மம் செய்வதில் எவ்வளவு கஷ்டம் உண்டு பார்த்தீரா?" என்ருர்.

"நான் தர்மம் செய்யவில்லையே!" என்று சொல்லி விட்டு வெளியே வந்தேன்.

மனித யந்திரம்

ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளை ஒரு ஸ்டோர் குமாஸ்தா; அவர், உப்புப் புளி பற்று—வரவு கணக்கின் மூலமாகவும் படிக் கல்லின் மூலமாகவும் மனித வர்க்கத்தின் சோக நாடகங்களையும், மனித சித்தத்தின் விசித்திர ஓட்டங்களை யும் அளந்தவர்.

அவருக்குச் சென்ற நாற்பத்தைந்து வருஷங்களாக, அதே பாதை, அதே வீடு, அதே பலசரக்குக் கடையின் கமறல்தான் விதி. அதுவும் அந்தக்காலத்தில் அடக்க மான வெறும் மூலைத் தெரு ராமு கடையாகத்தான் இருந் தது. கடையும் பிள்ளையவர்களுடன் வளர்ந்தது. ஆனால் அதில் சுவாரஸ்யமென்னவெனில், வெறும் 'மீனாச்சி' ஸ்ரீ. மீனாட்சி சுந்தரம் பிள்ளையாகப் பரிணமித்தாலும், அவருக்கு அந்தப் பழையதுதான். அந்தக் காவியேறிய கம்பிக்கரை வேஷ்டிதான். கடைக்கு முன்னால் இருந்த காறையும் கூரையும் போய், 'ரீ-இன்போர்ஸ்ட் காங்க்ரீட், எலெக்ட்ரிக் லைட், கௌண்டர், முதலிய அந்தஸ்துகள் எல்லாம் வந்துவிட்டன. கடையும் பிள்ளையும் ஒன்றாக வளர்ந்தார்கள்; ஆனால் ஒட்டி வளரவில்லை. கடையில் வரவு செலவு வளர்ந்தது; பிள்ளையவர்களுக்குக் கவலையும் வளர்ந்தது.

ஸ்ரீ. மீனாட்சிசுந்தரம்பிள்ளை பற்று வரவு கணக்கு களில் உள்ள சிக்கல்களையெல்லாம் அற்புதமாகத் தீர்த்து வைப்பார். அந்தக் காலத்தில் புன்னை எண்ணெய்க் குத்து விளக்கடியில் இரவு பன்னிரண்டு மணிவரை மல்லாடுவார். இப்பொழுதும் அந்த மல்லாட் டத்திற்கெல்லாம் குறைச்சல் இல்லை;—ஆனால் இப் பொழுது, மின்சார விளக்கும் விசிறியும் உடன் விழித்

திருக்கும். அவரது சம்பளமும் ஆமை வேகத்தில் 'ஓடி' மாதத்துக்கு ரூ 20 என்ற எல்லையை எட்டிவிட்டது. பற்று வரவு கணக்கு நிபுணர் ஸ்ரீ. மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் திறமை யெல்லாம் அந்த ஸ்டோர் கடை யுடன்தான். வீட்டு வரவு செலவுக் கணக்கு மட்டும், அவருடைய இந்திர ஜால வித்தைகளுக்கெல்லாம் மீறி, உலகளந்த பெருமாளாக, சென்ற நாற்பத்தைந்து வருஷங் களாகப் பரந்து கிடக்கிறது; பரந்துகொண்டு வருகிறது.

காலை ஐந்து மணிக்கு, ஈர ஆற்று மணல் ஒட்டிய அவர் பாதங்கள், வெகு வேகமாக ஆற்றில் இறங்கும் சந்திலிருந்து ராஜபாட்டையில் திரும்பி, மறுபடியும் ஒற்றைத் தெரு என்ற சந்தில் நுழைவதைக் காணலாம்.

மழையாலும், பனியாலும் ஈர வேஷ்டியைச் சற்று உயர்த்திய கைகளால் பின்புறம் பறக்கவிட்டுக் கொண்டு, உலர்ந்தும் உலராத நெற்றியில் சுப்பிரமணிய சுவாமி கோவில் விபூதி, குங்குமம், சந்தனம் விகசிக்க, அவர் செல்லும் காட்சியைச் சென்ற நாற்பத்தைந்து வருஷங்களாகக் கண்டவர்களுக்கு, அவர் பக்தியைப் பற்றி அவ்வளவாகக் கவலை ஏற்படாவிட்டாலும், நன்றாக முடுக்கி விடப்பட்ட பழுது படாத யந்திரம் ஒன்று நினை விற்கு வரும்.

ஆறு மணி யாகிவிட்டால், நேற்றுத் துவைத்து உலர்த்திய வேஷ்டியும் துண்டுமாக, ஈரத் தலையைச் சிக்கெடுத்த வண்ணம் ஸ்டோர் கடையை நோக்கி நடப்பார். மறுபடியும் அவர் இரவு பத்து அல்லது பன்னிரண்டு மணிக்குக்கடையைப் பூட்டிக்கொண்டு திரும்பு வதைப் பார்க்கலாம்.

'மீனாச்சி' கணக்குப்பிள்ளை அந்தஸ்தை எட்டு வதற்கு முன்பே, நாலைந்து குழந்தை—மீனாட்சிகள் தெருவில் புழுதிரக ஆராய்ச்சியில் ஈடுபடுவது சர்வ சாதாரணமாகிவிட்டது.

பிள்ளையவர்கள் பொறுமைசாலி—ஆதிசேஷன் ஒரு பூமியின் பாரத்தைத்தான் தாங்குகிறான்; ஆனால் பொறுப்பு, ஏமாற்று, சுயமரியாதை, நம்பிக்கை என்ற

நியதியற்றுச் சுழலும் ஒரு பெரிய கிரக மண்டலத்தையே தூக்கிச் சுமக்கிறூர் அவர். ஏறு நெற்றி, வழுக்கைத் தலை, கூன் முதுகு, பெட்டியடியில் உட்கார்ந்து உட்கார்ந்து குடமான வயிறு,—இவைதான் இச்சுமைதாங்கி உத்தி யோகத்தால் ஏற்பட்ட பலன்கள்.

பிள்ளையவர்கள் மிகவும் சாது; அதாவது, படா டோபம் மிடுக்கு, செல்வம், அகம்பாவம் முதலியவற்றின் உதைகளையும் குத்துக்களையும் ஏற்று ஏற்று, மனமும் செயலும், எதிர்க்கும் சக்தியையும், தன்னம்பிக்கையையும் அறவே இழந்துவிட்டன. தாம் கீழ்ப்பட்டவர், விநயமாக இருக்க வேண்டும், தம்மைப் பாதுகாத்துக் கொள்ள உண்மை நாணயம் முதலிய பழக்கங்களைக் கைக்கொள்ள வேண்டும் என்று உறுதிப்பட்டவர். ஆனுல் அவர் உள் ளத்தில், அந்தப் பெட்டிப் பாம்பாக அடங்கிக் கிடக்கும் உள்ளத்தில், அல்லாவுத்தீன் ஜீனியைபோல், ஆசை பூதா காரமாய் விரிந்து, அவரது சித்தப் பிரபஞ்சத்தையே கவித்து ஆக்கிரமித்துக் கொண்டது. தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகச் செயல் திறமை யிழந்தவன் செய்வது போல், ஆசைப் பேய்க்குப் பூசையும் பலியும் கொடுத்து மகா யக்ஞம் செய்ய எந்தப் பக்தனுலும் முடியாது.

இந்த மனம் இருக்கிறதே, அப்பா! ஸ்ரீ மீனுட்சி சுந்தரம் பிள்ளைக்கும் அது உண்டு. நீறு பூத்த நெருப்பை வேதாந்திகள் பெரிய விஷயங்களுக்கு உபமானம் சொல்லுவார்கள். ஆசையைப் பொறுத்த வரை அந்த உபமானத்தால் பிள்ளை பெரிய மனுஷர் தான். "மீனுச்சியா! அந்த அப்பாவிப் பயல்!" என்று பலர் துச்சமாகக் கருதுவார்கள். முகத்திற் கெதிரேயும் சொல்லுவார்கள். அப்படிப்பட்ட 'அப்பாவிப்' பிராணி யின் மனத்தில் புகைந்து கவிகிறது ஆசை. வீட்டில் குழந்தைக்குப் பால் தட்டாமலிருக்க,—ஏன், பால் விற்று நாலு காசும் சம்பாதிக்க—மாடும் கன்றும் வாங்க வேண்டும்! தெற்குத் தெரு மாவன்னுவுக்கு 'மேடோவர்' செய்த நிலத்தைத் திருப்பவேண்டும். இது மட்டுமா? கால் மேல் கால் போட்டு, 'ஏ மீனுச்சி!' என்று தாம்

அழைக்கப்படுவது போல், தம் இஷ்டப்படி ஆட ஒரு மீனாட்சியும் ஸ்டோர் கடையும் கைக்குள் வரவேண்டும். ஒரு முறை கொழும்புக்குப் போய்விட்டுத் தங்க அரை ஞாண், கடிகாரச் சங்கிலி, வாட்ட சாட்டமான உடம்பு, கையில் நல்ல ரொக்கம், கொழும்புப் பிள்ளை என்ற பட்டம் முதலிய சகல வைபவங்களுடனும் திரும்ப வேண்டும். தெருவில் எதிரே வருகிறவர் எல்லாரும், துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு, பல்லை இளித்த வண்ணம் 'அண்ணாச்சி சௌக்கியமா?' என்று கேட்க வேண்டும்! ஊரில் நடைபெறும் கலியாணமும், சம்பவிக்கும் இழவும் இவர் வருகையை எதிர்பார்த்துத்தான் தம் பாதையில் செல்லவேண்டும்!......

இன்னும் எத்தனையோ எண்ணங்கள்! தினசரிப் பணப்பழக்கம் எல்லாம் அவர் கையில்தான். கடைசியாய், தனியாகக் கடையைப் பூட்டிச் சாவியை எடுத்துக்கொண்டு போகிறவரும் அவர்தான். அதே சமயத்தில்தான், கடைக் குக் கூப்பிடுகிற தூரத்தில் இருக்கும் ரயில்வே ஸ்டேஷனில் ஐந்து நிமிஷம் நின்றுவிட்டுத் தூத்துக்குடி ஷட்டில் வண்டி புறப்படுகிறது. டிக்கட் வாங்கிக்கொண்டு ராத்திரி யோடு ராத்திரியாகக் கம்பி நீட்டிவிடலாம். டிக்கட்டுக்கு மட்டிலும் பணம் எடுக்கத் தினசரி கடையில் பணம் புரளும். ஆனால், அந்தப் போலீஸ்காரப் பயல் இருக்கிறானே! நினைக்கும் பொழுதே பிள்ளையவர்களுக்கு அவன் கை தோளில் விழுவதுபோலப் பயம் தட்டிவிடும். திடுக்கிட்டுத் திரும்பிக்கூடப் பார்த்துவிடுவார்.

சிலர் நேரத்தைத் தெரிந்துகொள்ளக் கைக் கடிகாரம் கட்டிக்கொள்ளுவார்கள். வேறு சிலர் நிழலின் குறியை உபயோகப்படுத்திக் கொள்ளுவார்கள். கடிகாரத்தின் மெயின் ஸ்பிரிங் ஒடிவதற்கு ஹேது உண்டு. சூரியனை மேகம் மறைத்தால் நிழலின் குறியெல்லாம் அந்தரடித்துக் கொண்டு போகவேண்டியதுதான். அதனால்தானோ என்னவோ, சென்ற நாற்பத்தைந்து வருஷங்களாகக் கொக்கிர குளத்திலுள்ள பலருக்கும் ஸ்ரீமான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சாவி கொடுக்காத கடிகாரமாய் மேகத்தால் மறை யாத சூரியனாய், என்றும் பழுதுபடாத நித்திய வஸ்துவாய் இருந்து வருகிறார்.

பிள்ளைக்கு எதிலும் நிதானம். இயற்கையின் நியதியைப்போல் இருக்கும் அவர் நடவடிக்கை யெல்லாம்—நேற்று இருந்த மாதிரிதான் இன்றும், நாளையும், இனியும். ஒன்றுமட்டும் சொல்லுகிறேன். கொக்கிரகுளத்தில் உள்ள மிகவும் முதிர்ந்த கிழவருக்கும், அவர் தம் சன்னக் கம்பிக் கறுப்புக் கரை நாட்டு வேஷ்டியுடன்தான் காட்சியளித்து வருகிறார். இந்த ஒழுங்கிலிருந்து அவர் விலகியதும் கிடையாது; விலக முயன்றதும், விரும்பியதும் கிடையாது.

ஸ்ரீ பிள்ளையவர்களின் முகம் தேஜஸ் கீஜஸ் என்ற தொந்தரவெல்லாம் பெறுவிட்டாலும், அவர் ஒரு சித்தாந்தி. பற்று வரவு கணக்கு அவருக்கு வாழ்க்கையின் இரகசியங்களை எடுத்துக் காண்பித்து ; புகையூடு தெரியும் விளக்கைப் போன்ற ஒரு மங்கிய சித்தாந்தத்தை உபதேசித்தது.

II

மூலைத் தெரு லாந்தல் கம்பங்கூடச் சோர்ந்துவிட்டது. கொக்கிர குளத்திலுள்ள லாந்தல் கம்பங்களுக்கு இரவு பத்து மணிக்குள்ளாகவே சர்வ சாதாரணமாக ஏற்படும் வியாதி இது.

மூலைத் தெருவில் மற்ற இடங்க ளெல்லாம் ஒடுங்கி விட்டன. ஸ்டோரில் பெட்டியடி மேல் ஒற்றை மின்சார விளக்குப் பிரகாசிக்கிறது. பிள்ளையவர்கள் ஓலைப் பாயில் உட்கார்ந்துகொண்டு மேஜையின் மேலுள்ள சிட்டைப் புத்தகத்தில் ஏதோ பதிந்துகொண்டு இருக்கிறார்.

"சுப்புப் பிள்ளையா? நாலு, நாலரை, நாலரையே மாகாணி, நாலரையேமாகாணியும் ஒருசல்லியும், நாலரையே மாகாணி ஒரு சல்லி, ஒரு துட்டு, நாலு, ஒம்பது, அஞ்சு சல்லி!...சவத்துப் பயலுக்குக் குடுத்துக் குடுத்துக்கட்டுமா? நாளைக்கு வரட்டும் சொல்லறேன். கோவாலய்யனா? சொல்லவும் முடியாது, மெல்லவும் முடியாது! என்ன செய்யறது? பிள்ளையவாள் பாடு அவன் பாடு......" ஏடுகளைப் புரட்டுகிறார். நெற்றியில் வழியும் வேர்வையைத் துடைத்துவிட்டு,

ராமையாப்பிள்ளை பேரேட்டைத்திருப்பிக்கூட்ட ஆரம்பித்தார். "வீசம், அரைக்கால், அரையோரைக்கால்..."

"என்ன அண்ணாச்சி, இன்னங் கடை யடைக்கலே? என்னத்தே விளுந்து விளுந்து பாக்கிய?" என்றுகொண்டே வந்தார் மாவடியா பிள்ளை. "வாரும், இரியும்" என்று சொல்லி, மறுபடியும் கணக்கில் ஈடுபட்டார் பிள்ளை.

"என்னய்யா, வண்டி போயிருக்குமே! இன்னமா? உமக்கென்ன பயித்தியம்?"

"தம்பி, நீங்க ஒரு மூணுவீசம் அரை வீசம் கொடுக்கணுமில்லே; நாளாயிட்டுதே! கொஞ்சம் பாருங்க, கடைலே பெரண்டாத்தானே முடியும்?"

"அதுக்கென்னையா வர்ர வியாழக்கிழமை பாக்கிறேன். நீங்க வீசம்படி * பின்னைக்கி எண்ணை குடுங்க; எல்லாத்தையும் சேர்த்துக் குடுத்திடுவேன்!"

"பார்த்துச் செய்யுங்க!" என்று சொல்லிக்கொண்டே மேல் துண்டை எடுத்து ஒரு தோளில் போட்டுக்கொணடு எழுந்தார். கொட்டாவி வந்துவிட்டது. வாய்ப் பக்கம் விரலால் சுடக்கு விட்டுக்கொண்டே, 'மகாதேவ, மகாதேவ' என்று முணுமுணுத்த வண்ணம், நெடுங்காலக் களிம்பால் பச்சை ஏறிப்போன புன்னைக்காய் எண்ணெ யிருக்கும் செப்புப் பாத்திரத்தண்டை சென்றார். குனியுமுன் தலையை விரித்து உதறி, இடது கையால் அள்ளிச் சொருகிக் கொண்டு, கட்டை விரலுக்கும் நடுவிரலுக்கும் இடையில் பிடித்து வீசம் படியில் எண்ணெயை எடுத்துக்கொண்டு திரும்பினார்.

"தம்பி!" என்றுகொண்டே நீட்டினார்.

மாவடியாபிள்ளை கையில் இருந்த சிறு பித்தளை டம்ளரில் வாங்கிக்கொண்டார்.

பிள்ளையவர்கள் மறுபடியும் ஒழுங்காக மேல்துண்டை மடித்துப் பெட்டியடியில்போட்டுக்கொண்டு, "மகாதேவா!" என்று வாய்விட்டு ஓலமிட்ட வண்ணம், ஒற்றைக் கையைப்

---

* பின்னைக்கி எண்ணை - புன்னைக்காய் எண்ணெய்.

பெட்டியின்மேல் ஊன்றியபடி மெதுவாகச் சம்மணமிட்டு உட்கார்ந்தார்.

மாவடியா பிள்ளை புறப்படுவதாகத் தோன்றவில்லை.

"என்ன அண்ணுச்சி, இன்னந் * தேரமாகலியா!" என்று, பெட்டியடிப் பக்கத்தில் இருந்த தட்டில் உள்ள பொரி கடலையை எடுத்துக் கொரிக்க ஆரம்பித்தார்.

"இன்னம் ரெண்டு மூணு புள்ளியைப்பார்த்துவிட்டுத் தான் கடையெடுக்கணும். எனக்குச் † செல்லும். வார வைகாசிலே ராதாவரத்துப்பிள்ளை என்னமோ காசுக்கடை வைக்ராஹளாமே ஓங்கிளுக் கென்னய்யா!"......என்று சிரித்தார் பிள்ளை.

"அவாளுக்கென்ன! காசுக்கடையும் வைப்பாஹ கும்பிணிக் கடையும் வைப்பாஹ. கையிலே பசையிருந்தா யார் தான் என்னதான் செய்யமாட்டாஹ? வார வைகாசிலேயா? யார் சொன்ன?" என்று வாயில் உப்புக் கடலை ஒன்றை எடுத்துப் போட்டபடியே கேட்டார்.

"என்னய்யா, ஒரே யடியா கையை விரிக்கிய? ஓங்களுக்குத் தெரியாமலா பிள்ளைவாள் வீட்லே ஒண்ணு நடக்கும்? யாருகிட்ட உங்க மூட்டையை அவுக்கிய?" என்று, கையில் எடுத்த பென்ஸில் முனை மழுங்கியிருந்ததால், நகத்தால் கட்டையை உரித்துக்கொண்டே சொன்னார்.

மாவடியா பிள்ளை அப்படி இலகுவில் 'மூட்டையை அவிழ்த்து' விடுபவரல்லர். "ஊர்க் கதை எல்லாம் நமக்கெதுக்கு? நான்வாரேன். தேரமாகுது!" என்று எண்ணெயை எடுத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டார்.

"தம்பி! விசாளக்கெளமையை மறக்காமே!" என்றார் பிள்ளை.

"மறப்பனா!" என்றுகொண்டே இருட்டில் மறைந்தார் மாவடியா பிள்ளை.

பிள்ளையவர்களுக்கு அப்புறம் கணக்கில் மனம் லயிக்கவில்லை. ராதாபுரத்துப் பிள்ளை ஆரம்பிக்கப்போகும் காசுக்

---

* தேரம் - நேரம்.

† செல்லும் - நேரம் செல்லும்.

கடையிலும், அதில் மாவடியா பிள்ளைக்குக் கிடைக்கக் கூடிய ஸ்தானத்தையும் பற்றி விஸ்தாரமாக நினைக்க ஆரம்பித்துவிட்டார்.

"மாவடியா பிள்ளைக்கென்ன! கையிலே பணம்புரண்ட வண்ணந்தான். இப்பவே ஒரே யடியாக முழுங்கரானெ. ஆளைக் கையிலே பிடிக்க முடியுமா?......"

அவர் மனம் காசுக்கடைப்பெட்டி யடியில் உட்கார்ந்திருக்கும் கற்பனை-மாவடியாபிள்ளையைக்கண்டு பொறாமைப் பட்டது. "என்னதான் இருந்தாலும் நாணயமா ஒரு இடத்தில் இருக்கிறவன் என்று பேர் வாங்கப் போறுஹ! நாற்பத்தைந்து வருஷங்கள் ஒரே இடத்தில் இருந்து பேர் வாங்கினுல் அல்லவா தெரியும்?..." உடனே மனம் நாற்பத்தைந்து வருஷங்களையும் தாவி, ஏதோ அந்தக் காலத்தில் பள்ளிக்கூடத்திற்குப்போக மறுத்ததினுல் ஏற்பட்ட இந்த மாறுதலே நினைத்தது. அந்தக் காலத்தில் அது பிரமாதமாகப் படவில்லை. அப்புறம் பிள்ளையும் குட்டியும் வந்து, அது இது என்று ஆக ஆகச் சந்தர்ப்பம் தவருக மாறிப் பெரிய தவருக உருவெடுத்தது. வக்கீல் பிள்ளையும் உடன் படித்தவர்தான். இப்பொழுது அவரை "ஏலே ஆறுமுகம்!" என்று கூப்பிட முடியுமா?

பிள்ளையவர்களுக்கு மனம் கணக்கில் லயிக்கவில்லை. பெட்டியில் மூடிவைத்தார். "தூத்துக்குடி வண்டி இன்னும் புறப்படவில்லையே!" என்ற எண்ணம் திடீரென்று உதித்தது. "சவத்தைக் கட்டி எத்தனைநாள்தான் மாரடிப்பது!" என்று முணு முணுத்தார். நெற்றியில் குபீர் என்று வியர்வை யெழும்பியது. பெட்டிச் சொருகை அனுவசிய பலத்தை உபயோகித்து வெளியே இழுத்தார். உள்ளேயிருந்த சில்லறையும் ரூபாயும் குலுங்கிச் சிதறின. செம்பு, நிக்கல், வெள்ளி என்று பாராமல் மடமடவென்று எண்ணிஞர். நாற்பதும் சில்லறையும் இருந்தது. அவசர அவசரமாக எடுத்து மடியில் கொட்டிக்கொண்டு, விளக்கை அணைத்து, மடக்குக் கதவுகளைப் பூட்டிஞர்.

சாவிக்கொத்து கையில் இருக்கிறது. உணர்வுகூட இல்லாமல் வேகமாக ஸ்டேஷனைநோக்கி நடந்தார். நாற்பத்

தைந்து வருஷமாக உழைத்துப் போட்டும் என்ன பலன்? நாக்குக்கு ருசியாய்ச் சாப்பிட முடிந்ததா? என்ன பண்ணி விடுவான்? கொஞ்ச தூரம் சென்ற பிறகுதான் செருப்பைக் கூடக் கடையிலேயே வைத்துவிட்டு வந்துவிட்டார் என்ற உணர்வு தட்டியது.

நல்ல காலமாக எதிரில் யாரையும் காணோம். "பார்த்தால்தான் என்ன? கடையைப் பூட்டினபிறகு நேரே வீட்டிற்குத்தான் போகவேண்டுமா? நம்ம நினைப்பு அவனுக்கெப்படித் தெரியும்?"

ஸ்டேஷனுக்கு வந்தாய்விட்டது. பெட்ரோமாக்ஸ் விளக்கடியில் தூங்கும் சில்லறைச் சிப்பந்திகள், பக்கத்து வெற்றிலை பாக்குக் கடையில் வாயடி யடிக்கும் போர்ட்டர்கள்! வெளிக்கேட்டில் அவ்வளவு கூட்டம் இல்லை. ரயிலுக்குக் கூட்டம் இருக்காததும் நல்லதுதான் என்று நினைத்து உள்ளுக்குள் சந்தோஷப்பட்டுக்கொண்டார் பிள்ளை.

டிக்கட் கவுண்டரில் பத்தே காலணாவை வைத்துவிட்டு "தூத்துக்குடி!" என்றார் பிள்ளை. அதற்குள் நாவறண்டு விட்டது.

"எங்கே?" என்றார் டிக்கட் குமாஸ்தா.

பிள்ளை திடுக்கிட்டார். "தூத்துக்குடி!" என்றார் மறுபடியும்.

"வாயில் என்ன கொழுக்கட்டையா தெளிவாகத்தான் சொல்லேன்!" என்றுகொண்டே ஒரு டிக்கெட்டை 'பஞ்ச்' செய்துகொடுத்தார் குமாஸ்தா.

அப்பாடா!

பிள்ளையவர்கள் நிம்மதியடைந்தவர்போல் மூச்சை உள்ளுக்கு வாங்கி மெல்ல விட்டுக்கொண்டு பிளாட்பாரத்தில் நுழைந்தார். வண்டி நின்றுகொண்டிருக்கிறது. புறப்பட இன்னும் பத்து நிமிஷம். ஒரு சோடா விற்பவனும், ஆமவடை-முறுக்கு-போளி—ஐயரும் குரல் வரிசையைப் பிளாட்பாரத்தின் மேலும் கீழுமாகக்காண்பித்து நடந்தனர். லக்கேஜ் தபால் வண்டிப் பக்கத்தில்தான் ஸ்டேஷன் மாஸ்டரும், ஸ்டேஷன் சிப்பந்திகளும்! தொடரின் பின்

புறத்தில், ஒருவரும் இல்லாத தனி வண்டியில் ஏறி, கூட்ஸ் ஷெட் பக்கம் பார்த்த ஜன்னல் அண்டையில் உட்கார்ந்தார். ஜன்னல் பக்கம் இருந்த நிம்மதி, இவரது மனத்தைத் துருதுரு என்று வாட்டியது. எழுந்து பிளாட்பாரத்தின் பக்கத்திலிருக்கும் ஜன்னல் பக்கம் வந்து உட்கார்ந்து கொண்டு, வண்டி எப்பொழுது புறப்படும் என்பதை ஆவலாக அறிய எஞ்சின் பக்கம் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"பிள்ளைவாள்! ஏது இந்த ராத்திரியில்!" என்றது கம்பிரமான ஒரு குரல். வேறு ஒருவரும் இல்லை. ரயில்வே போலீஸைச் சேர்ந்த அவரது நண்பர் கலியாண சுந்தரம். பிள்ளை திடுக்கிட்டுத் திரும்பினார்.

போலீஸ்காரன்! பிள்ளையவர்கள் நண்பரைப் பார்க்கவில்லை; காக்கி உடையைத்தான் பார்த்தார்!

தன்னை யறியாமல் அவரது வாய், "தூத்துக்குடி வரை!" என்றது.

"என்ன அவசரம்! நான் உங்களை மணியாச்சியில் பார்க்கிறேன்!" என்று சொல்லி, அளவெடுத்து வைக்கும் பெருமிதமான நடையுடன், லக்கேஜ்வான் பக்கம் நிற்கும் ஸ்டேஷன் மாஸ்டரை நாடினார் கலியாணசுந்தரம் பிள்ளை.

மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கு நுனி நாக்கு முதல் அடித் தொண்டைவரை ஒரே வறட்சி; கண்கள் சுழன்றன.

"கலர்! சோடா!" என்று நீட்டினான் ஸோடாக்காரன்.

"ஏ, ஸோடா! கலர் ஒன்று உடை!" என்றார் பிள்ளை.

'டஸ்!' என்ற சப்தம்; 'ஸார்' என்று நீட்டினான் சோடாக்காரன். வாங்கிக் குடித்தார். "பூப்!" என்று ஏப்பமிட்டுக்கொண்டே, ஓரணாவை அவன் கையில் கொடுத்துவிட்டுப் பலகையில் சாய்ந்து கண்ணை மூடினார் பிள்ளை. "கலியாணி பார்த்துவிட்டானே! நாளைக்கு நம் குட்டு வெளிப்பட்டுப் போகுமே!"

துறைமுகத்தில் கலியாண சுந்தரம் பிள்ளை தமக்காகக் காத்துக் கொண்டிருப்பதை மனக் கண்ணால் பார்த்தார்.

ரயில் விஸில் கிரீச்சிட்டது. பிள்ளையவர்கள் அவசர அவசரமாகக் கதவுப் பக்கம் வந்து இறங்கினார்.

பிளாட்பாரத்தில் கால் வைத்ததுதான் தாமதம், வண்டி நகர ஆரம்பித்தது.

"என்ன பிள்ளைவாள் இறங்கிட்டிய!" என்று வேகம் அதிகரித்து ஓடும் ரயில் சாளரத்திலிருந்து ஒரு குரல். கலியாணசுந்தரம் பிள்ளைதான்.

"அவாள் வரலே!" என்று கத்தினார் பிள்ளை.

மெதுவாக, நிதானமாக ஸ்டேஷனை விட்டு வெளியேறி ஸ்டோர் பக்கமாக நடந்தார் பிள்ளை. வழியில் சிறிது தூரம் செல்லுகையில்தான் பாஸ் இல்லாமல் எப்படிக் கப்பலில் செல்வது என்ற ஞாபகம் வந்தது பிள்ளைக்கு. "புத்தியைச் செருப்பால்தான் அடிக்கணும்!" என்று சொல்லிக்கொண்டார் பிள்ளை. அவருக்குத் தமது ஆபத்தான நிலைமை அப்பொழுதுதான் தெளிவாயிற்று. உடல் நடுங்கியது.

"யார் செய்த புண்ணியமோ!" என்று மடியில் இருந்த விபூதியை நெற்றியில் இட்டுக்கொண்டு, "மகாதேவா!" என்றார் வாய்விட்டு.

ஸ்டோருக்கு வந்துவிட்டார். சாவதானமாகக் கதவைத் திறந்து, விளக்கை ஏற்றினார். மடியில் இருந்த சில்லறையைப் பெட்டிக்குள் வைத்துவிட்டு, சிட்டையை எடுத்து, "மீனாட்சி பற்று பதினொன்றேகாலணா" என்று எழுதினார்.

மறுபடியும் விளக்கு அணைந்தது, காலில் செருப்பை மாட்டிக் கொள்ளும் சப்தம்; பூட்டு கிளிக் என்றது.

முதலாளி வீட்டை நோக்கி 'சருக் சருக்'கென்ற செருப்புச் சப்தம்.

பிள்ளை வழியில் துண்டை உதறிப் போட்டுக் கொண்டார். தலையை உதறிச் சொருகிக் கொண்டார்.

முதலாளி காற்றுக்காக வெளியே வீசுப் பலகையில் தூங்குகிறார்.

"ஐயா! ஐயா!" என்றார் மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

"என்ன வே, இவ்வளவு நேரம்!" என்று புரண்டு கொண்டே கொட்டாவி விட்டார் முதலாளி ஐயா.

"இல்லே, சோலி இருந்தது. எம் பத்துலே இண்ணக்கி பதினொண்ணே காலணா எளுதிருக்கேன்!" என்றார் பிள்ளை. அப்பொழுதும் அந்த நாவறட்சி போகவில்லை.

"சரி! விடியென வரப்போ மூக்கனெ வண்டியைப் போட்டுக்கிட்டு வரச் சொல்லும். சந்தைக்குப் போக வேண்டாம்!" என்றார். சொல்லிவிட்டு, கொடுங்கையைத் தலைக்கு வைத்துக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டார்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை முதலாளி ஐயாவைச் சற்று நேரம் பார்த்துக்கொண்டே நின்றார். அப்புறம் மெதுவாகத் திரும்பி நடந்தார்.

கட்டில் பேசுகிறது

கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரியில், அந்தக் கிழக்கு வார்டுப் படுக்கையில், எனது வியாதிக்கு என்னமோ ஒரு முழநீளலத்தின் பெயர் கொடுத்து, என்னைக் கொண்டு போய்க் கிடத்தினார்கள்.

எனது இரண்டு பக்கங்களிலும், என்னைப் போல் பல நோயாளிகள். முக்கலும் முனங்கலும் நரகத்தின் உதாரணம் மாதிரி.

ஒவ்வொரு கட்டிலின் பக்கத்திலும் மருந்தையும் கஞ்சியையும் வைக்க ஒரு சிறு அலமாரி. கட்டில் கம்பியில், டாக்டரின் வெற்றி, அல்லது வியாதியின் வெற்றி இரண்டிலொன்றைக் காண்பிக்கும் 'சார்ட்' என்ற படம்.

ஹாலின் மத்தியில் ஒரு மின்சார விளக்கு; தூங்கும் பொழுது கண்களை உறுத்தாதபடி அதற்கு மங்கலான ஒரு 'டோம்.'

அதன் கீழ் வெள்ளை வர்ணம் பூசிய ஒரு மேஜை, நாற்காலி.

அதில் வெள்ளுடை தரித்து, 'ஆஸ்பத்திரி முக்காட்டிட்ட' ஒரு நர்ஸ் என்னவோ எழுதிக் கொண்டிருக்கிறாள்.

ஒன்றையும் பற்றாமல் சலித்துக் கொண்டிருக்கும் மனம்.

ஐயோ! மறுபடியும் அந்த வயிற்று வலி. குடலையே பிய்த்துக்கொண்டு வந்துவிடும் போலிருக்கிறதே! ஒரு கையால் வயிற்றை அமுக்கிக்கொண்டு ஒரு புறமாகத் திரும்பிப் படுத்தேன். சீ! 'ஸ்பிரிங்' கட்டிலாம்! என்னமாக உறுத்துகிறது!

சற்று அயர்வு......

என்ன வேடிக்கை! கட்டில் என்னுடன் பேசுகிறது!

''என்ன வோய்! என் 'ஸ்பிரிங்'கிற்கு என்ன குறைச்சல்? நீர் நாளைக்கு ரொம்ப......என்னிடம் வருகிறவர்களை, மரியாதையாக நாலு பேரோடு, சங்கு சப்தம் அல்லது வேத மந்திரம் சகிதமாகத்தான் நீண்ட பிரயாணமாக அனுப்புவது! என்ன, அர்த்தமாச்சா? உமக்கும் அந்த வழிதான்!

''ஹி! ஹி! ஹி!.........''

என்னகோரமான பிசாசுச் சிரிப்பு!

மறுபடியும்.........

''இன்னும் சந்தேகமா? நம்ம 'டயரி'யை வாசிக்கிறேன், கேளும்!''

''உம்.........''

''ஒரு ரஸமான காதற் கதை சொல்லட்டுமா?

''ஒரு வாலிபன். நல்ல அழகன். விஷம் உள்ளே போனதால் குடல் வெந்த புண். என் மடியில்தான் கிடத்தினார்கள். எங்கள் டாக்டர் பெரிய அசகாய சூரர்; இரண்டாவது பிரம்மா. புண் குணப்பட்டுத்தான் வருகிறது. ஆள்தான் கீழே போய்க்கொண்டிருக்கிறான். டாக்டர் முழிக்கிறார். எனக்குத் தெரியும் அவன் கதை; அவருக்குத் தெரியுமா? இரண்டு வாலிபர்கள், ஆனால் பெண் ஒருத்தி. இருவருக்கும் அவள் பேரில் ஆசை. அதிர்ஷ்டச்சீட்டு இவனுக்கு விழுந்தது. ஆனால் பெண் அவனைக் காதலிக்கிறாள்.

''பிறகு என்ன! அவனுக்குக் காதல், பெண், பஞ்சணை. இவனுக்குச் சோகம் விஷம், நான்! இவன் காதல் தெய்வீகமானது. காரியம் கைகடந்த பின் தெரிந்திருந்தாலும், திருமணம் என்று சொல்லுகிறார்களே அந்த மாற்ற முடியாத உரிமை, அதையுங்கூட விட்டுக் கொடுத்திருப்பான், அவள் வாழ்க்கையின் இன்பத்தைப் பூர்த்தியாக்க. 'அவள் கை விஷத்தால் சாகிறேம்' என்ற குதூகலம் இருந்தால், பாரேன்! பிறகு......அன்று ராத்திரி, மூடிய கண் சிறிது திறந்தது. ஒரு புன் சிரிப்பு! உதட்டின்மேல் அவள் பெயர். காற்றிற்கு ஒரு முத்தம், அவ்வளவுதான்!

"நன்று யிருக்கிறதா ?

"பிறகு...அவன் சிறு பையன். சத்தியாக்கிரகி! வயிற்றில்...தடிக்கம்புக் குத்து. அவனுக்கும் வைத்தியம் நடந்தது. பாவி எமனும் அவனைப் பார்த்துத்தான் அன்ன நடை நடக்கிறான்! பையனுக்குச் சாவின்மேல் எவ்வளவு ஆசை! நெஞ்சில் குண்டுபடவில்லையே என்ற பெரிய ஏக்கம். அதே புலம்பல்தான். என் கையில் ஒரு துப்பாக்கி இருந்தால்......சாவைக் கண்டதும் என்ன உற்சாகம்! காதலியைக் கண்டதுபோலத்தான் என்னமோ, 'ஸுஜலாம், ஸுபலாம்,' என்று ஆரம்பித்தான். குரல் வளையில் கொர்ர் என்றது...பிறகு என்ன! அவன் தாயாராம், ஒரு விதவை; என்ன அழுகை அழுதாள் !—கருமஞ் செய்யத் தனக்கு ஆள் இல்லை என்றே!

"ஹி! ஹி!! ஹி!!!

"இன்னும் ஒன்று சொல்லுகிறேன். கேள்......

"ரத்தபேதி கேஸ். அவன் ஒரு மில் கூலி. அப்பொழுது 'ஸீஸன்' டல். என் மேல்தான் கொண்டுவந்து கிடத்தினார். கூட நஞ்சானும் குஞ்சானுமாக எத்தனை உருப்படி! இத்தனைக்குமேல் இவனுடைய ஆயா ஒரு கிழவி. டாக்டர் வந்தார். வந்துவிட்டதையா கோபம்! 'கழுதையை இழுத்துக் கீழே போடு!' என்று கத்தினார். நானா விடுகிறவன்? ஒரே அமுக்கு ஆளை 'க்ளோஸ்' பண்ணித்தான் விட்டேன்!

"வேறு என்ன!

"நான் யார் தெரியுமா? சூ! கோழை, பயப்படாதே!

"நான் ஒரு போல்ஷிவிக்கி (அபேதவாதி)!

"ஹி! ஹி! ஹி!............"

மறுபடியும் அந்தக் கோரமான கம்பிப்-பல் சிரிப்பு! யாரோ என்னை எழுப்பினார்கள்.

"ஏன் முனங்குகிறாய்? தூக்கம் வரும்படி மருந்து தரவா?" என்றாள் என் மேல் குனிந்துகொண்டிருந்த நர்ஸ்.

எங்கோ டக், டக், டக் என்ற பூட்ஸ் சப்தம். டாக்டரோ ?

கனவுப் பெண்

ராஜ மார்த்தாண்ட சோழனுடைய காலம். சோழ சாம்ராஜ்யம், பழையவர்கள் சொல்லும் மாதிரி, ஏழ் கடலையும் தாண்டி, வெற்றிப் புலிக்கொடியைப் புதிய தேசங்களில் நாட்டிப் பெருமிதமாக வளர்ந்தது.

இந்து சீனத்திலே தமிழனின் கலை, தமிழனின் வீரம், தமிழனின் கீர்த்தி எல்லாவற்றையும் நிலைநாட்டி......

அதெல்லாம் பழைய கதை. மார்த்தாண்டன், தான் இருந்த தலைநகர் இப்பொழுது பெயர் தெரியாமல் இருக்கும் என்று கண்டானா?

சோழனுடைய தலைநகர் உறையூர். யவன வீரர்கள் இந்து—சீனப் போரில் அவன் படையிலே தங்கள் இரத்தத்தைச் சிந்தினார்கள்; அவன் அரண்மனைத் தலைவாயிலைக் காத்திருந்தார்கள்.

அகழிக் கப்புறம், அண்ணாந்து பார்த்தால் தலையறுந்து விழுந்துவிடும்படி பெரியவாயில். உள்ளே சற்றுத் தள்ளி வெண்கலத்தினால் ஆன துவஜஸ்தம்பம். அதன் உச்சியில் முன்னங்கால்களை உயரத் தூக்கிக்கொண்டு, வாயைப் பிளந்த வண்ணம், பாயும் நிலையில் வார்த்த ஒரு வெண்கலப்புலி; முழுதும் தங்க முலாம் பூசப்பட்டிருக்கிறது. அதன் கண்களுக்கு இரண்டு பெரிய இரத்தினங்கள்! சூரியனுடைய கிரணங்கள், அதன் மிடுக்கை—சாம்ராஜ்யத்தின் மனப்பான்மையை—தன்னையே வென்று இழிக்க முயலுவதைப் போல் நிற்கும் புலியை—அந்தச் சிற்பியின் கைவன்மையை—எடுத்துக் காட்டின.

ஸ்தம்பத்தின் அடியில் குறுகிய கவசம் அணிந்து, கச்சையைப் போல் வேஷ்டியை இறுக்கிக் கட்டிய மறவர்கள் கையில் எறி-ஈட்டிகளை ஏந்திய வண்ணம், கல்லாய்ச் சமைந்தவர் போல்காத்து நிற்கிறார்கள்.

சற்று உள்ளே ராஜமாளிகை, கல்லில் சமைந்து, தமிழனின் மிடுக்கை, தமிழனின் வீரத்தை, தமிழனின் இலட்சியத்தை ஒருங்கே எடுத்துக் காட்டுகிறது. எங்கு பார்த்தாலும் ஏகாதிபத்தியச் செருக்கு. சாம்ராஜ்யத்தின் ஹ்ருதயமின்மை அழகுருவத்தில் மனிதனை மலைக்க வைக்கிறது. மிருகத்தன்மை—அதற்கு வீரம் என்று மரியாதையாகச் சொல்லுவார்கள்—அழகுடன் கைகோத்து உலாவுகிறது.

உள்ளிருந்து சங்கமும் முரசும் ஏகமாக முழங்குகின்றன.

"ராஜ ராஜ அரிகேசரி வர்மன் பராக்......!"

இன்னும் எத்தனையோ முழ நீளம் முடிவில்லாமல் செல்லுகிறது அவன் பெயர்!

முன்பு சிற்றரசர்கள், தானாதிபதிகள் தளகர்த்தர்கள்—யாரும் படிப்படியாக முறை முறை வந்து வழிவிட்டு விலகி நின்று அடிபணிகிறார்கள்.

எங்கிருந்தோ மங்கள வாத்தியம் முழங்குகிறது.

உள்ளிருந்து ஒரு யௌவன புருஷன்—ஆணின் இலட்சியம்—வருகிறான். நெஞ்சிலே வைரங்கள் பதித்த குறுகிய கவசம்—மத்தியில் ரத்தினங்களில் புலி—காலில் வீரக் கழல், சிரத்திலே மரகதக் கிரீடம், இடையில் ஒரு சுரிகை.

அகன்று சுழன்று நேர் நோக்கும் வசீகரக் கண்கள். புருவத்தின் அழகை எடுத்துக் காட்டுவது போன்ற நெற்றி. அகன்ற நெற்றியிலிட்டிருக்கும் கருஞ் சாந்தின் அழகை மங்கவைத்து எடுத்துக் காட்டும் அந்தக் கண்களில் கனிவு, சிற்சில சமயம் மிடுக்கு......!

மெதுவாக அசைந்தசைந்து உலகம் பெயர்வதுபோல் நிகரற்ற நடை. பக்கத்தில் வரும் ஒருவனுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டு வருகிறான்.

இருவரையும் பக்கத்தில் பக்கத்தில் பார்ப்பதிலே, மனித இலட்சியங்கள் இரண்டையும் காணலாம். ஒன்று மனிதனின் சக்தி; மற்றது மனிதனின் கனவு.

அவனும் அழகன்தான்; அழகும் தெய்வீகமானது. இந்தப் படாடோபத்துக்குச் சமமாக மதிக்கும் கண்களிலே கனவுகள், இலட்சியங்கள். உருவப்படுத்த முடியாத எண்ணங்கள் ஓடி மறையும் கண்கள். அவனுடைய இடையிலும் ஒரு சுரிகையிருக்கிறது. சம்பிரதாயமாக, வழக்கமாக இருக்கும் போலும்!

பக்கத்தில் பணிப் பெண்கள்...............அழகின் பரிபூரணக் கிருபையாலே, அரச படாடோபத்தின் உயிருடன் உலாவும் சித்திரங்கள். மார்பில் கலே கிடையாது. அக் காலத்தில் அரசன் முன் அப்படி நிற்கமுடியுமா? முத்து வடங்கள் அவர்கள் தாய்க்கோலத்தை மறைக்கின்றன. இடையில் துல்லிய தூய வெள்ளைக் கலிங்கம். அரசனுக்கு அடைப்பத் தொழில் செய்தலும், சாமரை வீசுவதும் அவர்களுக் குரியவை.

அரசனுக்கு நடக்கும் மரியாதை அந்த அழகனுக்கும் நடக்கின்றது.

* * *

வெளியே வந்தாகிவிட்டது.

காவிரிப்பூம் பட்டினத்தில் நாவாயேறி இந்து—சீனத்திற்குச் செல்கிறான்,—அந்தப் பெயர் தெரியாத பிரதேசங்களில் தமிழ் இரத்தத்தைத் தெளித்து வெற்றிக் கொடிகளைப் பயிராக்க, பட்டத்து யானையில் ஏறியாகிவிட்டது—கவிஞனுடன்......

II

நல்ல நிலா...............நடுக்கடல்.................எங்கு பார்த்தாலும் நீல வான், நீலக் கடல்...நாவாய் கீழ்த் திசை நோக்கிச் செல்கிறது. அதன் மேல் தட்டில் கவிஞனும் சோழனும்......

கவிஞனுக்கு அன்று உற்சாகம். ஊர்வசியின் நடனத்தை, அவள் அழகை ஓர் அற்புதமான கவியாகப் பாடுகிறன். ஊர்வசி அரசனைக் காதலிக்கிருளாம், அரசனைக் காண வருகிருளாம்.

கவியின் கற்பனை அரசன் உள்ளத்தைத் தொட்டது. கவிஞன் கனவில்தான் கண்டான். அரசன் முன்பு ஊர்வசியே தோன்றிவிட்டாள்!

வெறுங் கனவு!

சோழனுக்குமா அப்படி ?

* * *

"ஊர்வசீ! ஊர்வசீ! அதோ வருகிருளே! அதோ, அந்த அலையின் மேல்! அதோ! அதோ! ஊர்வசி"

கவிஞன் அரசனை யழைக்கிறன். 'ஊர்வசி' என்ற பதில்தான்.

அரசன் கட்டளைப்படி, கடலில் தறிகெட்டுத் தேட ஆரம்பிக்கின்றது நாவாய்.

"அதோ அந்த அலைமீது...அந்தப் பெரிய அலை மறைத்துவிட்டது............அதோ தெரிகிருள்!........... அவளே ஊர்வசி......!"

அந்தப் பெரிய அலையின் கீழே பாறைகள் என்று யாருக்குத் தெரியும்?.........

* * *

கடகட வென்ற சப்தம்!......உள்ளே ஜலம் வெண்மையாகப் பாய்கிறது.

"ஊர்வசி!" என்றகுரல் சோழன் இருக்கும் திசையைக் காட்டுகிறது. அந்த அமளியில் படைத்தலைவன் நெருங்குகிறன்.

அதற்காகக் கப்பல் பொறுத்துக்கொண்டிருக்குமா? இன்னொரு பாறை!

கப்பலில் உச்சி முதல் அடிவரை ஒரு நடுக்கம். பாய்மரம் தடால் என்று ஒடிந்து விழுகிறது!

கப்பல்...........?

ஆயிரமாயிரம் மக்கள் கூட்டம். ஜீவனுள்ள உயிர்ப் பிராணிகள், அரசன், சாம்ராஜ்யம், படாடோபம், புலிக் கொடி, வெற்றி, வீரம்......இன்னும் எத்தனையோ!

சமுத்திர ராஜன் பர்வதராஜனுடன் ஒத்துழைத்தால் எதிர்த்து என்னதான் செய்ய முடியும்?

அரசனைக் காப்பாற்றவேண்டியது அவசியந்தான். ஆனால், அகோரமான அலைகளுக்கு மத்தியில யார் என்ன செய்ய முடியும்?

* * *

ராஜ மார்த்தாண்டன், வீரன், பலவான். நீந்திக் கொண்டு செல்லுகிறான், ஆனால் தன் இஷ்டப்படியல்ல.

மிதப்புக் கட்டை மாதிரி நீருக்குமேல், பெரிய அலைகள் மூச்சுத் திணறும்படி வாரியடிக்கும் நுரைக்கு மேல், முகத்தைத் தூக்கிக்கொண்டு நீந்துகிறான்.

வாரி யிறைக்கும் நுரைத் திரையிலே ஒரு பெண்ணின் பாதம் தெரிகிறது.

"ஊர்வசி!"

"அவள்தான் வருவாளே! வருகிறாளே!"...தைரியமும் ஊக்கமும் சக்தியைக் கொடுக்கின்றன.

நீந்துகிறான்.

எதிரிலே ஓர் உயரமான பாறை. தலை நிமிர்ந்து உச்சியைக் காண முடியாத நெடும் பாறை!

அதில் நின்றுகொண்டால்.........

அவன் நீந்த வேண்டாம், அலை வேகமே இழுத்துச் செல்லுகிறது.

அப்பா!

இன்னும் ஒரு கை!

எட்டிப் போடுகிறான்.

பின்புறம் இடி முழக்கம்போல் ஒரு ஹூங்காரம்! நட்சத்திரங்கள் கண்ணுக்குள் மின்னி மறைகின்றன.

அப்புறம் ராஜ மார்த்தாண்ட சோழன் அல்லன்,—மூங்கி மிதக்கும் ஒரு சரீரம்............

* * *

எவ்வளவோ நேரம் சென்றது.

கண்களில் ஏன் இந்தச் சூரியன் இப்படித் தகிக்க வேண்டும்?......யாரோ அணைந்திருக்கிறது மாதிரி ஒரு தோற்றம்......

தாயின் கனிவுடன் சற்று மேலோங்கி வளர்ந்தும் வளராத கன்னங்கள். கன்னத்தோடு சாய்ந்து...

"அம்மா அஅஅ!"

என்ன ஹீன ஸ்வரம்! என்ன பலவீனம்!

கவிஞனின் கனவுபோன்ற கண்கள் அவனைக் கவனித்துச் சிரிக்கின்றன.

திரும்புகிறான்—மாந் தளிரின் நிறம்! மனத்தில் சாந்தியளிக்கக்கூடிய அழகு......

கூந்தல் கருத்துச் சுருண்டு ஆடையாக முதுகுப் புறத்தை மறைக்கின்றது!

அதுதான் ஆடை!

திடுக்கிட்டு எழ முயற்சிக்கிறான்; முடியவில்லை.

அவள் கரங்கள் அவனை அணைத்துக்கொள்ளுகின்றன.

உதட்டில் அவளுடைய மெல்லிய விரல்கள் பதிந்து, அவனைத் திரும்பவேண்டாம் என்று சமிக்ஞை செய்கின்றன.

அவன் அரசன்! ராஜ மிடுக்கு! அவளோ தாதிப் பெண்!

"காலைப் பிடி!"

பதில் இல்லை. புன்சிரிப்புத்தான். தாயின் கனிவு அவனை யணைத்துக் கொள்ளுகிறது.

"நான் அரசன்! ராஜ மார்த்தாண்ட வர்மன்!...... ஹும்......?"

பதில் இல்லை.

புன்சிரிப்புத்தான்.

அவ்வளவு தைரியமா?

அவளது கேசத்தை அவள் கழுத்தில் முறுக்குகிறான். வெற்றிப் புலிக் கொடி! அவன் கண்கள் இருள்கின்றன.

" மூச்சு !"

" அம்மா! இருள்! இருள் !"

கண்களுள் நட்சத்திரங்கள் தோன்றி மறைகின்றன...

இருள் !

நீலக் கடல் !

ஒரு பிணம் குப்புற மிதக்கின்றது. அதன் முகத்தில் என்ன சாந்தி !

இது மிஷின் யுகம்!

நான் அன்று ஒரு முழ நீளம் பெயர் கொண்ட,—ஹோட்டல்காரர்களுக்கும் நாடகக்காரர்களுக்குந்தான் வாயில் நுழையாத பெயர் வைக்க நன்றாகத் தெரியுமே—ஹோட்டலுக்குச் சென்றேன்.

உள்ளே எப்பொழுதும்போல் அமளி; கிளாஸ், ப்ளேட் மோதும் சப்தங்கள். 'அதைக் கொண்டுவா, இதைக் கொண்டுவா!' என்ற அதிகாரங்கள், இடையிலே உல்லாச சம்பாஷணை, சிரிப்பு.

போய் உட்கார்ந்தேன்.

"ஸார், என்ன வேண்டும்?"

"என்ன இருக்கிறது!" என்று ஏதோ யோசனையில் கேட்டு விட்டேன்.

அவ்வளவுதான், கடல் மடை திறந்தது போல், பக்ஷணப் பெயர்கள் செவித் தொளைகளைத் தகர்த்தன.

"சரி, சரி. ஒரு பிளேட் பூரி கிழங்கு!"...அது அவன் பட்டியலில் இல்லாதது. முகத்தில் ஏதாவது குறி தோன்ற வேண்டுமே? உள்ளே போகிறான்.

"ஒரு ஐஸ் வாட்டர்!"

"என்னப்பா, எவ்வளவு நேரம் காத்திருக்கிறது?"

"என்ன கிருஷ்ணா, அவர் எவ்வளவு நேரம் காத்திருக்கிறது?"

"இதோ வந்துவிட்டது ஸார்!" என்று ஓர் அதிகாரக் குரல் கொஞ்சலில் முடிந்தது.

"காப்பி இரண்டு கப்!"

இவ்வளவுக்கும் இடையில் கிருஷ்ணன் ஒரு கையில் நான் கேட்டதும், மற்றதில் ஐஸ் வாட்டரும் எடுத்து வருகிறான்.

"ஸேவரி (கார பக்ஷண வகை) ஏதாகிலும் கொண்டா!"

"இதோ, ஸார்!"

"பில்!"

உடனே கையிலிருந்த பில் புத்தகத்தில், லேசாக எழுதி, மேஜையில் சிந்திய காப்பியில் ஒட்ட வைத்துவிட்டு ஸேவரி எடுக்கப் போகிறான்.

"ஒரு கூல் டிரிங்க்!"

"ஐஸ் கிரீம்!"

பேசாமல் உள்ளே போகிறான். முகத்தில் ஒரே குறி.

அதற்குள் இன்னொரு கூட்டம் வருகிறது.

"ஹாட்டாக என்ன இருக்கிறது?"

"குஞ்சாலாடு, பாஸந்தி..."

"ஸேவரியில்?"

கொஞ்சமாவது கவலை வேண்டுமே! அதேபடி பட்டியல் ஒப்புவிக்கிறான். சிரிப்பா, பேச்சா? அதற்கு நேரம் எங்கே?

அவன் மனிதனா, யந்திரமா?

"ஐஸ் வாட்டர்!"

"ஒரு கிரஷ்!"

"நாலு பிளேட் ஜாங்கிரி!"

கொஞ்சம் அதிகாரமான குரல்கள் தான். அவன் முகத்தில், அதே குறி, அதே நடை.

நான், உள் பக்கத்திற்குப் போகும் பாதையில் உட்கார்ந்திருந்தேன். என் மேஜையைக் கவனித்துக்கொண்டு உள்ளே போகிறான்.

மனத்திற்குள் "ரம ணீஸமான மவரு" என்று கீர்த்தனம்! உள்ளத்தை விட்டு வெளியேயும் சற்று உலாவியது. அப்பா!

திரும்பி வருகிறான் கையில் பண்டங்களுடன். பரிமாறியாகிவிட்டது.

என்னிடம் வந்து பில் எழுதியாகிவிட்டது எல்லாம் பழக்க வாசனை, யந்திரம் மாதிரி.

" ஸார், உங்கள் கைக்குட்டை கீழே விழுந்துவிட்டது ஸார்!"

அவன் குனிகிறான் எடுக்க. நானே எடுத்துக்கொண்டேன்.

மனிதன் தான்!

" ஒரு ஐஸ் கிரீம்!"

திரும்பவும் மிஷினாகி விட்டான்!

அகல்யை

வேதகாலம்.

சிந்துநதி தீரத்திலே......

இப்பொழுதுபோல் அல்ல. செழித்த காடுகள்; புல் வெளிகள்; இடையிடையே சிறு சிறு குடிசைகளில் மனிதக் கூட்டங்கள். எங்கெங்கோ, அதிக நெருக்கமாக, ஜாஸ்தியாக மனிதக் கூட்டங்கள் வசிக்கும் இடம் நகரம் என்ற ஹோதாவில் விளங்கும்—அதில் அரசன் இருப்பான்—அதனால் அது தலைநகர்.

இவ்வளவும் தாண்டி ஜனசஞ்சாரமே இல்லாத பாகம். சிந்து நதி ஹிமயத்தின் மடியை விட்டுச் சமவெளிக்கு வர ஆரம்பிக்கும் இடம். மரமும் கொடியும் மனிதனின் வெற்றியைக் காணாதவை. சிந்துவின் கன்னிப் பருவம்—நதி களங்கமற்ற உள்ளத்தைப்போல் பாறைகளைத் தழுவிச் சுழித்துச் சிரித்துச் சென்றது.

அங்கே கௌதமருடைய வாசஸ்தலம் சற்று காட்டின் உள்ளே தள்ளி. சிந்துவின் கரைக்கும் குடிசைக்கும் கூப்பிடு தூரம்.

குடிசைக்குப் பக்கத்தில் சிறிது தள்ளி வடக்குப் புறமாகச் செழித்த புல்வெளி. தூரத்திலே ஹிமவானின் பனிச் சிகரம். இவர்களுக்கு எப்பொழுதும் தீங்கு வராமல் கவனிப்பதுபோல் இருந்தது.

கௌதமர் அந்தணர், அதாவது வித்தைக்கும் கலைக்கும் தமது வாழ்க்கையை அர்ப்பணம் செய்துவிட்டவர். அது ஒரு காலம். வாலிபர்களுக்கு—சிறுவர்களுக்கு—வித்தையைப் போதிப்பதில் ஒரு பிரேமை. அதெல்லாம் பழைய கதை.

அப்பொழுது இந்த அகண்ட உலகத்தில் உள்ள சராசரங்களின் அழகு, அதன் காரணம், அதன் மூலம் இவையெல்லாவற்றையும் அறிய ஓர் ஆர்வம். அதனால் தான் இந்தத் தனியிடத்தில் வந்து நிம்மதியாகத் தமது ஆசையைப் பூர்த்தி செய்துகொள்ளத் தனித்திருக்கிறார். சமூகத்தை விட்டு விலகித் தமது பத்தினியுடன் இங்கு வசித்து வருகிறார்.

அவருக்கு வயது முப்பது. கறுத்து அடர்ந்த தாடி அகன்று பிரகாசமான ஒளிவிடும் கண்கள், மெல்லிய உதடு, பரந்து விரிந்து திரண்ட மார்பு, ஒடுங்கிய வயிறு, எல்லாவற்றிலும் இயற்கையின் கனிவு பொங்கியது. மிருக அழகன்று—ஆளை மயக்காது, வசீகரிக்கும். அந்தக் கண்களில், அந்த உதடுகளில் ஒரு தெய்வீக ஒளி—தேஜஸ்—உள்ளத்தின் சாந்தியை எடுத்துக் காட்டிற்று.

அவர் மனைவி,—அவள்தான் அகல்யை. அவர் ஆணுக்கு இலட்சியம் என்றால், இவள் பெண் குலத்திற்கு வெற்றி. மருண்ட பார்வை, அவரைக் காணுந்தோறும் காதல் பொங்கும் கண்கள். அவரைத் தனது உள்ளத்தில் மட்டும் வைத்துவிடவில்லை. அவளது ஒவ்வொரு செயலும் அவரது இன்பத்திற்காகவே. அதிலே அவளுக்கு ஓர் இன்பம்.

கௌதமரும் இவளைக் காதலிக்கிறார். ஆனால் அவர் காதல் காட்டாறு போன்றதன்று—சாந்தியிலே பிறந்தது. அவர் மனம் இடியச் செய்ய ஒரு லேசான வழி, அவள் மேல் ஒரு துரும்பை எடுத்து வீசினாலும் போதும். அவருடைய காதலின் உயர்வை அவள் அறிந்திருந்தாள். அவள் கற்புள்ளவளாக இருந்ததில் ஆச்சரியமில்லை. அவர் அவளுடைய இலட்சியம். அதனால், அவள் கற்புடன் இருந்ததில் என்ன அதிசயம்!

II

ஒருநாள் சாயங்காலம். சூரியன் இன்னும் அஸ்தமிக்கவில்லை. தூரத்திலிருக்கும் பனிமலைகள் செந்தழலாகக் கனிந்தன. அகல்யை குடிசைக்குள்ளிருந்து குடத்தை இடுப்பில்

ஏந்திய வண்ணம் வெளி முற்றத்திற்கு வருகிருள். அந்த வெளி முற்றத்தில் கௌதமர் ஒரு கிரந்தத்தை வாசித்துக் கொண்டிருக்கிருர். பக்கத்தில் வந்து நிற்கிருள்.

கௌதமருக்குச் சற்று நேரம் அவள் இருப்பது தெரியாது. கிரந்தத்தில் இருந்த லயிப்பு அப்படி. பிறகு, வந்திருக்கிறது தெரிந்தது. அன்பு கனிந்த பார்வையுடன், சிரித்துக்கொண்டு, "என்ன அகல்யா, நேரமாகி விட்டதா? குளிக்கவா? நான் கொஞ்சங் கழித்து வருகிறேன். கிரந்தத்தில் கொஞ்சந்தான் பாக்கியிருக்கிறது!" என்ருர்.

குடத்தைக் கீழே வைத்துவிட்டு அவர் தலையை மார்புடன் சேர்த்தணைக்கிருள். நெற்றியில் அவள் அதரங்கள் படிந்து அப்படியே சற்று நேரம் இருக்கின்றன.

"நான் வருகிறேன்!" என்று குடத்தை எடுத்துக் கொண்டு நதிக்குச் செல்லுகிருள். அவள் மனத்தில் ஓர் ஏமாற்றம்,—இத்தனை நேரம் எதிர்பார்த்திருந்தது நடக்காததினுல்,—கணவருடன் சிரித்தும் குதூகலமாக விளையாடிக்கொண்டும் நதிக்குச் செல்ல முடியாமையினுல். அவர்மீது கோபமும் இல்லை.

அவள் வெகு வேகமாக நதியை யடைகிருள். உடைகளைத் துவைப்பது, குடத்தைத் தேய்ப்பது,— எல்லாம் வெகு துரிதமாக நடக்கின்றன.

உடைகளையெல்லாம் களைந்து பாறையின் மீது வைத்துவிட்டு நீரில் குதிக்கிருள். அந்தக் குளிர்ந்த நீரில் நீந்தி விளையாடுவதில் என்ன இன்பமோ! ஆழமான சிந்துவில் முக்குளிப்பதும், மறுபடியும் பாறையில் ஏறிக் குதித்து நீந்துவதுமாக, அதிலேயே லயித்துப்போய் விட்டாள்.

அப்பொழுது எங்கிருந்தோ இந்திரன் எதிர்க் கரையில் வந்தான். அகல்யையின் கட்டழகு அவனைக் கல்லாகச் சமைத்து; வைத்த கண் மாருமல் பார்க்கும்படி செய்தது. அவளை எப்படியேனும் அடைய வேண்டும்

என்று தீர்மானித்துக்கொண்டு, அவளை நெருங்க ஒரு பாறையில் இறங்கினான்.

இந்தச் சப்தம் அகல்யையின் காதில் விழுகிறது.

திரும்பிப் பார்க்கிறாள். ஓர் ஆடவன்! நேர்மையற்ற மிருக உணர்ச்சி பொருந்திய முகம்! அழகுதான்! நெருங்குவதின் அர்த்தம் அவளுக்குப் பட்டது. அப்படியே வெறித்து ஒரு கோபப் பார்வை பார்க்கிறாள்.

இந்திரன் நடு நடுங்கி அப்படியே நின்றுவிட்டான். இப்படி எதிர்பார்க்கவில்லை அவன்.

அகல்யா ஒரு பாறையின் பக்கத்தில் மறைந்து உடைகளைச் சீக்கிரம் அணிந்துகொண்டு, குடத்தில் தண்ணீருடன், வெகு வேகமாகக் கரையேறிச் சென்றுவிடுகிறாள்.

இந்திரன் மனத்தில் அவளை அடையவேண்டும் அடையவேண்டும் என்ற ஒரே எண்ணந்தான். அவள் யார், தான் செய்யப் புகுந்தது என்ன என்று எண்ண மனத்தில் இடமில்லை.

பைத்தியம் பிடித்தவள்போல் ஒரே வெறித்த பார்வையுடன் சென்றுகொண்டிருக்கும் அவள் எதிரே கௌதமர் வருகிறார். குடம் கையிலிருந்து நழுவுகிறது. ஒரே ஓட்டமாக ஓடி அவர் மார்பில் விழுந்து கோவென்று கதறுகிறாள்.

கௌதமர் அவளை யணைத்த வண்ணம், "என்ன? என்ன?" என்றார்.

தேம்பிக்கொண்டே நடந்ததைத் தெரிவிக்கிறாள். அவளைத் தேற்றிக் குடிசைக்குக் கொண்டுவிட வேண்டியிருந்தது. அவளது உயர்ந்த காதல், அதன் முடிவாக அதன் சிகரமாக இருக்கும் அவள் கற்பு, அவருக்கு ஒரு புதிய உண்மையைத் தெரிவிக்கிறது. அதுதான் மற்ற ஆண்களிடம் மனத்திலே ஏற்படும் அருவருப்பு.

III

இந்திரன் ஒரே தடவையில் தனது எண்ணம் ஈடேறச் சமயம் எதிர்பார்த்திருந்தான்.

இதெல்லாம் அகல்யைக்குத் தெரியாது. ஏதோ ஒரு பெருங் குற்றத்தை, மனத்திற்கு ஒவ்வாத குற்றத்தைச் செய்தது போல் அவள் உள்ளம் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

கௌதமருடைய அன்பும் காதலும் அவளைத் தேற்றின. அன்று அவர்கள் தூங்க நெடு நேரம் சென்றது

"உனக்காக எல்லோரும் குருடராக இருக்கமுடியுமா?" என்றார் கௌதமர்.

"ஆனால் ஆந்தையாகவா விழிக்க வேண்டும்?" என்றாள் அகல்யை.

இந்திரன், தனது பைசாச உணர்ச்சியைப் பூர்த்தி செய்துகொள்ள எப்பொழுது சமயம் கிடைக்கும் என்று சுற்றி வருகிறான்.

விடியற்காலம் என்று கௌதமரை நினைக்கும்படி செய்து அவரை அப்புறப்படுத்தி விட்டால் ஆசை பூர்த்தியாகும்.

நடுநிசி. சந்திரனற்ற வானம். வெள்ளி மட்டும் கொஞ்சம் பிரகாசமாக, விடியற்காலம் என்று நினைக்கும்படி மங்கிய வெளிச்சத்தைத் தருகிறது. இந்திரன் கோழி மாதிரிக் கூவுகிறான்.

குடிசையினுள் அகல்யாவைத் தழுவியும் தழுவாமலும் உறங்குகிறார் கௌதமர். அவருக்கு எப்பொழுதும் பிசாசுத் தூக்கம் கிடையாது. கோழியின் குரல் கேட்டதும் காலைக் கடனைக் கழிக்க எழுந்து சிந்துக்கரைக்குச் செல்லுகிறார்.

அன்று நெடு நேரமாகத் தூங்காததினால் அகல்யைக்கு அயர்ந்த தூக்கம்.

பாதிக் கனவு, பாதித் தூக்கம். கணவனுடன் கொஞ்சித் தழுவி அவருடனேயே இருப்பதுபோல் கனவு. இந்திரன் பூனை போல மெதுவாக உள்ளே வருகிறான். ஆடைகள் சற்று நெகிழ்ந்து உறங்கும் அபலையைப் பார்க்கிறான்.

ஒரு மிருகத்தின் வேட்கை அன்று பூர்த்தியாயிற்று.

பாதிக் கனவு—உலகத்திலிருந்த அகல்யை விழிக்கவில்லை. கணவர் என்று நினைத்துத் தழுவுகிறாள். ஓரளவு இயற்கையின் வெற்றி.

கணவரை முத்தமிடக் கண்களை விழிக்கிறாள்.

ஐயோ, அந்தச் சண்டாளன்!—எல்லாம் சுழலுகிறது. ஒன்றும் அர்த்தமாகவில்லை. சொந்த வீட்டிற்குள் இவன் எப்படி...?

பக்கத்திலிருந்த தடியால் அவன் மண்டையில் அடித்து உதறித் தள்ளிவிட்டு, ஒரு புறம் கிடந்து புரண்டு துடிக்கிறாள்.

இந்திரனுக்கு சுய அறிவு வருகிறது. தன் பைத்தியக் காரத்தனம், தன் மிருகத்தனமான கொடுமை!...அவன் உள்ளமே வெடித்து விடும்போல் இருக்கிறது.

நதிக்குச் சென்ற கௌதமர் இன்னும் விடியாததைக் கண்டு, ஏதோ சூது நடந்திருக்கிறதென்று விரைந்து வருகிறார்.

உள்ளே சரேலென்று நுழைந்ததும், அகல்யை கிடக்கும் கோலத்தில், காரியம் மிஞ்சிவிட்டது என்று அறிந்தார். உடனே தம் மனைவியை வாரி எடுக்கிறார். தீயில் பட்ட புழுப்போல் அவள் உடல் துடித்துப் பதறுகிறது.

குற்றத்தின் பாரமே உருவாக இந்திரன் நிற்கிறான். "அப்பா இந்திரா! உலகத்துப் பெண்களைச் சற்று சகோதரிகளாக நினைக்கக்கூடாதா?"

"கண்ணே அகல்யா, அந்தச் சமயத்தில் உனது உடலுமா உணர்ச்சியற்ற கல்லாய்ச் சமைந்துவிட்டது?" என்று அவள் தலையைத் தடவிக் கொடுக்கிறார்.

அவர் மனத்தில் ஒரு சாந்தி.

ஒரு புதிய உண்மை.

"உணர்ச்சி தேவனையும் மிருகமாக்கி விடுகிறது. மனத் தூய்மையில்தான் கற்பு. சந்தர்ப்பத்தால் உடல் களங்கமானால் அபலை என்ன செய்ய முடியும்?"

மௌனம்.

"இந்திரா! போய்வா!" என்றார் கௌதமர். அப்பொழுதும் அவர் மனத்தின் சாந்தி தெளிவாகத் தெரிந்தது.

அகல்யை?

அவள் உள்ளத்தில் நிகழ்ந்த ஊழியின் இறுதிக் கூத்து, கணவனின் சாந்திக்குப் பகைப்புலமாக நின்றது.

சங்குத் தேவனின் தர்மம்

முறுக்குப் பாட்டி முத்தாச்சி யென்றால் சிறு குழந்தைகளுக்குத்தான் தெரியும். அவள் நாவல் உலகில் காணப்படும் மனித உருவங்கள் போல், முறுக்கு விற்ற பணத்தினாலோ, ரங்கூனிலிருந்து திடீரெனத் தோன்றும் தமயனின் ஐசுவரியத்தினாலோ, கோடீசுவரி யாகிவிடவில்லை. வறுமையில் குசேலரின் தமக்கை. சமய குரவர்கள் இயற்றும் அற்புதங்கள் என்ற செப்பிடுவித்தைகள் நடவாத இந்தக் காலத்தில், அவள் தினந் தினம் காலந்தள்ளுவது மல்லாமல் தனது ஒரே குமாரத்திக்கு விவாகம்செய்யவும் ஆரம்பித்தது தான் அற்புதத்திலும் அற்புதம்.

நமது ஹிந்து சமூகத்தின் பழைய உலர்ந்து போன கட்டுப்பாடுகளின் கைதிகளாக ஏழைகள்தாம் தற்போது இருந்துவருகிறார்கள். ஏழ்மை நிலைமையிலிருக்கும் பெண்கள் கொஞ்சக் காலமாவது கன்னிகையாக இருந்து காலந்தள்ள ஹிந்து சமூகம் இடந்தராது. இவ்விஷயத்தில் கைம்பெண்களின் நிலைமையைவிடக் கன்னியர்கள் நிலை பரிதாபகரமானது. மிஞ்சினால் விதவையை அவமதிப்பார்கள்; ஆனால் ஒரு கன்னிகையோ வெனின், அவதூறு, உலகத்தின் நிஷ்டூரம் என்ற சிலுவையில் அறையப்படுவாள். பணக்காரர்களான பூலோகத் தெய்வங்களின்மீது சமுதாயக் கட்டுப்பாட்டின் ஜம்பம் பலிக்காது. இவ்வளவும் முத்தாச்சிக்குத் தெரியாது. ஆனால் எப்படியோ வின்டில் (windle) துரை பங்களாவில் பங்கா இழுக்கும் மாடசாமி பிள்ளைக்குத் தன் மகளைக் கொடுக்க நிச்சயித்துவிட்டாள். நாளைக் காலையில் கலியாணம்.

சாயங்காலம் ஐந்தரை மணி யிருக்கும். முறுக்குப் பாட்டி தங்கவேலு ஆசாரியின் வீட்டுத் திண்ணையில்,

சுவரருகில் சாய்ந்து, காலை நீட்டி உட்கார்ந்திருக்கிருள். செம்பாதி நரைத்த தலை, ஜீவியத்தில் பட்ட கஷ்டங்களைப் படம் (Graph) போட்டுக் காட்டுவதுபோல் கோடுகள் நிறைந்த முகம், *பாம்படமில்லாது புடலங்காய்த் துண்டுகள் மாதிரித் தொங்கும் காதுகள், 'இந்திரன் கலையாய் என் மருங்கிருந்தான்' எனக் காணப்படும் சம்பிரதாயமாய்ப் புடவை என்ற இரண்டு வெள்ளைத் துண்டுகள் (ஒரு காலத்தில் வெள்ளையா யிருந்தவை) இவள் பணக்காரியல்லள் என்பதை இடித்துக் கூறின. கையிலிருந்த உலர்ந்த வெற்றிலையை வாயில் போட்டுக்கொண்டு, அதற்குத் துணையாக ஒரு நீளத் துண்டுக் கருப்பட்டிப் புகையிலையையும் உள்ளே செலுத்தி, கைகளைத் திண்ணையில் துடைத்துவிட்டு, "ஆசாரியாரே! என்ன? வேலையெ சுருக்கா முடியும். மோசம் பண்ணிப்பிடாதிரும்!" என்ருள்.

"ஆச்சி! பயப்படாதே, பொழுது சாயிரத்துக்கு மின்னெ ஒன் வேலெ முடிஞ்சிடும்!" என்று, தன் கையிலிருந்த பாம்படத்திற்கு மெருகிட்டுக்கொண்டே, தேற்றிஞன் தங்கவேலு ஆசாரி. போன மூன்று மாத காலமாக மாதாந்தரம் நடந்து, அன்று விடியற்காலை முதல் உண்ணுவிரதமிருந்த முறுக்குப் பாட்டிக்கு இது ஆறுதலளித்ததோ என்னவோ,—ஒரு பெருமூச்சுத்தான் வந்தது.

பிறகு சில நிமிஷங் கழித்து, புன்னகையுடன், "நான் கைலாசவரத்துக்குப் போகணும், வழி காட்டுப் பாதை, இன்னம் நான் போய்த்தான் மேலே வேலையைப் பார்க்கணும், எல்லாம் அப்படி அப்படியே கெடக்கு" என்று பின்னும் துரிதப்படுத்திஞள்.

"ஒன் வேலெ அண்ணைக்கே முடிஞ்சிடும், அந்தச் சிறுகுளம் சுப்பையர் வேலை வராட்டா. அவர்தான் விடேன் தொடேனுன்னு அலைஞ்சு சாமானை நேத்துத்தான் வாங்கிக்கிட்டுப் போனுர். இல்லாட்டா ஒரு நொடிலே இதென்ன பெரிய காரியமா? அது சரிதான் இருக்கட்டும் ஆச்சி. ஒன் வீட்டிலே இதுதானே முதல் கலியாணம்.

---

* பாம்படம் என்பது திருநெல்வேலி ஜில்லாவில் பெண்கள் காதில் அணியும் ஓர் ஆபரணம்.

செலவு என்ன ஆகும்?" என்று பேச்சை யிழுத்தான் ஆசாரி.

"என்னமோ, எனெக்கு ஏத்தாப்பிலே. எல்லாஞ் சேந்து ரெண்டு நூறு ஆகும்" என்ருள்.

"நகை எம்பிட்டு?" என்று மீண்டும் பேச்சைப் பெருக்கினுன் ஆசாரி.

"எல்லாமென்ன, அந்த எங்க வீட்டுக்காரர் போனுரே அவர் போட்டதுதான். என்ன, ரெண்டு மோருதம், இப்பொ நீர் அழிச்சுப் பண்ணற ஒரு சோடு பாம்படம், வேறு செலவு என்ன, ஒரு அம்பது. அது கெடக்கட்டும், வேலெ என்ன இப்பொ முடியுமா?" என்று மீண்டும் ஒரு முறை கேட்டாள்.

"இதோ! நீ தான் பாத்துக் கொண்டிருக்கயே! எங் கைக்கிச் செறகா கட்டியிருக்குது? வேலெயெ ஓட்டத்தான் செய்யிரேன். அவசரப்படாதே...நீ இந்த சமுசாரத்தைக் கேட்டியா? ஊருலெ களவுங் கிளவுமா யிருக்கே? அண்ணைக்கி நம்ப மேலப் பண்ணை வீட்டிலெ 2000-த்துக்குக் களவாம்! காசுக் கடெ செட்டியாரு பத்தமடைக்கிப் போயிட்டு, வட்டிப் பணத்தை மடிலெ முடிஞ்சிக்கிட்டு வந்தாராம்; மேலெப் பரம்பு கிட்ட வாரப்போ, பொளுது பல பல இண்ணு விடியராப்பலே, வந்து தட்டிப் பறிச்சுக்கிட்டுப் போயிட்டான்! செட்டியாரு வயித்திலே அடிச்சுக்கிட்டு வந்தாரு. காலங் கெட்டுப் போச்சு! இதெல்லாம் நம்ம கட்டப்ப ராசா காலத்துலெ நடக்குமா?" என்ருன் ஆசாரி.

"இம்பிட்டுஞ் சேசுபிட்டுப் போனுனே அவனுரு?" என்ருள் கிழவி.

"அவன் தான், நம்ம சங்குத் தேவன். எல்லாம் இந்தக் கும்பினியான் வந்த பிறவுதான்! ஊர்க்காவலா எளவா? எல்லாம் தொலைந்து போயுட்டதே!"

"சவத்தெ தள்ளும். எம் பாவத்துலே வந்து விழாமெ இந்த மூங்கிலடியானும் பேராச்சித் தாயுந்தான் காப்பாத்தணும்......என்ன, ஆச்சா?"

"இரு, இரு, ஒரு நொடி. இதெ மாத்ரம் ராவித் தாரேன்" என்று சொல்லி, ராவப்பட்ட பாம்படத்தையும், தங்கப் பொடியையும் இரண்டு சிவப்புக் காகிதங்களில் மடித்து மரியாதையாகக் கொடுத்தான். முத்தாச்சியும் மடியிலிருந்த முடிப்பை யவிழ்த்து ஒரு கும்பினி ரூபாயை வைக்க, "என்ன! ஒனக்காக இண்ணக்கி முச்சோடும் கஞ்சி கூடக் குடியாமெ பண்ணித்தர, நல்ல வேலெ செஞ்சை!" என்றான்.

"என்னெத்தான் தெரியுமே, ஏழெக்கி..."

"அப்படின்னு தொள்ளாளிக்குக் கூலி குடாம முடியுமா?" என, அவனுடன் வாதாட நேரமில்லையென்று கருதிக் கேட்டதைக் கொடுத்து விட்டு, நகையைப் பத்திரமாக முடிந்து இடுப்பில் சொருகிக்கொண்டு, வெகு வேகமாய்க் காலாழ்வானைத் தட்டிவிட்டாள் கிழவி.

II

எவ்வளவு வேகமாக நடந்தாலும், மனித உடல் என்ன மோட்டார் வண்டியா? அதிலும் ஒரு கிழவி! கவிஞர் வெகு உற்சாகமாக வருணிக்கும் 'அந்தி மாலை' போய், இரவு துரிதமாக வந்தது. கிழவி போகும் பாதை ராஜபாதையானாலும், அக்காலத்தில், ஜனநடமாட்டமேயில்லாமல், மரங்கள் அடர்ந்து நெருங்கிய காட்டுப் பாதை. இருள் பரவ ஆரம்பித்தது என்றால்—வெகுவாக அர்த்த புஷ்டியுடைய வார்த்தைகள் அல்ல—கிழவி கூறிய மாதிரி 'தன் கை தெரியாத கும்மிருட்டு.'

கிழவி இதுவரை பேய்க்கும் பயப்பட்டவள் அல்லள், திருடருக்கும் பயப்பட்டவள் அல்லள். ஆனால் இன்று, ஒவ்வொரு மரத்தடியிலும் ஒவ்வொரு சங்குத் தேவன்! மரக் கிளைகள்மீது குதிக்கும் தருவாயில் பதுங்கி யிருக்கும் சங்குத் தேவன்! இவ்வாறு ஒவ்வொரு மரத்தைத் தாண்டுவதும் ஒரு வெற்றியாக, தனது மனவுலகில் தோன்றும் சங்குத் தேவர்களிடம் தப்பித்துக் கொண்டே செல்கிறாள்.

இப்படி அவள் தவித்துத் தவித்துச் செல்லும் பொழுது, தனக்கு முன் சிறிது தூரத்தில் ஓர் இருண்ட கரிய உருவம் தோன்றலாயிற்று. கிழவியின் வாய் அவளை யறியாமலே, "சங்குத்தேவன்!" என்று குழறிற்று. கால் கைகள் வெடவெடவென்று நடுங்கின. முன் அடியெடுத்து வைக்க முடியவில்லை. மடியை இன்னொரு முறை இறுக்கிச் சொருகிக்கொண்டு, "ஏ, மூங்கிலடியான்! நீதான் என்னைக் காப்பாத்தணும்!" என்று ஏங்கினாள். அந்தக் கரிய உருவம் தான் போகும் திசையில் இருளில் மறைவதைக் கண்டவுடன், அதுவும் தன்னைப் போன்ற பாதசாரியாக இருக்கலாம் என்று நினைத்தாள். மூங்கிலடியான்மீது பாரத்தைப் போட்டுவிட்டு, "அதாரது! ஐயா! ஐயா!" என்று கூவிக்கொண்டே நடக்கலானாள்.

"யாரங்கே கூப்பாடு போடுவது?" என்ற கனத்த ஆண் குரல் இருளோடு வந்தது.

"சித்தெ பொறுத்துக்கும், இதோ வந்தேன்" என்று நெருங்கினாள்.

தலையில் பெருத்த முண்டாசு, நீண்ட கிருதா, வரிந்து கட்டின அரைவேஷ்டி, திடகாத்திரமான சரீரம், அக்குளில் ஒரு குறுந்தடி,—இவ்வளவும் கொஞ்சம் கொஞ்சமாகத் தெரிய வாரம்பித்தன. சரீர ஆகிருதியைப் பார்த்தும் கிழவிக்குப் பெரிய ஆறுதல்,—இனிக் கவலை யில்லாமல் வீடுபோய்ச் சேரலாம் என்ற நம்பிக்கையினால்.

"ஏ கெழவி! இந்தக்கும்மிருட்டிலே நீ எங்கே கெடந்து வாரெ?" என்றான் அந்த அந்நியன்.

"நான் இங்கனெ இருந்துதான். எம்பிட்டுப் பறந்து பறந்து வந்தாலும் கெழவிதானே! பொளுது சாஞ்சி எத் தினி நாளியிருக்கும்? நான் போயித்தானே கொறவேலே யும் முடியணும், நாழி ரொம்ப ஆயிருக்குமா?" என்று கேட்டுக்கொண்டே பின் தொடர்ந்தாள்.

"பொழுதா? நேரம் ஒண்ணுமாகல்லெ! நீ எங்கே போரே?" என்றான் துணை நடந்த பாதசாரி.

"நான் எங்கே போறது என்ன? ஒங்க பச்சேரிலே ஒரு பள்ளனெ பார்க்கணும், அதுதான்!"

"நீ என்ன சாதி?"

"நாங்க வெள்ளாம் புள்ளெக (வேளாளர்கள்)! நீரு?"

"நான் தேவமாரு!"

"தேவமாரா! என்ன அய்யா, இப்படியும் உண்டா? உம்ம சாதிக்காரன் ஊரெல்லாம் இப்படி கொள்ளே போடுரப்ப, நீங்க பெரிய மனிசரெல்லாம் சும்மா யிருக்கலாமா? அந்த அநியாயத்தே நீங்க பார்த்துச் சும்மா இருக்கலாமா? கலி காலமா?" என்ருள்.

"கெழவிக்கு வாய்த்துடுக்கெப் பாரு!" என்று கோபித்தவன், கலகலவென்று சிரித்துவிட்டு, "அது கொலத் தொழிலுதானே! ஆமாம், நீ சொல்லுவது போல கலிதான். நீ என்னமோ தெரியாமே பேசுறயே. அவன் வேறெ கிளை, நான் வேறெ, அந்தப் பய கொண்டையங் கோட்டையான். நான் வீரம் முடிதாங்கி...ஆமாங் கெழவி, ஏன் பதறிப் பதறிச் சாகிறே?" என்று கேலியாகக் கேட்டான் அந்தத் தேவன்.

"ஆமாம் எங்கிட்டே லெச்ச லெச்சமா இருக்கு, நான் பதரறேன்!" என்று ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்தாள்.

"பொய் சொல்லாதே. மடிலே கனமிருந்தா வழிலே பயம்," என்று சிரித்தான் அந்த அந்நியன்.

"ஒம்ம கிட்ட உண்மையெச் சொன்ன என்ன? என் மகளுக்குக் கலியாணம். நான் போயித்தான் நாலு வேலெ பாக்கணும், ஒரு சோடு இரவல் பாம்படம் வாங்கிக்கிட்டுப் போறேன். ஏதோ பகட்டா செய்தாத்தானெ நாலு பேரு மதிப்பான்!" என்ருள் கிழவி.

"பாம்படமாவதிருக்கே!" என்று கேட்டுவிட்டு அவளைக் கூர்ந்து நோக்கினன். பிறகு, "எத்தினி மக்கள் உனக்கு? மகள் என்ன மூத்ததா?" என்று கேட்டான். அவன் கண்களும் மனமும் கிழவியைத் துருவிக்கொண்டிருந்தன.

"எல்லாம் ஒத்தைக்கொன்னுதான்!"

"சரி."

பிறகு இருவரும் பேசாமல் நடந்தனர். அந்த மறவன் கிழவியை நோக்குவதும், பிறகு குனிந்து யோசிப்பதுமாக நடந்தான்.

சற்று நேரத்தில் கிழவி, "அதோ கோயில் தெரியுது. நான் இனிமே போயிக்கிடுவேன்," என்றாள்.

"ஏ ஆச்சி! நில்லு, ஒரு சமுசாரம். நீ ஏழெதானே? இன்னா, இதெ வச்சுக்க! முதல் பேரனுக்கு என் பேரிடு!"

"நீங்க மகராசரா இருக்கணும். என்ன பேரு இட?" என்று சொல்லிக் கொண்டே, தனது எதிர்பாராத அதிர்ஷ்டத்தில் மதி மயங்கிக் கையை நீட்டினாள்.

"சங்குத்தேவரின்னு!"

கையில் வாங்கிய பணப் பை தொப்பென்று விழுந்தது. "வேண்டாம், வேண்டாம்! என்னெ விட்டிருங்க, நான் ஓடிப்போறேன்!" என்று பதறினாள்.

"இல்லெ ஆச்சி, எடுத்துக்கோ! ஒன்னெ கண்ணாலெ ஒண்ணுஞ் செய்யலெ!" என்று கையில் கொடுத்து அனுப்பினான். கிழவியும் திரும்பிப் பார்த்தபடியே இருட்டில் மறைந்தாள்.

சங்குத் தேவன் அங்கிருந்த கல்லில் சற்று உட்கார்ந்தான். குழம்பிய மூளை சரியானது போல் தெரிந்தது. "ஆமாம், கிழவி திடுக்கிட்டுப் போயிட்டா. ஒண்ணு ரெண்டா, நூறு! இதுவும் ஒரு வேடிக்கெதான்! சங்குத் தேவனெக் கிழவி......" என்று முனகிக்கொண்டே எழுந்து ஓர் ஒற்றையடிப் பாதையில் நடந்தான்.

காலனும் கிழவியும்

வெள்ளைக் கோயில் என்றால் அந்தப் பகுதியில் சுடு காடு என்று அர்த்தம். ஆனால் அது ஒரு கிராமமும்கூட. கிராம முனிஸீபு முதலிய சம்பிரமங்கள் எல்லாம் உண்டு. ஊர் என்னமோ அப்படி அப்படித்தான்.

'வெள்ளைக்கோயிலுக்குப் போறேன்,' என்றால், உலகத்திடம் செலவு பெற்றுக்கொள்வது என்பது அந்தப் பகுதி வாசிகளின் வியாக்கியானம். ஆனால், வெள்ளைக்கோயிலுக்குப் போய்த் திரும்பி வருகிறவர்களும் பலர் உண்டு. ஏன், சுப்புநாடான் தினசரி காலையும் சாயங்காலமும் அங்கு போய்த்தான் ஏழை மக்களுக்குக் கஷ்டத்தை மறக்க வைக்கும் அமுதத்தை இறக்கி வருகிறான். மாடத்தி தினசரி, அங்கு போய்த்தான் சுள்ளி பொறுக்கிக்கொண்டு திரும்புகிறாள். ஆனால் இப்படித் திரும்புகிறவர்களைப் பற்றி மட்டிலும் நினைவு வருகிறதில்லை போலும் அவ்வூர் வாசிகளுக்கு.

அந்தப் பிரதேசத்திற்குச் சென்றும் வெறுங் கையுடன் திரும்பி வரும் நிலைமை ஒரே ஓர் ஆசாமிக்கு ஏற்பட்டது. அவர்தான் தர்மராஜா.

இந்தச் சமாசாரத்தைப் பற்றி வெள்ளைக் கோயில் காரருக்குத் தெரியாது. ஏனென்றால், மருதாயி, புகையும் சுடுகாட்டுக்கும் சலசலக்கும் பனைவிளைக்கும் இடையில் உள்ள ஒரு குடிசையில் வசிக்கும் கிழவி.

மருதாயிக்கு இந்த விளையில் பனைகள் சிறு விடலிகளாக நின்றது தெரியும். அது மட்டுமா? கும்பினிக் காரன் பட்டாளம் அந்த வழியாகச் சென்றது எல்லாம் தெரியும். அந்தக் காலத்தில் மருதாயியின் பறையன் நல்ல

செயலுள்ளவனாக இருந்தான். வஞ்சகமில்லாமல் குடிப்பான்.

மருதாயிக்கு அந்தக் காலத்திலே யிருந்த மிடுக்கு சொல்லி முடியாது. அறுப்புக்குச் சென்றுவிட்டு, களத்திலிருந்து மடி நிறையக் கொண்டுவரும் நெல்லை, கள்ளாக மாற்றுவதில் நிபுணி. சதிபதிகள் இருவரும், இந்த இலட்சியத்தை நோக்கி நடந்தால், வெள்ளைக்கோயில் பக்கம் குடியிருக்காமல் வேறு என்ன செய்ய முடியும்?

மருதாயிக்குப் பிள்ளைகள் பிறந்தன. அவையெல்லாம் எப்பவோ ஒரு காலத்தில் நடந்த சமாசாரம்—கனவுபோல. இப்பொழுது பேரன் மாடசாமியும், எருமைக்கிடாவுந்தான் அவளுடைய மங்கிய கண்கள் கண்ட உண்மைகள். கிடாவை வெளியில் மேயவிட்டுக்கொண்டு வருவான் பேரன். கிடாவும் நன்றாகக் கருகருவென்று ஊரார் வயலை மேய்ந்து கொழுத்து வளர்ந்திருந்தது. வாங்குவதற்கு ஆள் வருவதை மாடசாமி எதிர்பார்த்திருந்தான். மாடசாமி அவளுடைய கடைக்குட்டிப் பெண் வழிப் பேரன். கொஞ்சம் துடியான பயல். பாட்டனின் ரத்தம் கொஞ்சம் ஜாஸ்தி. அதனால்தான் மாடு மேய்க்கிற 'சாக்கில், கிழவியைக் குடிசையில் போட்டுவிட்டுப் போய் விடுவான். அவனுக்கு ஒரு பெண்ணைக் கட்டிவைத்து விட்டால், தனக்கு இந்தக் குடிசைக் காவல் ஓயும் என்று நினைப்பாள் கிழவி. தன் கைக்கு ஒரு கோல் போல அவளுக்கும் ஒரு உதவிக் கட்டை தேவை என்று நினைத்தாள்.

காலத்தின் வாசனை படாத யமபுரியில் சிறிது பரபரப்பு. யமதர்ம ராஜா நேரிலேயே சென்று அழைத்து வர வேண்டிய ஒரு புள்ளியின் சீட்டுக் கிழிந்துவிட்டது என்பதைச் சித்திரபுத்திரன் மகாராஜாவிடம் அறிவித்தான். சித்திரபுத்திரனுக்கு, ஓலைச் சுவடிகளைப் பார்த்துப் பார்த்தோ என்னவோ, சிறிது காலமாகப் பார்வை அவ்வளவு தெளிவில்லை.

நேற்றும் இன்றும் அற்ற லோகத்தில் மாறுதல் ஏற்படுவது ஆச்சரியந்தான். இருந்தாலும் உண்மையை மறைக்க முடியவில்லையே!

தர்மராஜாவின் சிங்காதனத்தின் மேல், அந்தரத்தில் தொங்கும் ஒளி வாளின் மீது மாசு படர்ந்துவிட்டது— காரணம், மகாராஜாவின் தொழிலிலும் மனத்திலும் மாசு படர்ந்ததால் என்று கிங்கரர்களுக்குள் ஒரு வதந்தி. மகாராஜாவும், தம் முன் வரும் உயிர்களுக்கு நியாயம் வழங்கும்போதெல்லாம், அடிக்கடி உயர அண்ணாந்து வாளைப் பார்த்துக் கொள்வாராம்.

போருக்கு முதல்வனையும், ஊருக்கு முதல்வரையும் மகாராஜாவே நேரில் சென்று அழைத்து வரவேண்டும் என்பது சம்பிரதாயம். காலத்திற்கு அதிபதியான மன்னன் அந்தக் கைங்கரியத்தைச் செய்வதில் மனக் குழப்பம் ஏற்பட்டது.

பூலோகத்திலே, குறிப்பாக வெள்ளைக்கோயிலிலே அப்போது அஸ்தமன சமயம். பேய்க்காற்று யமதர்ம ராஜனின் வருகையை அலறி அறிவித்தது. பனைமரங்கள் தங்கள் ஓலைச் சிரங்களைச் சலசலத்துச் சிரக்கம்பம் செய்தன. சுடுகாட்டுச் சிதையில் வெந்து நீறும் வாத்தியார் உடல் ஒன்று, கிழவிக்குக் கிடைக்கப் போகும் பெருமையைக் கண்டு, பொறுமைப் புகையைக் கக்கித் தன்னையழித்துக் கொண்டது. எங்கிருந்தோ ஒரு கூகையின் அலறல்.

ஓடிப்போய்ப் பேயாக மாறியாவது தனக்குக் கிடைக்கப்போகும் சித்திர வதைகளிலிருந்து தப்ப முயலும் வாத்தியார் உயிரை மறித்து, தூண்டிலில் மாட்டி, மேல் நோக்கிப் பறக்கும் கிங்கரர்கள், மகாராஜா தூரத்திலே வருவதைக் கண்டு, வேகமாக யமபுரியை நோக்கிச் செல்லலானார்கள்.

எங்கிருந்தோ ஒரு நாய் தர்மராஜனின் வருகையை அறிந்துகொண்டு அழுது ஓலமிட்டது.

கிழவி குடிசைக் கதவை இழுத்துச் சாத்திவிட்டு இடுக்கான நடையில் வந்து உட்கார்ந்து, வெற்றிலைக் குழவியை எடுக்கத் தடவினாள். கை கொஞ்சம் நடுங்கியது. என்றுமில்லாமல் கொஞ்சம் நாவறட்சி ஏற்பட்டது. 'சவத்துப் பயலெ அந்திலெ சந்திலெ தங்காதே,

மாட்டெ ஓட்டிக்கிட்டு வந்திருன்னு சொன்னு, மூதி......' என்று சொல்லிக்கொண்டே தண்ணீர்க் கலயத்தை எடுத்தாள்.

புறக்கடையில் திடுதிடுவென்று எருமைக்கிடா வந்து நின்றது. அதன் மேலிருந்த கருத்த யுவன் குதித்தான்.

"ஏலே மாடா, எத்தினி தெறவெதான் ஒன்கிட்டச் சொல்லி மாரடிக்க. மூதி, தொளுவிலே கட்டி, பருத்தி விதையெ அள்ளி வய்யி. பாளையங்கோட்டை எசமா வந்திருந்தாவ. நாளைக்குக் கடாவெ கொண்டாரச் சொன்னுவ!" என்றாள் வந்தவனைப் பார்த்து.

வந்தவன்தான் எமதர்ம ராஜா.

"பாவம், கிழவிக்கு அவ்வளவு கண் பஞ்சடைந்து போய்விட்டதா?" என்று அவன் மனம் இளகியது. கிழவியின் கடைசி விருப்பத்திற்குத் தடையாக ஏன் இருக்க வேண்டும் என்று எருமையைத் தொழுவில் கட்டிவிட்டு, பருத்தி விதையை அள்ளி வைத்தான். பூலோகத் தீனியைக் கண்டிராத எருமை திருதிருவென்று விழித்தது.

கிழவி திடுக்கிட்டுவிடாமல், இதமாக வந்த காரியத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டு, குனிந்து குடிசைக்குள் நுழைந்தான் யமன்.

"ஏலே அய்யா, அந்த வெத்திலைச் சருகை இப்பிடித் தள்ளிப் போடு!" என்றாள் கிழவி.

வெற்றிலையை எடுத்துக் கொடுத்துவிட்டு, "அதிருக்கட்டும் கிழவி, நான் யார் தெரியுமா? என்னை நல்லாப்பாரு! நான்தான்..." என்று ஆரம்பித்தான் எமன்.

"என்ன குடிச்சுப்பிட்டு வந்தியாலே! எனக்கென்ன கண்ணு பொட்டையாய்ப் போச்சுன்னு நினைச்சிக்கிட்டியாலே!" கிழவிக்கு அவன் நின்ற நிலையைப் பார்த்ததும், மத்தியானச் சம்பவம் ஏதோ நினைவுக்கு வந்தது.

"சிங்கிகொளத்தா மவளே, அவதான் சொக்கி, அவளைப் பார்த்திருக்கியாலே.........நேத்துக்கூடச் சுள்ளி பொறுக்க வந்தாளே...அவ அப்பங்காரன் வந்திருந்தான்

...உனக்கு அவளெப் புடிச்சுக் கட்டிப் போட்டுட்டா நல்லதுன்னுன், என்ன சொல்றே?......"

காலத்தின் அதிபனுன, காலத்தின் எல்லேக்கு அப்பாற் பட்ட, யமதர்ம ராஜன் நடுநடுங்கினுன்.

"நான்தான் யமதர்ம ராஜன்!" என்று அவனது வாய் உளறியது. பயப்பிராந்தியில் வாய் உண்மையைக் கக்கி யது. ஆனுல் அந்த உண்மை கிழவியின் உள்ளத்தில் பயத்தை ஏற்படுத்தவில்லே.

"குடிச்சுப்பிட்டுத்தான் வந்திருக்கே......ஓங்க பாட் டன் குடிச்சுக் குடிச்சுத்தான் தொலேஞ்சான்......அது தான் வெள்ளக்கோயில் குடிசை! நாசமாப் போரதுக்கு நாலு வளி வேணுமா? விதி யாரை விட்டுது......?" என்ருள்.

விதியைப்பற்றி நினேத்ததும் கிழவிக்கு என்று மில்லாத தளர்வு தட்டியது...மூச்சுத் திணறியது... யமனுக்குக் கால்களில் தெம்பு தட்டியது...விதிக்கோலேப் பற்றித் தன் ஆட்சியை நிலேநாட்ட நிமிர்ந்தான்......

"ஏலே, ஒன் வக்கணே யெல்லாம் இருக்கட்டுமிலே, என்னு, எருமை அத்துக்கிட்டு ஓடுது? மறிச்சுப் பிடிச்சா?" என்ருள் கிழவி.

"எதேச்சையாக அலேந்த வாகனத்தைக் கட்டிப் போட்டுப் பருத்தி விதை வைத்தால் நிற்குமா?" என்று நினேத்துக் கொண்டே, வெளியேறி வந்து சமிக்ஞை செய்தான் யமன். வாகனம் வந்து மறைவில் அவன் சொற்படி நின்றது.

எருமையின் முதுகில் போட்டிருக்கிற பாசக் கயிற்றை எடுத்துக்கொண்டு மறுபடியும் உள்ளே நுழைந்தான் யமன். பாசத்தால் அவளேக் கட்டிவிடலாம் என்று நம்பி ஞன். பாவம்!

"ஏலே, கயிறு நல்லா உறுதியா இருக்கே, எங்கலெ வாங்கினே? ஓங்க பாட்டனிருந்தாருல்ல, அவருக்கு அப்பங் காலத்துலேதான் இதுமாதிரி கெடைக்கும். அங்கென சுத்தி ஒரு கொடியாக் கட்டிப் போட்டு வய்யி,

ஒண்ணுக்கு மில்லாட்டா நாலு ஓலையையாவது சேத்துக் கட்டிக்கிட்டு வரலாம்!" என்றாள்.

பாசக் கயிற்றின் நுனியைக் கூரையைத் தாங்கும் விட்டத்தில் கட்டிக்கொண்டே, தான் அவள் பேரன் அல்லன் என்பதை இந்தக் கிழவிக்கு எப்படித் தெளிவு படுத்துவது என்று எண்ணி யெண்ணிப் பார்த்தான். தனது சுய உருவைக் காண்பித்தால்—பயந்து விட்டால் என்ன செய்வது என்ற நினைப்பு......வேறு வழியில்லை....

"ஏ கிழவி, என்னை இப்படித் திரும்பிப் பார்!" என்று அதிகாரத் தொனியில் ஒரு குரல் எழுந்தது.

கிழவி திரும்பிப் பார்த்தாள். கூரையின் முகட்டையும் தாண்டி ஸ்தூலத் தடையால் மறையாமல், யமன் தன் சுய உருவில் கம்பீரமாக நிற்பதைக் கண்டாள்.

"நீ யாரப்பா! இங்ஙெ ஏம் பேரன் நிண்டுகிட்டிருந் தானே, அவனெங்கே?" என்றாள்.

"நான் தான் யமன்! நான் தான் அவன்; உன் பேர னில்லை!" என்றான் யமன்.

"அப்படியா சேதி! வா, இப்படி இரி," என்று கொண்டே, வெற்றிலையைத் தட்டத் தொடங்கினாள் கிழவி. "இப்பம் எதுக்கு இங்ஙெ வந்தே?"

யமன் அவள் அருகில் வந்து உட்கார்ந்தான். அதனால், நின்ற தன் காம்பீரியம் மறைந்துவிட்டது.

"போருக்கு முதல்வனையும் ஊருக்கு மூத்தவரையும் நான்தான் அழைத்துக்கொண்டு போகவேண்டும்!" என்றான்.

"அப்பிடின்னா?"

"நீ என்கூட வரவேண்டும். நீ அப்பொழுது கட்டிப் போடச் சொன்னாயே அது உன் எருமையல்ல, என் வாக னம்..."

"நான் ஒன்கூட வரணுமாக்கும்! என்னெ கூட்டிக் கிட்டுப் போவ ஒனக்குத் தெறமை யிருக்கா? ஒனக்குப்

பாதி வேலெகூட சரியாச் செய்யத் தெரியாதே. என்னெக் கட்டோடெ கூட்டிக்கிட்டுப் போவ ஒனக்கு முடியுமா?"

"எனக்கு முடியாத ஒன்று இருக்கிறதா? நான் இது வரை எத்தனை பேரை அழைத்துச் சென்றிருக்கிறேன்—அது உனக்கெப்படித் தெரியும்? நீ என்ன புராணம் இதிகாசம் படிக்கக் கூடிய ஜாதியில் பிறந்திருக்கிருயா?......" இப்படிச் சொல்லிக்கொண்டு போகும் பொழுதே, யமனுக்குத் தானே தனக்குப் பொய் சொல்லிக் கொள்கிறது போலப் பட்டது; ஏனென்ருல் அவனுக்கு மார்க்கண்டன் சமாசாரமும் நினைவுக்கு வந்துவிட்டது.

"அதெல்லாம் இருக்கட்டும், நீ என்னெக் கூட்டிக் கிட்டு போய்த்தின்னு, நான் இருந்த நெனப்பெ, என்னெப் பத்தின நெனப்பெ, நான் வச்சிருந்த பொளங்கின சாமானெல்லாம் ஒன்ஞெடெ எடுத்துக்கிட்டுப் போவ முடியுமா? என்னமோ எமன் கிமன் இன்னு பயமுறுத்திரியே, ஒன் தொழிலே ஒனக்குச் செய்யத் தெரியலியே! அதெத் தெரிஞ்சிக்கிட்டு எங்கிட்ட வா!" என்று காலை நீட்டிக் கொண்டு முழங்காலைத் தடவினுள் கிழவி.

"என்ன சொன்னுய்! எனக்கா தெரியாது? இதோ பார், உன்னை என்ன செய்கிறேன்!" என்று உறுமிக் கொண்டு எழுந்தான் யமன். அந்தோ! அவன் வீசவேண்டிய பாசக் கயிறு அவனே கட்டிய கொடியாகத் தொங்கியது!

"உன்னுலெ என் உசிரெத்தானே எடுத்துக்கிட்டுப் போவ முடியும்? இந்த உடலைக் கூடத் தூக்கிட்டுப் போவ உனக்குத் தெறமை இருக்கா? யோசிச்சுப் பாரு. ஒண்ணெ வேறயா மாத்த முடியும்; உன்னுலே அழிக்க முடியுமா? அடியோட இல்லாமே ஆக்க முடியுமா? அதெ உன்னைப் படைச்ச கடவுளாலேயே செய்ய முடியாதே! அப்றமில்ல உனக்கு? பழசுன்னு அவ்வளவு கிள்ளுக் கீரேன்னு நெனச்சே?" என்று பொக்கை வாயைத் திறந்து காட்டிச் சிரித்தாள் கிழவி.

கையைப் பிசைந்துகொண்டே வெளியேறினுன் யமன். அன்றுதான் அவனுக்கு உண்மையான தோல்வி. மார்க்

கண்டேயன் சமாசாரம்கூட அவனுக்கு அன்று வெற்றி மாதிரியே புலப்பட்டது.

யமராஜனின் தோல்வியைக் கண்டு தன்னைக் காப்பாற்றிக்கொள்ளப் போய்ப் பதுங்கியதுபோலப் பேய்க் காற்றும் ஓய்ந்து நின்றது. மாடசாமி எருமையை ஓட்டிக் கொண்டு வந்து சேர்ந்தான். கட்டுத்தறியில் தீனி போட்டுப் பருத்தி விதை வைத்துத் தயாராக இருந்ததைக் கண்டான். குருட்டுக் கிழவிக்கு வெறும் இடத்தில் எருமை யிருப்பதாகத் தோன்றியதால் எல்லாம் தானுகத் தடவித் தடவிச் செய்திருக்கிருள் என்று அவனுக்குத் தோன்றியது.

உள்ளே நுழைந்தான். வாயில் வெற்றிலையைக் குதப்பிக்கொண்டே கிழவி யமதேவனின் விஜயத்தையும், தோல்வியையும் பற்றிச் சொன்னுள். மாடசாமி வாலி பத்தின் அவநம்பிக்கையுடன் சிரித்தான். "குருட்டு மூதி என்னவோ ஒளருது!" என்று முணுமுணுத்தான்.

இருந்தாலும், "நல்ல கெட்டிக் கயிறு; காஞ்ச சருகாவது கட்டலாம், கைக்கு வந்தது தவறிவிட்டதே!" யென்று அவள் ஏங்கியது அவனுக்கும் கொஞ்சம் நம்பும் படிதான் இருந்தது.

கோபாலபுரம்

கோபாலபுரம் ஒரு சிற்றூர்.

சிறிது இடிந்த சிவன் கோயிலின் கோபுரம் ஊரின் கீழ்ப்புறத்திலிருக்கும் மாந்தோப்பின்மீது ரஸ்தாவின் திருப்பத்திலிருந்து பார்த்தால் தெரியும். சாயங்காலத்தில், அதாவது அஸ்தமிக்கும் செங்கோளமான சூரியனின் கிரணங்கள் மொட்டைக் கோபுரத்தின் மீதும் மாந்தோப்பின் மீதும் விழுந்து பளபளக்கும் சமயத்தில் நான் ஏன் சைத்ரிகனாகப் பிறந்திருக்கக் கூடாது என்று படும்.

ஊருக்கும் அந்த ரஸ்தாவுக்கும் ஏறக்குறைய அரை மைல் தூரம் இருக்கும். கோபுரத்தைத் தவிர அங்கு மனித வாழ்வின் சின்னங்களைக் காண்பதே அருமை. தூரத்து மைதானத்தில் இரண்டு மூன்று எருமையோ, ஆட்டுக்குட்டியோ மேய்வதைட் பார்ப்பதும், மாட்டுக்காரனின் குரல் கேட்பதும் விதிவிலக்கு.

வாழ்க்கையில் கசப்புற்றவர்களுக்கும், தனிமை என்றும், காதல் என்றும், அழகு என்றும் அர்த்தமில்லாமல் பேசும் கவிஞர்களுக்கும் அவ்விடத்தில் மன நிம்மதி கிடைக்கும்.

நானும் அவ்வூரில் தங்கியவன்தான். அதாவது ஒரு காலத்தில் என்னை அவ்வூர்க்காரர்கள் தெரிந்து கொள்ளுவார்கள். ஆனால் இப்பொழுது............

அது பெருங்கதை.

மனிதன் தெய்வ சிருஷ்டியின் சிகரம் என்பது சாஸ்திரக்காரரும் விஞ்ஞானிகளும் ஏகோபித்துப் பாடும் முடிவு.

நான் கவனித்த வரை, அந்த மாதிரிக் கேவலமான சிருஷ்டியைப் படைத்த பிறகு, கடவுளுக்கு உணர்ச்சி ஏதா

வது இருந்தால், வெட்கத்தினுல் தூக்குப் போட்டுக்கொண்டிருக்க வேண்டும் என்றுதான் கூறுவேன்.

மனிதனுவது! கடவுளாவது! சீச்சீ! சுத்த அபத்தம்! இதில் தெய்வம் தன்னை வழிபட வேண்டும் என்று மனிதனை எதிர்பார்க்கிறதே அதைப்போல் முட்டாள் தனம் வேறு உண்டா? நான் மட்டும் கடவுளாக இருந்தால், கட்டாயம் இந்தச் சிருஷ்டித் தொழிலை நெடுங்காலத்திற்கு முன்பே விட்டுவிட்டுத் தூக்குப் போட்டுக் கொண்டிருப்பேன்.

என்ன மனிதன் சீ!

அன்றைக்கு நடந்தது எல்லாம் நேற்று நடந்த மாதிரி இருக்கிறது.

அதற்கு முன்பு கோபாலபுரம் என்னமாக இருந்தது

லக்ஷ்மி ஒருத்தியே போதுமே ஊர் நிறைந்தாற்போல் இருக்க! சாயங்காலத்திலே சிவன் கோயில் கிணற்றில் ஜலமெடுக்க வரும்போது தமிழ்ப் பெண்மையின் இலட்சியம்... ......சீச்சீ, அவளும் நாற்றமெடுக்கும் தசைக் கூட்டந்தானே! பெண்மையாவது இலட்சியமாவது! அவள் என்ன செய்வாள் ?...எப்பொழுதும் சிரித்த கண்கள், புன்னகை ஒளிந்த அதரங்கள். பண்ணை ஐயரின் மகள் என்ருள் கவலை என்னத்திற் கிருக்கிறது? மாமரத்து மோட்டுக் கிளைக் குயில்கள் போல் குதூகலமாக இருந்தாள். குயில்களுக்குத் தம் மோகனக்குரல் – இன்பத்தால் மற்றவரைத் துன்பப்படுத்துவது தெரியுமா? அப்படித்தான் அவளுக்கும். வாழ்க்கை, இன்பம் என்ற பெருங் களியாட்டமாகச் சென்றது.

அப்பொழுது நான் அங்கே போய்த் தொலைந்தேன். வேறு எந்த ஊராவது என் மனத்தில் தோன்றக்கூடாதா? எவனே ஒரு முட்டாள், "வாழ்க்கை இன்பத்தின் சிகரத்தை அனுபவிக்க வேண்டுமானுல் திருநெல்வேலி ஜில்லாவில் தாமிரவருணிக் கரையிலிருக்கும் சிற்றூர்களில் தங்க வேண்டும், அதிலும் முக்கியமாகக் கோபாலபுரத்தில் வாழ வேண்டும்," என்று எழுதி வைத்தான். நானும் முட்டாள் தனமாக அங்கே சென்றேன். போன ஒரு மாசம், கொஞ்சங்

கூடத் தலைகால் தெரியவில்லை. கோபாலபுரம் மோட்சமாக இருந்தது. எத்தனை கதைகள் எழுதினேன் எத்தனை கனவுகள் கண்டேன்! கோபாலபுரம்...அப்பப்பா, அதை நினைக்கும் பொழுதே ...சீச்சீ! என்ன முட்டாள்தனம்!......

பண்ணை ஐயரைப் போல சிநேகத்திற்கு நல்ல மனிதர் கிடையாது. அவருடன் பேசிக்கொண்டிருந்தால் என்ன சுவாரஸ்யம்! ஆனால், ஒவ்வொரு மனிதனிலும் ஒரு பேய் ஒளிந்துகொண்டிருக்கிறது என்பது சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது தெரியுமா? எவனொரு வனைக் கீறினாலும் இரத்தந்தான் வரும். உள்ளிருக்கும் தீமையைக் காண்பிக்கும் சிவப்பு வெளிச்சம் மாதிரி! மனிதன், அதற்கப்புறம் அவன் சுவாரஸ்யமாகப் புளுகும் விதி, அதைப்பற்றி அதிகமாகக் கூற வேண்டுமானால், பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குச் சரியான வேதாந்தம். அதிலிருந்துதான் அம்மாதிரியான அசட்டுத்தனம் வரமுடியும். மனிதனுக்கும் தெய்வத்திற்கும் என்ன சம்பந்தம்? விதியாம் விதி!

நான் உட்கார்ந்து எழுதும் அறையிலிருந்து பார்த்தால், லக்ஷ்மி ஜலமெடுக்கப் போவது தெரியும். அவளது களங்கமற்ற சிரிப்பு உள்ளத்தை எவ்வாறு தீய்த்தது என்று யாருக்குத் தெரியும்? நான் மனிதன், கண்டவிடத்தில் எனது உள்ளத்தின் கொதிப்பைத் திறந்து காண்பிக்க முடியுமா? அதிலும் லக்ஷ்மியிடம்? மனிதனும் குரங்குதான். எதை எடுத்தாலும் பிய்த்து முகரத்தான் தெரியும்.

அவள் எனது இலட்சியம். வேறு ஒருவனைக் கலியாணம் செய்துகொண்டு அவனைக் காதலித்திருப்பவளைக் காதலிக்க எனக்கு உரிமையுண்டா? உணர்ச்சி, உரிமையைத்தான் கவனிக்கிறதாக்கும்! நட்சத்திரம் வேண்டுமென்று அழுகிற குழந்தைக்கு எதைக் கொடுத்து ஆற்ற முடியும்?

எனது காதல் பாபம். எனக்கும் தெரியத்தான் செய்யும். ஆனால் இம்மாதிரியான பாபங்கள் எத்தனை வேண்டுமானாலும் செய்யலாம், செய்ய வேண்டும்! பாபந்தான் மனிதனது உடலைப் புனிதமாக்குகிறது.

மனிதன்.........அவனைப் போல் அசட்டுத்தனமான பிரகிருதிகள் கிடையா. மனிதன் புழு!

அவளுக்கு என் உள்ளத்து எரிமலையின் கொந்தளிப்புத் தெரியாது.

கோபாலபுர மோகத்தில் நாவல் எழுதவேண்டும் என்ற பைத்தியம் பிடித்தது. கோபாலபுரத்தில் வாழ்க்கையைச் சித்திரிப்பது இலக்கியத்தின் வெற்றி என்று நினைத்தேன். படமும் படிப்படியாக வளர ஆரம்பித்தது. அதில் லக்ஷ்மியும் இடம் பெற்றது அதிசயமன்று. சன்னலிலிருந்து பார்க்கும்பொழுது லக்ஷ்மியின் களங்கமற்ற சிரிப்பு எனது நாவலின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்தது.

அன்று தீபாவளிக்கு முதல் நாள். அவளுடைய புருஷனும் பட்டணத்திலிருந்து வந்திருந்தான். பண்ணையார் வீட்டில் ஏகத் தடபுடல் என்று நான் சொல்ல வேண்டுமா? மறுநாள் இந்தப் புழுக்களின் தன்மையைக் காண்பிக்கும் நாள் என்று யார் கண்டார்கள் ?

மத்தியானம் நான் அவர்கள் வீட்டிற்குள் போனேன். வாசற்படியில் ஏறினதும் எனக்கு என்னமோ ஒரு மாதிரியாக இருந்தது. எல்லோரும் கூடத்தில் உட்கார்ந்திருந்தார்கள். பண்ணையார் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். எதிரில் ஒரு ஸோபாவில் லக்ஷ்மியும் அவள் கணவனும் உட்கார்ந்திருந்தார்கள். மூவருக்கும் எதிரில் அவள் தம்பி சுந்து, பெரிய மனிதன்போல், உட்கார்ந்திருந்தான். லக்ஷ்மியின் முகம் குன்றிப்போய் வெளிறியிருந்தது. அவள் கணவன் சித்திரப் பதுமைமாதிரி திருதிருவென்று விழித்துக் கொண்டிருந்தான். "அம்பி அவரிடம் ஒரு கடிதம் கொடுத்தான். உமது மேஜையில் இருந்ததாம். அதை எழுதியது நீர் தானா பாரும்!" என்றார் பண்ணையார். எனது மனம் களங்கமற்றிருந்தால்தானே ! கடிதம் நான் தான் எழுதினது. ஆனால் அது எனது நாவலின் ஒரு பகுதி. அப்படிச் சொன்னால் நம்புவார்களா? அவள் பெயரும் லக்ஷ்மி. நானும் என்னால் இயன்றவரை சொன்னேன். மனம் களங்கமாக இருக்கும்பொழுது என்னதான் சொல்ல முடியும்? எனக்குச் சுந்துவின்மீது கோபம் வந்தது.

ஆனால் பண்ணையாருக்கும் அவருடைய மாப்பிள்ளைக்கும் லக்ஷ்மியின்மீது சந்தேகம். என் முன்பே நாக்கில் நரம்பில்லாமல் பேசினார்கள். கண்கள் எரிக்குமானால் அவள் என்னை அன்று தீய்த்துவிட்டிருப்பாள். என் மனம் அவளை நோக்கித் தகித்தது. அவள் உள்ளம் எனது செய்கையின் மீது கனன்றது. அவள்மீது அபவாதம்! காரணம் நான்! —அதாவது ஓரளவில் நான்!

மறுநாள் அவள் பிரேதம் கிணற்றில் மிதந்தது. அவளது அசட்டுதனம்.

பிறகு அங்கிருக்க முடியுமா? உலகமே எனக்கு எரிமலையாக இருக்கிறதே! ஓரிடத்திலும் தலை வைத்துத் தூங்க முடியவில்லை. மறுபடியும் வந்தாகிவிட்டது.

கோபாலபுரத்துக் கோபுரம் மாந்தோப்பிற்கு மேல் தெரிகிறது; ஊருக்குள் போக முடியுமா? அவளுடைய எண்ணம், மனம், எல்லாம் உடலைப் போல் மறைந்தன. நான் மட்டும் ஏன் பேய்போல் அலையவேண்டும்? அதுதான் விதி என்று சமாதானப்பட்டுக்கொள்ள வேண்டிய விஷயமாம். மனிதன், விதி, தெய்வம்; தள்ளு,—வெறும் குப்பை, புழு, கனவுகள்!

கோபாலபுரம்! இப்பொழுது பெயரைக் கேட்டாலே நடுங்குகிறதே! மறக்க முடியாத மனத்தின் பாறுங்கல் கோபாலபுரம்.

கொன்ற சிரிப்பு

சோழ சாம்ராஜ்யத்தின் கடைசி உயிர்ப்பு. அந்தகன் என்ற சோழன் பழைய வீர வம்சத்தின் கனவுகளை யெல்லாம் பாழாக்கி—படாடோபத்திற்கும் வீண் மிடுக்கிற்கும் மட்டும் குறையவில்லை – பொம்மை யரசனாக அந்த வீரர்களின் சிங்காதனத்தை அபசாரம் செய்துகொண்டிருக்கிறான். தெற்கே பாண்டியர்கள் இவன் நாடுகளைக் கபளீகரித்துவிட்டனர். மேற்கே சேரர்கள்......அவர்கள் எந்த நிமிஷத்தில் இவன் சிங்காதனத்தையே காலி செய்து விடுவார்களோ! வடக்கே, அம்மம்ம! எத்தனையோ பெயர் தெரியாத அரசர்கள்! அவர்களில் புதிதாக என்னமோ மிலேச்சராம், துருக்கராம். இன்னும் எத்தனையோ பேர்! அந்தகன், மனிதன் தனக்கு நித்திய வாழ்வு என்று மனப் பால் குடிப்பதுபோல், கவலையின்றி அரசாண்டு கொண்டிருக்கிறான். அதுவும், சம்பிரதாயமாக அவன் ஆட்சி செய்துகொண்டிருப்பதாகப் பாவனைதான்...

மருதனூர் என்பது ஒரு சிறு கிராமம். இயற்கையின் எழில் கொழிக்கும் ஒரு தனி...என்ன சொல்லுவது? வனப்பை வருணிக்க அந்தக் கிராமத்தின் தவப் புதல்வன், அந்த இயற்கை யன்னையின் தாய்ப்பால் பருகிய கானப் பிரியன்தான் பாடவேண்டும். என்றால் கூற முடியுமா? அவன் அங்கு யாருக்குப் பிறந்தான் என்று ஊராருக்குத் தெரியாது.

ஒரு நாள் இரவு குழந்தை யொன்று காளிதேவியின் கோயில் வாசலில் தாயை நோக்கி அழுதது. எந்தத் தாயை நோக்கியோ, அந்தத் தேவிதான் அருளினாளோ என்னவோ! அதிலிருந்து காளி கோயில் பூசாரி எடுத்து வளர்த்தான். காளியின் புத்திரன், பூசாரியின் வளர்ப்புப் பிள்ளை... இதுதான் கானப்பிரியனின் இளமைச் சரிதம்.

அந்த மோகனமான பொழுதிலே இயற்கைத் தாயின் காளியின் கோர ஸ்வரூபத்திலே, குதூகலித்துக் குரலெழுப்பும் பறவைகளிடத்திலே அவன் கல்வி கற்ருன். அது கானமாகக் கவிதையாக எழுந்தது. எல்லோரும் கானப் பிரியன் என்ருர்கள். அவனும் கானப்பிரியன் என்று தன்னை யழைத்துக்கொண்டான்.

எப்பொழுதும் அந்தத் தடாகத் துறையிலே என்ன அதிசயமோ! கானப்பிரியனை அங்கு காணுமல் இருக்க முடியாது. இல்லாவிட்டால் குரலெழுப்பும் குயில் கிளைகளின் அடியில் அவன் நின்று கவனித்துக்கொண்டிருப்பதைக் காணலாம். அப்பொழுது அவன் கண்கள்—அவை என்ன தெய்வ தரிசனத்தைக் கண்டனவோ? அவற்றில் என்ன கனவு, எவ்வளவு உற்சாகம்! என்ன என்ன என்று என்னுல் சொல்ல முடியுமா? கவிஞனைக் கேட்டுப் பார்க்கவும்.

கானப்பிரியன் சங்கோசப்பிராணி. மனிதர்கள்என்ருல் அவன், உற்சாகம் எல்லாம் எங்கோ பதுங்கி ஒடுங்கிவிடும். அதிலும் பெண்கள்...கேட்கவே வேண்டாம். அவனிடம் பேசுவது என்ருல் எல்லாருக்கும் ஆசை, அவனுக்கு மட்டும் கூச்சம். அவனைப் பார்ப்பதிலே ஒரு தனிப் பெருமை.

ஊர் அம்பலகாரரின் மகள் பெண்களின் இலட்சியமாயும் ஆண்களின் கனவாயும் இருந்தாள். அவள் தான் அவனை எப்படியோ பேச வைத்துவிட்டாள். அவன் உள்ளத்தை யறிந்தவள் அவள் ஒருத்திதான். அவன் கவிதையின் கனிவைக் கண்டவள் அவளே.

அவளைச் சாயங்காலம் சந்தித்தால் கானப்பிரியனுக்குப் புதிய பாட்டுக்கள் தேவி அருள் புரிவாள். நாவில் ஸரஸ்வதி நர்த்தனம் செய்வாள். இவர்கள் கூட்டுக்களியிலே, தனிப்பட்ட கனவிலே, தேவியின் பாதுகாப்பிலே, உலகத்தின் இலட்சியம் மறைந்து வாழும்.

அவள் பெயர் காவேரி. அன்று காவேரியின் கன்னி, எழில் கம்பனை வளர்த்தது. அது பழைய கதை. இப்பொழுது காவேரி, இந்தக் காவேரி...

அன்று காவேரி ஜலம் எடுத்துவரச் சற்றுத்தாமதம். கானப்பிரியனுக்குக் குயில் சொன்ன கதையையும், மலர் பாடிய பாட்டையும் அவனுக்குச் சொல்ல ஆவல். அந்தச் சூரியாஸ்தமனத்தை அவளிடம் காண்பிக்க...

அதோ அவள் வருகிறாள், ஆசைக் காவேரி!

"கானனா? வா, வா!" என்று குடத்தை ஜலத்தில் நழுவவிட்டு அவன்மீது சாய்கிறாள்.

"இன்று ஏன் இவ்வளவு நேரம், போ! அந்தக் குயில்."

"கானா, இன்று உனக்கு ஒரு சமாசாரம், நீ ஏன் உன் கவியைக் கொண்டு மன்னனிடம் பரிசு பெறக் கூடாது? இன்று யாரோ ஒரு கவியாம், 'போகிறானாம், அதைக் கேட்டுக்கொண்டிருந்தேன். நீ பாடுவதில் நூற்றில் ஒன்று கூட இல்லை. வெறும் வார்த்தைக் குப்பை, நீயேன்..."

"நானா! அரசனிடமா? நானா!"

"ஏன், கானா? நாம் இருவரும்......" என்று தழுவிக் குழைந்து அவன் கண்களில் உற்று நோக்கினாள். இருவரும் ஐக்கியப்பட்ட வாழ்க்கையின் கனவு அவள் கண்களில் தவழ்ந்தது.

"காவேரி! உனக்காக நான் போகிறேன்......"

"என்ன, கானா, எனக்காகவா?"

"இல்லை கண்ணே, நமக்காக."...சற்று மௌனம்.

இருவரும் தழுவி நிற்கின்றனர்.

அந்த மௌனத்தில் அவர்கள் அறிந்தது எவ்வளவோ.

II

சோழ சமஸ்தானம்.

அந்தகன் கொலுவில் உல்லாசமாக இருக்கிறான். பக்கத்தில் அவனது பிரியை—அதாவது, மரியாதையாக வைப்பு—வாஸந்திகை என்ற ஆந்திரப் பெண். மற்றப்

பக்கத்தில் அடைப்பைத் தொழில் புரியும் பணிப் பெண் கள். இடையில் மெல்லிய கலிங்கம், மேலே முத்து வடக் கச்சு.

சற்றுக் கீழே இவனுக்கு ஏற்ற மந்திரி, பிரதானிகள். அவன் நாட்டிலே மாதம் மூன்று மழை பெய்து வருகிறதா, திருடர் கொஞ்சமாகக் கொள்ளை யடிக்கிறார்களா, அந்நியர் வசமாகாமல் இன்னும் எத்தனை பிரதேசங்கள் வரி வசூலிக்க இருக்கின்றன என்பதைப் படாடோபத்துடனும் கூழைக்கும்பிடுடனும் சமுகத்தில் தெரிவித்துக்கொள்ளும் மந்திரிகள்!

சேவகன் ஒருவன் ஓர் ஓலையைக் கொண்டு வந்து அடி பணிந்து நிற்கிறான். அரசன் அதைத் தொட்டுக்கொடுக்க, கற்றுச் சொல்லி பிரித்து, "ராஜாதி ராஜ ராஜ கெம்பீர அந்தகச் சோழ மண்டலாதிபதி சமஸ்தானத்திற்குக் கானப் பிரியன் எழுதிக் கொண்டது. எனது கவியைச் சமுகத்தில் அரங்கேற்ற ஆசை.—கானப்பிரியன்," என்று படித்தான்.

"என்ன வாஸந்திகா?"

"வரட்டுமே!"

"இந்த நடிகைகள் கொஞ்சம் நன்றாகப்பாடி ஆடுகிறார் களே!"

"அவன்தான் வரட்டுமே!"

"சரி, சேவகா, வரச்சொல்!"

கானப்பிரியன் உள்ளே வருகிறான். இயற்கையின் நிமிர்ந்த நடை, நேர் நோக்கு,-கண்களிலே ஏதோ தோன்றி மறைந்த ஒரு கனவு. சபையைப் பார்க்கிறான். செயற்கை யின் திறன், பெருமிதம், இறுமாப்பு,—எல்லாம் சற்று மலைப்பை உண்டு பண்ணுகின்றன.

கவிஞன் அரசனைப் பார்க்கிறான். அந்தகன் கானப் பிரியனைப் பார்க்கிறான். வாஸந்திகை இருவரையும் நோக்கு கிறாள். இருவரையும் வெல்ல ஒரு வலை வீச்சு. உலகத்தின் சக்தி அவள் காலின் கீழ். ஏன் உலகத்தின் இலட்சியம் அத்துடன் இருக்கக் கூடாது?

கானப்பிரியன் அவளைக் கவனிக்கவில்லை.

அரசனை நோக்கிப் பாடுகிறான்.

ஒரு காதற் பாட்டு.

அந்தக் காலத்திலே பாட்டுடைத் தலைவன் பரிசில் கொடுக்கவேண்டிய அரசனாக இருக்க வேண்டியது மரபு.

அதெல்லாம் நினைக்கவில்லை. ஏன் ? தெரியாது.

அவனது காவேரியின் காதல், அவள் கன்னி எழில், வாழ்க்கைக் கனவு எல்லாம் கவிதையாக வடிவெடுத்துப் பொங்குகிறது. கம்பீரமான, மோகனமான குரலிலே பாடுகிறான்.

அங்கிருக்கும் சிங்காதனம்கூட உருகிச் சிரக்கம்பம் செய்யும் போலிருக்கிறது. ஏன் ? கம்பன் குரலைக் கேட்டதுதானே !

அங்கு இரண்டு உள்ளங்களை அது தொடவில்லை. ஒன்று வெற்றியை நினைத்து வலை வீசிய கண்களையுடையது. இன்னொன்று, அவளைக் குறித்துப் பாடுவதாக, அவள்மீது அநாவசியமாகக் காதல் கொண்டுவிட்டதாக நினைத்த நெஞ்சம்.

பாட்டு முடிந்தது !

எங்கும் நிசப்தம்.

திடீரென்று, ஆஸ்தான மண்டபமே எதிரொலிக்கும்படி எக்காளச் சிரிப்பு !

[illegible]ஏளனத்திலே, பொருளற்ற கேலிக்கூத்திலே, கீழ்த்தரக் காமச் சுவையிலே தோன்றி அலைமேல் அலையாயெழுந்த அந்தகனின் எக்காளச் சிரிப்பு !

"சபாஷ், வென்றுவிட்டாயடி வாஸந்திகா !" என்று அவளுக்குக் கீச்சங் காட்டிக்கொண்டு, அவசரத்தில் எச்சிலை ஸ்படிகத்திற்குப் பதில் யார்முகத்திலோ உமிழ்ந்துவிட்டான். இருந்தாலும் உற்சாகம் ஓயக்காணோம். "என்ன, இருந்தால் உன் அழகு இப்படியல்லவா சபையில் இருக்க

வேண்டும்! நூற்றில் ஒரு பெண்! நீதான் என் அரசி!" என்று இன்னும் இடியிடி என்று ஒரு சிரிப்பு!

இது ஓயுமுன் கானப்பிரியன் அங்கு இல்லை.

III

கானப்பிரியனுக்கு உடலெல்லாம் குன்றி உயிர், உற்சாகம், கவிதை, யாவும் குவிந்தன.

நெஞ்சில் இந்திர தனுசால் அடிபட்ட மாதிரி!

பொருளற்ற, அர்த்தமற்ற மிடுக்கு, படாடோபம் அரசியலாம், பரிசிலாம்...சீச்சீ......

அன்று இருட்டிய பின்...

காளி கோயிலின் முன் கானப்பிரியன் தலைவிரி கோலமாகக் கிடக்கிறான். வெளியே இருந்த இருள் அவன் உள்ளத்தைக் கவ்வியது.

இருளில் ஓர் உருவம்.

"காவேரி!"

"கானப்பிரியா?"

பதில் இல்லை.

ஓடிவந்து தரைமீது கிடந்த தனது......எடுத்து மடி மீது கிடத்துகிறாள், மார்புடன் அணைக்கிறாள்.

"கானு! பிரியா!"

"உன் அன்பிலே, தேவி அருளிலே......" அவ்வளவு தான். கானப்பிரியனின் உயிர் தேவியின் திருவருளை நாடிச் சென்றுவிட்டது.

"அடி காவேரி!" உனக்கு வேண்டும். கம்பனையே பாடுபடுத்திய சோழ பரம்பரையல்லவா! உனக்கு வேணும்! ஏன் உன் பிரியனை யனுப்பினாய்?

"அடி காவேரி......!"

பொன்னகரம்

பொன்னகரத்தைப் பற்றிக் கேட்டிருக்கிறீர்களா? நமது பௌராணிகர்களின் கனவைப் போல அங்கு ஒன்றுமில்லை. பூர்வ புண்ணியம் என்று சொல்லுகிறார்களே, அந்தத் தத்துவத்தைக் கொண்டு, நியாயம் என்று சமாதானப்படவேண்டிய விதிதான். ஒரு சில 'மகாராஜர்களுக்காக' இம்மையின் பயனைத் தேடிக் கொடுக்கக் கடமைப்பட்டு வசிக்கும் மனிதத் தேனீக்களுக்கு, உண்மையில் ஒரு பொன் நகரந்தான் அது.

ரயில்வேத் தண்டவாளத்தின் பக்கமாக, சாராய டிப்போவுக்குப் போகிறதே ஒரு சந்து. அதுதான் அங்கு 'மெயின்' ரஸ்தா. கைகோத்த நான்கு பேர் வரிசை தாராளமாகப் போகலாம்,—எதிரே வண்டிகள் வராவிட்டால், இதற்குக் கிளையாக உள் வளைவுகள் உண்டு, முயல் வளைகள் போல்.

இந்தத் திவ்வியப் பிரதேசத்தைத் தரிசிக்க வேண்டுமானால், சிறு தூறலாக மழை சிணுசிணுத்துக் கொண்டிருக்கும் பொழுது சென்றால்தான் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். வழி நெடுகச் சேற்றுக் குழம்புகள். சாலையோரமாக 'முனிசிபல் கங்கை—அல்ல, யமுனை தானே கறுப்பாக இருக்கும்?—அதுதான். பிறகு ஓர் இரும்பு வேலி, அதற்குச் சற்று உயரத் தள்ளி அந்த ரயில்வேத் தண்டவாளம்.

மறுபக்கம், வரிசையாக மனிதக்-கூடுகள்—ஆமாம், வசிப்பதற்குத்தான்!

தண்ணீர்க் குழாய்கள்? இருக்கின்றன. மின்சார விளக்கு? ஞாபகமில்லை—சாதாரண எண்ணெய் விளக்கு,

அதாவது சந்திரன் இல்லாத காலங்களில் (கிருஷ்ண பட்சத்தில்) ஏற்றிவைத்தால் போதாதா?

பொன்னகரத்துக் குழந்தைகளுக்கு 'மீன் பிடித்து' விளையாடுவதில் வெகு பிரியம். அந்த முனிசிபல் தீர்த்தத்தில், மீன் ஏது? எங்கிருந்த பணக்கார வீடுகளிலிருந்தோ, சில சமயம், அழுகிய பழம், ஊசியவடை, இத்யாதி உருண்டுவரும். அது அந்த ஊர்க் குழந்தைகளின் ரகசியம்.

ரயில்வேத் தண்டவாளத்தின பக்கத்தில் விளையாடுவதில் என்ன ஆனந்தமோ? வேலி இருக்கத்தான் செய்கிறது. போகக்கூடாது என்ற சட்டம் குழந்தைகளுக்குத் தெரியுமா? 'போனால்' பெற்றோருக்குத்தான் கொஞ்சம் பாரம் ஒழிந்ததே! குழந்தைகள் தான் என்ன, 'கிளாக்ஸோ' 'மெல்லின்ஸ் பூட்' குழந்தைகளா, கம்பி இடையில் போக முடியாமலிருக்க? புகைந்தோடும் அந்த இரும்பு நாகரிகத்திற்கு, வரிசையாக நின்று "குட்மார்னி ஸார்!" என்று கத்துவதில் ரொம்ப ஆனந்தம் அவர்களுக்கு. அதுதான், அவர்களுக்குக் கிடைக்கும் ஆரம்ப ஆங்கிலக் கல்வி.

ஐந்து மணிக்கு அப்புறந்தான் ஊர் கலகல வென்று உயிர் பெற்று இருக்கும். அப்பொழுதிருந்துதான் அவ்வூர்ப் பெண்கள் தங்கள் வேலையைச் செய்வார்கள். சாராய வண்டிகள், தண்ணீர் எடுக்க வரும் பெண்கள்! அங்கு தண்ணீர் எடுப்பது என்றால் ஒரு பாரதப் போர்.

இளவயதில் நரைத்தது போல் பஞ்சு படிந்த தலை, மாசடைந்த கண்கள்,-விடிய விடிய மின்சார 'ஸ்பின்டில்'ப் (கதிர்) பார்த்துக்கொண்டு இருந்தால், பிறகு கண் என்னமாக இருக்கும்? கண்கள் தாம் என்ன இரும்பா? உழைப்பின் ஆரோக்கியத்தால் ஏற்பட்ட கட்டமைந்த அழகு. ஆரோக்கியமா? அது எங்கிருந்து வந்தது? பாக்டீரியா, விஷக் கிருமிகள், காலரா இத்யாதி அங்கிருந்துதானே உற்பத்தி செய்யப்படுகின்றன! எப்படியாவது உயிர் வாழவேண்டும் என்று ஆசையிருந்தால் எல்லாம் நடக்கும். பழைய கற்-காலத்து மனிதன், புலி சிங்கங்களுடன் குகையில் வாழ்ந்து வந்தான்; அவைகளும் அவனைக் கொன்றன; அவனும்

அவைகளைக் கொன்றான். அதற்காக வலிமை அற்று, வம்சத்தை விருத்தி செய்யாமல் செத்தொழிந்தா போனான்? வாழ்க்கையே ஒரு பெரிய வேட்டை, அதற் கென்ன?

கழுத்தில் ஒரு கறுப்புக் கயிறு—வாழ்க்கைத் தொழு வின் அறிகுறி. அதைப்பற்றி அங்கு அதிகக் கவலை இல்லை. அது வேறு உலகம், ஐயா, அதன் தர்மங்களும் வேறு.

அம்மாளு ஒரு மில் கூலி. வயது இருபது அல்லது இருபத்திரண்டிற்கு மேல் போகாது. புருஷன் 'ஜட்கா' வைத்திருக்கிறான், சொந்த வண்டிதான். அம்மாளு, முரு கேசன் (அவள் புருஷன்), அவன் தாயார், தம்பி, முரு கேசன் குதிரை—ஆக நபர் ஐந்து சேர்ந்து அவர்கள் குடும்பம். இருவருடைய வரும்படியில்தான், இவர்கள் சாப்பாடு—(குதிரை உள்பட), வீட்டு வாடகை, போலீஸ் 'மாமூல்' முருகேசன் தம்பி திருட்டுத் தனமாகக் கஞ்சா அடிக்கக் காசு,—எல்லாம் இதற்குள்தான். எல்லோரும் ஏகதேசக் குடியர்கள்தான். 'டல் ஸீசனில்' பசியை மறக்க வேறு வழி? பசி, ஐயா, பசி! 'பத்தும் பசி வந்திடப் பறந்து போம்' என்று வெகு ஒய்யாரமாக, உடம்பில் பிடிக்காமல் பாடுகிறீரே; அங்கு நீர் ஒரு நாள் இருந்தால், உமக்கு அடி வயிற்றிலிருந்து வரும் அதன் அர்த்தம்!

அன்றைக்கு முருகேசனுக்குக் குஷி. அவனும், அவன் குதிரையும் 'தண்ணிபோட்டு' விட்டு ரேஸ் விட்டார்கள். வண்டி 'டோக்கர்' அடித்தது. ஏர்க்கால் ஒடிந்தது. குதிரைக்குப் பலமான காயம். முருகேசனுக்கு ஊமையடி. வீட்டில் கொண்டுவந்து போடும் பொழுது பேச்சு மூச்சில்லை. நல்ல காலம் குடித்திருந்தான், இந்த மாதிரி வலி தெரியாமலாவது கிடக்க. வீக்கத்திற்கு என்னத் தையோ அரைத்துப் பூசினாள் அம்மாளு. அப்பொழுது தான் சற்றுப் பேசினான். அவனுக்குப் பால் கஞ்சி வேண்டு மாம்! அம்மாளுக்குக் கூலிபோட இன்னும் இரண்டு நாள் இருக்கிறது. வீட்டில் காசேது?

அம்மாளு தண்ணீர் எடுக்க வருகிறாள்.

'கும்' மிருட்டு. பஞ்சாங்கத்தின்படி இன்றைக்குச் சந்திரன் வரவேண்டும். ஆனால் அது மேகத்தில் மறைந்து கொண்டால், முனிசிபாலிடி என்ன செய்யமுடியும்?

எப்பொழுதும் போல் இரைச்சல்தான். ஒருவாறு தண்ணீர் பிடித்தாய் விட்டது. திரும்பி வருகிறாள்.

சந்தின் பக்கத்தில் ஒருவன்,—அம்மாளுவின் மேல் ரொம்ப நாளாகக் 'கண்' வைத்திருந்தவன்.

இருவரும் இருளில் மறைகிறார்கள். அம்மாளு முக்கால் ரூபாய் சம்பாதித்துவிட்டாள். ஆம், புருஷனுக்குப் பால் கஞ்சி வார்க்கத்தான்!

என்னமோ கற்பு, கற்பு என்று கதைக்கிறீர்களே? இதுதான் ஐயா, பொன்னகரம்!

———

சாயங்கால மயக்கம்

எனது சொந்த ஊரிலிருந்து வந்து வெகு நாட்களாகி விட்டது.

ஊர் ஆசை என்பது, கட்குடி மாதிரி, ஒரு போதை வஸ்து. அந்த ஆசை வந்துவிட்டால், அதற்கு மாற்றுக் கிடையாது, போய்த்தான் தீரவேண்டும். இந்த ஊர்ப்பித்தம், காதலைப் பார்க்கினும், தேசபக்தி கடவுள் பக்திகளைப் பார்க்கினும் மிகக் கொடூரமானது. அதன் ஏகச் சக்ராதிபத்தியம் மனத்தில் என்னென்ன கனவுகளையெல்லாம் எழுப்பும், தெரியுமா?

அன்று சின்னப் பையனாக இருக்கும் பொழுது தோழனுடன் ஆற்றங்கரையில் சண்டை போட்டது முதல், நான் முதலில் விடியற்கால ஸ்நானத்திற்குச் செல்லும் இன்பம் முதல், எல்லாச் சிறு அற்பச் சம்பவங்களும்,—அடே, அதில் என்ன மோகம்!

ஊருக்குப் போனேன்.

திருநெல்வேலி ஜில்லாவில் தாமிரவருணி நதிக் கரையில் ஒரு சிறு கிராமம். சென்னையில் வசிப்பதால், ராஜீயக் கைதி சிறையில் அநுபவிக்கும் சிரமத்தை யெல்லாம், தியாகம் செய்யாமல் அநுபவித்துவிடலாம். அதிலே ஊருக்குப்போக வசதி கிடைத்தது. இந்த உலகத்திலே கிறிஸ்து சொன்ன மோக்ஷ சாம்ராஜ்யம் கிடைத்துவிட்ட மாதிரியே இருந்தது.

ரயில் ஏறுவதும், வண்டி போவதும், ஸ்தூலத்தில் நான் ஊரை அநுபவிப்பதும் நடப்பதற்குப் பல மணி நேரத்திற்கு முன்னமேயே, நான் ஊருக்குப் போய் விட்டேன்.

ரயில், கடகட குப்குப் என்று, எனது தியானத்தைக் கலைக்க முயன்றது.

ரயில் செல்ல செல்லச், சென்னையின் இரைச்சல். ஓம் என்ற ஹுங்காரம், நாகரிக யக்ஷனின் திருக்கண் நாட்டங்கள்—எல்லாம் மெதுவாக மறைந்தன. ஏன்? வேகமாகவே நான் ரயிலில் செல்லவில்லை.

வெளியே நிலா......ஆனால்......

ஆற்றங்கரை மணல்...கரையில் பேராய்ச்சி கோயில் ...கண் பொட்டையாக்கும் மாலை மயக்கத்தில் இதன் கோபுரத்தளத்தில், எத்தனை நாவல்கள் எனது மன உலகத்தில் ஒரு வாழ்க்கையைச் சிருஷ்டித்தன!

அப்பொழுது, எங்கெங்கோ வாரி யிறைத்த பிரம்ம தேவனின் சிதறுண்ட நம்பிக்கைகள் போல வாழ்க்கை எரியிட்ட கனல்கள் போன்ற நட்சத்திரங்கள்!

மேல் வானத்திலே அந்த மரமடர்ந்த இருட்டுத் திரைக்குமேல் செவ்விருள்! அந்தத் தேவனின் சோக நாடகம்!

அந்தச் சாயங்காலம், சீதையின் சோகத்தையும், கதேயின் பாஸ்டையுமே எப்பொழுதும் என் நினைவிற்குக் கொண்டு வருகிறது.

பேராய்ச்சி கோயில் உச்சித் தளத்தில் கையில் புஸ்தகத்துடன் நான்!

நிசப்தம்......

பேராய்ச்சி, காளியின் ஸ்வரூபம்...எங்கள் பெரியண்ணத் தேவருக்குச் குடும்பத் தெய்வம்—தலைமுறை தலைமுறையாகக் காத்துவந்த பேராய்ச்சி...

பேராய்ச்சி! அதில் என்ன தொனி! எவ்வளவு அர்த்த புஷ்டி!

இருண்ட வெளிச்சத்தில் இருண்ட கோரமான சிலை...

தாயின் கருணை. என்ன நம்பிக்கை!

நாளைக்கு அம்மனுக்குக்கொடை.

நாளைக்கு இவ்வளவு நேரத்தில் இங்கு எப்படியிருக்கும்!

இந்த மௌன சுகம் மருந்திற்காவது கிடைக்குமா?

என் கண்கள் இருட்டில் அசட்டையாகத் துழாவுகின்றன.

கோயில் வாசலில் இரண்டு ஆட்டுக் கிடா.

பெரியண்ணத் தேவருடையவைதான்...அம்மனுக்கு வளர்த்து விடப்பட்டவை.

வாழ்வு நாளைவரைதான் என்று அவற்றிற்குத் தெரியுமா? சித்திரபுத்திரன் மாதிரி, எனக்குத் தெரியும்.

எங்கெங்கோ புல்லையும் பூண்டையும் தின்ற கொழுப்பு-முட்டி விளையாடுகின்றன...“டபார்!”

மண்டை வெடித்துவிடும் போலிருக்கிறது!

பின்னுக்குச் சென்று மறுபடியும் ஓடிவந்து...... “டபார்!”

ரத்தங் கண்டாகிவிட்டது! என்ன கொள்கைப் பிணக்கோ?

நாளைக்கு இரண்டினுடைய இரத்தமும் அந்தப் பலி பீடத்தில் கலக்குமுன், அதற்குள் என்ன அவசரம்?

அதுதான் சுவாரஸ்யம்!

அந்தச் சண்டைதான் வாழ்க்கையின் ரகசியம், தத்துவம். அதிலேதான் நம்பிக்கை வைத்து மனித நாகரிகம் இதுவரை வளர்ந்து வந்திருக்கிறது. இனி!............ அதைப்பற்றி எனக்குத் தெரியாது. ‘நாளைக்குப் பலியாகப் போகிறோம்!’ என்று தெரிந்தால், இந்த மாதிரி முட்டிக் கொள்ள மனம் வருமா? வந்தால், முட்டிக்கொள்வதில், வாழ்க்கைப் போட்டியில், சுவாரஸ்யம் ஏற்படுமா?........

“ஸார்! கொஞ்சம் நகர்ந்து உட்காருங்கள்!”

நான் ரயிலில்தான் உட்கார்ந்திருந்தேன். அந்த மாலை மயக்கந்தான்...அந்த ஊர்ப் பைத்தியந்தான்!

———

நினைவுப் பாதை

மேலச்செவல் வைரவன் பிள்ளை என்ற பாலசுப்பிரமணிய பிள்ளையின் மனைவி வள்ளியம்மை யாச்சி நேற்றுத்தான் இறந்துபோனாள். தம்பதிகள் இருவரும், ஏறக்குறைய அரை நூற்றாண்டுக்கு மேல், வாழ்க்கையின் மேடுபள்ளங்களை யெல்லாம் ஒன்றாகவே கடந்து வந்திருக்கின்றனர். வள்ளியம்மை யாச்சி இறந்து போனாள். ஏதோ தெய்வ சங்கற்பம் அப்படி. இன்று காடேற்று (இரண்டாம் நாள் கிரியை). நீண்டநாள் வியாதி ஒன்றுமில்லை. போன சனிக்கிழமை புழக்கடையில் கால் வழுக்கி விழுந்தாள். இடுப்பிலும் விலாவிலும் ஊமையடி. அதில் படுத்தவள் தான் எழுந்திருக்கவே யில்லை.

வயதில் மூத்தவர் இறந்தால், அழுகைக்கும் ஓலத்திற்கும் குறைவில்லாவிட்டாலும். வருத்த மிருக்காது. பெண்கள் ரஸித்து அழுவார்கள்:—வார்த்தைகள் முத்து முத்தாய்க் கோவையாக வந்து விழும். அத்துடன் ஓரிரண்டு துளி கண்ணீரும் கலந்திருக்கலாம். ஆனால் அது அழுகிறவர்களின் சொந்த அந்தரங்க வருத்தத்தைப்பற்றியதாகவே யிருக்கும்.

அன்று இன்னும் விடியவில்லை. விடிவெள்ளி எதிர் வீட்டுக் கூரைக்கு ஒரு முழ உயரத்தில் தொங்குவது போல் தெரிகிறது. வாசல் தெளிக்கும் சப்தங்கூடக் காலையின் வரவை எதிரேற்கவில்லை. ஏன், 'துஷ்டிக்காக' (இழவுக்காக) அழுகிறவர்கள் கூட எழுந்திருக்கவில்லை என்றால்......

வைரவன் பிள்ளை வளைவின் வெளிக் குறட்டில், கோரைப் பாயின்மீது முழங்காலைக் கட்டிக்கொண்டு ஓர்

உருவம் உட்கார்ந்திருக்கிறது. வேறு யாருமில்லை. அவர் தான். அன்று அவ்வீட்டில் தூங்காதவர் அவர் ஒருவர் தான். முழங்காலைக் கட்டியபடி, மேலே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார். குறிப்பாக எதன்மீதும் பார்வையை உபயோகிக்கவில்லை. வெளியே, வாசலில், விசிப் பலகை யின்மேல் முழுதும் போர்த்த உடலங்கள், சமயா சமயங் களில் குறட்டை விட்டு, உயிர் இருப்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றன.

வைரவன் பிள்ளை மனது, அண்ட சராசரங்கள் எல்லா வற்றையும் பார்வையிட்டுவிட்டு, மறுபடியும் மறுபடியும் வள்ளியம்மை யாச்சியின் கிடத்தப்பட்ட கற்பனைப் பிரே தத்தின் மீது வந்து கவிகிறது......

ஏறக்குறைய இந்த ஐம்பது வருஷ காலத்தில் அவர் வள்ளியம்மை யாச்சியைப்பற்றி அவ்வளவாக—முதல் பிரசவத்தில் தவிர—பிரமாதமாக நினைத்தது கிடையாது... மனைவி என்பது நூதன வஸ்துவாக இருந்து, பழகிய பொருளாகி, உடலோடு ஒட்டின உறுப்பாகிவிட்டது. ஒவ் வொருவரும் தமக்கு ஐந்து விரல் இருப்பதை ஒவ்வொரு நிமிஷமும் நினைத்துக்கொண்டா இருக்கிறார்கள் ?......... விரல் ஒன்று போனால் ஐந்தென்ற நினைப்புப் பிறக்கும்... அப்பொழுது அவர் மனக்கண் முன் வள்ளியம்மை யாச்சி புதுப் பெண் கோலத்தில் தம் கைபிடித்து வந்த காட்சி நின்று தோன்றியது......

வைரவன் பிள்ளை தூங்குவதற்காக உட்கார்ந்த இடத் தருகில் ஒரு சிறு ஜன்னல்—பனங் கம்பு 'அழி' வைத்தது. உள்ளிருந்து குசுகுசு என்ற சப்தம்......

"ஏட்டி, அஞ்சு கொத்துச் சவடி (சங்கிலி) உனக் குன்னு தானேட்டி சொன்னு, பேச்சியம்மை கேக்கதுக்கு மின்னே நீ போய் உங்க தாத்தாக்கிட்டே கேட்டு வாங்கிக்க!"......

"ஆமாம்......எனக்குத் தூக்கம் வருதுங்கே,—என் னைப் போட்டுப் படுத்தாதே!"......என்று வெடுக்கென்னும் ஓர் இளம் பெண் குரல்......

உடனே 'வீல்' என்று தொட்டிலில் அழும் குழந்தைக் குரல்......

"சவமெ நீயும் ஆரம்பிச்சிட்டியா?......ஒன் வாய் ஓயாதா?......செத்த ஒரு நிமிட்டு சும்மா இரியாதா? எனக் குன்னுதான் வந்திட்டுதம்மா......!" என்ற அங்கலாய்ப்பு...

"அதாரது பாப்பாத்தியா......!" என்று நினைத்தார் வைரவன் பிள்ளை. அவள்தான் பிள்ளையின் நாற்பது வயதான மூதல் புத்திரி பாப்பாத்தி யம்மாள். அவளுக்கு, வயது வந்த ஒரு பெண்ணும், நான்கு வயதுச் சிறுவனும், பத்து மாதக் கைக்குழந்தையும் உண்டு......

இதைக் கேட்ட வைரவன் பிள்ளைக்குக் கைக்குழந்தை பாப்பாத்தி, சமைந்து (பருவமெய்தி) சடங்கு நடக்கும் போது அவள் நின்ற கோலம்......அப்புறம் மணப் பந்த லில் அவள் நின்ற காட்சி......எல்லாம் அவர் மனக்கண் முன் சலனப் படமாக விரிந்தது. பாப்பாத்தி எப்பொழு தும் அப்படித்தான்......ஆமாம், அவள் பிறக்கும்போது தானே கடை முறிந்து நாலு பக்கமும் பணமுடை...... கஷ்டத்தில் வளர்ந்த பெண்—காசில் இருந்த கருத்து அள வுக்கு மீறி வளர்ந்துவிட்டது......அவள் மகளுக்கென்று சொல்லியிருந்தால், அவள் மகளுக்குத்தானே...அதற்குள் எதற்கு இந்தச் சின்னப் புத்தி......"ஏட்டி, இந்தவெத்திலை யைத் தட்டு" என்று எடுத்த வாய்,—அதிகாலையில் எழுந் திருந்ததும் அவர் போட்டுக்கொள்வதற்காகத் தயாராக வெற்றிலையை இடித்து வைத்தல் அவரது பல் போனதி லிருந்து தட்டாது நடந்துவரும் பழக்கம்—சடக்கென்று நின்றது......உள்ளத்தின் குழப்பம் புதிய மாறுபாட்டில் மேலும் குழம்பியது.

வீட்டின் பக்கத்தில் நின்று குடிமகன் சுடலை ஊதிய இரட்டைச் சங்கின் அலறல் மறுநாள் வந்ததைப் பிள்ளை யவர்கள் பிரக்ஞைக்குக் கொணர்ந்தது......அதே சமயத் தில் உள்ளிருந்து பெண்களின் அழுகைக் குரல், சங்கத் தின் ஏக்க அலைகளுடன் தொடர்ந்து மனப் பாரத்தை அதிகப்படுத்தியது......வைரவன் பிள்ளையின் பார்வை விடிவெள்ளியை நாடியது...அது அவர் கண்ணில் தென்

படவில்லை...எதிர் வீட்டுக் கூரை, முன்பே அதை விழுங்கி விட்டது...........கூரையின் உச்சிக் கோடுதான் வானத்திற்கு ஓர் எல்லை காட்டியது.

தெருக்கோடி முனையில் 'ஜல் ஜல்' என்ற மாட்டுச் சலங்கைகளின் சப்தம்......சிறிது நின்றது. யாரோ இறங்கினர்......தெருக் கோடியிலிருந்தே......"என்னைப் பெத்த தாயாரே!"......என்ற பிலாக்கணம்......பார்வதியும் வந்து சேர்ந்துவிட்டாள் என்ற திருப்தி வைரவன் பிள்ளைக்கு... பார்வதி கடைக்குட்டிப் பெண்......தூரத்தில் வாழ்க்கைப் பட்டிருக்கிறாள்......

அப்பொழுது விசிப்பலகை ஒன்றிலிருந்த உருவம், எழுந்து, சட சடவென்று சோம்பல் முறித்தவண்ணம், "சம்போ மகாதேவா!" என்று கொட்டாவிவிட்டுக் கொண்டே, "பாட்டையா, நல்லத் தூங்கினியளா? அதாரது?" என்று சொல்லிக்கொண்டே, வண்டி வந்த திசையை நோக்கியது...

அதற்குள் வண்டியும் மெதுவாக வாசற்படியில் நின்றது......முன்னால் பார்வதி நெஞ்சி லடித்துக்கொண்டே உள்ளே நுழைந்தாள்......உள்ளே அழுகைக் குரல் பலமாயிற்று......

"கரிசங்கொளத்து மாப்பிள்ளை வாராஹ!" என்று சொல்லிக்கொண்டே பக்கத்து வீட்டுக் கள்ளர்பிரான் பிள்ளை—அவர்தான் மற்றொரு பலகையில் படுத்திருந்தவர்—எழுந்திருந்தார்.

மாப்பிள்ளை மௌனமாக வந்து பிள்ளையவர்கள் பக்கத்தில் உட்கார்ந்தார்...தலைகுனிந்த வண்ணம் கேட்டார்: "அத்தைக்கு என்ன செஞ்சது? லெட்டர்லெ கூட ஒண்ணையும் குறிப்பிடலியே...!" வைரவன் பிள்ளை பதில் பேசவில்லை.

"ஆச்சிக்கு என்ன? கெடப்பிலே கெடந்தாளா என்ன...அண்ணைக்கி என்ன, கால் கொஞ்சம் தவறிச்சு ...நல்ல ஊமையடி...இப்படி வரும்னு யார் நெனச்சா... வயசாச்சில்லியா? எல்லாம் தெய்வ சங்கல்பம். அதுக்கு

நாம் என்ன பண்ணமுடியும்!...ஆச்சி திரேகம் கல்லுன்னு கல்லுத்தான்......எண்ணெக்காவது ஒருநா மண்டை யிடிண்ணு தலெயெச் சாச்சிருக்காளா?...அந்தப் பெரிய டாக்டரு இருக்கானே—அவன் எம்டன்தான்!...அவனே அவ்வளவுதானுட்டான்!" என்று வாசாமகோசரமாக விஷயத்தைச் சொல்லி, தேறுதலும் சொல்ல ஆரம்பித்தார் முதலில் எழுந்தவர்...

அப்பொழுதுதான் எழுந்த சுந்தரம் பிள்ளை, நெற்றியில் விபூதியை எடுத்துப் பூசிக்கொண்டே, "போன மாசமேதான் சுப்பு பிள்ளை அண்ணச்சி சொல்லலே, ஆச்சிக்கு ஒரு கண்டமிருக்குன்னு!...நானும் அண்ணெக்கி விளை (விளையுமிடம்) யைப் பாத்துட்டு வரப்போ பேசிக்கிட்டுத் தானே வந்தேன்...எல்லாம் வெள்ளிக்கிளமை களிஞ்சாத்தானின்னுர்...காலன் வாரதுக்கு கணக்கிண்ணும், நேரமிண்ணும் உண்டுமா?"...என்று சொன்னுர்...

வைரவன் பிள்ளை யோசனையைச் சுடலையின் மற்ரொரு சங்கொலி கலைத்துக் குழப்பி அதனுடன் ஒன்று பட்டது.

அதற்குள் நன்ருய் விடிந்துவிட்டது.

வீட்டினுள்ளிருந்த நான்கு வயதுப் பைய ஞெருவன், இடை அரைஞாண் கயிற்றில் மூலை மட்டும் சொருகிய பட்டுக் கரைத் துண்டு ஒன்றைப் பிரம்மப் பிரயத்தனம் செய்து மேலே இழுத்துப் போட்டும் முக்கால்வாசிப் பாகம் புழுதியில் புரள, வெளியே வந்து குறட்டின் மேல் ஏறினுன்.

வைரவன் பிள்ளை, உணர்வற்ற நிலையிலே, அவனை ஒரு கையால் அணைத்தார்......

அவர் பக்கம் ஒண்டிக்கொண்டு அவரை அண்ணாந்து ஏறிட்டுப் பார்த்த வண்ணம், "நாந்தான் ஆச்சிக்கு நெய்ப் பந்தம் பிடிச்சேனே!" என்று தன் திறமையை விளக்கிக் கொண்டான் சிறுவன்.

"பயலெப் பாருங்களேன்!......ஏலே, ஒங்க ஆச்சியெ எங்கடா?" என்ருர் சுந்தரம் பிள்ளை.

"செத்துப் போயிட்டா!" என்று அர்த்த மில்லாமல் சொன்னான் சிறுவன்.

"அது பசலெ, அதுக்கென்ன தெரியும்?" என்றார் வைரவன் பிள்ளை.

"அவனா? வலுப் பயல்லெ, அவனுக்கா தெரியாது!... ஏலே, ஓங்க ஆச்சியை—" என்பதற்குள், உள்ளிருந்து தாம்பாளத்தில் இளநீர் பால் முதலிய கிரியைக்கு வேண்டியவற்றையும், குடம் சொம்பு முதலியவற்றையும் எடுத்து வந்து வைத்த கள்ளர்பிரான் பிள்ளை, "எல்லாம் காலா காலத்திலே போயிட்டு வந்திட்டா நல்லதுதானே! நீங்க மேலவீட்டு அண்ணாச்சியைச் சத்தங் காட்டுங்க!..." என்றார்.

சுடலை மறுபடியும் மெழுகு வைத்த இரட்டைச் சங்கை முழக்கினான். எல்லோரும் துண்டை உதறித் தோள் மேல் போட்டுக்கொண்டு எழுந்தனர்.........சுடலை முன்னால் முழக்கிக்கொண்டே நடந்தான்.

வைரவன் பிள்ளை கைத்தடியை ஊன்றிக்கொண்டு தள்ளாடி நடந்தார். அவருக்கு முன்னால், தலை முண்டிதமான அவருடைய ஒரே மகன் செல்லுகிறான்...மனசிலோ, நடையிலோ கவலை தள்ளாடவில்லை.

வைரவன் பிள்ளை மனக் கண்முன், மணக் கோலத்தில் பதினாறு வயதில் பார்த்த வள்ளியம்மை யாச்சியின் உருவம் நின்றது......

சுடலை சங்கை முழக்கினான்...

இனிப் பார்க்கப் போவதை வைரவன் பிள்ளை மனது நினைக்க மறுத்தது......

"ஏலே நீயுமா? திரும்பலியா!" என்ற சுந்தரம் பிள்ளையின் குரல்...பேரன் தொடர்வதைத் திரும்பிப் பார்த்தார்.

மறுபடியும் சுடலை சங்கை முழக்கிக்கொண்டே சந்து திரும்பினான்...

மனக் குகை ஓவியங்கள்

கர்த்தராகிய பிதா, பரமண்டலத்தின் சாளரங்களில் ஒன்றைத் திறந்து, எட்டிப் பார்த்தார்.

கீழே, பல யோசனைகளுக்கு அப்பால், அவர் கற்பித்த பூமண்டலமும், அதன்மீது ஊர்ந்து திரியும் சகல ஜீவராசிகளும், அவர் தமது சாயையில் சிருஷ்டித்து மகிழ்ச்சியுற்ற ஆதாம் ஏவாளின் வாரிசுகளும் தென்பட்டன.

ஒரு தாயின் பெருமிதத்துடன், ஒரு சிருஷ்டிகர்த்தரின் கம்பீரமகிழ்ச்சியுடன், அப் பூமண்டலத்தைக் கவனித்தார்.

அன்று ஏழாம் நாள். தொழிலை (விளையாட்டை?) முடித்துக் கை கழுவிவிட்டுச் சிரமபரிகாரம் செய்து கொண்டிருந்த பொழுது எந்த நிலையில் இருந்தனவோ அதே நிலையில், மனிதனைத் தவிர்த்துப் பூமண்டலத்தின் மற்றைய ஜீவராசிகளெல்லாம், அவருக்குத் தென்பட்டன.

மனிதன் மட்டிலும், ஏக்கத்தாற் குழிந்த கண்களோடு விலாவெலும்பெடுத்த கூனல் உடலை வளைத்து, நெற்றி வியர்வை நிலத்தில் சொட்டச் சொட்ட, எதையோ குகையொன்றில் வைத்து ஊதி ஊதி உருக்கிக் கொண்டிருந்தான்.

பிதாவின் களங்கமற்ற நெற்றியில், கண்ணாடியில் கலந்த ஆவிபோல், சோர்வு போர்த்திய துயரக் களை தோன்றி மறைந்தது.

தம் இரத்தத்தின் இரத்தமான, கனவின் கனவான, லட்சியத்தின் லட்சியமான, புதல்வனின் நினைவு தட்டியது போலும்!

இன்னுமா?

"ஹோ! மானுடா, ஏனப்பா உன் பார்வை குனிந்தே போய்விட்டது?" என்ற குரல், பல யோஜனைகளுக்கு அப்பால் உள்ள மனிதனுடைய உள்ளத்தில் ஒலித்தது.

மனிதன் தன்னுடைய நம்பிக்கை வறண்ட கண்களைக் கொண்டு வானத்தை அண்ணாந்து பார்த்தான்.

"நீர் எப்பொழுதும் அங்கேயே இருக்கிறீரே?" என்று பதில் கேள்வி கேட்டான்.

"நான் என்ன செய்யட்டும்! உன்னை மாசுபடுத்தும் அந்தப் புழுதி தோய்ந்த கரங்களுடன், மார்புடன் என்னைக் கட்டித் தழுவ முயலுகிறாயே?"

"என்னைச் சிருஷ்டிக்க நீர் உபயோகித்த புழுதியை விட்டு நான் எப்படி விலக முடியும்? அதை விட்டு விலகி நான் உம்மை எப்படி வரவேற்க முடியும்? நான் நிமிர்ந்து நேராக நிற்பதற்கே இந்தப் புழுதிதானே ஆதாரம்? புழுதியைக் கண்டு அஞ்சும் உமக்கு, அதன்மீது நிற்கும் என்னை அறிந்துகொள்ளச் சக்தி உண்டா? நீர் அந்தச் சக்தி பெற்றுக் கீழே வரும் வரை, நான் இந்தப் புழுதியில் கண்டெடுத்த—அதில் என்னோடு பிறந்த, என் சகோதரனை—இந்த இரும்புத் துண்டை வைத்து, என்னைப் பாதுகாத்துக் கொள்ளுகிறேன்!" என்று குனிந்து நெருப்பை ஊதலானான். குகையுள் பளபளவென்று மின்ன ஆரம்பித்தது.

II

உத்தான பாதனது குழந்தை தெய்வத்திடம் வரம் கேட்பதற்காகத் தபஸ் செய்யக் கானகத்திற்கு ஓடிற்று.

மகாவிஷ்ணுவும் ஸ்ரீதேவியும் ஆகாய மார்க்கமாகச் செல்லும்பொழுது இக்குழந்தையைக் கண்டுவிட்டார்கள்.

ஸ்ரீதேவிக்குப் பசலைக் குழந்தையின் உறுதியைக் கண்டு பரிவு ஏற்பட்டு விட்டது. தன் கணவருக்கு இருக்கும் அந்தக் 'காத்து அளிக்கும்' சக்தியை விவரம் தெரியாத குழந்தைகள் கூட அறிந்திருக்கின்றனவே

என்பதில் ஒரு பூரிப்பு! கணவரைப் பார்த்துக் கொண்டாள்.

ஸ்ரீதேவியின் கடைக்கண் வீச்சுக் கிணங்கி, வரங்களை வாரிச் சொரியக் குழந்தையை அணுகினார் மகாவிஷ்ணு.

குழந்தை ஓடிக்கொண்டிருந்தது.

பகற்கனவை ரஸித்துப் பல முறை ஏமாந்த குழந்தை அது. அதற்கு எதிலும் சர்வ சந்தேகம். மனத்தின் பேரில் அதற்கு அசைக்க முடியாத, நிரந்தரமான சந்தேகம்.

உத்தானபாதனது மடியில் உட்கார்ந்து விளையாடுவதாக, கொஞ்சுவதாக, நம்பி எத்தனையோ முறை முன் ஏமாந்திருக்கிறதல்லவா ?

மகாவிஷ்ணு சங்கு சக்ராயுதராக, அதனை வழிமறித்து நின்று, "குழந்தாய்!" என்று அழைத்தார்.

"நீயார் ?" என்று கேட்டது குழந்தை.

"குழந்தாய், என்னைத் தெரியாதா ? நான்தான் மகாவிஷ்ணு !" என்று புன் சிரிப்புடன் தம்மை அறிவித்துக் கொண்டார்.

"பொய்! நான் என்ன கனவு காண்கிறேனா?" என்று தன்னைக் கிள்ளிப் பார்த்துக்கொண்டது குழந்தை.

"நிஜந்தான். இந்தா, இந்த வரத்தைக் கொடுக்கிறேன்! இதிலிருந்து தெரிந்துகொள் !"

"ஓஹோ, செப்பிடு வித்தைக்காரனா?"

"நான்தான் மகாவிஷ்ணு; என் பக்கத்திலிருக்கும் ஸ்ரீதேவியைப் பார்!"

"பகல்வேஷக்காரனுங்கூடவா! எங்கப்பாகிட்டப்போ! சம்மானம் குடுப்பார்—என்னை ஏமாத்த முடியாது!" என்று சிரித்துக்கொண்டே, "நேரமாகிறது; தபஸ் பண்ணப் போறேன்!" என்று காட்டிற்குள் ஓடிவிட்டது அக்குழந்தை.

கொடுக்க விரும்பிய வரத்தை ஒரு நட்சத்திரத்தின் மீது வீசி எறிந்துவிட்டு, ஆகாச கங்கையில் ஒரு முழுக்குப் போட்டார் பகவான்.

பசியால் தவிக்கும் 'கல்லினுள் சிறு தேரை' தென் பட்டது. அதை நோக்கி விரைந்து சென்றார்.

III

யமபுரி.

மார்க்கண்டச் சிறுவனுக்காகப் பரிந்துகொண்டு வந்த சிவபிரான் கையில் தோல்வியுற்று, தர்மராஜன் அப் பொழுதுதான் திரும்பி வந்திருக்கிறான்.

தனது தர்மாசனத்தில் உட்காரவும் அவனுக்கு அச் சம்—தயங்குகிறான்.

ஆசனத்தடியில் விடாப்பிடியாக உட்கார்ந்துகொண்டு முரண்டு செய்துகொண்டிருந்த நசிகேதக் குழந்தை, "மரணம் என்றால் என்ன?" என்று மறுபடியும் தன் மழலை வாயால் கேட்டது.

எத்தனையோ தத்துவங்களைச் சொல்லிப் பார்த்தான். குழந்தையை ஏமாற்ற முடியவில்லை. தன் ஒற்றைக் கேள் வியை வைத்துக்கொண்டு அவனை யுகம் யுகமாக மிரட்டி வருகிறது, அக்குழந்தை.

தோல்வியின் சுபாவமோ என்னவோ!

"மனிதர்கள் என்னைக் கண்டு ஏன் மிரளுகிறார்கள்? அஞ்சுகிறார்கள்? நான் உதவி செய்யத்தானே செல்லு கிறேன்? எனக்குப் பயந்து என்னையும்விடப் பெரிய எம னான சங்கரனிடம் சரண் புகுந்தாவது என்னை விரட்டப் பார்க்கிறார்களே! இது என்ன புதிர்? என்னைக் கண்டு பயப்படுவதற்கு என்ன இருக்கிறது?" என்று அவனது ஏக்கப் படுதாவில் நினைவு-அலைகள் தோன்றி விரிந்தன.

அன்றுதான் அவன் தன் தனிமையை முழுதும் அறிந்தான்.

அப்பொழுதுதான் கிங்கரர் இருவர் தன்முன் கொண்டு நிறுத்திய மனித உயிரைப் பார்த்துத் தன் அந்த ரங்கக் கேள்வியை வாய்குழறிக் கேட்டுவிட்டான்.

"அதோ கிடக்கிறது பார், நான் போட்டுவிட்டு வந்த உடல்; அதில் போய் உட்கார்ந்துகொள். அப்புறம் உன் கிங்கரர்களை ஏவி, உன்னை அழைத்து வரும்படி உத்தரவு செய். அப்பொழுது தெரியும் உனக்கு!" என்று சொல்லிச் சிரித்தது அந்த மனித உயிர்.

IV

பர வெளியிலே, பேரம்பலத்திலே நின்று, தன்னையே மறந்த லயத்தில், ஆனந்தக் கூத்திட்டுப் பிரபஞ்சத்தை நடத்துகிறான் சிவபிரான்.

ஒரு கால் தூக்கி உலகுய்ய நின்றாடுகிறான்.

பக்கத்தில் வந்து நின்றார் நாரதர்.

"அம்மையப்பா! எட்ட உருளும் மண்ணுலகத்தைப் பார்த்தருள்க!.........அதோ கூனிக் குறுகி மண்ணில் உட்கார்ந்து, ரசவாதம் செய்கிறானே! சிற்றம்பலமான அவனது உள்ளத்திலே, தேவரீர் கழலொலி என்ன நாதத்தை எழுப்புகிறது, தெரியுமா......? துன்பம், நம்பிக்கை-வறட்சி, முடிவற்ற [சோகம்..."

தன்னை மறந்த வெறியில் கூத்தாடும் பித்தனுக்கா இவ்வார்த்தைகள் செவியில் விழப்போகின்றன!

வீணையை மீட்டிக்கொண்டு வேறு திசையைப் பார்த்து நடந்தார் நாரதர்.

V

கைலயங்கிரியிலே, கண்ணைப் பறிக்கும் தூய வெண் பனிமலை யடுக்குகள் சிவந்த தீ நாக்குகளைக் கக்குகின்றன.

திசையும் திசைத் தேவர்களும், யாவரும் யாவையும் எரிந்து மடிந்து ஒன்று மற்ற பாழாக, சூன்யமாகப் போகும் படி, பிரான், கோரச் சுடரான நெற்றிக் கண்ணைத் திறந்து, தன் தொழில் திறமையில் பெருமிதம் கொண்டு புன்னகை செய்கிறான்! கண்ணில் வெறியின் பார்வை!

பார்த்த இடங்களில் எல்லாம் தீ நாக்கு நக்கி நிமிர்கிறது!

இடியும் மின்னலும், இருளும் ஒளியும் குழம்பித் தறிகெட்டு நசிக்கின்றன.

இக்குழப்பங்களையும் மீறி ஒரு சிறு குழந்தை அவனது காலடியை நோக்கி ஓடி வருகிறது.

தோலாடையைத் தன் தளிர் விரல்களாற் பற்றி இழுக்கிறது.

பிரான் குனிந்து பார்க்கிறான், புன்சிரிப்போடு.

"அழிப்பதற்குச் சர்வ வல்லமை இருக்கிற தெம்பில் வந்த பூரிப்போ இது?" என்கிறது குழந்தை.

"சந்தேகமா! நீதான் பார்க்கிறாயே!" என்கிறான் பரமன்.

"உமக்கு எல்லாவற்றையும் அழிக்க முடியும். உம்மை அழித்துக்கொள்ள முடியுமா? நீர் மட்டும் மிஞ்சுவதுதான் சூன்யம் என்று அர்த்தமா? உம்மையும் அழித்துக்கொள்ளும்படி நீர் தொழிலை நன்றாகக் கற்றுவந்த பின்பு, நெஞ்சைத் தட்டிப் பார்த்துக் கொள்ளும்!" என்று சொல்லிக் கொண்டே கருகி நசித்தது அக்குழந்தை.

?

அதுவரை மனிதன் காலடிச் சுவடே படாத பிரதேசங்கள் வழியாகக் குருவும் சிஷ்யனுமாக இருவர் சென்று கொண்டிருக்கின்றனர். இருவரும் நடந்துகொள்ளும் மாதிரியைத் தவிர, மற்றபடி வித்தியாசம் தெரியவில்லை. இருவரும் ஒரே வயதினர். ஒரே விதமான நரை திரை; ரொம்ப நெருங்கிக் கவனித்தால் ஒருவர் சொல்லளவில், சிறிது இளையவர் மாதிரித் தெரியும். ஆனால், முகத்தில் சிந்தனையின் அசைவு ஏற்படும் பொழுதெல்லாம், மூப்பு தானே வெளிப்படும்.

இருவரும் ஹிமய சிகரப் பிரதேசங்களில் உள்ள பனிப் பாலைவனம் வழியாகச் செல்லுகின்றனர். உயிரைக் கருவறுக்கும் குளிர். தூரத்திலே எட்டாத இலட்சியம் போல நிற்கிறது கைலையங்கிரி.

கால்கள் அப்பொழுதுதான்விழுந்த பனிச்சகதிகளில் அழுந்துகின்றன; சில இடங்களில் பனிப்பாறைகளில் வழுக்குகின்றன.

பார்வையின் கோணம் கதிக்க விழத்தக்க ஒரு திருப்பத்தில் வந்து நின்றார் குரு.

“அதோ தெரிகிறது பார்த்தாயா கைலயங்கிரி, உயர்ந்து நிமிர்ந்து கம்பீரமாக வானைக்கிழித்துக்கொண்டு! சிகரத் திலகம் போல அதன் உச்சியில் வான் தகட்டில் தெரிகிறதே ஒரு நட்சத்திரம்,—பிரகாசமாக,—அதைப் போலத்தான் இலட்சியம், தெய்வம்!” என்று சுட்டிக் காட்டினார் குரு. கண்களில் சத்தியத்தைக் கரை கண்ட வெறி ததும்பி வழிகிறது.

"பிரபோ! நிமிர்ந்து நின்று என்ன பயன்? உயிரற்றுக் கிடக்கிறதே! பிரகாசமாக இருந்தால் மட்டும் போதுமா? ஒருவன் எட்டிப் பிடிப்பதற்காக அது இருந்தென்ன, அல்லது கண்ணுக்குத் தெரியாமல் போய் என்ன?"

"ஒருவன் தொட்டால் உலகம் தொட்ட மாதிரி!"

"உலகம் அவனை இழந்துவிடுவதனாலா?"

"இல்லை, உலகத்தை அவன் இழப்பதனால்......"

இருவரும் தலை நிமிர்ந்து நின்று சிகரத்தைப் பார்த்தபடி யோசனையிலாழ்கின்றனர்.

"இல்லை, நான் சொன்னது பிசகு!" என்று தலை குனிகிறார் குரு.

புதுமைப்பித்தன் பிற நூல்கள்

கட்டுரைகள்	2	8
கவிதைகள்	2	0
அன்று இரவு	3	0
புதிய ஒளி	3	0
சித்தி	1	12
வாக்கும் வக்கும்	1	8
தெய்வம் கொடுத்த வரம்	1	8
முதலும் முடிவும்	1	4
ஆண்மை	1	0
பிரேத மனிதன்	1	0
நாரத ராமாயணம்	1	0
நிச்சயமா நாளைக்கு	1	0
பளிங்குச் சிலை	1	0
உலக அரங்கு	1	4
மணியோசை	1	8